
# கண்களின் வார்த்தைகள் புரியாதோ..?

அமுதவல்லி கல்யாணசுந்தரம்





## பதிப்புரை

அற்புதமான ஆற்றல் படைத்த திருமதி அமுதவல்லி கல்யாணசுந்தரம் எழுத்துக்களை படித்து ரசித்து மகிழாதோர் இல்லை.

எழுத்துக்கு எழுத்து சுவை சேர்த்து குடும்பப் பாங்காக எழுதுவதிலே வல்லவர் என வாசகர்கள் பாராட்டுகிறார்கள்.

அருணோதயம் முதலில் அறிமுகப்படுத்திய ஆசிரியைகளிலே இவருக்கு தனி மதிப்பு உண்டு.

நல்வழிகாட்டும் குடும்ப நிகழ்வுகளை சுவை பட எழுதி வருங்கால வாழ்க்கைக்கு வழிகாட்டு கிறார்கள்.

இவரது எழுத்துக்களை வரவேற்கும் நல்ல உள்ளங்களுக்கு எங்கள் நன்றி.

மேலும் படித்து மேலும் மேலும் மகிழுங்கள்.

**- அருணோதயம் அருணன்**

# கண்களின் வார்த்தைகள் புரியாதோ?

## 1



"ஹேப்பி நியூ இயர்..." என்ற பலர் சேர்ந்து சொல்லும், உற்சாக வாழ்த்தொலி அந்த நான்கு மாடி குடியிருப்பின் கீழே இருந்த சமுதாயக் கூடத்தில் இருந்து ஓங்கி ஒலித்து, இரண்டாவது மாடியில் இருந்த வாஸந்தியின் காதுகளிலும் விழுந்து விழிகளை மின்ன வைத்தது.

"அப்பா, டைம் ஆச்சுப்பா, சத்தம் இங்கே கேட்குது பாருங்க. பார்ட்டி ஆரம்பிச்சுடப் போறாங்க. மணி இப்பவே பத்தாச்சு. அங்கே பாட்டுக்குப் பாட்டு, குவிஸ் எல்லாம் இருக்கு. டீம் பிரிப்பதற்கு முன்னால் போக

லாம்பா'' என்று தியாகராஜனின் கை பற்றி இழுத்தாள் வாஸந்தி.

வாஸந்தி திருவண்ணாமலையில் பிறந்து வளர்ந்து, ஆறு மாதங்களுக்கு முன்பு, பி.காம். பட்டப் படிப்பை முடித்து, ஆடிட்டராக இருக்கும், அத்தை மகன் விவேக் கிடம், வேலை செய்தபடி, மேல் படிப்பை தொடர, பெரும் போராட்டத்திற்குப் பின்பு, தந்தை தியாகராஜ னிடமும், தந்தை வழி பாட்டியான பவானியிடமும் அனு மதி பெற்று, மூன்று மாதங்களுக்கு முன்பு சென்னைக்கு குடி புகுந்த இருபது வயது பூந்தோட்டம்.

திருமணம் ஆகாமல் விவேக் இருப்பதே பெரும் தடையாக இருக்க, பவானி அம்மா, தனது மகன் வயிற்று பேத்தியான வாஸந்தியை தனது சொந்த மகளான மாதவியின் வீட்டிற்கு, அனுப்ப தியாகராஜன் இரண்டு மாதங்கள் போராட வேண்டி இருந்தது.

''அத்தை வீட்டில் இல்லை பாட்டி. ஹாஸ்டலில் தங்கிக் கொள்கிறேன். நீங்க பயப்படுவது மாதிரி எதுவும் நடக் காது'' என்று சத்தியம் செய்யாத குறையாக, உண்ணா விரதப் போராட்டம் இருந்து இங்கே வந்த வாஸந்தியின் மாற்றம் அவருக்கே கவலையாகத் தான் இருந்தது.

வாஸந்தியும் விவேக்கும், வேலை விஷயமாகவோ, விஷயமே இல்லாமலோ, எந்நேரமும் பேசிச் சிரித்தனர். இவர்களுக்கு இடையே வெறும் மூன்று மாதப் பழக்கம் தானே? மகள் மேல் நம்பிக்கை வைத்து இருக்கும் தனக்கே அவள் சிரிப்பு கவலை தருகிறது என்றால், அம்மாவின் நிலை என்ன?

தானும் சென்னைக்கே குடி பெயர்வது நலம் என்று உறுதியாகத் தோன்ற, இன்றைய பொழுதை நல்ல



படியாக போக வை, 'அண்ணாமலையானே' என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டு மகளோடு கிளம்பின வரின் பார்வை, அறைக்குள் இருந்த பவானி அம்மாவை அளவிட்டது.

''அம்மா கீழே எல்லோரும் வந்துட்டாங்க. வசுவும் கொஞ்ச நேரம் போய் விட்டு வரட்டுமே?'' என்று கேட்டார் தியாகராஜன்.

''இந்தப் பேச்சு எனக்குப் பிடிக்காது என்று தெரியு மில்ல? இதுக்குதான் பொம்பளை பிள்ளையைத் தனியா சென்னைக்கு வேலைக்கு அனுப்பாதே என்று சொன் னேன். இங்கே வந்த உடனே ஆட்டம் பாட்டம் என்று கேட் கிறா'' என்ற பவானி அம்மாவை முறைத்தாள் வாஸந்தி.

''பாட்டி, இந்தக் கண்டிப்பு விவேக்கிடம் செல்ல வில்லை தானே?''

''அவன் ஆம்பளை...''

''கற்பு என்று வந்தால் அதை இருவருக்கும் பொது வில் வைப்போம் என்று பாரதி சொல்லி இருக்கிறார். ஆம்பளை பொம்பளை என்ன? அப்படியே பார்த்தாலும் அத்தைப் போகலையா?''

''அவ புருஷனோட போய் இருக்கா. நீயும் கல்யாணம் ஆன பிறகு, என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கோ. உன்னை ஒரு நல்லவன் கையில் பிடிச்சுக் கொடுக்கும் வரைக்கும், நான் சொல்றதைக் கேட்கணும். இதே மாதிரி நானும் சம உரிமை என் பிள்ளைகளுக்கு மட்டுமில்லை. இந்த வீட்டுக்கு வந்தவளுக்கும் சேர்த்து கொடுத்தத னால்தான்...''

''அ..ம்..மா, எதுக்கும் எதுக்கும் முடிச்சுப் போடறீங்க? தேவை இல்லாத பேச்சு இப்போ வேண்டாம்.

அவளுடைய பாதுகாப்பு முக்கியம். அங்கே ஏற்கனவே மாதவி இருக்கா, விவேக் வேற இருக்கான். நானும் கூட இருந்து பார்ட்டி முடிந்த உடனே திருப்பி அழைத்து வருகிறேன். பேசாமல் படுத்துத் தூங்குங்க'' என்று சொல்லிவிட்டு, எழுந்தார் தியாகராஜன்.

''உங்களுக்கு என்னால் ரொம்ப சிரமம்பா...'' என்று சின்னக் குரலில் சொன்ன வாஸந்தியின் உச்சியை அன்போடு வருடினார்.

''அதெல்லாம் இல்லை. உன்னை சந்தோஷமா வைத்துக் கொள்வதற்காக, நான் இது கூட செய்ய மாட்டேனா? நீ என்ன சென்னைக்கு வந்த பிறகு மாறிப் போய் விட்டாய். திருவண்ணாமலையில் இருந்த வரை, கோவிலுக்குக் கூட கூட்டமா இருந்தால் வரமாட்டாய். இப்ப பாட்டிக்குப் பிடிக்காது என்று தெரிஞ்சும் பார்ட்டிக்குப் போகணும் என்று கேட்கிறாய்?''

''ரெண்டு மாசமா ஆபீஸ்ல, நான் கட்டுப்பெட்டியா இருக்கேன் என்று ஒரே கேலி. இந்த நியூ இயருக்கு ஆபீஸ்ல மகாபலிபுரம் போறாங்க. நான் தான் பாட்டி கஷ்டப்படுவாங்க என்று வரலை என்று சொல்லி விட்டேன். அதை நேரடியா சொல்லாமல், ப்ளாட்ல பார்ட்டி இருக்கு. அங்கே போகணும் என்று கதை விட்டேன். நாளைக்கு ஆபீஸ் போனதும் என்ன பண்ணின என்று கேள்வி கேட்பாங்க. அதுக்கு பதில் சொல்லணும். அதான். சாரிப்பா...''

''அடுத்தவங்களுக்காக நம்ம குணத்தை எல்லாம் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை சாந்தி...''

''இப்ப நான் போகணும் என்று சொல்வது அடுத்தவங்களுக்காக இல்லைப்பா. ரெண்டு மணி நேரம் நாலு



பேரோட சேர்ந்து பேசிப் பழகுவது சந்தோஷமா இருக்கும்பா. இதில் எதுவும் தப்பு இருக்க மாதிரியும் தெரியலை. வீட்டுக்குள், இருக்கும் சமுதாயக் கூடத்தில் நடக்கும், இங்கேயே வசிக்கும் ஐம்பது குடும்பங்கள் கலந்து கொள்ளும், லிக்கர் இல்லாத பார்ட்டியில் என்னப்பா பெரிசா தப்பு நடந்துடும்? நீங்களும் பாட்டி மாதிரியே பேசாதீங்கப்பா...''

''எனக்கு உன் மேலே நம்பிக்கை இருக்கு சாந்தி, ஆனால் அம்மா வயசானவங்க பாரு...''

''பாட்டி என்னைப் போக வேண்டாம் என்று சொல்வதற்குக் காரணம், அவங்களுக்கு வயசானது மட்டுமாப்பா...'' என்று குறுகுறுப்போடு நிறுத்தினாள் வாஸந்தி. அது பதினெட்டு ஆண்டு ரகசியம். பாட்டிக்கு வயசானது மட்டும் காரணம் இல்லை என்று உறுதியாகத் தெரியும்.

''போ, விவேக் கூப்பிடுறான் பாரு...'' என்று தியாகராஜன் பேச்சை மாற்ற, 'ஹேய் பூந்தி, பாட்டி அவங்க முந்தானையில் இருந்து இறக்கி விட்டுட்டாங்களா? வா, வா இப்பதான் அந்தாக்ஷரி ஆரம்பிக்கலாம் என்று கூப்பிட்டாங்க. நீ என் டீம். உனக்கு நான் ஏற்கனவே சீட் போட்டுட்டேன்'' என்று வரவேற்றான் விவேக்.

''முதல் பாட்டு நானே ஆரம்பிக்கிறேன். நான் பூந்தி, நீ சமோசா எப்படி சாப்டாலும் டேஸ்ட்டா இருக்கும்'' என்று புத்தாண்டு கொண்டாட்டத்தில் உற்சாகமாக கலந்து கொண்டாள் வாஸந்தி.

அந்த பார்ட்டி ஹாலில் ஓரமாய் அமர்ந்து இருந்தவரால், வாஸந்தியின் ஒவ்வொரு அசைவிலும், துள்ளலிலும், புத்திசாலித்தனத்திலும், பாடும் திறமையிலும்,

அவளின் அம்மாவை நினைவு படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை.

அவளும் இப்படித்தான். உற்சாக பந்து. நகர்புறத்தில் பிறந்து வளர்ந்து படித்தவள். ஆண் பெண் வித்தியாசம் இன்றி அனைவரிடமும் ஒட்டுதலாக தொட்டுப் பேசிப் பழகியவள். அவள் மேல் உயிராய் இருந்த தன்னால், அவள் மேல் அளவில்லாத காதல் கொண்டதனால்தான் தன்னால் அதை ஜீரணிக்க முடியவில்லையோ? இல்லை காதல் இருக்கும் இடத்தில நம்பிக்கை வேண்டாமா? அது அழகைப் பார்த்து வந்த வெறும் மோகம், அதனால் தான்...

ப்ச்! அழகினால் வந்த ஆசை என்றால் இந்த பதினெட்டு ஆண்டுகளில், அவளின் முகம் மறந்து போய் இருக்க வேண்டுமே? அம்மா விடாமல் நச்சரித்த, குழந்தைக்காக இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோ என்ற வாதம் ஜெயித்திருக்க வேண்டுமே? ஏன் இன்னொரு கல் யாணம் பண்ணி கொள்ளவில்லை?.

இது தேவை இல்லாத ஆராய்ச்சி. இப்ப அவருக்கு வேண் டியது வாஸந்தியின் நல வாழ்வு மட்டும்தான். தாயுமான வனாய் நின்று அவளை வளர்த்தது வீணாகப் போய் விடக் கூடாது. சிந்தனையில் இருந்து மீண்டு மகளைப் பார்த்தார். புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு என்று சிறப்பு அலங்காரம் எதுவும் இல்லை.

ஆரஞ்சு வண்ணமும், ராமர் நீல வண்ணமும் கலந்து கண்ணாடிகள் பதிக்கப்பட்ட காட்டன் சுடிதார். இடை வரை வெட்டிய கூந்தலில், தளரப் பின்னலிட்டு, அதில் மணக்கும் மல்லிகை சரம், முன் நெற்றியில் விழும் கற்றை கூந்தலை ஒற்றை விரலால் ஒதுக்கும் அழகு,



அப்படியே அவள் தான். இயற்கையிலேயே சிவந்த அத ரங்கள், குட்டியான கூர் நாசி, காது வரை நீண்ட விழிகள், ஒற்றை வரியாய் தீட்டப்பட்ட கண்மை, இதோ இடுப் பில் கை வைத்து, விவேக்கை தலை சாய்த்து முறைக்கும் அந்த பார்வை கூட அவளேதான்.

பெண்கள் தந்தை மாதிரி இருப்பார்கள் என்ற வாக் கியம் ஏன் தன் விஷயத்தில் பொய்யாய் போனது? அப்படிச் சொல்ல முடியாது. உடலை பேணி காப்பதில், உணவுக் கட்டுப்பாட்டில் இவள் தன்னை மாதிரிதான். ஒரு நாள் கூட காலை ஓட்டம் போக தவற மாட்டாள். விசேஷ நாள் என்று எல்லாவற்றையும் சாப்பிட மாட் டாள். தவறி கூடுதலாக உண்டாலும், அடுத்த வேளை பட்டினி போட்டு அதை ஈடு கட்டி விடுவாள். அந்த விஷயத்தில் அவள் தன்னை மாதிரிதான்.

மகளைப் பார்த்தபடி, அவளின் குணாதிசயத்தை ஆராய்ந்த தியாகராஜனின் கண்களில் அவன் பட்டான். அசாத்திய உயரம். கருப்பு ஸ்டோன் வாஷ் ஜீன்ஸ், சந்தன நிறத்தில், கருப்பு நிற எழுத்துக்களில், 'என்னை தொடாதே, தொட்டால் விடமாட்டாய்' என்ற பொருளில் ஆங்கில வாசகம் எழுதிய டி-ஷர்ட் அணிந்து இருந்தான். தலையை தாண்டி நெற்றியில் அலை அலையாய் படிந்த அடர்த்தியான கருநிற கேசம், அவனுக்கு அலாதி அழகைக் கொடுத்தது.

ஜிம் வைத்து நடத்தும் தியாகராஜனுக்கு, அவனின் உடல் அமைப்பைப் பார்த்த வினாடியில், அதைக் கட்டுக்கோப்பாக வைக்க அயராது உழைப்பவன் என்பது தெரிந்தது. அவனின் பார்வை, அந்த சமுதாயக் கூடத் தில் இருந்த இருநூறு பேரில் அடிக்கடி வாஸந்தி மேல்

பதிந்தது என்பதைக் கண்டு கொள்ள தியாகராஜனுக்கு சில வினாடிகளுக்கு மேல் ஆகவில்லை.

அவன் இந்தக் குடியிருப்பு வளாகத்தில் இருப்பவன் இல்லை. இவன் யார்? எதற்காக வந்து இருக்கிறான்? வாஸந்தியிடம் அவனுக்கு என்ன வேண்டும்? உடனே தெரிந்து கொள்ள இதயம் பரபரக்க, அவர் அவனை நெருங்கிய நேரம், அவன் வாஸந்தியின் அருகில் சென்று இருந்தான்.

''ஹேய் பாஸந்தி, ஹேப்பி நியூ இயர் ஸ்வீட்டி, எங்கே உங்க அண்ணனோட பையன்?'' என்று அவள் அருகில் சென்று, குறும்பாகக் கேட்டவனின் கேள்வியில் 'இவளுக்கு ஏது அண்ணன்? அவனுக்கு பையன் வேறா?' என்று திகைத்தது தியாகராஜன் மட்டுமல்ல. அவனின் கேலிக் குரல் கேட்டுத் திரும்பிய வாஸந்தியும் 'ஹய்யோ! இவன் எங்கே இங்கே வந்தான்?' என்று திகைத்தாள்.

# 2



'ஹேய் பாஸந்தி...' என்ற உற்சாக அழைப்பில், 'எவன் இப்படி என் பேரை கொலை பண்ணுவது? சாந்தி பூந்தி என்று கிண்டலடிக்க விவேக் ஒரு ஆள் போதாதா?' என்ற எரிச்சலில் திரும்பிய வாஸந்தி அங்கே புன்னகையோடு நின்ற 'அவனை'க் கண்டதும் திகைத்தாள்.



'ஹையோ இவன் எங்கே இங்கே வந்தான்? இவனை அப்பா, அத்தை, மாமா, யாராவது பார்த்து விடப் போகிறார்கள்' என்ற பதைப்புடன் அவசரமாகக் கண்களைச் சுழற்றினாள். அவனுக்குப் பின்னால் வெகு அருகே நின்று இருந்த தியாகராஜனைப் பார்த்ததும் அவளுக்கு மேலும் பயம் கூடியது. அப்பாக்கு எப்படி விளக்குவது?

முன் பின் தெரியாத ஒருவனிடம் தன் கௌரவம்(!) காக்க, சொன்ன யாருக்கும் ஆபத்தில்லாத சின்ன பொய் தன்னை இவ்வளவு சீக்கிரம், சுற்றிலும் உறவினர்கள் இருக்கும்போது இப்படி ஒரு தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அவனுக்கு வாஸந்தியை பதட்டமாகப் பார்க்க ஜாலியாக இருந்தது. முதன் முதலில் பார்த்த போது என்ன பந்தா? ஆனால் அந்த அலட்டலும் அவனுக்குப் பிடித்து தான் இருந்தது.

* * *

இருபது நாட்களுக்கு முன்பு, அம்மா அப்பாவின் திருமண நாள் என்று மதிய உணவை வீட்டிற்குச் சென்று முடித்து விட்டு, கடைக்குள் நுழைந்தபோது அவள் கடையில் இருந்த வேலையாளுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு இருந்தாள்.

பைக்கை கடை முன்பு நிறுத்தும்போதே சத்தம் வெளியில் கேட்க, அவசரமாய் உள்ளே நுழைந்தவன் கண்ணில், உச்சியில் மட்டும் கிளிப் போட்டு இருந்த அவளது விரித்த கூந்தலில், இருந்த மல்லிகை சரம் தான் பட்டது. பிற்பகல் மூன்று மணி வரைக்கும் வாடாமல் இருந்த மல்லிகைச் சரம் அவனுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

மனிதர்களின் உடம்பு சூட்டுக்கு ஏற்றவாறே தலையில் வைக்கும் பூக்கள் வாடுவது இருக்கும், என்று அம்மா சொல்வது நினைவில் தோன்ற, அந்த ஆச்சரியம் மேலும் பெருகியது. இப்படி எடுத்த எடுப்பில் கடையில் இருப்பவர்களிடம் சண்டை போடும் குணம் இருப்பவர்களுக்கு உடல் சூடு அதிகம் இருக்க வேண்டுமே?

இந்த பூ வாடாமல் இருப்பது பின் எப்படிச் சாத்தியம்? இப்போதுதான் பிரிட்ஜில் இருந்து எடுத்து வைத்தாள் என்று சொல்ல முடியாது. காதோரமும் கழுத்தோரமும் பிசிறாகக் கலைந்து இருந்த கூந்தல் புதிதாக கோதப்படவில்லை என்று கட்டியம் சொல்ல, இது அவளின் இயல்பு இல்லை என்ற எண்ணம் தோன்றியது. முகத்தைப் பார்க்கும் ஆவல் மேலும் பெருகியது.

''எக்ஸ்கியூஸ் மீ, மே ஐ ஹெல்ப் யூ...'' என்று அருகில் வந்து கனிவான குரலில் கேட்டான் அபிஷேக். அவன் கவுண்டருக்கு அந்த புறம் இல்லாமல் இந்தப் பகுதியில் அவள் அருகிலேயே நின்று விசாரித்ததால், இவனும் தன்னைப் போல் கடைக்கு வந்த கஸ்டமர் என்று எண்ணிய வாஸந்தி, ''நீ யார் மேன் எனக்கு ஹெல்ப் பண்ண? ஒண்ணும் தேவை இல்லை'' என்று அலட்சியமாகச் சொன்னாள்.

அவனின் குரல் கேட்டதுமே எழுந்து விட்ட பணியாள், ''சார், அவங்க ரெண்டு மாசம் முன்னாடி நம்ம கடையில் மொபைல் வாங்கினாங்களாம்...'' என்று விளக்கம் சொல்ல ''நான் பார்த்துக்கறேன் சரவணன்'' என்று சொன்னான்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு இவள் நம் கடைக்கு வந்தாளா? அவன் சாப்பாட்டுக்குக் கூட வீட்டுக்குப் போவதில்லையே? இன்று விசேஷ நாள் என்று அம்மா வரச் சொன்னதால் தான் போனான். இந்த முகம் மறக்கக் கூடிய முகமும் இல்லை.



''நீங்க ஓனரா...?'' என்று கேட்டவள் மேலும் கீழும் அவனை அளவிட்டாள். அதற்குள், அந்த பையனே, அவள் கொண்டு வந்த மொபைலை நீட்ட, படபடவென்று பொரிந்தாள். ''என்னோட பெர்த் டேக்காக, பதினஞ்சாயிரம் ரூபாய் கொடுத்து மொபைல் வாங்கி எங்க அண்ணா எனக்கு பரிசளித்தால், ரெண்டே மாசத்துல டச் ஸ்க்ரீன் வேலை செய்யலை. நான் இதை எப்படி எங்க அண்ணாவிடம் சொல்வது?'' என்று அதட்டலாகக் கேட்டாள்.

''ஓ! வாரண்டி கார்ட் கொண்டு வந்து இருக்கீங்களா மேடம்? எப்போ கடைசியா வேலை செய்தது? எப்படி நின்றது? கீழே விழுந்ததா?'' என்று கேட்டபடி அந்த கார்டை பிரித்தவன் கண்கள் அசையாமல் நின்றது.

இது விவேக்கின் முகவரியாச்சே? அவன் வாங்கியதா? இவள் தான் அந்த திருவண்ணாமலை பார்ட்டியா? அவன் இவளுக்கு பதினையாயிரம் ரூபாய் செலவழித்து பரிசளிப்பது என்றால்... நோ நோ, அவனை அண்ணன் என்றாள்? மாமா பையனை அண்ணன் என்று தெளிவாகச் சொன்னது நல்லதுதான். கண்கள் இன்னும் கூர்மையாய் அவளை அளவிட்டது.

அழகிதான். புத்திசாலி என்று விவேக் சொல்லி இருக்கிறான். அவனுக்குத் தெரியாமல் இதை ரிப்பேர் செய்ய நினைக்கிறாள் என்பது புரிந்து விட்டது. சும்மா சும்மா போய் அவனிடம் நிற்க இவளுக்குப் பிடிக்கவில்லை. அந்த தன்மான உணர்வும் பிடித்தது. போனைப்

பிரித்தவனுக்கு முதல் பார்வையிலேயே பெரிய ரிப்பேர் என்று தெரிந்து விட்டது. ''என்ன மேடம், போனை சார்ப் போட்டு வாஷ் பண்ணினீங்களா? இதுக்கு வாரண்டி கிடையாது. நீங்கதான் செலவு பண்ணி பார்க்கணும். மூன்று நாள் ஆகும்...'' என்று கேலியாகச் சொன்னபடி போனை மூடி வைத்தான். அந்த ஒரு வார்த்தையில் அவள் முகம் சிவந்து மூச்சடைத்தது.

ஒரே பார்வையில் கண்டு பிடித்து விட்டானே? வேலைக்காரன்தான். ''அது... உடனே ரெடி பண்ணித் தர முடியாதா?'' அவளின் குரல் உள்ளே போய் இருந்தது.

''ஏன்? அப்படி என்ன அவசரம்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

''இ..ல்..லை எங்க அண்ணன் வாங்கிக் கொடுத்த பரிசு. தினம் தினம் அவனைப் பார்க்க வேண்டும். போன் இல்லை என்றால் கேட்பானே?''

''ரிப்பேர் என்று சொல்ல வேண்டியதுதானே?''

''அது... அது... ரெண்டு மாசத்துல என்ன ரிப்பேர் என்று கேட்பானே? அவனோட ரெண்டு வயசு சின்னப் பையன், தெரியாமல் தண்ணில போட்டுட்டான். அதை போய் அண்ணனிடம் சொல்லி, பாவம் குழந்தை...''

''வாட்? குழந்தையா? யாரோட குழந்தை?'' விழிகள் ஆச்சரியத்தில் விரிய அவசரமாக கேட்டான். விவேக்கின் வீட்டில் எந்தக் குழந்தை இருக்கு?

''அண்ணன் குழந்தைதான். அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? மூணு நாளைக்கு நீங்க ரிப்பேர் பண்ணி தரும் வரை, எனக்கு மொபைலுக்கு என்ன வழி? உடனே சரி பண்ணித் தர முடியுமா முடியாதா?'' என்று அதட்டியவளின் வேகம் அவனுக்கு இனித்தது.



அவளிடம் ஒன்றுமே பேசாமல் திரும்பி, அதே மாதிரியான புது மொபைலை எடுத்து, அதில் இருந்த சிம் கார்டைக் கழட்டி மாட்டி முப்பதே வினாடிகளில் நீட்டினான். ''இதை எடுத்துட்டு போங்க. மூணு நாள் கழிச்சு வச்சு இதை கொடுத்து விட்டு, உங்க மொபைலை வாங்கிட்டு போங்க'' என்று கனிவாகச் சொன்ன உடன் அவள் திகைத்துப் போனாள்.

''இதை எடுத்துட்டுப் போகவா...? எந்த நம்பிக்கையில் கொடுக்குறீங்க? அப்படியே நான் எடுத்துட்டுப் போய்ட்டா...?'' என்று திணறிய குரலை சீர்படுத்திக் கேட்டாள்.

''நீங்க போக மாட்டீங்க. அப்படியே போய் விட்டால், உங்களைக் கண்டு பிடிக்க முடியும். ஆனால் ஒருவேளை நீங்க வரவில்லை என்றால், அது நான் உங்களுக்குக் கொடுத்த புத்தாண்டு பரிசாக இருக்கட்டும்'' என்று புன்னகையோடு சொன்னான்.

''என் மேலே வைத்த நம்பிக்கைக்கு தேங்க்ஸ். நான் இதை பத்திரமா திருப்பி தந்து விடுவேன். கவலைப் படாதீங்க'' என்று சொல்லி விட்டுப் போனாள். அவளிடம் போன் இருக்க அவனுக்கு என்ன பயம்? மூன்றே நாட்களில் திருப்பி தந்து விட்டாள்.

அவளை அடுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உந்த, எங்கே என்ன சாக்கு சொல்லிப் பார்க்கலாம்? விவேக்கின் வீட்டிலும் இவள் இல்லையே? அலுவலகத்திற்குப் போகலாமா? ஹாஸ்டலுக்குப் போகலாமா? என்று யோசித்த வேளையில் விவேக்கை போன் பண்ணி, அவளைப் பார்க்கச் சொன்னது தான் சூப்பர். அடுத்த

ஐந்து தினங்களில் நேர்ந்த அந்த சந்திப்பு இன்னும் சுவாரஸ்யமானது.

* * *

''ஹலோ நான் பேசுவது கேட்குதா இல்லையா? என்னை ஏன் பாஸந்தி என்று கூப்பிடுறீங்க? இப்படிதான் முன் பின் தெரியாத பெண்ணிடம் ஸ்வீட்டி என்று எல்லாம் பேசுவதா?'' என்று கோபமாகச் சொன்னாள் வாஸந்தி.

''முன் பின் தெரியாத பெண்ணிடமா அது யாரு? என் கண்ணுக்கு நீங்க நல்லா தெரியுறீங்களே...'' என்று சுற்றிலும் தேடினான்.

''மிஸ்டர், நான் அதைச் சொல்லலை. முன் பின் பழக்கம் இல்லாத என்ற அர்த்தத்தில் சொன்னேன்...'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு விளக்கும்போதே தியாகராஜன் வந்து, ''சார் யாரு...'' என்று விசாரிக்க, அவனைத் தெரியும் என்று சொல்வதா தெரியாது என்று சொல்வதா என்று குழம்பினாள் வாஸந்தி.

அவனை இரண்டு முறை பார்த்து இருக்கிறாள். ஆனால் பேர் கூடத் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை. இரண்டு முறையும், தனக்கு உதவி செய்தான். அது அவனின் வேலை தானே? அதற்கு பணம் கொடுத்தாகி விட்டது. அதுக் காக இவன் இப்படி உரிமையாய் பாஸந்தி ஸ்வீட்டி என் றும் சொந்தம் கொண்டாடிப் பேசுவது சரி இல்லையே?

''ஹலோ அங்கிள், நீங்க இவங்க அப்பாவாக இருக் கலாம் என்பது என் ஊகம். நான் அபிஷேக், விவேக் கோட ப்ரெண்ட். மேடத்தை இரண்டு தடவை பார்த்து



இருக்கேன். மறந்துட்டாங்க என்று நினைக்கிறேன்'' என்று சரளமாகப் பேசி, தன் வலது கரத்தை நீட்டினான்.

சில வினாடிகள் முன்பு பாஸந்தியாகவும், ஸ்வீட்டி யாகவும் இருந்தவள், வினாடி நேரத்தில் மேடமாகிப் போன விந்தையை நம்ப முடியாமல் அவனை ஆச்சரிய மாகப் பார்த்தாள் வாஸந்தி.

விவேக்கின் ப்ரெண்ட் என்ற வார்த்தையில் தியாக ராஜனுக்கு நம்பிக்கை வரவில்லை. தன்னைக் கண்டதும் சமாளிக்கிறானோ என்ற சந்தேகம் தோன்றியது. விவேக் கின் ப்ரெண்ட் என்றால், இவன் முதலில் அவனைத் தானே தேடி இருக்க வேண்டும்? கொஞ்சம் முன்பு அவன் அவளைச் சீண்டியது தன் காதிலும் விழுந்ததே? தன்னைக் கண்டதும் மேடம் என்று சொல்கிறானே? அது நடிப்பு மாதிரி அல்லவா இருக்கிறது? மேலே அவனை விசாரிக்கலாமா அல்லது மகளை அழைத்துக் கொண்டு கௌரவமாக நகர்ந்து விடலாமா என்று யோசித்து முடிவு எடுக்கும் முன்பே விவேக் அவர்களைப் பார்த்து கை ஆட்டியபடி அருகில் வந்தான்.

''ஹேய் அபி, எப்ப வந்த? மாமாவை உனக்குத் தெரி யுமா? உனக்கு ஏற்ற ஜோடி அவர்தாண்டா. அவரும் உன்னை மாதிரியேதான். நீ ஜிம்மில் செலவழிக்கும் நேரத்தை விட, பத்து மடங்கு அதிக நேரம் அவர் ஜிம் மில் இருப்பார் என்றால் பாத்துக்கோ...'' என்று அவன் வயிற்றில் செல்லமாகக் குத்திச் சிரித்தான் விவேக். அவனின் அந்த ஒரு வாசகம், அங்கே இருந்த மூவரின் மனதிலும் வெவ்வேறு விதமான தாக்குதல்களை ஏற் படுத்தியது.

இவன் விவேக்கிற்கு பிரெண்டா? அதான் பேர் தெரிஞ்சு இருக்கு. இந்த விவேக் பேர் மட்டும் சொன்னால் போதாதா? பட்ட பேர் வரையா சொல்லித் தரணும்? அப்படியே சொன்னால்தான் என்ன? விவேக்கும் இவனும் ஒண்ணாகி விட முடியுமா? இவன் தன்னை பாஸந்தி என்று கூப்பிடுவானா? தனியா கூப்பிட்டு அர்ச்சனை பண்ணனும் என்று மனதிற்குள் திட்டிக் கொண்டு இருந்தாள் வாஸந்தி.

அவன் பொய் சொல்லவில்லை. நல்லவன்தான் போல. அதோடு உடல் பயிற்சியில் அக்கறை உடையவன் என்றுதான் நினைத்தும் சரி. தினமும் ஒரு மணி நேரம் ஜிம்மில் செலவழிக்கணும் என்ற கட்டுப்பாடு இருந்தால், அது பழக்க வழக்கங்களில் ஒரு ஒழுங்கினைக் கொண்டு வரும். அவன் கெட்டவனாக இருக்க முடியாது என்று நினைத்தார் தியாகராஜன்.

மாமாக்கு ஜோடியா? மாமா பொண்ணுக்கு சரியான ஜோடி என்று சொல்லி இருந்தால் சூப்பரா இருந்து இருக்கும் என்று எண்ணிய அபிஷேக்கின் விழிகள் வாஸந்தியை விழுங்கியது.



# 3

வாஸந்தி, தியாகராஜன், அபிஷேக், மூவரும் தத்தமது எண்ணத்தில் மூழ்கி இருந்தாலும், விவேக்கின் வார்த்தைக்கு பதில் முதலில் அபிஷேக்கிடம் இருந்தே வந்தது.



''உனக்கு ஆயுசு நூறு. இப்பதான் அங்கிளிடம் சொல்லிட்டு இருந்தேன். அது சரி, உங்க மாமா என்பதற்காக இப்படியா பத்து மணி நேரம் ஜிம்மில் இருப்பார் என்று அவருக்கு ஐஸ் வைப்பது? அவருக்கு ஜலதோஷம் பிரிக்கப் போகிறது'' என்று விவேக்கின் முதுகில் தட்டிச் சிரித்தான்.

''கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளில், காய்ச்சல் தலைவலி என்று எந்த டாக்டரும் இதுவரை பார்த்ததே இல்லை. நான் திருவண்ணாமலையில் கடந்த இருபத்தி மூணு வருஷமா ஜிம் வச்சு நடத்தி வருகிறேன். அது எனக்கு பொழுது போக்கு இல்லை. அதுதான் எனக்கு வேலை'' என்று பெருமையாகச் சொல்ல மூவருமே சிரித்தார்கள்.

''ஓ! நீங்க அப்ப வந்து நின்னப்பவே செம பிட்நெஸ் என்று நினைத்தேன் அங்கிள்'' என்று அவரின் புஜங்களை ஒரு விரலால் அழுத்தி முறுவலித்தான் அபிஷேக்.

''சாந்தி, இது ஆவதற்கில்லை, இனி நமக்கு இங்கே வேலை இல்லை'' என்று நகர்ந்தான் விவேக். அவள் போகிறாளே என்ற எண்ணம் வந்த போதும், இவருடன் பேச ஆவல் வர, சிரிப்போடு தியாகராஜனோடு தங்கி விட்டான் அபிஷேக். ஆனால் அங்கிருந்த நகர்ந்த வாஸந்திக்கு, கவனம் இங்கேயே இருந்தது. சில விநாடிகளில் அங்கே வந்து விட்டாள்.

''இன்டோர்-ல செய்வதற்கும், வெளி இடங்களில் செய்வதற்கும் வித்தியாசம் இருக்கு இல்லையா அங்கிள்...'' என்று அவன் அப்பாவிடம் உடல் பயிற்சி சம்பந்தமாகப் பேசிக் கொண்டு இருக்க அவளையும் அறியாமல் பெரிதாக மூச்சு வந்தது. அவளின் வேக

நடையையும், வெளிவந்த பெருமூச்சையும் பார்த்தவன், சிரிப்போடு தியாகராஜனிடம் திரும்பி, தன் பர்சில் இருந்து ஒரு முகவரி அட்டையை எடுத்து நீட்டினான்.

''இது என்னுடைய கார்ட் அங்கிள். நான் மொபைல் சேல்ஸ், மற்றும் சர்வீஸ் செய்யும் சின்ன கடை வைத்து இருக்கிறேன். அங்கேதான்...'' என்று வாஸந்தியின் முகத்தில் பார்வையை பதித்துச் சொல்ல ஆரம்பித்தான் அபிஷேக்.

''இங்கே ஜிம் வைக்க அசோசியேஷன் செக்ரெட்டரி கிட்ட பேச உங்களை மாமா உடனே கூப்பிட்டாங்க'' என்று அவசரமாக இடையிட்டாள் வாஸந்தி.

''நல்லதா போச்சு நீங்க. இங்கே வந்துட்டா தினமும் பேசலாமே? முதலில் அந்த டீலை முடிச்சுடுங்க அங்கிள். நான் மேடம் கூடப் பேசிக்கிட்டு இருக்கிறேன்'' என்று வழி அனுப்பி வைத்தான் அபிஷேக்.

''இந்த பார்ட்டில எத்தனை பேர் இருக்காங்க? உங்க பிரெண்ட் விவேக் கூட உட்கார்ந்து பேச வேண்டியது தானே? எதுக்கு அப்பாவிடம் பசை போட்டு ஒட்டின மாதிரி உட்கார்ந்து பேசிட்டு இருக்கீங்க? என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள் வாஸந்தி.

''என்னமோ கேட்ட உடனே கொடுத்துடற மாதிரி எதுக்கு இந்த கேள்வி? சரி உட்கார். பனிரெண்டு மணி வரைக்கும் பேசிட்டு இருக்கலாம்.''

''நான் விவேக்கிடம் போறேன்.''

''நான் அங்கிளிடம் போறேன்...'' என்று அவனும் உடனே எழுந்து நடந்தான்.



''ஏய்...'' என்று பல்லைக் கடித்தவள், ''சரி, வாங்க அத்தை கிட்டே நான் உட்கார்ந்துக்கறேன். நீங்களும் அங்கேயே வந்து பேசுங்க. உங்களுக்குத்தான் அத்தையைத் தெரியுமே?''

''ம்ம்ம், விவேக்கோட அம்மாவா தெரியும். ஆனால் உங்க அண்ணனோட அம்மாவா... ஒரு பாட்டியா எல்லாம் தெரியாது. அதைப் பற்றி அவங்களிடம் பேசலாமா?''

''கடவுளே!''

''ஓ! உங்க அத்தை வயசான மாதிரி பீல் பண்ணுவாங்களோ? அன்னிக்கு சொன்ன அண்ணா விவேக் தானா? எனக்குத் தெரிஞ்சு அவனுக்கு கோர் பிரெண்ட் கிடையாது. அப்புறம் எப்படி கல்யாணம் ஆகி, பையன் பிறந்து, அவன் வளர்ந்து உங்க...''

''சாமி! உங்களுக்கு விவேக் தெரியும் என்பது தெரியாமல் ஒரு சின்ன பொய் சொல்லிட்டேன். அதை இத்தனை தடவை சொல்லிக் காட்டணுமா? நானே விவேக்கிடம் போய் முதலில் சொல்லிடறேன். அவன் கேலி பண்ணினால் பண்ணட்டும். ஏற்கனவே வண்டி சாவியை வண்டிக்குள்ளே வட்டி பூட்டினதுக்கே எத்தனை வருஷம் சிரிப்பானோ? இதுக்கும் சேர்த்து சிரிக்கட்டும். நீங்க என்னை ப்ளாக்மெயில் பண்ணுவதை விட அவன் சிரித்தால் தப்பில்லை'' என்று வேகமாகச் சொன்னவள் விடுவிடென்று செல்ல, அவளின் கை பற்றி நிறுத்தினான்.

''சாரி சாரி. என்ன ப்ளாக் மெயில் என்று பெரிய வார்த்தை எல்லாம் சொல்கிறாய்? அப்படி எதுவும் இல்லை. சும்மா கேலியாகச் சொன்னேன். இனிமேல் அதை பற்றிப் பேசலை. அதுக்காக இந்த நேரத்துல முகத்தை கோபமா

வச்சுக்க வேண்டாம். மணி பனிரெண்டாக போகுது. புது வருஷம் பிறக்கப் போகுது. இந்த வருஷம் நீ நினைத்த எல்லாமே உனக்குக் கிடைக்கட்டும்'' என்று மென்மை யான குரலில் சொல்ல, அவள் அவன் புறம் ஒரு தீர்க்க மான பார்வையைச் செலுத்தி, 'தேங்க்ஸ்' என்ற ஒற்றை வார்த்தையுடன் விலகி மாதவியின் அருகில் அமர்ந்து அவரின் தோளில் சாய்ந்து கொண்டாள் வாஸந்தி.

''ஹேய் சாந்தி! என்ன ஆச்சு? திடீர்னு டல்லாயிட்ட? ராத்திரி பாட்டி மேலே இருந்த கோபத்துல நீ சரியா சாப்பிடக் கூட இல்லை. பசிக்குதா?'' என்று உச்சியை வருடி விசாரித்தார் மாதவி.

''அதெல்லாம் இல்லை அத்தை. தூக்கம் வருது'' என்று கண்களை மூடிக் கொண்டாள்.

''இவ்வளவு சத்தத்தில எப்படி தூக்கம் வரும்? என்ன கதை சொல்ற?'' என்று கேள்வி மனதில் தோன்றினாலும், அவர் கேட்கவில்லை. அம்மா அவளின் மனம் வாடும் படி ஏதாவது சொல்லி இருக்கலாம் என்று தோன்ற, அவர் அமைதி காத்தார்.

மூடிய கண்களுக்குள், அவனது சிரித்த முகம் தோன்ற, காதுகளில் அவனுடைய புத்தாண்டு வாழ்த்து மீண்டும் ஒலித்தது. அதென்ன எப்ப பார்த்தாலும் இவனிடம் தான் அசடு வழியும் படியே சந்தர்ப்பங்கள் அமையுது? இவன் சும்மாவே தன்னைப் பார்த்துச் சிரிப்பான். முதல் சந் திப்பில் தான் பொய் சொன்னதை உடனடியாகக் கண்டு பிடித்து இருப்பான். அதை மீண்டும் இரண்டாவது சந்திப்பில் தான் தொடர்ந்த போது அவன் மனசுக்குள் எப்படிச் சிரித்து இருப்பான். விவேக்கிடம் சொல்ல வில்லை. அந்த வகையில் பரவாயில்லை. எங்கே இருக்கிறான் என்று கண்களால் தேடினாள்.



ஸ்பீக்கரில் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான தீம் சாங் ஒலிக்க, அந்த மெட்டிற்கு ஏற்ற வகையில் கைகளைத் தட்டி, கால்களால் தாளமிட்டபடி விவேக்கின் அருகில் நின்று இருந்தவனைக் கண்டு பிடித்த வாஸந்தியின் விழிகள் அவன் மேல் இருந்தாலும், சிந்தனை அவனைப் பார்த்த இரண்டாவது சந்திப்பிற்கு சென்றது.

* * *

மைலாப்பூரில் இருந்த ஹாஸ்டலில் இருந்து நுங்கம்பாக்கத்தில் இருந்த அவனின் அலுவலகத்திற்குச் செல்ல நேரடியாகப் பேருந்து வசதி இல்லை.

'ஒரு வண்டி வாங்கிக்கோ' என்று யோசனை சொன் னான் விவேக்.

''இப்ப வண்டி வாங்க பணம் கேட்டால், என்னை 'நீ வேலை பார்த்து கிழிச்சது போதும்' என்று திருவண்ணா மலைக்கு மூட்டை கட்டி பஸ் கூட வேண்டாம் என்று பார்சல் சர்வீஸ்ல தூக்கிட்டுப் போய்டுவாங்க பாட்டி. ஒரு வேளை என்னை விரட்டி விடத்தான் இந்த யோசனையா? நான் இங்கே இருப்பது ரொம்ப கஷ்டமா இருந்தால் நான் வேற இடத்தில வேலை பார்த்துக்கறேன்'' என்று முறைத்தாள் வாஸந்தி.

''பாட்டி மாதிரியே உனக்கும் மூளை சூப்பரா வேலை செய்து தப்பு தப்பா அர்த்தம் கண்டு பிடிக்குதே? எப்படி சாந்தி?'' என்று தலையில் அடித்துக் கொண்டான் விவேக்.

''எதுக்கு தலையில் அடிச்சுக்கிற... ப்ச்! நீங்க? பணம் இல்லாமல் ப்ரீயா வண்டி கொடுக்கற ஆள் உனக்கு...

ஹய்யோ... உங்களுக்கு தெரியுமா?'' என்று விசாரித் தாள்.

''ஓ! இதுதான் சபை மரியாதையா? நல்லா இருக்கு. ஆனால் நீ ஒவ்வொரு தடவையும் மரியாதை விகுதி போடும் முன்னாடி வரும். ப்ச், ச்சை, கடவுளே, ஹய்யோ... இதெல்லாம் பின்னால் வரும் மரியாதையை தூக்கிச் சாப்பிடுது. எதுக்கு சிரமம்? விட்டுட்டுப் பரவாயில்லை. பேர் சொல்லி சாதாரணமாவே பேசு. எல்லோருக்கும் நீ என் மாமா பொண்ணு என்று தெரியும், யாரும் தப்பா எடுத்துக்க மாட்டாங்க...''

''ஹப்பா! ஒரு பெரிய தொல்லை விட்டது. இத்தனை நாளா நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். தேங்க்ஸ். அது சரி, நான் கேட்ட கேள்விக்கு பதில் வரலையே? யாருப்பா ப்ரீயா வண்டி கொடுக்கறாங்க?''

''ப்ரீயா யாரு கொடுப்பாங்க. உனக்கு நான் வாங்கித் தரேன்...''

''ப்...ளீஸ் வேண்டாம். காஸ்ட்லியா போன் வாங்கித் தந்ததே இன்னும் எனக்கு ஒரு மாதிரி இருக்கு. இதுல வண்டி வேறயா? நான் பார்த்துக்கறேன்'' என்று மறுத்துச் சொன்னாள் வாஸந்தி.

''போன் உனக்குப் பிறந்த நாள் பரிசு. மாமா பணம் கொடுத்து உனக்கு ஏதாவது வாங்கித் தரச் சொன்னாங்க என்று ஆயிரம் தடவைச் சொல்லியாச்சு. அது உன் மண்டையில் ஏறலையா?''

''மாமா கொடுத்தது அஞ்சாயிரம் தான். எனக்குத் தெரியும்...''

''நீ சொல்றது உங்க அப்பா. நான் சொல்றது எங்க அப்பா. நான் சொல்ல வருவதைப் புரிஞ்சுக்கோ. நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்னது பரிசா இல்லை. நான் பணம் கட்டி வண்டி எடுத்துத் தருகிறேன். உன் சம்பளத்தில் மாசா மாசம் பணம் கட்டி விடு'' என்று சொல்லி ஐம்பதாயிரம் ரூபாய் செலவு பண்ணி 'ஹோண்டா ஆக்டிவா' எடுத்துக் கொடுத்தான்.



மறுநாள் அவள் தனியாக கபாலீஸ்வரர் கோவிலுக் குப் போய் சாமி கும்பிட்டு வெளியே வந்த வினாடியில் சாவியை தேடிய போது அந்தக் கூத்து நிகழ்ந்தது. கோவி லுக்கு போகும்போது சீட்டுக்கு அடியில் இருந்த கைப் பையை எடுத்து பர்ஸ் இருக்கா போன் இருக்கா என்று சரி பார்த்தவள், வண்டியைப் பூட்டி, சாவியை டிக்கியில் போட்டு, சீட்டை அழுத்தி மூட, சாவி உள்ளே மாட்டிக் கொண்டதைக் கண்டு பிடிக்கவே அவளுக்கு வெகு நேரமானது.

அதன் பிறகு வேறு மொழி இன்றி விவேக்கிற்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்ல, 'செங்கல்பட் டுக்குப் போய்க் கொண்டு இருக்கிறேன், நான் ஷோ ரூமில் சொல்லி வேறு ஆள் வரச் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

இவன் கம்மியாய் தான் சிரித்தான். முதலிலேயே சிரித்து முடித்து இருக்க வேண்டும். இவளை எதிர்பார்த்து வந்தானோ? இப்போதுதானே எல்லாம் புரியுது. ஷோ ரூமில் மட்டும் சொன்னாள் அவர்கள் நேரமாக்கக் கூடும் என்று நண்பனிடமும் சொல்லி இருக்க வேண்டும். பதினைந்தே நிமிடத்தில் வந்து விட்டான்.

அவனுடைய பைக்கில் இன்னொரு ஆளையும் கூட்டி வந்து சில நிமிடத்தில் வேலை முடித்து விட்டு உள்ளே இருந்த சாவியை எடுத்துக் கொடுத்து விட்டு, போனை துவைக்கும் வேலை எல்லாம் தேவை இல்லை என்று சிரித்துவிட்டுப் போனான்.

இப்படி விதம் விதமாக வேலை செய்து அசடு வழிந்து விட்டு, அவனைப் பார்த்து முறைப்பது என்ன நியாயம்? அவனும் இதைப் பற்றிப் பேச மாட்டேன் என்று சொல்லி விட்டானே? இனிமேல் சுமுகமாகப் பேச வேண்டும் என்று மனதிற்குள் முடிவெடுத்து நிமிர்ந்த போது அவன் அவள் அருகில் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். மின் விளக்குகள் இல்லை.

அவள் அவனைப் பார்த்த வினாடியில் மணி பனிரெண்டு அடிக்க, நூற்றுக் கணக்கான மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தில், ஒரே இடத்தில் பட்டாசுகளும் பலூன்களும் வெடிக்க, அங்கிருந்த ஆண் பெண் குழந்தைகள் என்று இருநூறு பேரின் உற்சாகக் குரலில் 'ஹேப்பி நியூ இயர்' என்ற வாழ்த்தொலி கேட்டது.

அலங்காரத்திற்காக கட்டப்பட்டு இருந்த பலூன்களை குழந்தைகள் வெடிக்க, உள்ளிருந்து வண்ணக் காகிதங்கள் அந்த அரங்கம் முழுவதும் பறக்க, அதில் சில துகள்கள் அவர்கள் மீது விழ, சுற்றிலும் இருந்த உற்சாக மன நிலைக்கு மாறாக, அவர்களின் இருவருக்குள்ளும் மன நிறைவுடன் கூடிய அமைதி குடி இருந்தது.

# 4



''கௌசல்யா சுப்ரஜா ராம பூர்வா...'' என்று கணினியில் இருந்து கசிந்த எம்.எஸ். சுப்புலட்சுமியின்



குரலோடு இணைந்து பாடியபடி அடுப்பில் பாலை வைத்த கல்யாணி காலடி ஓசை கேட்க, ''என்ன அபி சீக்கிரம் வந்துட்ட? மணி ஆறு தானே ஆகுது?'' என்று திரும்பியவர், ஷார்ட்ஸ், ஸ்லீவ்லெஸ் டி ஷர்ட்டுடன், படுக்கை அறையில் இருந்து நேரே வருவதை உணர்ந்து மேலும் வியப்படைந்தார்.

''டேய் நீ ஜாகிங் போகலையா? நைட் எப்போ வந்த? ரொம்ப லேட் ஆகிடுச்சா? நைட் புல்லா பார்ட்டியா? இந்த ராத்திரி பனிரெண்டு மணிக்கு பார்ட்டி வைத்து புத்தாண்டை வரவேற்பது எல்லாம் வெள்ளைக்காரன் பண்றது. நமக்குக் காலை ஆறு மணிக்கு சூரியன் தோன்றும் போதுதான் ஒரு நாள் உதயமாகிறது'' என்று அடுக்கும் போதே அவன் சிரிப்போடு சேர்ந்து கொண்டான்.

''விளக்கை ஏற்றுவதுதான் நம் கலாச்சாரம், மெழுகுவர்த்தி ஜோதியை அணைப்பது மேலை நாட்டுப் பழக்கம். ஆசாரமான இந்தக் குடும்பத்தில் பொறந்துட்டு, இந்த மாதிரி பார்ட்டிக்கு போய் வர எப்போ பழகிக் கொண்டாய்? போன வருஷம் கூட இந்த வேலை நீ செய்யலையே? இப்ப என்ன ஆச்சு? இப்ப பாரு வழக்கமா நீ போற ஜாகிங் கூட...''

''டேய் டேய்! போதும். நீ அப்படியே நான் மனசில் நினைப்பதைக் கண்டு பிடித்துப் பேசுவதில் கில்லாடி என்பதுதான் தெரியுமே. இதோட நிறுத்திக்க...'' என்று சிரித்தார் கல்யாணி.

''காபி தரீங்களா? நைட் தூங்கலை. உங்க காபி குடிச்சால் சுகமா தூக்கம் வரும். எட்டரைக்கு எழுப்புங்க.

கடைக்குப் போகணும்'' என்ற அபிஷேக்கை விநோத மாகப் பார்த்தார் கல்யாணி.

''காபி குடிச்சால் எல்லோரும் தூக்கம் வராது என்று சொல்வாங்க. நீ என்ன தூக்கம் சுகமா வரும் என்று சொல்கிறாய்?'' என்று கேலியாக வாய் கேட்டாலும், ஏன் நேற்று தூங்கவில்லை என்று மனதிற்குள் தோன்றிய கேள்வி உள்ளேயே வாசம் செய்தது.

அப்போதைக்கு காபி கொடுத்து அவனை அனுப்பி விட்டாலும், அவன் குளித்துக் கிளம்பி காலை உண விற்கு அமர்ந்த போது, ''என்ன சார் நேற்று பார்ட்டியில் விசேஷம்? இதுவரை இல்லாத பழக்கமா பார்ட்டிக்குப் போனீங்க. நைட் தூங்கலை என்று சொன்னீங்க. இன்று ஜாகிங் கூடப் போகலை. நாட்டுல என்ன நடக்குது?'' என்று பிடித்துக் கொண்டார்.

''ஆடு நடக்குது, கோழி நடக்குது, ஏன் நம்ம வீட்டு டி.வி.ல ப்ரோக்ராம் கூட நடக்குது, உங்களுக்கு எது நடப்பது பற்றிய தகவல் வேணும்?'' என்று கேலியாக விசாரித்தான்.

''ஜோக்கா? ஈஈ... இவ்வளவு சிரிச்சால் போதுமா?''

''ஹய்யோ! ஏன்மா சாப்பிட்டுக்கிட்டு இருக்கும் சின்னப் பையனை இப்படி பயமுறுத்துறீங்க? நீங்க சிரிக்கவே வேண்டாம்'' என்று பயந்தவன் மாதிரி நடித் தான் அபிஷேக்.

''பேச்சை மாத்தாதே. ஒழுங்கா சொல்லு. நேற்று பார்ட்டி எங்கே? அதுல என்ன விசேஷம்?''

''நீங்க நினைப்பது மாதிரி நான் தனியா எங்கேயும் யாரோடும் போகவில்லை. பெசன்ட் நகர்ல, 'பீச் கேஸில்'



ஞாபகம் இருக்கா? விவேக் வீடு. அந்த ப்ளாட்ல நடந்த பார்ட்டி இருநூறு பேர் இருந்தாங்க. விவேக் பார்த்து நாளாச்சு என்று போனேன். போதுமா?'' என்று சிரிப் போடு சொல்ல அவர் நம்பாமல் அவனைக் குறுகுறு வென்று ஆராய்ந்தார்.

''நம்பிக்கை வரலையா? அவனுக்கு போன் போட்டு தரேன். வந்தேனா இல்லியா? எவ்வளவு நேரம் அங்கே இருந்தேன் எல்லாம் விசாரியுங்க...'' என்று தன்னுடைய மொபைலை எடுத்து எண்களை அழுத்த ஆரம்பித்தான்.

''ஹேய் அதெல்லாம் வேண்டாம். என் பையனைப் பற்றி நான் வெளி ஆளிடம் விசாரிக்கவா? ம்ஹூம். கட் பண்ணு. முதலில். அது இருக்கட்டும். எப்போ எடுத்த இந்த புது மொபைல்? நான் பார்க்கவே இல்லையே?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

''என் கடையில, நா...ன் சொந்த உபயோகத்துக்கு ஒரு மொபைல் எடுப்பதுக்குக் கூட உங்களிடம் அனுமதி வாங்கணுமா? என்ன கொ..டு..மை கல்யாணி இது?''

''அம்மாவை பேர் சொல்லிக் கூப்பிட்டா, வாயிலேயே கொடுப்பேன் படவா! என்ன புதுப் பழக்கம் எல்லாம் படிக்கிறாய்? சரி நீ சொல்லாட்டா போ. எனக்கு என்ன வழியா இல்லை? இத்தனை நாள் கல்யாணம் வேண் டாம் என்று டிமிக்கி அடித்தாய் இல்லையா? இப்ப உன் ஜாதகத்தை எடுத்து அப்பாவிடம் காட்டி, கல்யாண யோகம் வந்துடுச்சா? பெத்தவங்க பார்த்து நடத்தி வைக்கும் கல் யாணமா? காதல் கல்யாணமா என்றும் விசாரிக்கிறேன்...''

''அட! அவ்வளவு தூரம் வந்தாச்சா? அப்ப சரி என்னை ஆளை விடுங்க. நீங்க ஜோதிட சிகாமணி, சுந்தரேசன்

சார்கிட்டே கேட்டுக்கோங்க. உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லவா? அம்மா, இந்த அபிஷேக் கல்யாணம் பண்ணிகிட்டா, அது பெத்தவங்க சம்மதத்தோடுதான் நடக்கும். ஆனால் அதுக்காக, எனக்குப் பிடிக்காத பொண்ண நீங்க எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணும் என்று நினைச்சா... அது ஒருக்காலும் நடக்காது... ஹா! இது எப்படி இருக்கு?''

''அப்ப காதல் கல்யாணம் தான். பொண்ணு கூட ஏற்கனவே பார்த்த மாதிரி தெரியுதே?''

''ஒரு பையனிடம் அம்மா பேசுற மாதிரி பேசுறீங்க? உங்களுக்குக் கூச்சமே இல்லியா?''

''எனக்கென்னடா கூச்சம்? கல்யாணம் பண்ணிக்காம பொண்ணு கூடப் போனாய் என்றால் அது தப்பு. அதை நான் பேசக்கூடாது. ஆதரிக்கக் கூடாது கண்டிக்கணும். காதல் கல்யாணம் பண்ணிக்கப் போறியா என்று கேட்டால் தப்பா? உனக்கு ஒரு புள்ளி விபரம் சொல்லவா? ஆயிரம் ஆண்டுகளுக்கு 927 பெண்கள் தான் இப்ப இருக்காங்களாம். பெண்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதால், இந்தியால பசங்களுக்கு ஏற்ற மாதிரி நல்ல பொண்ணு கல்யாணத்துக்கு கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கு. அதனால் எங்களுக்கு சிரமம் இல்லாமல் நீயே பார்த்து விட்டால் எங்க மண்டை காயாது பாரு...''

''ஹய்யோ அம்மா புள்ளி விபரத்தோட பின்னுறீங்களே? எப்படிம்மா இப்படி எல்லாம்...''

''எல்லாம் உன் கைங்கர்யம் தான். நீ படிச்சது மட்டும் இல்லாமல் எங்களையும் கம்ப்யூட்டர் படிக்க வச்ச இல்ல? அதான் இப்படி தீட்டின மரத்துலையே கூர் பார்ப்பது...''



''அப்பா கூட லேப் டாப்போட ஹை டெக் ஜோதிடரா கலக்குறார். எங்கே ஆளை காணோம்?''

''ஹை டெக் ஜோதிடருக்கு ஏகப்பட்ட டிமாண்ட். உங்களைத் தேடி-ன்னு டி.வி.ல ஒரு ப்ரோக்ராம் பண்ணின பிறகு நிறைய அழைப்புகள். முன்னாடி எல்லாம் வேறே வேறே வருஷ பஞ்சாங்கம் பார்க்கணும். அதனால் வீட்டுலே இருந்து பார்த்தார், இப்ப கணினியில் வந்துட்டதால, அவங்க வீட்டுக்கே போய் பொருத்தம் பார்த்துச் சொல்கிறார். மைலாப்பூர் ஜட்ஜ் வீடு வரை போய் இருக்கார். வர நேரம்தான். நீ கிளம்பலையா?''

''கிளம்ப வேண்டியதுதான்...'' என்று பைக்கை உதைத்துக் கிளப்பியவன், ஆக்சிலேட்டரை முறுக்குவதற்கு முன்பு, 'அப்ப நானே நல்ல பொண்ணா பார்த்துச் சொன்னால் உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்பதில் எனக்கு சந்தோஷம். வரட்டா...'' என்று கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் பறந்தே போனான்.

* * *

முதல் நாள் புத்தாண்டுக் கொண்டாட்டம் முடித்து, 'பொங்கலுக்கு ஊருக்கு வருவதாக வாக்களித்து அப்பாவையும் பாட்டியையும் வழி அனுப்பி விட்டு அன்று காலையில் அலுவலகத்தில் இருந்த வாஸந்திக்கு ரிசப்ஷனில் இருந்து அழைப்பு வந்தது.

''உங்களுக்கு கெஸ்ட். நார்த் இந்தியன் மாதிரி இருக்காங்க.''

''எனக்கு எந்த நார்த் இந்தியனைத் தெரியும்? கஸ்டமரா?''

''இல்லை பெர்சனலா பார்க்க வந்து இருக்காங்க...''

''சரி, உட்காரச் சொல்லுங்க. இதோ வந்துட்டேன்'' என்று வெளியே வந்தாள். அங்கே இருந்த ஐம்பது வயதுப் பெண்மணியை இதற்கு முன் சந்தித்த ஞாபகம் இல்லை. ஆனால் முகம் பரிச்சயமானது மாதிரி தோன்றியது. வெள்ளையில் ஆகாய நீல நிறத்தில் குட்டி குட்டிப் பூக்க ளிட்ட பருத்தி புடவை. படிய வாரி கொண்டையிட்ட முகம். ஒரு நரை இல்லை. வேண்டும் என்றே வயதைக் கூட்டி காட்டச் செய்த அலங்காரம் மாதிரி இருந்தாலும், வாரணம் ஆயிரம் வயதான சிம்ரன் மாதிரி அழகாகத் தோன்றியது. முகத்தில் அசாத்திய கம்பீரமும் நம்பிக் கையும் சுடர் விட்டது.

இவளைப் பார்த்த உடனே, எழுந்தவர் கரம் குவித்து, ''நான் சுஜாதா பாட்டில். புதுச்சேரியில் இருந்து வரு கிறேன். மதர் சுபீரியர் உனக்கு புத்தாண்டு வாழ்த்துச் சொல்லி விட்டு உன்னை பார்த்து விட்டு வரச் சொன் னார்கள்'' என்று உணர்ச்சி துடைத்த குரலில் சொன் னாலும், அதில் மெல்லிய சோகம் இழையோடுவதாகத் தோன்றியது தன்னுடைய கற்பனையா?

''வணக்கம் மேடம். உட்காருங்க. புதுச்சேரியில்... மதர்... யாரையும் எனக்குத் தெரியாதே? நீங்க யாரைச் சொல் றீங்க?'' என்று குழப்பத்தோடு விசாரித்தாள்.

''திருவண்ணாமலை செயின்ட் மேரிஸ் ஸ்கூல் மதர். இப்ப புதுச்சேரியில் வந்து செட்டில் ஆகி இருக்காங்க...''

''ஓகே ஓகே, தேங்க்ஸ். உங்களை இதுக்கு முன்னாடி நான் பார்த்ததில்லையே? அதனால்தான்... சாரி மேடம். ஹேப்பி நியூ இயர் மேடம். சென்னைக்கு வருவதை சொல்லவில்லையே என்று நினைத்தேன். மதருக்கு எப்படித் தெரியும்? கண்டு பிடிச்ச உடனே உங்களை அனுப்பி வச்சுட்டாங்களா? ஷி இஸ் கிரேட். ஸ்வீட். ஐ லவ் ஹர்...'' என்று உற்சாகமாகச் சொன்னவளை கனி வோடு பார்த்து இருந்தார் சுஜாதா.



''அம்மான்னா அப்படித்தான்...'' என்ற அந்த இரண்டு வார்த்தைகளின் உண்மையான அர்த்தம் அப்போது அவளுக்குப் புரியவில்லை. முதலில் அவள் அதை கவனிக்கவே இல்லை. கவனித்து கேட்டு இருந்தாலும் அதை மதர் என்று சமாளித்து இருக்கலாம் என்றாலும், அதற்கு அவசியம் நேரவே இல்லை.

''ஓ! சாரி நான் பாட்டுக்க பேசிட்டே இருக்கேனே? நீங்க என்ன சாப்பிடுறீங்க? சூடா காபி அல்லது டீ...''

''நான் இரண்டு வேளை உணவு தவிர வேறு எதுவும் எடுத்துக் கொள்வதில்லை. உனக்கு மதர் இதைக் கொடுத்து அனுப்பினார்கள்'' என்று சின்ன பார்சலைக் கொடுத்தார் சுஜாதா. அதைப் பிரித்துப் பார்த்தாள். மூழ்கும் பொழுது நீர்மூழ்கி கப்பலாக மாறிவிடு என்ற தலைப்பில் தன்னம்பிக்கை ஊட்டும் ஆங்கிலப் புத்தகம்.

''இந்த புத்தகம்... உ..ங்...க..ளி..ன் தே..ர்..வா? நீங்க மதருக்கு...''

''பொண்ணு மாதிரி'' என்று சுருக்கமாக இடையிட்டு முடித்தவர், 'அப்ப நான் கிளம்புகிறேன்' என்று எழுந்தார்.

''ஒரு நிமிஷம். மதருக்கு எதாவது கொடுக்கணும். முன்பே நீங்க தகவல் சொல்லி இருந்தால்... ப்ச்...!'' என்று சொல்லிவிட்டு உள்ளே தன் மேஜைக்கு வந்தவள், அங்கிருந்த ஒரு ஆப்பிளையும், ஒரு டைரியும் எடுத்து வந்து நீட்டினாள்.

''புத்தாண்டு வாழ்த்துச் சொல்லிடுங்க. ஒண்ணுமே சாப்பிடாமல் போறீங்களே? இந்த பழமாவது சாப்பிடுங்க. இவ்வளவு தூரம் வந்து என்னைப் பார்த்ததற்கு ரொம்ப தேங்க்ஸ். நான் சீக்கிரமே மதுரை வந்து பார்க்கிறேன் என்று சொல்லுங்க. உங்க போன் நம்பர்...''

''நான் போனே வைத்துக் கொள்வதில்லை. நான் கிளம்புகிறேன்'' என்று அவசரமாக நகர்ந்தவரை வியப்பாகப் பார்த்தாள் வாஸந்தி.

அவர் வெளியே போன சில வினாடிகளில் உள்ளே வந்த விவேக் அவசரமாக அம்மாவை அழைத்து, ''அம்மா! என்னால் நம்பவே முடியலை. சுஜாதா அத்தை சாந்தியைப் பார்க்க ஆபீசுக்கு வந்து இருந்தாங்க...'' என்று ஆச்சரியமாக விவேக் சொன்னாலும் எதிர்முனையில் மாதவிக்கு அவ்வளவு ஆச்சரியம் இல்லை.

# 5



சுஜாதா அத்தை தன் அலுவலகத்திற்கு வந்து தன் மகளைப் பார்க்கக் கூடும் என்பதை விவேக் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. அவனே அத்தையை ஒரு போட்டோவில் பார்த்ததுதான். அத்தைக்கும் மாமாக்கும் இடையே கசப்பு ஏற்பட்டு பிரிந்து விட்டார்கள் என்பதே அவனுக்கு அரசல் புரசலாகத் தான் தெரியும். ஆனால் அங்கே போன வரையில், அத்தை சொல்லும், செய்யும்



விதமா விதமான வட இந்திய உணவு வகைகள், இனிப்புகள் இவற்றை கேட்கும்போதே நாவில் நீர் ஊறும். பார்க்கும்போதே சாப்பிடத் தோன்றும்.

ஆலு பரோட்டா, சப்ஜி, பரோட்டா, டால், வெஜிடபிள் குருமா, பயறு வகைகளில் செய்யும் விதம் விதமான மசாலாக்கள், என்று அத்தையின் சமையல் பிரமாதமாக இருக்கும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஹோட்டலில் வாங்கிச் சாப்பிடுவது மத்திய தர குடும்பத்தில் தவிர்க்கப்பட்ட ஒன்று. அதனால் அந்த உணவு வகைகளின் பேரே புதுமையாக இருந்தது. அத்தை இங்கே வருவது அம்மாக்கு ஏற்கனவே தெரியும் போல இருக்கே?

''என்னம்மா சொல்றீங்க? உங்களுக்கு அத்தை இங்கே வருவது தெரியுமா? அவங்களோடு தொடர்பு இருந்ததா? இது பாட்டிக்கு மாமாக்குத் தெரியுமா?'' என்று கேள்விகளை அடுக்கினான்.

''மெல்ல பேசு, சாந்தி காதில் விழப் போகுது. அண்ணி வரலாம் என்று எதிர்பார்த்தேன். ஆண்டுக்கு ஒருமுறை அவளைப் பார்ப்பாங்க. இந்த விஷயம் எனக்கு ரெண்டு வருஷம் முன்னாடி தான் தற்செயலா தெரியும். நீ எதுவும் அவளிடம் சொல்லாதே. அப்புறம் பாட்டியோட சண்டை போடக் கிளம்பிடுவா...''

''என்னமா பேசுறீங்க? பதினெட்டு வருஷமா அம்மாவும் பொண்ணும் நேரடி அறிமுகம் இல்லாமல் இருக்காங்க. அதைச் சரி பண்ணனும் என்று தோணாதா? அத்தைக்குப் பெற்ற பொண்ணை விட்டு பிரிந்து இருப்பது எப்படி இருக்கும்?'' என்று வேகமாகக் கேட்டான்.

''டேய்! இது நானும் நீயும் முடிவு பண்ணும் விஷயம் இல்லைடா. பாட்டி ஒத்துக்கணும். ஆனால் அதுக்கும் முன்னாடி எங்க அண்ணன் அவளை மனசாரத் தேடு றான் என்பதை அண்ணி உணரணும். அவங்களுக் குள்ளே என்ன பிரச்னை என்றே தெரியாமல், நானும் நீயும் துடிச்சு பிரயோஜனம் இல்லை. புரிஞ்சுதா?''

''உங்க அண்ணன் பதினெட்டு வருஷம் தேடாமல், இனிமேல் தான் தேடப் போறாரா? அதை எப்படி அவங்க உணர்வாங்க? சுத்த பைத்தியக்காரத்தனமா இருக்கே? அதெப்படிம்மா, சாந்திக்கு பெற்ற தாயோட முகம் கூடத் தெரியாமல் இருக்கு. நான் சாந்தி கிட்டே பேசப் போறேன்...''

''டேய் டேய், அவசரப் படாதே. சந்தோஷமா இருக் கும் குடும்பத்தில் குழப்பத்தை உண்டு பண்ணிடாதே. உனக்கு புண்ணியமா போகட்டும்...''

''ஏன்மா, அவங்க நிஜமாவே சந்தோஷமா இருக்காங் களா? சாந்தி எப்ப யாரோட வந்து நிற்கப் போறாளோ என்று கண்டதையும் கற்பனை பண்ணி, அவளை நிம் மதியாவே இருக்க விடுறதில்லை பாட்டி மாமா, நிஜ மாவே அத்தை வீட்டை விட்டு வெளியேறியது சந் தோஷம் என்று எண்ணி இருந்தால், இத்தனை நாளில் டைவர்ஸ் வாங்கி வேற கல்யாணம் பண்ணிட்டு இருந்து இருக்கலாம். அவரும் சந்தோஷமா இல்லை. சாந்திக்கு தாய் அன்பு என்றால் என்ன என்றே தெரியாது. என்னமோ அவங்க உல்லாச ஊஞ்சலில் இப்போ ஆடிட்டு இருக்க மாதிரியும், நான் இதைச் சொன்னால் அது பாழாப் போற மாதிரியும் என்ன பில்ட் ஆப்டா சாமி...'' என்று எரிச்ச லோடு சொன்னான் விவேக்.



''அவங்க மூணு பேரும் உல்லாச ஊஞ்சலில் ஆடிக் கொண்டு இருக்கா விட்டாலும், ஒருத்தருக்கு ஒருத்தர் முகம் பார்த்துப் பேசிட்டு இருக்காங்க இல்லியா? அதை யும் கெடுக்கும் உத்தேசம் உனக்கு இருக்கா? அப்படி இருந்தால் போய் சாந்தியிடம் சொல்லு. என் பையனால ஒரு ஆளுக்கு சந்தோஷம் வந்தது என்று இருக்கணுமே தவிர சண்டை வந்தது என்று இருக்கக் கூடாது. சொல் லிட்டேன்...''

''ஆமா, இனிமேல்தான் சண்டை வரணுமாக்கும்...''

''விவேக், இது அவங்க குடும்பப் பிரச்னை...''

''எனக்கும் தெரியும். அதனால்தான் உங்களிடம் இவ்வளவு நேரம் பேசிட்டு இருக்கேன். இல்லை என்றால் மாமாவிடம் கேட்க எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்?''

''இப்ப சொன்னியே? இது கரெக்ட். தைரியம் இருந் தால் அதைச் செய். அவருக்கு மனசு இருந்தால் உன் னிடம் சொல்லட்டும். உன்னால் முடிந்தால் அவங்களை சேர்த்து வை. ஆனால் சாந்தியிடம் பேசும் வேலை வேண் டாம் சொல்லிட்டேன்.''

''ரொம்ப நாளா கேட்கணும் என்று நினைத்தேன். வாஸந்தி என்பது அழகான ஸ்டைலான பேர். அவ சர்டிபி கேட் கூட அப்படித்தானே இருக்கு. ஏன் அவளை சாந்தி என்று கூப்பிடுறாங்க பாட்டி?''

''அது அவங்க அம்மா வச்ச பேர். அவளை ஞாபகப் படுத்தக்கூடாது என்று பாட்டி சொல்வதில்லை. அமை தியா இருக்கணும் என்பதற்காக சாந்தி என்று கூப்பிடு றாங்க.''

''சாந்தி ரொம்ப அமைதியாக்கும்...''

''அங்கே இருக்கும்போது ரொம்ப அமைதிதான். அதான் அண்ணனிடம் சொல்லி சென்னைக்கு அழைத்து வரச் செய்தேன். சின்ன பொண்ணு. அம்மாவிடம் ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாள். அண்ணியும் கொஞ்சம் நீக்கு போக்கா இருந்து இருக்கலாம். யாரை குறை சொல்ல? காலம் ஓடிப் போய்டுச்சு...'' என்று பெருமூச்சு விட்டார் மாதவி.

அந்த வார்த்தையில் இந்த பிரச்னையில் மேற்கொண்டு முன்னேற ஐடியா தோன்ற அம்மாவிடம் பேசிவிட்டு அபிஷேக்கை அழைத்தான்.

''என்ன அபி, பொங்கலுக்கு எத்தனை நாள் லீவு? எங்கே பாற?''

''என்னைக் கேட்கிறாய்? நீ எங்கே போற?''

''நான் சாந்தியோட திருவண்ணாமலை போகலாமா என்று பார்க்கிறேன். இன்னும் முடிவு பண்ணலை. நீ ப்ரீயா? எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. உங்க அப்பா ப்ரீயா இருப்பாரா?'' என்று இழுத்தான் விவேக்.

''முக்கியமான விஷயம் என்றால் வரச் சொல்லலாம். காரில் போனால் நாலு மணி நேரம்தானே? நான் மதியம் உன் ஆபீசுக்கு வரேன், சாப்பிட்டுகிட்டே பேசி முடிவு பண்ணலாம்.''

''என்னது நீ இங்கே வரியா? இன்று மழை கொட்டோ கொட்டு என்று கொட்டப் போகுது போ...''

''டேய் எனக்கு வேணும்டா. உனக்காகச் சொன்னேன் பாரு. சரி வரலை போ.''

''அட! இதுக்கு எல்லாம் கோவிச்சுகிட்டா எப்படி? சும்மா வாங்க. லஞ்ச் இல்லை இங்கேயே சாப்பிடலாம்''



என்று போனை வைத்த விவேக்கிற்கு சொன்னபடி மதிய உணவு வேளையின் போது அலுவலகத்தில் இருக்க முடியவில்லை.

திருவொற்றியூரில் இருந்த ஒரு வாடிக்கையாளரின் விற்பனை வரி கணக்குகள் தயாரிப்பில் சிக்கல் எழுந்து அவன் அங்கே போக வேண்டிய அவசியம் எழ, அவன் சாந்தியிடம் அபிஷேக் வரும் தகவலைச் சொல்லி, ''வரேன் என்று சொன்னவனை வேண்டாம் என்று சொல்ல சங்கடமா இருக்கு. வரட்டும். சாப்பிட்டு விட்டுக் கிளம்பட்டும். நீ கம்பெனி கொடு. நான் அவனிடம் போனில் பேசிக்கறேன்'' என்று அவசரமாகக் கிளம்பினான் விவேக்.

'இவன் எதுக்கு இங்கே வருகிறான்? ஒரு வேளை தன்னைப் பார்க்கவோ?' என்ற எண்ணம் அவளை கூட்டுக்குள் சுருள வைத்தாலும் விவேக் சொல்லும் போது மறுக்க முடியவில்லை.

விவேக்கின் அலுவலகத்தில் நுழைந்த அபிஷேக்கிற்கு, அவன் இல்லை என்ற தகவல் ஒரே சமயத்தில் வருத்தத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. அவன் முக்கியமான விஷயம் பேசணும் என்று சொன்னானே? என்ன அவசரமோ என்ற கவலையும், அவன் இல்லாவிட்டால், வாஸந்தியிடம் கூடுதல் நேரம் பேசலாமே என்ற சந்தோஷமும் ஒருங்கே தோன்றியது. நேரே அவளின் இருக்கைக்கே வந்தவன், ''ஹாய் குட்மார்னிங். நியு இயர் பார்ட்டி மூட் மாறியாச்சா? இன்னும் இருக்கா?'' என்று உற்சாகமாக விசாரித்தான் அபிஷேக்.

''பார்ட்டி முடிஞ்சு ரெண்டு நாளாச்சே? இன்னுமா அதே மூட் இருக்கும்? சரவணன், சாருக்கு லஞ்ச் ரூம் காண்பிச்சுட்டு சாப்பாடு பிரிச்சு வச்சுடுங்க'' என்று

அவனிடம் சுருக்கமான பதிலும் சொல்லி அதே நேரத்தில், உன்னிடம் தனியாகப் பேச எனக்கு இஷ்டம் இல்லை என்ற எல்லைக் கோடு வரைந்தாள் வாஸந்தி.

புத்தாண்டுக் கொண்டாட்டத்திலேயே அவனிடம் அதிக நேரம் பேசி விட்டோம் என்ற உணர்வு யாரும் சொல்லாமலே அவளுக்கு தோன்றி இருந்தது. சும்மாவே பாட்டி காய்ச்சி எடுக்க, அவருக்கு தானே ஒரு காரணம் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது என்றே தோன்றியது.

''சா...ரா? போச்சுடா. நான் சாப்பிட வந்தேன் என்று நினைச்சீங்களா? எங்க அம்மா சூப்பரா சமைப்பாங்க. காசைக் கொடுத்தா எல்லா ஹோட்டலிலும் சாப்பாடு கிடைக்கும். நான் விவேக்கையும் உங்களையும் பார்த்து பேசத்தான் வந்தேன்...'' என்று ஆரம்பிக்கும்போதே அந்த அலுவலகத்தின் சீனியர் ஆடிட்டர் வந்தார்.

''அபிஷேக்! பார்த்து ரொம்ப நாளாச்சே? நீ மூட்டு வலிக்கு சொன்ன ஹோமியோபதி மருந்து. சாப்பிட்ட பிறகு மாமிக்கு தேவலாம். உன்னை ஒரு நாள் ஆத்துக்குக் கூட்டிட்டு வர சொன்னா. எப்ப வர? வீட்டுல இருந்து பக்கம் தானே? ஒரு நடை வரப்படாதா?'' என்று அழைத்தார்.

''வரேன் அங்கிள், சீக்கிரமே நிர்மலாக்கு கல்யாணம் வைங்க, கல்யாணச் சாப்பாடு சாப்பிட வந்துடறேன்'' என்று அவரை அனுப்பி விட்டு வாஸந்தியிடம் பேச்சைத் தொடர முயன்றபோது, அடுத்த குறுக்கீடு வந்தது.

''சார், ஐ.ஐ.டி. நுழைவு தேர்விற்கு மாதிரி தாள் கொடுத்தீங்களே? பிரகாஷ் போன வருஷம் கான்பூர்-ல சேர்ந்துட்டான். உங்களிடம் நேரில் நன்றி சொல்லணும் என்று நினைத்தேன். நீங்க வரும்போது நான் இல்லை. நான் இருக்கும்போது நீங்க வருவதில்லை...'' என்று ஒருவரும்,



''ப்ரதர், ரேமண்ட்ஸ் ஆப் சீசன் சேல் பிரமாதம். கடைசி நாளில் போய் எடுத்தேன். தீபாவளி சூப்பரா போச்சு'' என்று ஒருத்தர்,

''அப்பா காளஹஸ்தி போயிட்டு வரச் சொன்னாரே? என் பொண்ணுக்குக் கல்யாணம் முடிவாயிடுச்சு'' என்று ஒருவரும், என்று அடுத்த இருபது நிமிடங்களில் அவனின் ஆறு உதவிகள் அங்கே பட்டியலிடப்பட்டது.

அதற்கு இடையில், அபிஷேக் வாஸந்தியிடம் பேச முயன்றபோது எல்லாம், சுருக்கமாக பதில் சொல்லிக் கொண்டு இருந்தவள், அவன் தான் வருவதற்கு முன்பு இருந்தே இங்கே வந்து போய் இருப்பவன், இங்கே பணி புரியும் அலுவலர்களுக்கு நெருக்கமானவன், பலவிதமான உதவிகளை செய்பவன் என்பதும் புரியவர, அவளே விருப்பமின்றி போட்ட தடை தானாக அகன்றது.

''நீங்க இங்கே ரொம்ப பாப்புலரோ? இங்கே ஒரு எலக்ஷன் வச்சால், எல்லா வோட்டையும் வாங்கி சூப்பரா ஜெயிப்பீங்க போல?'' என்று சிரித்தவளின் குரலில், நட்புணர்வு இருந்தது.

''அதென்ன அப்படிச் சொல்லிட்டீங்க? விவேக் கேட்டால் சண்டைக்கு வரப் போறான். சம்பளம் கொடுக்கும் முதலாளிக்குதான் இங்கே முதல் மரியாதை. கடையில எல்லா நேரமும் வேலை இருக்காது. எதையாவது படிச்சு பொழுதை ஒப்பேற்றுவேன். தெரிஞ்ச விஷயங்களை நாலு பேருக்குச் சொல்வேன். அவ்ளோதான்'' என்று விளக்கம் சொன்னான்.

''நல்ல பாலிசி...''

''அது இருக்கட்டும். அன்னிக்கு பார்ட்டில உங்க அப்பாவைப் பார்த்து பேசினேன். உங்க வீட்டுல வேற யார் இருக்காங்க? அம்மா என்ன செய்றாங்க? தாத்தா பாட்டி உண்டா? உங்களைப் பற்றி சொல்லுங்க'' என்று விசாரித்தான்.

அவனுடைய அந்தக் கேள்வி அவளை மீண்டும் நத்தை ஓட்டிற்குள் சுருள வைக்க, ''சாரி, உங்களுக்குப் பிடிக்காத ஏதோ கேட்டுட்டேன் என்று புரியுது. ஆனால் என்ன தப்பு என்று தெரியலை. நாம் பேசிக்கும்போது எல்லாம் ஏதாவது இடிச்சுகிட்டே இருக்கு. இனிமேல் நீங்களே கேள்வி கேளுங்க. நான் பதில் சொல்றேன்'' என்று வருத்தமாகச் சொன்னான் அபிஷேக்.

''அப்படி இல்லை. எங்க அம்மா இப்போ எங்களோட இல்லை...''

''ஐ ஆம் சாரி. எனக்குத் தெரியாது...''

''நீங்க நினைப்பது மாதிரி இல்லை. அ..வ..ங்..க... பிரிஞ்சு போய்ட்டாங்க...'' என்று திக்கித் திணற. ஒரு கணம் அழுத்தமான அமைதி நிலவினாலும் அவளே சமாளித்து தொடர்ந்தாள்.

''சாதாரணமா எங்க அம்மாவைப் பற்றி யாராவது விசாரித்தால், நான் உடனேயே, எங்க அப்பா எனக்குத் தாயுமானவர் என்று பட்டென்று பதில் சொல்லி விடுவேன். உங்களிடம் தான் உண்மை சொல்லி இருக்கேன். அது ரொம்பப் பழைய கதை. அதைப் பற்றி நாங்களே எங்க வீட்டில் பேசுவதில்லை. அதை விட்டுடலாம். சொல்லுங்க, உங்க வீட்டில் யார் இருக்காங்க?''



''எங்க வீட்டுல, நான், எங்க அம்மா கல்யாணி, ஜோதிட சிகாமணி சுந்தரேசன் எங்க அப்பா. அவ்வளவுதான். அம்மா ஹோம் மேகர். கோடீஸ்வர வாழ்க்கை இல்லை. அன்பினால் கட்டுப்பட்ட. இருப்பதை சந்தோஷமாக ஏற்று வாழும் குடும்பம். நமக்கும் படிப்புக்கும் தூரம். டிகிரி முடிக்கணுமே என்று தமிழ் இலக்கியம் படித்தேன். அதை முடிச்ச உடனே இந்தக் கடை வைத்துச் சம்பாதிக்க ஆரம்பிச்சாச்சு. சைவ சித்தாந்தத்தில் பிடித்தம் உண்டு. உங்க ஊர் திருவண்ணாமலை என்றதும் கடந்த இரண்டு நாட்களில் நிறைய விஷயங்கள் தேடித் தேடி படித்தேன்...'' என்று நிறுத்தினான் அபிஷேக்.

''திருவண்ணாமலை ஒரு சிவ ஸ்தலம். ரமண மகரிஷி ஆஸ்ரமம் இருக்கு. பௌர்ணமிக்கு நிறைய பேர் கிரி வலம் வர ஆரம்பிச்சு ரொம்பக் கூட்டம் வருது. திரு வண்ணாமலையை நினைத்தாலே முக்தி கிடைக்கும் என்று எங்க பாட்டி சொல்வாங்க. தேடித் தேடிப் படிக்க அதுல வேறே என்ன என்ன இருக்கு?''

''இவ்வளவு சுலபமா என்ன இருக்கு என்று கேட்டுட்டீங்க? பஞ்ச பூதங்களின் அம்சமா சிவன் விளங்கும் ஸ்தலம்... இங்கே சிவன் அக்னியின் ரூபமாகக் காட்சி அளிக்கிறார் என்பது ஐதீகம். பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் இடையே யார் பெரியவர் என்ற போட்டி வந்தது. அதை முடிவு பண்ண, அவர்கள் சிவனிடம் சென்றனர். நான் ஜோதி ரூபம் எடுக்கிறேன். என்னுடைய அடியையோ, முடியையோ காணும் திறமை பெற்றவரே பெரியவர் என்று சொல்லிவிட்டு விஸ்வரூப ஜோதியாய் வடிவெடுத்தார் சிவபெருமான்...''

''ம், தெரியும். பெருமாள் வராக ரூபமெடுத்து, பூமியை துளைத்து சிவனின் பாதம் காணச் செல்ல, பிரம்மா

அன்ன வாகனம் எடுத்து மேலே பறந்து முடி காணச் சென்றார். பூமியை பிளந்து சென்ற விஷ்ணுவால் அவரின் அடியைக் காண முடியாமல் தோல்வியை ஒப்புக் கொண்டார். மேலே சென்ற பிரம்மாவினால் முடியை காண இயலவில்லை என்றாலும், சிவனின் தலையில் இருந்து விழுந்த ஒரு தாழம்பூவை, தான் அவரின் முடியைக் கண்டதாக சாட்சி சொல்லச் சொல்லி கேட்டார். அதனால்தான், பிரம்மாவிற்கும் இந்த பூலோகத்தில் இடமில்லை. பொய் சாட்சி சொன்ன தாழம்பூவிற்கும் பூஜையில் இடமில்லை'' என்று இடையிட்டாள் வாஸந்தி.

''ஆமாம். நான் என்ற அகந்தையை அழித்து உண்மையைப் பேசினால், விஷ்ணு பகவான் மாதிரி வெற்றி கிடைக்கவில்லை. மக்கள் மனசில இடமாவது கிடைக்கும். இல்லை என்றால், கஷ்டம் தான். இன்னொரு ஆச்சரியமான விஷயம், திருவண்ணாமலையில் இருக்கும் குன்று, கிருதயுகத்தில், அக்னிபிழம்பாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமாகவும், த்வபராக யுகத்தில் பொன்னாகவும், கலியுகத்தில் பாறையாகவும் இருக்காம்'' என்று முடித்தான்.

''இதெல்லாம் யாரு சொன்னா? உங்க அப்பாவா?''

''அப்பாவா? ம்ஹூம், நமக்கு குரு இன்டர்நெட் தான். கடையில் சேல்ஸ் இல்லாத நேரம் வேறென்ன வேலை? இந்த மாதிரி நாலு விஷயம் தெரிஞ்சு வச்சுகிட்டால், நம்மிடம் பேசுபவர்களுக்கு போர் அடிக்காமல் இருக்ககை கொடுக்குமே...'' என்று சிரித்த அபிஷேக்கை இமைக்காமல் பார்த்தாள் வாஸந்தி.

இதே சித்தாந்தம் தான் அப்பாவிற்கு. கடந்த பதினைந்து ஆண்டுகளில் அவர் பெற்ற பட்டங்கள் பத்து.. சைவ சித்தாந்தம், வரலாறு, ஆங்கில, தமிழ் இலக்கியங்கள், கணினி பயன்பாடு குறித்த பட்டயபடிப்பு உள்ளிட்டவை. திருமணத்திற்கு முன்பு அவருக்கு பட்டப் படிப்புக்கூட இல்லை. ஆனால்... அதற்குப் பிறகு, இதனை ஆர்வமாகக் கல்வி கற்றதற்கு என்ன காரணம்? ஒருவேளை அப்பாவின் கம்மியான படிப்பு தான்... அம்மாவின் பிரிவிற்கு காரணமோ? யோசனை நீண்டது.



''மேடம், இதென்ன கண்ணை விழித்துக் கொண்டே தூங்குவீர்களா? ஹலோ... இருக்கீங்களா?'' என்று அவளின் முகத்திற்கு முன்பு கைகளை ஆட்ட அவள் விழித்தாள்.

''சாரி, என்ன கேட்டீங்க? கவனிக்கலை...''

''விவேக் எனக்கு போன் பண்ணும்போது பொங்கலுக்கு உங்க ஊருக்கு வருவதாகச் சொன்னான். எப்போ கிளம்புறீங்க என்று கேட்டேன்...''

''நான் திங்கள் மாலை கிளம்புகிறேன். அத்தை மாமா, விவேக் மூணு பேரும் செவ்வாய் மாலை கிளம்பலாம். கடை லீவு இருக்குமா? நீங்க ப்ரீயா இருந்தால்... நீங்களும் வரீங்களா?'' என்று கேட்டு முடிக்கும்போது அளவு மீறிப் பேசி விட்டோமோ என்ற சந்தேகம் வந்ததால், 'வரீங்களா' என்ற கடைசி வார்த்தை தெளிவாக வரவில்லை.

ஆனால் அதைப் பற்றிக் கவலைப் படாமல், உற்சாகமாக, ''நானே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அம்மா திருவண்ணாமலைக்கு பௌர்ணமி கிரிவலம் போகணும் என்று சொன்னாங்க. விவேக்கும் அங்கே வருவதால், வர வெள்ளிக்கிழமை வரோம். இப்போதே அம்மாவிடம் கேட்டு உறுதிப் படுத்தி விடுகிறேன்'' என்று தன் மொபைலை எடுத்தான்.

அந்த மொபைலைப் பார்த்தவள் விழிகள் விரிந்தது. அது அவளுக்குத் தற்காலிகமாகப் பயன்படுத்த கொடுத்த மொபைல். இதை ஏன் இவன் வைத்து இருக்கிறான்? அவளது பார்வை புரிந்து, ''புதிது வாங்கப் போகிறோம் என்ற நம்பிக்கையோடு வரும் கஸ்டமருக்கு, ஏற்கனவே பயன்படுத்திய பொருளை கொடுக்கக் கூடாது இல்லையா? அதனால் நானே எடுத்துக் கொண்டேன். அதுக்கு சென்டி மென்டல் வேல்யூ வேற இருக்கு'' என்று கண் சிமிட்டிப் புன்னகைத்தவனை வியப்போடு பார்த்தாள் வாஸந்தி.

# 6



முந்தைய தினம் காலையில் அபிஷேக் ஜாடையாய் சொல்லிப் போன விஷயம் குறித்து சுந்தரேசனிடம் பேச முடியவில்லை, இன்று மதிய உணவின் போது பேசி விட வேண்டும் என்று காத்து இருந்த கல்யாணி. உணவைப் பரிமாறி விட்டு, ''என்னங்க அபிக்கு, இந்த தையில், இருபத்தி ஆறு முடிஞ்சுடும் இல்ல...'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

''ஆமா, பொண்ணு பார்க்கணுமா? முதலில் உன் பையனிடம் பெர்மிஷன் வாங்கியாச்சா? மனசில யாரா வது இருக்காங்களா என்று முதலில் கேட்டு விடு. நமக்குப் பிடிக்குதோ இல்லையோ? முதலிலேயே தெளிவா கேட்டுட்டால் பிரச்னை வராது. அனாவசியமா



பொண்ணு வீட்டுக்காரங்க மனசை கஷ்டப்படுத்த வேண்டாம் பாரு...''

''ஓ! இதை முன்னாடியே எதிர்பார்த்தீங்களா? ஜாதகத் துல, காதல் கல்யாணம் என்பதுகூட தெரியுமா என்ன?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார் கல்யாணி.

''ஏற்கனவே அம்மாவும் பையனும் பேசி வச்சுக்கிட்டு தான் என்னிடம் வரீங்களா? நல்ல வேளை நாளைக்குக் கல்யாணம் என்று அழைப்பிதழ் கொடுக்காமல் இருந் தீங்களே? அந்த வரைக்கும் சந்தோஷம்'' என்று அதிர்ந்து போய் சொன்னார் சுந்தரேசன்.

''எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி? ரெண்டு நிமிஷம் முன்னாடி சர்வ சாதாரணமா அவன் மனசுல யாராவது இருக்காங்களா என்று கேட்கச் சொன்னீங்க இல்லையா? அதை நேற்று நானாக கேட்டேன். அவனும் தன் மனசுல இருப்பதைச் சொல்லிட்டான். நீங்க கேட்டா தப்பு இல்லை. அதே விஷயத்தை நானா செஞ்சால் தப்பா?''

''எதுக்கும் எதுக்கும் சம்பந்தப் படுத்துகிறாய்? தப்பு சரி என்று நான் எதுவும் சொல்லவில்லை. எனக்குத் தெரியாமலேயே நீங்களா முடிவு பண்ணிட்டீங்களோ என்று...''

''நாங்க இன்னும் முடிவு பண்ணவில்லை. நான் இன்னும் பொண்ணு போட்டோ கூட பார்த்ததில்லை. நேற்றுதான் வாயைத் திறந்து இருக்கான். இனிதான் விசாரிக்கணும். தை பிறந்து விடட்டும் என்று நினைத் தேன்...''

''மார்கழி மிக நல்ல மாசம். அதில தாராளமா எல்லா நல்ல காரியங்களும் செய்யலாம். சாதாரணமா, பிரம்ம

முஹூர்த்தம் என்று சொல்லக் கூடிய அதிகாலை நால ரையில் இருந்து ஆறு மணிக்குள் எந்தக் காரியம் செய்ய வும் மிக உத்தமமான நேரம். தேவர்களுக்கு நம்முடைய ஒரு ஆண்டு காலம், ஒரு நாள், அதில் மார்கழி மாதம் தேவர்களின் பிரம்ம முகூர்த்த நேரம். அதுல நல்ல விஷயம் பேச யோசிக்க வேண்டியதில்லை.''

''நான் ஃபாஸ்ட் என்று நினைத்தேன். நீங்க சூப்பர் ஃபாஸ்டா? அப்ப இப்பவே அபிக்கு போன் பண்ணி பொண்ணு வீட்டு அட்ரஸ் வாங்கச் சொல்லட்டுமா?'' என்று கேட்டார் கல்யாணி.

''இதென்ன, நான் வாயைத் திறக்கும் முன்னாடியே நீ முடிவெடுத்து விடுகிறாய். கொஞ்சம் பொறுமையா போகணும். இப்படி எல்லாம் கல்யாண விஷயத்தில் அவ சரப் படக்கூடாது. முதலில் அந்தப் பொண்ணு ஜாதகம் வாங்கிப் பார்க்கலாம். அப்புறம் பேசலாம்...''

''இந்த ஜாதகம் பார்க்கும் விஷயத்தில் எனக்கு உடன் பாடு இல்லை. புதுசா பார்க்கிறோம் என்றால் வேற... அவன் பிடிச்சு இருக்கு என்று சொன்ன பிறகு, இதை நடுவில் கொண்டு வந்து நுழைப்பதில் எனக்கு இஷ்டம் இல்லை'' என்று தீர்மானமாகச் சொன்னார் கல்யாணி.

''ஜாதகத்தை மட்டும் வைத்து முடிவெடுக்க வேண் டியது இல்லை. ஆனால்...'' என்றவருக்கு மறுமொழி சொல்ல கல்யாணி வாய் எடுத்தபோது, தொலைபேசி அழைத்தது.

''அம்மா, நான்தான். நல்ல மூட்ல இருக்கீங்களா? ஒரு முக்கியமான விஷயம் பேசணும்...'' என்று குழைவாகக் கேட்டது அபிஷேக்தான்.



''என்ன அந்தப் பொண்ணு விஷயம் தானே? அப்பா கிட்டே அதுதான் பேசிட்டு இருக்கேன்...''

''அதுதான் நேற்றே சொல்லியாச்சே? அதை எப் படியும் முடிச்சுடுவீங்க தெரியுமே. இது அது இல்லை...'' என்று பீடிகை போட்டான்.

''அது இல்லியா? வேறென்ன விஷயம்?''

''நீங்க திருவண்ணாமலைக்கு கிரிவலம் வருகிறேன் என்று வேண்டிகிட்டீங்க இல்லையா? அதை வர பௌர்ணமிக்கு நிறைவேற்றி விடலாமா?''

''நான் எங்கே யாருக்காக வேண்டிகிட்டேன்?''

''அ..ம்..மா, வரேன் என்று சொல்லுங்க. விவேக்கிடம் ஓ.கே. சொல்லிடவா? போகலாம். அப்பாவிடம் சொல் லிடுங்க. அவரும் வந்தால் நல்லது. எந்த வேலையா இருந்தாலும் அப்புறம் பார்த்துக்கலாம். நான் நைட் பேசறேன்'' என்று ஒப்பித்து விட்டு வைத்து விட்டான்.

அந்த பொண்ணு ஊர் திருவண்ணாமலையாக இருக்க வேண்டும். அந்த பொண்ணுக்கும் விவேக்கிற்கும் சம் பந்தம் இருக்கு. அவர்கள் அருகிலேயே இருக்க வேண் டும். அதனால்தான் இந்த தந்தி பாஷை. நான் 'எள்' என்று வாய் திறக்கும் முன் 'இந்தா எண்ணெய்' என்று சொல்றானே என்று சிரித்தபடி சுந்தரேசனிடம் வந்தார்.

''அபிதான் பேசினான். தை பௌர்ணமிக்கு, திரு வண்ணாமலை கிரிவலம் போகலாமா என்று கேட்டான். சரி என்று சொல்லி விட்டேன். அன்னிக்கு நீங்களும் வந்தால் நல்லா இருக்குமே? வேற எதுவும் ப்ரோக்ராம் வச்சு இருக்கீங்களா?'' என்று விசாரித்தார் கல்யாணி.

''பிறக்க முக்தி திருவாரூர், இறக்க முக்தி தாசி, தரிசிக்க முக்தி சிதம்பரம், நினைத்தாலே முக்தி தரும் திரு வண்ணாமலையானை தரிசிக்க என்ன தடை? கட்டாயம் போகலாம். போயிட்டு வந்து அபி கல்யாண விஷயம் தொடர்பா பேசலாம்'' என்று சந்தோஷமாகச் சொன்னார் சுந்தரேசன்.

* * *

**வா**ஸந்தியிடம் பேசிவிட்டு வெளியே வந்த சுஜா தாவிற்கு மனம் அமைதியாக இல்லை. சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு பேருந்தில் வரும் வழி எல்லாம் பழைய நினைவுகளின் ஊர்வலம் தொடர்ந்தது. ஒவ்வொரு ஆண்டும் நிகழ்வதுதான்.

மகளுக்கு தன்னை இந்த முறை அடையாளம் தெரிந்து விடும் என்று ஒவ்வொரு முறையும் நம்பிக்கையோடு வருவதும், அந்த நம்பிக்கை பொய்யாகப் போவதும், தன் மனம் வாடுவதும் கடந்த பதினெட்டு வருடங்களாக தொடர்ந்து நடை பெற்று வருகிறது. பட்டப் படிப்பை முடித்து வேலைக்குச் சேர்த்து இருக்கிறாள். இத்தனை நாள் பாட்டியின் அரவணைப்பில் இருந்ததால் தெரிய வில்லை. இந்த முறை நிச்சயம் தெரியும் என்று வந்த வரின் நம்பிக்கை பொய்த்து விட்டது.

பவானி அம்மாவிற்கும், தியாகராஜனிற்கும் அப்படி என்ன கோபம் தன் மேல் என்பது இன்று வரை அவருக்குப் புரியாத புதிர்தான். குஜராத்தில் சூரத் நகரின் புற நகர் பகுதியில், பெரிய நில சுவான்தார்களாக இருக்கும் பட்டேல் பரம்பரையின் பணக்கார கூட்டுக் குடும்பத்தில் பிறந்து, ஆண் வாரிசுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சூழலில் வளர்ந்ததாலேயே சுஜாதாவிற்கு, அந்தக் குடும்பத்தின் மேல் பெரிதாக பற்றுதல் இல்லை.



நேஷனல் பாக்சிங் போட்டியில் கலந்து கொள்ள வந்த தியாகராஜன் அங்கே தங்கி இருந்த நான்கு தினங்களில், இருவரும் ஒருவரால் ஒருவர் ஈர்க்கப்பட்டனர். இரு வருக்கும் மொழி ஒரு தடையாக இருக்கவில்லை. அழகு, வசதி, படிப்பு, ஜாதி, இனம் எதுவுமே அப்போது பெரிதாகத் தோன்றவில்லை. கிளம்பும்போது, தன் முகவரியைக் கொடுத்து, 'அம்மாவிடம் பேசிவிட்டு தகவல் சொல்கிறேன்' என்ற உறுதியை அளித்துவிட்டுக் கிளம்பிய தியாகராஜன் தன் வெற்றியை சென்னையில் பாக்சிங் பெடரேஷனோடு பகிர்ந்து கொண்டு, திரு வண்ணாமலைக்கு வந்து சேரும் முன்பே, அவரின் வீட்டின் முன் சுஜாதா நின்று இருந்தார்.

''ஹேய் சுஜி! என்ன ஆச்சு? எப்படி வந்தாய்? தனியாவா?'' என்று பதறிய தியாகராஜனுக்கு சுஜாதா அந்த பத்தொன்பது வயதில் பதிலாக தந்தது வெறும் அழுகை மட்டுமே. அந்த அழுகைக்கு இடையே, அவர்கள் பேசியதைக் கேட்டு விட்ட பெரியவர்கள் உடனடியாக மாமா பையனுக்கு விவாகம் முடிக்க ஏற்பாடு செய்ய, அந்த மணமகனின் உதவியோடு கழுத்தில் அணிந்த நகை களோடு இவர் கிளம்பி வந்து விட்டார் என்ற விபரம் அவருக்கு சொல்லப்பட்டது.

தான் செய்தது தவறா என்று இப்போதும் சுஜாதா யோசிப்பது உண்டு. அறியாப் பருவத்தில் செய்த சிறு பெண்ணின் தவறு என்று இப்போதும் அவருக்குத் தோன்றவில்லை. சின்ன வயதாக இருந்தாலும், தான் யோசித்துச் சரியான முடிவு தான் எடுத்து இருப்பதாக இப்போதும் தோன்றுகிறது. மனதில் தியாகராஜனுக்கு இடம் கொடுத்த பின்பு, இன்னொருவரை திருமணம் செய்து கொள்வதில் அவருக்கு உடன்பாடு இல்லை.

ஆனால் தன்னுடைய காதல் அங்கே உணரப்பட வில்லை. அது சிறு பிள்ளை தனமாக, பழகிய காலத்தின் அடிப்படையில் அளவிடப்பட்டு, காதலில் ஆழமில்லை என்று முடிவு கட்டப்பட்டது அவரின் துர்திர்ஷ்டமே! அங்கே காதல் இருவழிப் பாதையாக இருக்கவில்லை.

தன் காதலை அவர் மதிக்காத போதும், அவரின் சந் தோஷத்தை தான் மதித்ததால்தான், அவருக்கு விவாக ரத்து பத்திரம் கையொப்பமிட்டு அனுப்பி வைத்தார். இத்தனை ஆண்டுகள் ஆகியும், ஏன் மறுமணம் புரிந்து கொள்ளவில்லை? ஒருவேளை தன் மேல் வைத்த காதல் மிச்சம் இருக்கோ என்ற எண்ணம் தலை தூக்கும் போது, அவர் 'அந்த பொல்லாத நாளில்' சொன்ன ஒரு வாக்கியம் நினைவுக்கு வந்து சுட்டெரிக்கும்.

தன் மேல் கொண்ட காதலால் மறுமணம் புரியாமல் இருக்கவில்லை. தெனாலி ராமனின் சூடு கண்ட பூனை போன்ற அனுபவத்தினால் இருக்கிறார் என்று மூளை அறிவுறுத்தும். இத்தனை ஆண்டுகள் தாண்டியும், அவரின் வார்த்தைகளுக்கு, தன்னை காதலில் நெகிழ வைக்கவும் அதே சமயம், சந்தேகத்தால் சுட்டெரிக்கும் வல்லமையும் பெற்று இருப்பதை எண்ணி புழுங்கிய சுஜாதாவை தேற்ற, புதுச்சேரி ஆரோவில்லில், அன்னை மட்டுமே காத்திருந்தார்.

* * *

அன்று இரவு திருவண்ணாமலையில் தியாகராஜன் இரவு உணவை முடித்து விட்டு, கையில் ஒரு புத்தகத் துடன் ஈசி சேரில் சாய்ந்தார். இது அவளின் பழக்கம். இரவு தூங்கும் போது நல்ல ஆன்மீகப் புத்தகங்கள், அல்லது உற்சாகம் தரும் நகைச்சுவை துணுக்குகளை



படித்து விட்டு தூங்க வேண்டும் என்று சொல்வாள். படிப்பதில் அப்படி ஒரு ஆர்வம்.

அவருக்கு எப்படி உடலைக் கட்டுக்கோப்பாக வைத் துக் கொள்வதில் ஆர்வமோ, அதைப் போல அவளுக்குப் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம். அந்த ஆர்வத்தை எடுத்துக் காட்டியது அவள் சூரத்தில் இருந்து இங்கே வந்த போது எடுத்து வந்த பெரிய பையில் இரண்டு செட் உடைகள், சுமார் இருபது புத்தகங்கள் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் இருந்தது. அவள் அந்த வீட்டில் இருந்து கிளம்பியது என்ன மாதிரி சூழ்நிலையில்?

''சில புத்தகங்கள் தேட நேரமில்லை. கிஷோர் சத்தம் போட்டதால் அவசரமாக கிளம்பினேனா? அதனால் இவ் வளவுதான் எடுத்து வர முடிந்தது'' என்று அவள் வருத் தத்தோடு சொன்னதை நினைவு கூர்ந்தார். தினமும் இரவில் அரை மணி நேரம் படிப்பு என்ற பழக்கம் அவ ளால் வந்தாலும், அந்தப் படிப்பை ஆரம்பிக்கும் முன்பே அவளைப் பற்றி பத்து நிமிடம் நினைக்கும் பழக்கம் யாரால் வந்தது? சிந்தனை தொடரும் முன்பு வீட்டு போன் அழைத்தது.

''மாமா நான்தான் விவேக். சாப்பிட்டாச்சா?'' என்று உற்சாகமான குரல் கேட்டது.

''சொல்லுப்பா, என்ன இந்த நேரத்துல? எல்லோரும் நல்லா இருக்காங்க இல்லையா?''

''இந்த நேரத்துல தானே மாமா நீங்க ஹாயா, புக் படிச்சுட்டு இருப்பீங்க. அதான் கூப்பிட்டேன். இது உங்க பொண்ணு பரிந்துரை தான். ராத்திரி ஒன்பது மணிக்கு அப்பா சூப்பர் மூடில் இருப்பார். அப்ப கேட்டால் எல் லாமே ஒகே ஆகிடும் என்று சொன்னாள்.''

''அப்படியா சொன்னாள்? அவள் இதுவரை எதைக் கேட்டு நான் இல்லை என்று சொல்லி இருக்கேன். அம்மா ஏதாவது சொன்னாலும், அவளுக்காகப் பரிந்து பேசி, எப்படியும் நிறைவேற்றி விடுவேனே? இதுல நேரம் காலம் எங்கே வந்தது? உனக்கு என்ன சொல்லணும்? நீ விஷயம் சொல்லும் முன்பே சரி சொல்லிட்டேன். சொல்லு என்ன விஷயமா போன் பண்ணினாய்?''

''மாமா நான் ரொம்ப மோசமான ஆள். மனசுல ஒண்ணு வச்சுக்கிட்டு வெளியே ஒண்ணு பேசுவேன். இப்படி என்ன விஷயம் என்று கேட்காமல் இனியாவது சரி சொல்லாதீங்க'' என்று சிரித்தான் விவேக்.

''எனக்குத் தெரிஞ்சு எந்த மோசமான ஆளும், இப்படி 'நான் மோசம்' என்று ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துக் கேட்டதில்லை. சரி நீ கெட்டவன் என்றால், நான் நல்ல வனாச்சே? கொடுத்த வாக்கை திரும்ப வாங்க முடியாது. பரவாயில்லை கேளு.''

''மாமா, வரும் பொங்கலுக்கு நான், அம்மா அப்பா, சாந்தியோடு ஊருக்கு வரோம். எங்களைப் பார்த்து நீங்க அரண்டு போய் விடக் கூடாது இல்லியா? அதான் முன்னாடி ஒரு வார்னிங் கொடுத்துடலாம் என்று போன் பண்ணினேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''

''என்னப்பா இப்படிச் சொல்லிட்ட? இதை நீ என்னிடம் கேட்டதில்தான் எனக்கு ஆட்சேபணை. மாமா நாங்க வரோம் என்று உரிமையா சொல்லி இருக்கணும். இது உங்க அம்மா பிறந்த வீடு. இத்தனை நாள் உரிமையா வரப் போக இல்லாமல் போய் விட்டது. இனியாவது ஆரம்பமாகட்டும்'' என்று சொன்னவருக்கு பதில் சொல் லாமல் சிரித்தான் விவேக்.



''தேங்க்ஸ் மாமா, நீங்க அநியாயத்துக்கு நல்லவங் களா இருக்கீங்க. அதனால், என்னோட பிரெண்ட் அபிஷேக்கும் அவங்க பெற்றோரும், வரும் பௌர்ண மிக்கு கிரிவலம் வரணும் என்று சொன்னாங்க. அவங்க மூணு பேரையும் உங்க சார்பில் நானே வரச் சொல்லிட் டேன். இது அனுமதி இல்லை. தகவல் மட்டுமே. பாட்டி யிடம் போனை கொடுங்க, ஒரு முக்கியமான விஷயம் பேசணும்'' என்று நிறுத்தினான்.

பவானிம்மா லைனுக்கு வந்த உடனே, ''பாட்டி, எப்பவும் உங்களுக்கு சாந்தி பற்றிய கவலைதான் என்று எனக்குத் தெரியும். அந்தக் கவலையை போக்க நான் ஒரு ஐடியா வச்சு இருக்கேன். சாந்தி, மாமாவிடம் கூடச் சொல்லலை. உங்களிடம் தான் முதலில் சொல்றேன். நீங்க பார்த்து ஓகே சொன்ன பிறகு மற்றவங்களுக்கு விஷ யம் சொல்லிக்கலாம். ஓகே?'' என்று பீடிகை போட்டான் விவேக்.

''அதென்னப்பா ரகசியம்? ஏன் கவலை தீர்க்கும் மருந்து? சொல்லு கேட்போம்...'' என்று அலட்சியமாகச் சொன்னாலும் அவரின் குரலில் ஆர்வம் வெளிப்பட்டது.

''என்னோட பிரெண்ட் அபிஷேக்-ன்னு பேர். அவன் நல்ல பையன். ஆனால் அது நமக்கு முக்கியமான விஷயம் இல்லை. அவங்க அப்பா, இங்கே மைலாப் பூரில் பிரமாதமான ஜோசியர். அவங்க மனைவிக்கு திருவண்ணாமலையில் பௌர்ணமி என்று கிரிவலம் வர வேண்டுதல் இருக்காம். என்னிடம் சொன்னாங்க. நானே சரி சொல்லிட்டேன் என்று வச்சுக்கோங்க. அது முக்கியம் இல்லை. அதைவிட முக்கியமான விஷயம் இப்ப நான் சொல்லப் போறது. நீங்க நல்லா யோசிச்சுப் பார்த்து

பொங்கலுக்கு நான் வரும்போது அபிப்ராயம் சொல்லுங்க'' என்று இடைவெளி விட்டான்.

''என்னடா சாந்திக்கு மாப்பிள்ளை பார்த்துட்டாயா? இதுக்கா சுத்தி வளைக்கிற? அவன் யாரோ எப்படிப்பட்டவனோ?'' என்று அதட்டலாகக் கேட்டார்.

''ச்சே ச்சே! அது உங்க வேலை பாட்டி. அதுல நான் தலையிட்டா நல்லா இருக்குமா? நான் சொல்றது, அபிஷேக் அப்பா சுந்தரேசன் அங்கிள் நல்ல ஜோசியர். அவரிடம் முப்பது பையன், முப்பது பொண்ணுங்க ஜாதகம் எப்பவுமே கை வசம் இருக்கும். உங்களுக்கு ஓகே என்றால், அவர் வச்சு இருக்கும் போட்டோ ஜாதகத்தைப் பார்த்து தேர்வு செய்யும் உரிமை உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நீங்க யோசிச்சுட்டு, பரவாயில்லை என்றால் அவரைப் பயன்படுத்திக்கோங்க. குட்நைட் பாட்டி. அப்புறம் நான், அம்மா அப்பா மூணு பேரும் சாந்தியோட பொங்கலுக்கு வரோம். உங்க கையால அவியல் வச்சுச் சாப்பிடுறோம். பை'' என்று போனை அவன் வைத்துவிட்டாலும், அவன் சொன்ன செய்தி அடுத்த மூன்று நாட்களுக்கு பவானி அம்மாவின் மனதில் ரீங்காரம் இட்டுக் கொண்டு இருந்தது.



# 7

பொங்கல் பண்டிகை அன்று, திருவண்ணாமலையில் காற்றும் வெளிச்சமும் சரளமாக வந்து செல்ல



வசதியாக முற்றம் வைத்த அந்த பெரிய வீடு நிறைய பல ஆண்டுகளுக்கு பின்பு, ஆட்கள் நிரம்பி இருக்க, கேலிப் பேச்சும், சிரிப்பொலியும் கேட்டு, பண்டிகை நாளின் உற்சாகத்தை மேலும் கூட்டியது.

''பாட்டி, பொங்கலுக்கு ஏன் பொங்கல் என்று பேர் வந்துச்சு சொல்லுங்க பார்ப்போம்'' என்று வாசலில் வைத்த பொங்கல் பானை பொங்கும் நேரத்தில் சந்தேகம் கேட்டான் விவேக்.

''டேய், உனக்கு வேற வேலை இல்லை. பொங்கலுக்கு என்ன பேர், தீபாவளிக்கு என்ன ட்ரெஸ் என்று வம்பளக்கிற?'' என்று அதட்டினார் பவானி.

''பானையில் இருக்கும் சாதம் பொங்கினால் அது பொங்கல் என்று கடிப்பான் பாட்டி கடி மன்னன்'' என்று வாஸந்தி வார, ''அப்ப குக்கரில் பொங்கல் வைத்தால் சாப்பிட மாட்டானா?'' என்று மாதவி சிரிக்க, பண்டிகை பொழுது உற்சாகமாக அந்த வீட்டில் ஆரம்பித்தது.

பொங்கலை சூரிய பகவானுக்குப் படைத்தது, பூஜை முடிந்த பின், மாதவி, கணவன் மற்றும் மகனுடன் அம்மாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்க, ''தலை பொங்கலுக்கு வந்தது. இத்தனை வருஷம் சென்று இன்னிக்கு தான் நல்ல நாள் அன்று அம்மாவைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்க தோணுச்சா?'' என்று கண கலங்கினாலும், அதிகாரமாகக் கேட்டார் பவானி.

''ஏன்மா எங்களுக்கு மட்டும் வரக்கூடாது என்ற ஆசையா என்ன? ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறை ஊர் ஊரா பெட்டித் தூக்க வேண்டிய வேலை. போன வருஷம் சென்னைக்கு வந்தோம். வந்த உடனே, பார்க்க

வரலையா? சாந்தியை அங்கே கூட்டிட்டுப் போக லையா? பொங்கல் அன்று வந்தால், சில வேண்டாத நினைவுகளும் கூடவே வருவதைத் தடுக்க முடிய வில்லை. என்ன பண்ணச் சொல்றீங்க? இப்பவும் சாந்தியைப் பார்க்கும்போது மனசுக்குக் கஷ்டமா தான் இருக்கு...''

''ஹய்யோ அம்மா, நல்ல நேரத்துல சென்டிமென்ட் சீன் போட்டு கண்ணீர் வர வைக்கக் கூடாது. பாட்டி, இப்பதான் அம்மாவிற்கு அவங்க அம்மாவோட முக்கியத் துவம் புரிஞ்சு இருக்கு என்றால் என்ன அர்த்தம்? சொல் லித் தர நான் தலையெடுத்து இருக்கேன் என்று அர்த் தம்...'' என்று அந்த நெகிழ்வான சூழலை இலகுவாக மாற்றிச் சிரித்தான் விவேக்.

எல்லோரும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டாலும், தியாகராஜனும் வாஸந்தியும் கலந்து கொள்ளவில்லை. தியாகராஜன் வாசல் புறம் இருந்த அவள் நட்டு வைத்த குல்மோகர் மரத்தடிக்கும், வாஸந்தி கொல்லைப் புறம் இருந்த கிணற்றடிக்கும் நகர்ந்து தங்களின் உள்ளப் போராட்டத்தை மறைத்தனர்.

வாசலுக்கு வந்தவர், அந்த மரத்தில் சாய்ந்து கண் மூடி நின்றார். அவளின் அருகாமை தரும் இனிமை கிடைத் ததோ? இந்த பொங்கல் பண்டிகை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது போல. மகர சங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடும் வட இந்தியர்கள், எள்ளினால் செய்த இனிப்புகளை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சொல்வாள்.

சூரியன், தனது பிரயாணத்தை, வட துருவத்தில் ஆரம்பிக்கும் இந்த நாள், நமக்கு ஒளியையும் சக்தியையும் அள்ளித் தரும் நாள் என்று விளக்கம் சொல் வாள். இப்போது அவள் எங்கே இருக்கிறாள்? இந்த நாளில்தான் பிரிந்தாள். இந்த பண்டிகை நாளில் தன்னை நினைப்பாளா? எல்லோருக்கும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வார்கள். தனக்கு வழி அடைக்கப் பட்டது என்று பெருமூச்சுடன் எண்ணிக் கொண்டார்.



முன் வாசலில் அப்பா ஏக்கத்தில் தவித்துக் கொண்டு இருக்க, பின்னால் கிணற்றடியில் வாஸந்தி குமுறிக் கொண்டு இருந்தாள். இந்த வயதில், அத்தை தன்னைப் பார்க்க வரவில்லை, தன்னுடன் விசேஷ நாட்களைக் கழிக்கவில்லை என்று ஆதங்கப்படும் பாட்டி. அந்த விதத்தில் பாட்டி உசத்திதான். தன் பெண் மேல் அக்கறையும் அன்பும் வைத்து இருக்கிறார். ஆனால் தன் அம்மா...? தன்னை தேவை இல்லாத பொருள் போல தூக்கிப் போட்டு விட்டுச் சென்று விட்டார். இரண்டு வயது குழந்தையை விட்டு விட்டுப் போக எப்படி ஒரு பெற்ற தாய்க்கு மனசு வரும்?

அவருக்கும் அவருடைய கணவருக்குமோ, அல்லது பாட்டியுடன் ஏதோ மனக்கசப்பு என்றாலும், பிரிய முடிவெடுத்த போதும், தன்னை உடன் கூட்டி சென்று இருக்கலாமே? பெண் குழந்தை என்றும் பாராமல், தன்னை ஏன் விட்டுச் சென்றார்? போகி பண்டிகை சிறப்பாகக் கொண்டாட, தானே வேண்டாத பொருளாகி விட்டோம்... என்று கண்டதை எண்ணிக் குழம்பிய வாஸந்திக்கு, சுய இரக்கம் மேலிட கண்களில் நீர் கோர்த்தது.

''ஹேய்... சாந்தி... எங்கே இருக்க? உன்னுடைய போன் அடிச்சுட்டே இருக்கு பாரு...'' என்ற மாதவி

அத்தையின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்த வாஸந்தி, கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். போனை எடுத்துப் பார்த்தால் அபிஷேக். பார்த்த உடனே மீண்டும் கண்களில் நீர் கோர்த்தது.

புத்தாண்டில் நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு அவன் சொன்ன வாழ்த்து சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நினைவு வந்தது. தான் வேண்டிய எல்லாமே தனக்குக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தினானே? இப்போ இந்த நிமிஷம் தனக்கு தன் அம்மா வேண்டும் என்றால் கிடைக்குமா? இவனால் தன் முன்னால் கொண்டு வந்து நிறுத்த முடியுமா? அப்புறம் என்ன வெறும் வாய் வார்த்தையாய் வாழ்த்து வேண்டி கிடக்கு என்று போனை எடுக்கவே இல்லை. பிறர் கவனத்தை ஈர்க்கக் கூடாதே என்று சைலன்ட் மோடில் மாற்றினாள்.

மீண்டும் இரண்டு முறை அது அடித்து ஓய்வதை இயலாமையில் வந்த கண்ணீரோடு பார்த்து இருந்த வளுக்கு அடுத்து வந்த, ''எங்க அம்மா செய்த சர்க்கரைப் பொங்கலுடன், உங்கள் அனைவரையும் பார்க்க மாலை யில் வருகிறேன்'' என்ற குறுஞ்செய்தியை பார்த்த உடன் கண்ணீர் மேலும் பெருகியது.

* * *

சென்னையில் அபிஷேக்கிற்கு இருப்பு கொள்ள வில்லை. அவளைப் பார்த்து ஆறு நாட்களாகிறது. போனில் பேசி மூன்று நாளாச்சு. தினம் பேச ஒரு மாதிரி இருந்தது. அவளாக ஒரு முறை கூப்பிட மாட்டாளா என்ற ஆர்வம் வேறு கொல்கிறது. ஆனால் அவளுக்கு இந்த மாதிரி பரபரப்பு எதுவும் இல்லை. இன்று பொங்கல் வாழ்த்துச் சொல்லும் சாக்கில் பேசி விடலாம் என்று பார்த்தால் போனை எடுக்கவில்லை.



விவேக்கிடம் இரண்டு முறை கேட்டாகி விட்டது. முதல் முறை பின்பக்கம் வாழை இலை வெட்டப் போய் இருக்கிறாள் என்று சொன்னான். பேச்சை முடிக்கும் போது விசாரித்தால், பூஜை அறையில் இருக்கிறாள் என்று சொல்லி விட்டான்.

பதினைந்து நிமிடம் கழித்து, இந்நேரம் பூஜை முடிந்து இருக்கும் என்று கணக்கிட்டுப் போட்டால், மீண்டும் எடுக்கப்படவில்லை. சரி ஒரு 'பொங்கல் வாழ்த்துக்கள்' என்று மெசேஜ் கொடுத்தால், அது வந்து சேர்ந்து விட்டது என்பதை குறிக்கும் வகையில், 'நன்றி' என்ற ஒரே ஒரு வார்த்தை குறுஞ்செய்தி கூட அவளால் அனுப்ப முடியாதா?

மொபைலில் வந்த ஒவ்வொரு 'பீப்' ஒலிக்கும், அவன் கண்கள் ஏமாந்தது. நூற்றுக் கணக்கான வாழ்த்துச் செய்திகள், உறவு, நட்பு, வாடிக்கையாளர், டீலர் என்று பல தரப்பட்டவர்களிடம் இருந்து வந்து குவிய, அவனின் கண்கள் வராத ஒரு செய்திக்கு தவம் இருந்தது. இப்படி விட்டேற்றியாக இருக்கும் இவளை எந்த தைரியத்தில் தான் மணம் செய்து கொள்ள ஆசைப்பட்டு அம்மாவிடம் சொன்னோம் என்று தோன்றியது. 'நாங்கள் உங்களைப் பார்க்க வருகிறோம்' என்ற செய்திக்குக் கூட அவளிடம் இருந்து வாங்க என்ற பதில் இல்லை என்றதும், 'அங்கே என்னவோ சரி இல்லை' என்ற உணர்வு தோன்ற, அவன் பதைத்தான்.

''அபி, என்ன பண்ணிட்டு இருக்க? எவ்வளவு நேரமா சாப்பிடக் கூப்பிட்டுகிட்டே இருக்கேன்?'' என்ற கல்யாணி அம்மாவின் குரல் அவனை இங்கே இழுத்து வந்தது.

''அம்மா மதியம் வரைக்கும் இங்கே இருக்க வேண்டாம். உடனே கிளம்பலாம், நான் இப்பவே கார் வரச் சொல்கிறேன்'' என்று அவசரமாகச் சொன்னான் அபிஷேக்.

''என்னடா அவசரம்? இன்னும் காலை சாப்பாடே ஆகலை? நிறைய வேலை இருக்குப்பா? நைட்டும் திரும்பி வர முடியாதே? சமைச்சதெல்லாம் என்ன பண்றது?''

''அதெல்லாம் யாருக்காவது தூக்கிக் கொடுங்க. இல்லை கையில் எடுத்துக்கோங்க. போற வழியில் சாப்பிட்டுக்கலாம். உடனே கிளம்புங்க.''

''அபி! என்ன சொல்ற நீ? நினைச்சு நினைச்சு பேசினால் என்ன அர்த்தம்? கார் ரெண்டு மணிக்கு தானே வரும்? எப்படியும் ஆறு மணிக்கு மேல் தான் கிரிவலம் வரணும். அதுக்கு முன்னாடி போய் அங்கே என்ன பண்றது? நைட் திரும்பி வரப் போவதில்லை. விவேக் மாமா வீட்டில் பேசணும் இல்லையா? சாமி கும்பிட்ட பின் பேசுவது நல்லா இருக்கும் அபி'' என்ற அவரின் எந்த விளக்கமும் அவனை அசைக்கவே இல்லை.

அவருக்கு பதிலே சொல்லாமல், அவன் மொபைலில் டாக்சியை சீக்கிரம் அனுப்பச் சொல்லி பேச ஆரம்பிக்க, அவர் வேறு வழி இன்றி சுந்தரேசனிடம் நகர்ந்தார்.

* * *

அவ்வப்போது அம்மாவின் நினைவு வந்து போகும் போது தோன்றும் அந்த இறுக்கமான மன நிலை வாஸந்திக்கு அடுத்த இரண்டு மணி நேரங்களுக்கு நீடிக்க, தானே அழைப்பு விடுத்த அபிஷேக், தன் குடும்பத்தோடு வீட்டுக்கு வரும் நேரத்தில் தான் அழுது வடியக் கூடாது என்ற எண்ணம் தோன்றி வலுப்பெற்றது.



அந்த நினைவில், அவனது செய்திக்கு 'உங்களின் வருகைக்கு திருவண்ணாமலை காத்து இருக்கிறது. உங்களின் வரவு நல்வரவாகட்டும்' என்று பதில் அனுப்பி விட்டு மதிய உணவிற்குப் பின்புதான் படித்த பள்ளிக்குக் கிளம்பினாள்.

அன்று அலுவலகத்திற்கு வந்த சுஜாம்மா அவரின் முகவரியோ, தொலைபேசி எண்ணோ கொடுக்கவில்லை. பள்ளியில் இருக்கும் சிஸ்டர்ஸ் யாரிடமாவது கேட்டு முகவரி வாங்கலாம். முடிந்தால் ஞாயிறு அன்று புதுச்சேரிக்கு சென்று அவரை பார்க்கலாம் என்று முடிவெடுத்து பாட்டியிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

''பௌர்ணமி கிரிவலம் போகணும். நான் நாலு மணிக்குக் கிளம்ப வேண்டும். வீட்டுல வேற ஆள் இல்லை. சீக்கிரம் வந்து விடு. விவேக் ப்ரெண்ட் அவங்க அம்மா அப்பாவோடு வரானாம்'' என்ற அறிவுரையுடன் விடை கொடுத்தார் பவானி.

பாட்டியும், அத்தையும் பழைய கதை பேச, மதிய உணவிற்கு பிறகு, தியாகராஜனும், கணேஷும் ஓய்வு எடுக்க, தனியாக கிளம்பியதைப் பார்த்த விவேக், ''நானும் வரட்டுமா?'' என்று கேட்டான்.

''அது கிறிஸ்டியன் ஸ்கூல். ஆண்களை உள்ளே விட மாட்டாங்க. எனக்குப் பழக்கமான இடம். பயமில்லை. பாட்டியே சும்மா இருக்காங்க. நீ என்ன துணை என்று புதுசா ஆரம்பிக்கிற? நானே போயிட்டு இரண்டு மணி நேரத்தில் வந்து விடுவேன்'' என்று பல்லைக் கடித்து விட்டுக் கிளம்பினாள் வாஸந்தி.

செயின்ட் மேரிஸ் பள்ளியை ஒட்டிய குடியிருப்பு வளாகத்தின் அலுவலக அறையில், அவள் பள்ளியில் சேர்ந்த நாள் அன்று பணியில் சேர்ந்த சிஸ்டர் சோபியா, அவளைக் கண்டதும் புன்னகைத்து, ''வா வா, வாஸந்தி என்ன லீவா? எப்போ வந்தாய்? வேலை எல்லாம் பிடித்து இருக்கா?'' என்று வரவேற்றார்.

எல்லோரும் வழக்கமாக சேரும் ஜூன் மாதம் இல் லாமல், அக்டோபர் மாதம் விஜயதசமி என்று பள்ளியில் சேர்க்க பாட்டி முடிவு செய்ததால், அந்த கிறிஸ்டியன் ஸ்கூலில் அது தனிப்பட்ட நிகழ்வாகத் தெரிந்தது. ஒரே நாளில் அந்தப் பள்ளிக்கு இருவரும் வந்து சேர்ந்ததாலோ என்னவோ இருவருக்கும் இடையே ஒரு ஒட்டுதல் இருந்தது.

அவர் மூலமாக மதர் சுப்பீரியர் பழக்கம் என்றாலும், தான் அவர் மேல் மரியாதையோடு தள்ளி இருக்க, ஒவ்வொரு ஆண்டும் தன் பிறந்த நாளைக்கும், புத்தாண் டின் போதும், தனக்குப் புத்தகங்களைப் பரிசாகக் கொடுத்து வர, சிஸ்டர் சோபியாவைக் காட்டிலும் மதர் சுப்பீரியர் நெருக்கமாகிப் போனார்.

''பிடிச்சு இருக்கு மதர். பாஸ் எங்க அத்தைப் பையன் தான். வேலை செய்கிறேன் என்பதை விட வேலை கற்றுக் கொள்கிறேன். மேற்படிப்புக்கு வசதியா இருக்கு. நீங்க எப்படி இருக்கீங்க? மதர் சுப்பீரியர் எப்படி இருக் காங்க?''

''மதர் சுப்பீரியர் இறந்துட்டாங்களே! உனக்குத் தெரியாதா?'' என்ற அந்த வாக்கியத்தில் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தாள் வாஸந்தி.



''என்ன சொல்றீங்க? மதர் இறந்துட்டாங்களா? எப்போ? பத்து நாள் முன்னாடி, மதர் அனுப்பிச்சாங்க என்று ஒருத்தவங்க வந்து என்னை சென்னையில் பார்த் தாங்களே? அவங்க பேர் கூட சுஜாதா பாட்டில் என்று சொன்னாங்க...''

பேர் சொன்ன இடத்தில அவளையும் அறியாமல் சின்ன இடைவெளி விழுந்தது. சு..ஜா..தா.. இது அம்மா வின் பேர் இல்லையா? பட்டேல் என்ற அவரின் பிறந்த குடும்ப பெயரைச் சேர்த்ததாலும், வரவேற்பு பெண் ஏதோ வட இந்திய பெண்மணி வந்து இருப்பதாகச் சொன்ன தாலும், அவளுக்கு அது தன்னுடைய அம்மா பேர் என்பது கூட உறைக்காமல் போய் விட்டதா? எப்படி அதை கவனிக்க மறந்தாள்?

''சுஜாதா அங்கே வந்தாங்களா? அவங்க சொல்ல லையா?'' என்று இடையிட்ட சிஸ்டர் சோபியாவின் குரலில் விழித்துப் பேச்சைத் தொடர்ந்தாள் வாஸந்தி.

''ம், வந்தாங்க. எனக்கு புக் பரிசா கொடுத்தாங்க. மதருக்கு நடமாட்டம் குறைந்து விட்டதால் புதுச்சேரிக்கு அழைச்சுட்டுப் போயிட்டதா சொன்னாங்க. நீங்க தெரி யாம சொல்றீங்களா?'' என்று பதட்டத்தோடு கேள்வி களை அடுக்கினாள் வாஸந்தி.

''நான் தெரிந்துதான் சொல்றேன். நீ சொன்ன எல் லாமே உண்மைதான். மதருக்கு உடம்பு சரி இல்லாமல் போனது. அவங்களை சுஜாதா பாட்டில் இங்கே இருந்து அழைத்துப் போனது, அவங்க புதுச்சேரியில், இரண்டு மாதம் முன்பே இறந்தது, எல்லாமே உண்மை. அவங்க ஏன் மதர் இறந்ததை உன்னிடம் சொல்லலை என்பது தான் புரியவில்லை'' என்று குழம்பினார் சோபியா.

''மதரை ஏன் அவங்க அழைச்சுட்டுப் போகணும்? அவங்களுக்கும் மதருக்கும் என்ன சம்பந்தம்?'' கலங்கிய குரலில் கேட்ட வாஸந்திக்கு, தன்னைச் சுற்றி தனக்குத் தெரியாத பல விஷயங்கள் நடைபெற்றுக் கொண்டு இருப்பது முதல் முறையாக உறைத்தது.

''அது எனக்குத் தெரியாதே? ஆண்டுக்கு இரண்டு முறை வந்து மதரைப் பார்த்துவிட்டு போய்டுவாங்க. அவங்க நான் இங்கே வருவதற்கு முன்பே வந்து போயிட்டு தான் இருக்காங்க. ஒருவேளை இதே ஸ்கூலில் படிச்ச பழைய மாணவியோ?''

இல்லை அம்மா இங்கே படிக்கவில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆண்டுக்கு இரண்டு முறை இவரின் வருகை, மதர் சுப்பீரியர் ஒவ்வொரு ஆண்டும் தனக்கு அளித்த இரண்டு பரிசுகள். இரண்டுக்கும் ஏதோ தொடர்பு இருக்கோ? அப்படி என்றால்... அவளின் உள்ளம் பதறியது.

மதர் இறந்த பின்பும் அவரின் பெயரால் தொடர்ந்து வழங்கப்படும் பரிசுகள். 'இந்த புத்தகத் தேர்வு உங்களுடையதா?' என்று அவள் கூட கேட்டாளே? மதரை ஸ்வீட் என்றும், ஐ லவ் ஹர் என்றும் சொன்னபோது அவர் என்னவோ சொன்னாரே?' அம்மான்னா அப்படித்தான்...''

அ..ம்..மா.. என்று அவர் சொன்னது மதர் சுப்பீரியரை இல்லை. அப்படி என்றால், அவர்தான் தன்னைத் தேடிக் கண்டு பிடித்து இருக்க வேண்டும். தேடி கண்டு பிடிப்பது என்ன? அவர் தன்னைக் கண்காணிப்பதை விடவே இல்லை. இரண்டு வயதில் இருந்தே...



இந்த முறைதான் தன்னை நேருக்கு நேர் பார்த்துப் பேசி இருக்கிறார். இதுவரை மதர் மூலமாகத் தான் பரிசுகள் வரும். பள்ளியில் இருந்து வெளியேறிய பிறகும் தொடர்ந்த பரிசுகள், அவரைப் பார்த்த மாதிரி தோன்றியது. எல்லாத்துக்கும் அர்த்தம் புரிவது போல இருந்தது.

தனக்கு நினைவு தெரிந்தது முதல் வீட்டில் போட்டோ கூட கிடையாது. அம்மா பற்றிய பேச்சு வார்த்தை கிடையாது. ஆனாலும், அவரின் பெயர் சுஜாதா என்பது தெரிந்தும் கூட, அவர் தன்னை நேருக்கு நேர் தேடி வந்த பின்பும் கூட, பின்னால் சேர்ந்த அந்த பட்டேல் என்ற ஒரு வார்த்தை தன்னைக் குழப்ப முடியுமா?

அம்மாவின் பெயர் கூட தனக்கு இதுவரை நினைவில் பதியாமல், இருப்பது என்ன கொடுமை? அவரை அடையாளம் தெரியாமல், மூன்றாவது நபர் மாதிரி பேசி அனுப்பிய வேளையில் அவர் எப்படித் துடித்து இருப்பார்? இன்று காலையில் கூட அவர் தன்னை ஏன் விட்டு விட்டுப் போய் விட்டார் என்று திட்டினாளே?

அவர் தன்னை ஒரு நாள் கூட மறக்கவே இல்லை. தன் வளர்ச்சியை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் தான் இத்தனை ஆண்டுகளில் ஒரு முறை கூட அம்மா பற்றிய விபரங்களை எனக்குச் சொல்லி ஆக வேண்டும் என்று அப்பாவைக் கேட்டதே இல்லை. இத்தனைக்கும் அப்பா தன் மீது நிறைய பாசம் வைத்து இருப்பவர். தான் கேட்ட எதையுமே அவர் இதுவரை மறுத்ததே இல்லை. ஆனால் அம்மா பற்றி தெரிந்து கொள்வது அவசியம் என்று தனக்கும் தோன்றவில்லை தானே?

பாட்டி எப்போதாவது அரசல் புரசலாகப் பேசியதையும், அம்மா பற்றிய பேச்சை எடுக்கும்போது

எல்லாம் வீட்டில் அப்பாவுக்கும் பாட்டிக்கும் இடையே சண்டை வந்ததனால் அதைச் சுலபமாக வேண்டாத பொருள் என்று தான் தான் தள்ளி வைத்து விட்டோம். போகி கொண்டாடியதுதான். அம்மா இல்லை என்ற உண்மை தாமதமாகப் புரிய, கண்ணில் நீர் பெருகியது.

''அவங்க இப்போ எங்கே இருக்காங்க என்று தெரியுமா?'' குரல் நடுங்கக் கேட்டாள் வாஸந்தி. அந்த சுஜாதா பாட்டில் தன் அம்மாவாக இருக்கலாம் என்ற சந்தேகம் மறைந்து உறுதியாகத் தோன்ற, கண்களில் வெள்ளமெனப் பெருகிய நீரைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறினாள்.

அவளின் விழிகளில் பெருகிய நீரை உண்மை காரணம் புரியாமல் வியந்து பார்த்தவர், அவளை தோளோடு அணைத்து, ''புதுச்சேரின்னு தெரியும். முகவரி தெரியாதே வாஸந்தி, ஆனால் கடைசி காலத்தில் மதர் நடமாட்டம் இல்லாமல் சிரமப்பட்டாங்க. வயது எண்பது இருக்கும். அவர் கர்த்தர் பாதம் சேர்ந்ததற்கு வருத்தப் படக் கூடாதும்மா'' என்று தேற்றினார் சோபியா.

மேலே அவரிடம் கேள்வி கேட்க வார்த்தைகள் வராமல், கண்ணீரைச் சமாளிக்க முடியாமல் திணறி, அவரிடம் ஒரு தலை அசைப்பில் விடை பெற்று பள்ளியை விட்டு வெளியே வந்தாள். பள்ளியில் இருந்து வெளி வந்தவளுக்கு வீட்டுக்குப் போக மனம் இல்லை.

அம்மாவைப் பற்றி பேசுவதை தடை செய்யும் அப்பாவும் பாட்டியையும் உடனே பார்க்கப் பிடிக்கவில்லை. அவர்கள் தனக்கு எவ்வளவோ செய்து இருக்கிறார்கள் தான். ஆனாலும் மனம் ஆறவில்லை. சின்ன வயதில் இருந்து, கிரிவலம் செய்யும் பாதையில்



வடகிழக்கு திசையில் இருக்கும் 'ஈசான்ய லிங்கம்' மன நிம்மதியை தரும் என்று பாட்டி அறிமுகப்படுத்திய, லிங்கம் இருந்த இடத்திற்குப் போகலாம் என்று நடந்தாள்.

கிரிவலம் முடியும் இடத்தில இருக்கும். எதிர் திசையில் போனால் முதலிலேயே அந்த இடம் வந்து விடும். பள்ளிக்கு அருகில் என்பதால், கால்கள் தன்னிச்சையாக நடை போட, மனம் இதுவரை தான் இழந்த தாய் அன்பைப் பற்றிய சிந்தனையில் மூழ்க, கண்கள் ஓய்வின்றி, கண்ணீரை உற்பத்தி செய்து, எதிரில் வந்த வாகனம் கூடத் தெரியாமல் அவள் நடந்து சென்ற வேளையில் 'கிரீச்' என்ற சப்தத்துடன் கார் அவசரமாக நின்றது.

# 8



காலை எட்டு மணியில் இருந்து வாஸந்தியுடன் பேச, நேரடியாகவும், விவேக் மூலமாகவும், பல முறை முயன்று தோற்ற அபிஷேக், அனுப்பிய குறுஞ்செய்திக்கும் பதில் வரவில்லை என்பதில் பதறி, பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் திருவண்ணாமலைக்கு கிளம்புவதாக இருந்ததை மாற்றி, அம்மாவை விரட்டி, அப்பாவை தாஜா பண்ணி, காலை பத்து மணிக்குக் கிளம்பி விட்டான்.

கெஞ்சிக் கெஞ்சி அழைத்த போதும், அம்மாவின் முகத்திற்காக, ஒரே ஒரு வாய் சர்க்கரைப் பொங்கல்

மட்டும் சாப்பிட்டவன் காலை உணவை மறுத்து விட்டான். மதியம் ஒன்றரை மணி அளவில், 'உங்களின் வரவு நல்வரவாகட்டும்' என்ற வாஸந்தியின் செய்தியைப் பார்த்த உடனே அவனின் மனம் லேசாகி விட்டது.

'கண்டதையும் எண்ணி குழம்பி விட்டோம். அவங்க அப்பா, பாட்டி, அத்தை, மாமா, எல்லோரும் அருகிலேயே இருக்க, தான் பதற வேண்டிய அவசியமே இல்லை. ஆனாலும் மனதின் வேகத்திற்கு ஈடு கொடுக்கக் கிளம்பியாகி விட்டது. அந்த மெசேஜை பார்த்த உடனேயே அவனுக்குப் பசி வந்துவிட, 'அம்மா, சாப்பிட என்ன வச்சு இருக்கீங்க?' என்று அவரைச் சீண்ட ஆரம்பித்து விட்டான்.

''அப்பா, உங்க லாப் டாப் கொடுங்க. நீங்க வச்சு இருக்கும், ஜாதகம் போட்டோக்கள், எல்லாவற்றையும் அடுக்கி, ஒழுங்கு படுத்தித் தருகிறேன். விவேக், உங்களுக்கு ஏதோ வேலை வச்சு இருக்கானாம். என்ன என்று சொல்லலை...'' என்று அப்பாவிடம் பேசினான்.

''மூணு மணி நேரமா, அம்மா கேட்ட கேள்விக்கு கூட பதில் சொல்லலை. இப்ப சத்தம் பெரிசா வருது? விவேக் வேலை வச்சு இருக்கானா? உனக்கு இல்லையா?''

''அம்மாவிடம் மிக முக்கியமான வேலை இருக்கு என்று சொன்னேனே உங்களிடம் சொல்லலையா?''

''முக்கியமான வேலை என்றால் நீதான் சொல்லணும். இதில் நான் நடுவில் வரும் வேறு ஆட்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை...'' என்று ஆழம் பார்த்தார்.

அந்த வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பு, இவன் வாயில் இருந்து அந்தப் பெண்ணை பிடித்து இருக்கிறது என்ற வார்த்தை வந்து சேர வேண்டும். அதுவும் போகிற போக்கில், விளையாட்டுத் தனமாக இல்லாமல் உயிரில் இருந்து வரும் உண்மையான வார்த்தையாக இருக்க வேண்டும். பார்த்த பத்து நாளில் பிடித்து இருக்கு என்று சொல்வதற்காகக் கல்யாணம் என்ற அளவில் போக அவருக்குத் தயக்கம் இருந்தது.



''எனக்குப் பிடிச்ச பொண்ணோட எனக்கு நல்லபடியா கல்யாணம் நடக்க, பௌர்ணமி அன்று திருவண்ணாமலையில் கிரிவலம் செய்வதாக அம்மா வேண்டிக் கொண்டாங்களாம் அதுக்கு தான் போறோம். அது முக்கியமான வேலை இல்லையா? அதை நிறைவேற்ற போகும்போது விவேக், அவங்க மாமா வீட்டுல ஏதோ சின்ன பிரச்னை. அப்பா வந்தால் நல்லா இருக்கும் என்று சொன்னான். என்ன விஷயம் நேரில் தான் கேட்கணும்...''

''நீ அம்மாவிற்கு துணையாக கிரிவலம் செல்லத்தான் வருகிறாயா?''

''என்னம்மா அப்பா நான் சொல்றதை நம்பவே மாட்டேங்கறாங்க? நீங்க உங்க பையனைப் பற்றி போட்டுக் கொடுத்துட்டீங்களா?'' என்ற ரீதியில் அவன் கேலி பேச, சுந்தரேசனுக்குத் தயக்கம் கூடியது. பார்வையில் மனைவியிடம் விசாரித்தார்.

'காரில் பேச வேண்டாம் என்று நினைக்கிறானோ என்னவோ?' என்று கணவருக்கு பதில் சொன்னாலும், 'அவராகக் கேட்கும்போது இவன் ஏன் சுற்றி வளைக்கணும்? எனக்குப் பிடிச்சு இருக்குப்பா என்று சொல்ல வேண்டியதுதானே? எதுக்கு இப்படி சுற்று வளைக்கிறான் என்று அவருக்கும் புரியவில்லை.

அம்மாவும் அப்பாவும் பார்வையால் பேசிக் கொள்வது புரியாமல் இருக்க அபிஷேக் ஒன்றும் பச்சை குழந்தை இல்லையே? அவனுக்கு வாஸந்தியிடம் முதலில் பேசி அவளின் விருப்பத்தை அறிந்து கொள்ளாமல் அப்பா அவர்களின் வீட்டில் பேசுவது சரியாக இருக்காது என்று தோன்றியதால், அவன் விளையாட்டு பேச்சிலேயே பொழுதைக் கழித்தான்.

அம்மாவிடமும் அவன் பூடகமாகச் சொன்னான். உடனே புரிந்து கொண்டார்கள். அவர்களிடம் வெளிப் படையாக மறுக்கவில்லை. ஆனால் இவள்தான் பெண் என்று சொல்லவும் இல்லை. இன்று மாலை கிரிவலம் வரும்போது, வாஸந்தியிடம் பேசிய பிறகு இரவு அப்பா விடம் சொல்லலாம் என்று முடிவெடுத்து இருந்ததால், அவரின் துருவலுக்கு அவன் நேரடியாக கடைசி வரை பதில் சொல்லவில்லை.

திருவண்ணாமலையை நெருங்கியபோது மணி மூன்றைத் தொட்டு இருந்தது. பிற்பகல் உணவு முடித்து அவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கலாம். போய் தொந்தரவு பண்ணக் கூடாது என்று சுந்தரேசன் தயங்கி னார்.

''அப்பா, இப்ப கோவிலும் திறந்து இருக்காது. அத னால், காரிலேயே திருவண்ணாமலை குன்றை வலம் வரலாம். எப்படியும் ஒரு மணி நேரம் ஆகிவிடும். அப் புறமா விவேக் வீட்டிற்குப் போகலாம். அங்கிருந்து ஆறு மணிக்கு மேல் கிளம்பி சாமி தரிசனம் முடித்து கிரிவலம் வரலாம்'' என்று அபிஷேக் சொல்ல, இருவரும் அதை ஒத்துக் கொண்டனர்.



''அம்மா உங்களுக்கு ஆரோக்கியம் வேண்டுமா? பணம் வேண்டுமா? மன நிம்மதி வேண்டுமா? பெரிய பதவி வேண்டுமா? சமூக அந்தஸ்து வேண்டுமா? இது ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக லிங்கம் இந்த கிரிவலம் வரும் பாதையில் இருக்கு. உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்க...''

''இது என்னடா கேள்வி? மன நிம்மதிதான் வேண் டும். அதிலேயே மற்ற எல்லாமே அடக்கம் தான். இதுல என்ன சந்தேகம்?'' என்று கல்யாணி சிரிக்க, அதை அளிக்கும், 'ஈசான லிங்கம்' இருக்கும் இடத்தை விசாரித்த படி, வந்த போது எதிரே வந்த வாஸந்தியைக் கண்டதும் அபிஷேக்கின் மனம் துள்ளியது.

''டிரைவர், காரை நிறுத்துங்க...'' என்று அபிஷேக் உற்சாகக் கூச்சலிட, அவர் இடது புறம் காரை அவசரமாக ஒதுக்கினார். ஆனால் இவ்வளவு பெரிய கார், தன்னைப் பார்த்து விட்டு ஒதுங்குவதைக் கூட உணராமல் நேரே காரை நோக்கி வந்த வாஸந்தியைப் பார்த்த டிரைவர், 'கண்ணைப் பின்னாடி வச்சுட்டு வருது பார்...' என்ற எரிச்சலான வாசகத்துடன் பிரேக்கை முழு வேகத்தில் அழுத்தினார்.

* * *

செயின்ட் மேரிஸ் பள்ளியில் இருந்து வெளியே வந்த வாசந்தியின் மனம் முழுவதும் குற்ற உணர்வில் குன்றி பொய் இருந்தது. தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயை தனக்கு அடையாளம் தெரியவில்லை. தன் மேல் உயிரையே வைத்து இருக்கும் தந்தை அதைப் பற்றிய விபரம் சொல்லவில்லை. அவர் சொல்ல வில்லை என்றால் தானும் கேட்கவில்லை.

இத்தனை நாளாக அம்மாவைப் பற்றிய பேச்சு தவிர்க்கப்பட்ட விஷயமாக வீட்டில் இருந்ததில் இருந்து, அம்மா மேல் தவறு என்ற எண்ணமே இதுவரை இருந்தது, மேலும் 'அம்மாவை அவ்வப்போது ஒப்பிட்டு, இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே...' என்ற கண்டிப்பான வார்த்தைகளையே அவள் பாட்டியிடம் இருந்து கேட்டு இருந்ததால், அந்த எண்ணம் மேலும் உறுதிப்பட்டு இருந்தது.

ஏதோ தவறு செய்து, அதனால் பிரிந்து போய் விட்டார்கள். தன் மேல் அவருக்கு அக்கறை இல்லை என்ற எண்ணத்தில் இன்று வரை ஒரு அலட்சியமே இருந்தது. ஆனால், இன்று பள்ளியில் தனக்கு தெரிய வந்த விபரங்கள், அவளை தலை கீழாய் மாற்றிப் போட்டது.

அம்மா அப்பாவிற்கு இடையில், அம்மா - பாட்டிக்கு இடையில் என்ன பிரச்னை நடந்து இருந்தாலுமே, அவர் வரையில் அது அம்மா - பெண் உறவை பாதிக்கவில்லை. அந்த மனக் கசப்பை அவர் பெற்ற பெண்ணின் மேல் காட்டவில்லை. ஏன் தன்னை விட்டு விட்டுப் போனார் என்ற கேள்வி இன்னும் இருக்கிறது. அதற்கு பதில் அவர்தான் சொல்ல வேண்டும். ஆனால் அடுத்தவரை கேள்வி கேட்பதற்கு முன்பு நீ செய்த தப்புக்கு என்ன தண்டனை?

பதினெட்டு வருடங்களாக, பெற்ற தாயை பற்றிய அடிப்படை விபரங்களை அறியாமல், அறிந்து கொள்ள எந்த முயற்சியும் எடுக்காமல், 'அவர் கெட்டவர்' என்று தீர்மானித்து, ஒதுக்கி விட்டாள். அவரே தேடி வந்து தன்னைப் பார்த்தபோது கூட, முக ஜாடையை உணர முடியாத தன்னை என்ன செய்வது?



மூன்றாவது நபர் போல, ஆண்டுக்கு இருமுறை என்று கணக்கிட்டு, பெற்ற மகளை யாருக்கும் தெரியாமல் சொல்லாமல் பார்க்க வேண்டும் என்றால் அவர் மனம் என்ன பாடு பட்டு இருக்க வேண்டும்? ஏற்கனவே நொந்து இருந்த மனதில் தானும் தன் பங்குக்கு வேதனையைக் கொடுத்தது எந்த விதத்திலும் நியாயமே இல்லை. இந்தத் தவறுக்கு அவரிடம் எப்படி மன்னிப்புக் கேட்பாள்? முதலில் அவரை எங்கே எப்படி பார்ப்பாள்?

''சாரிம்மா! நான் உங்களை ரொம்பப் படுத்தி விட்டேன். உங்கள் பேரைச் சொன்னாலே அலறும் பாட்டியிடம் இல்லாவிட்டாலும், அப்பாவிடமோ, அத்தையிடமோ கேட்டு, முன்பே உங்களைப் பற்றி அறிய முயற்சி எடுத்து இருக்க வேண்டும். அதைச் செய்யாதது தப்புதான். சாரிம்மா...'' என்று தனக்குள் அரற்றியபடி, கால் போன போக்கில் நடந்த வாஸந்தியின் புலன்களில், அருகில் வேகமாய் அழுத்தப்பட்ட பிரேக்குடன், 'க்ரீச்' என்ற சப்தத்துடன் நின்ற காரோ, அதில் இருந்து இறங்கிய அபிஷேக்கோ எட்டவில்லை.

* * *

கார் முழுசாக நிற்பதற்கு முன்பே, அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு இறங்கிப் போன அபிஷேக்கை, ''யாரு அபி...'' என்ற கல்யாணியின் கேள்வி எட்டவே இல்லை.

''ஹேய் வஸு இங்கே எங்கே...'' என்ற உற்சாக வார்த்தைகளுடன் அவள் அருகே வந்த அபிஷேக்கின் குரல் கேட்டு நிமிர்ந்தவளின் முகத்தைப் பார்த்து அதிர்ந்தான்.

உலகத்தையே வெறுத்த முக பாவனையும், நீரால் நிரம்பி, 'இதோ நான் அழ ரெடி...' என்று ஆயத்தம்

செய்து கொண்டு இருந்த விழிகளையும் பார்த்துச் சுற்றுப் புறத்தை மறந்து இடது கரத்தால் அவளின் தோளை அணைத்தவன், 'என்ன ஆச்சுடா! யார் என்னம்மா சொன்னாங்க? எதுக்குக் கண்ணுல தண்ணி?'' என்று பதட்டமாகக் கேட்டவாறே, வலது கையால் அவளின் கண்களை அவசரமாகத் துடைத்து விட்டான் அபிஷேக்.

''அ...பி, நீங்க... எங்கே...? நான்... நா...ன் பெ..ரி..ய த..ப்..பு ப..ண்..ணி..ட்..டே..ன்... அ..பி..ஷே..க்...'' என்ற விம்மலுடன் அவனின் தோளில் சாய்ந்தவளின் முதுகை வருடினான்.

என்ன தப்பு செய்தாள்? யாருக்கு அதனால் நஷ்டம்? எதற்கு இந்த அழுகை? என்ற விபரம் ஏதுவுமே தெரியா விட்டாலும், தன் மனம் கவர்ந்தவளின் தவிப்பும், கண்ணீரும் அவனை உலுக்கியது. ''வஸு... எந்தத் தப்பா இருந்தாலும் நாம் மனசு வச்சால் சரி பண்ணிடலாம். என்ன விஷயம் சொல்லு. நீ ஏன் தனியா வந்த? கூட யாரும் வரலையா? முதலில் அழுகையை நிறுத்து'' என்று தேற்ற முயன்றான் அபிஷேக்.

காரை நிறுத்தச் சொல்லி அவசரமாக இறங்கிய அபிஷேக், தெருவில் வந்த ஒரு பெண்ணை நண்பகல் நேரத்தில், நடு ரோட்டில் அணைத்துத் தேற்றுவதைப் பார்த்த சுந்தரேசன் குழம்பினார். 'இதுதான் நீ சொன்ன அந்தப் பொண்ணா கல்யாணி?' என்று கேட்டார்.

''அப்படித்தான் நினைக்கிறேன். நானும் பார்த்த தில்லை. என்ன பிரச்னை தெரியலையே?'' என்று அவரும் காரை விட்டு இறங்கி அபிஷேக்கின் அருகில் சென்று அவன் முதுகில் தட்டினார்.



''அபி... முதலில் காருக்குள் அவளை உட்கார வை. இல்லை வேண்டாம். நான் அந்த மண்டபத்துக்கு இவளை அழைத்துப் போறேன். நீ காரில் இருந்து தண்ணீர் பாட்டில் எடுத்து வா'' என்று அவனின் அணைப்பில் இருந்து வாஸந்தியை விலக்கினார்.

''அம்மா... இது வாஸந்தி...'' என்ற அவனின் அறிமுகம் அவருக்குத் தேவையே இல்லை. ஒரு தலை அசைப்பில் அவனைப் புரிந்து கொண்டவர், 'போய் தண்ணி எடுத்துட்டு வா. நான் பார்த்துக்கறேன்'' என்று கண்ணால் சேதி சொல்லி விட்டு, வாஸந்தியின் புறம் திரும்பினார்.

அவர் வந்த பிறகே, நடு ரோட்டில், தான் அவன் தோளில் சாய்ந்து அழுது இருப்பது அவளுக்கு உறைத்தது. ஏற்கனவே தன் குடும்பத்தில் செய்த குழப்படிகள் போதாது என்று புதுசா இன்னொரு குடும்பத்திலுமா? இதுதான் அவங்க அம்மாவா? அவங்க தன்னைப் பற்றி என்ன நினைப்பாங்க? அவர்கள் முன்னாடி... இப்படிப் பட்ட பகலில், நடு ரோடில்... இந்த எண்ணம் மேலும் அவமானத்தில் அவளைக் குன்ற வைக்க, அதை முதலில் போக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார் கல்யாணி.

''வாம்மா, நீயும் இங்கேதான் வந்தாயா? இதுதான் ஈசான லிங்கம் இருக்கும் இடமா? மன நிம்மதி தரும் இடமாமே! உனக்கு போய் நான் சொல்றேன் பாரு! நீ இந்த ஊர்தானே? அபி சொல்லி இருக்கான்...'' என்று பேச்சுக் கொடுத்தபடி அவளை மண்டபத்திற்கு நகர்த்தினார்.

'உன்னை நான் தப்பாக நினைக்கவில்லை' என்று சொல்லாமல் சொன்ன அவரின் அக்கறையான பேச்சைக் கேட்டவளுக்கு ஏற்கனவே இதோ இதோ என்று பய முறுத்திக் கொண்டு இருந்த கண்ணீர் மேலும் பெருகி, கன்னத்தில் வடிந்தது.

''ஷ்! வஸு! உன் பிரச்னை என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் எந்த பிரச்னையா இருந்தாலும் அதை அழுகையால் நிச்சயம் தீர்க்க முடியாது. அது எனக்கு நல்லாவே தெரியும். முதலில் கண்ணைத் துடை. இந்தா இந்தத் தண்ணியைக் குடி...'' என்று அழுத்தமான குரலில் சொன்ன கல்யாணி, அபிஷேக் எடுத்து வந்த தண்ணீர் பாட்டிலை நீட்டினார்.

அபிஷேக்கின் பின்னால் வந்த சுந்தரேசன், மகனின் முகத்தில் இருந்த பதட்டத்தையும், அவளின் கண்ணீர் துடைக்க என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார் என்பது போன்ற தீவிரத்தையும், அம்மாவின் பின்னால் நெருங்கி நின்று கண்களால் அவளை வருடி பார்வையா லேயே 'நான் இருக்கிறேன் உனக்கு' என்று சொல் லாமல் சொல்லி அவளை தேற்றியபடி, வாஸந்தியின் கண்ணீரை நிறுத்த அம்மா சொல்லும் எந்த வேலையை யும் சிரமேற்கொண்டு செய்யத் தயாராக இருந்த பாவ னையையும் கணக்கிடத் தவறவில்லை.

காரில் வரும்போது அவன் சொல்லத் தயங்கிய பெண் இவள்தானா? இவளுக்கு ஏதோ பிரச்னை என்பதை சென்னையில் இருக்கும்போதே உணர்ந்து விட்டானா? அதனால் தான் இங்கே வர அந்த வேகமா? இவளின் ஒவ்வொரு உணர்வும் இவனைப் பாதிக்கும் தீவிரத்தைப் பார்த்தால், 'இவன் இவளை விரும்புகிறான்' என்று சொல்ல வார்த்தைகள் தேவையே இல்லை.

தூரத்தில் அவளைக் கண்டதும் காரை நிறுத்தச் சொன்ன வேகம், முழுசாக கார் நிற்கும் முன்பே கார் கதவைத் திறந்து இறங்கிய உற்சாகம், சுற்றுப்புறம் மறந்து அவளை அணைத்துத் தேற்றிய அன்பு, எல்லாமே அவனின் மனதை வார்த்தைகள் இன்றியே படம் பிடித்துக் காட் டியது.



மகனின் மனம் கவர்ந்தவளைத் திரும்பிப் பார்த்தார். ரொம்ப சாதாரணமான உடை. அந்த அலங்காரமும் இல்லை. வெயிலில் வாடிய மலர் மாதிரி இருந்தவளின் முகத்திலும் கள்ளம் தெரியவில்லை. தன் சோகத்தை பகிர்ந்து கொள்ள தன்னுடைய மகனை அவள் தேர்ந் தெடுத்து இருக்கிறாள் என்றால், அவளின் மனதிலும் அவன் இருக்க வேண்டும். இறைவன் சித்தப்படி இரு மனம் இணைந்த பின்பு இவர்களைப் பிரிக்க தான் யார் என்ற முடிவிற்கு வந்த சுந்தரேசன், ''அபிஷேக், ஒரு நிமிஷம் இப்படி வா'' என்று கை காட்டி அழைத்தார்.

தோளில் சாய்ந்து இருந்த வாஸந்தியை ஏதோ சொல்லி தேற்றிக் கொண்டு அம்மாவை விட்டு நகர மனம் இல்லை. வாஸந்தியின் பிரச்னை என்ன என்று தெரிந்து, அதை உடனே தீர்க்க வேண்டும், என்று அவனின் ஒவ்வொரு அணுவும் பரபரத்துக் கொண்டு இருக்க இந்த நேரத்தில் அப்பா அழைப்பது ஏன் என்ற கேள்வி வந்தது.

'என்னப்பா...' என்று கேட்டான் அபிஷேக்.

''அபிஷேக், இந்த வினாடி என் மனசுல தோணினதை வைத்துச் சொல்றேன். அந்த பொண்ணு கண்ணில இருந்து இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு சொட்டு கண்ணீர் வரக் கூடாது. முதலில் அந்த பொண் ணுக்கு என்ன பிரச்னை என்று விசாரிச்சுட்டு வா. என்ன பிரச்னையா இருந்தாலும், அதை நாம சரி பண்ணணும். போ...'' என்று உறுதியாகச் சொன்ன தந்தையை 'தேங்க்ஸ்பா' என்று நன்றியோடு இறுக அணைத்துக் கொண்டான் அபிஷேக்.

# 9



'வாஸந்தியை கண் கலங்காமல் பார்த்துக் கொள்' என்ற அப்பாவின் வார்த்தையைக் கேட்ட உடனேயே அவரை இறுக அணைத்து தன் நன்றியைத் தெரியப் படுத்தியவன், 'நிச்சயமா அப்பா. அதுல உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். அதுக்கு நீங்களும் அம்மாவும் கூட ஒத்துழைப்புக் கொடுக்கணும்பா'' என்று அவசரமாகச் சொன்னான்.

''எங்களுக்கு நீ ஒரே பிள்ளைடா! உன்னோட சந் தோஷம் எங்களுக்கு வேற எதையும் விட ரொம்ப முக்கியம். நாங்க என்ன செய்யணும் சொல்லு?''

''இப்போதைக்கு சுருக்கமா சொல்லிடறேன். எனக்கே முழு விபரமும் தெரியாது. வஸுவோட அம்மா, அவங் களோட இல்லை. அப்பா பாட்டி மட்டும் தான் இருக் காங்க. ஆனால் அதை கேள்விகள் கேட்டுத் தோண்டி துருவ வேண்டாம்.''

''அவங்களோட இல்லை என்றால்...'' என்று இழுத் தார். உயிரோடு இல்லை என்பதை இப்படி சுற்றி வளைத்து அவசரமாக இந்த நேரத்தில் சொல்ல அவசியம் இல் லையே?

''அதுதான் எனக்குத் தெரியாது. அதை நாம் துருவ வேண்டாம் என்று சொன்னேன். மறுபடியும் அதுக்கே



விளக்கம் கேட்டால் எப்படிப்பா? நாம் இது பற்றி ராத்திரி பேசலாம். இப்ப நான் அங்கே போகணும். புரிஞ்சுக் கோங்கப்பா...'' என்று மன்றாடலாகச் சொன்னான்.

''சரி அம்மாவை வரச் சொல்லு. நாங்க ரெண்டு பேரும், காரில் கோவில் வாசல் வரை போய், கிரிவலத்தை முடிச் சுட்டு ஒரு பத்து நிமிஷத்துல வரோம். ரொம்ப நேரம் வெளியில் இருக்க வேண்டாம். நீ அந்தப் பெண்ணை சமாதானப்படுத்தி வை. வீட்டுக்கு முதலில் அழைச்சுட்டு போய்டலாம். அப்புறமா சூழ்நிலை பார்த்துப் பேசிக்க லாம்'' என்று சொல்ல அவன் அம்மாவின் அருகில் அமர்ந்து, 'அப்பா கூப்பிடுறாங்க' என்று சொன்னான்.

அவர் வெளியேறிய பின்பு, வாஸந்தியைப் பார்த் தான். தெளிவாக இருப்பது புரிந்தது. ''என்ன மேடம், போன் பண்ணினால் எடுக்க மாட்டீங்க? ஒரு எஸ்.எம். எஸ்.க்கு பதில் சொல்ல மாட்டீங்க. அவ்வளவு பிஸியா?'' என்று கேலியாகக் கேட்டான்.

''ஐ ஆம் சாரி அபிஷேக்'' என்று முகத்தைப் பார்க் காமல் தலை குனிந்தபடி முணுமுணுத்தாள்.

''ப்ச்! எதுக்கு இந்த சாரி?''

''நான் கொஞ்சம் அப்செட்டாகி இருந்தேனா? அதான், உங்க அம்மா அப்பா இருப்பதைக் கூட கவனிக்காமல், நடு ரோடில்... உங்களிடம்...'' மேலே தொடர முடியாமல் நிறுத்தினாள்.

''அதை விடு, நாங்க யாருமே தப்பா எடுத்துக்கலை, ஆனால் அப்படி என்ன மூட் அவுட்? எங்கே இருந்து வரு கிறாய்? ஏன் தனியா வந்த? என்ன ப்ராப்ளம். என்கிட்டே சொல்லலாமா?'' என்று மென்மையாகக் கேட்க, அந்த

அனுசரணையான பேச்சு அவள் கண்களில் புதிதாகக் கங்கையை உற்பத்தி செய்தது.

''ஷ்! அம்மா அப்ப சொன்னதைக் கேட்கலையா? அழுகை எந்த பிரச்னைக்கும் தீர்வாக அமைய முடியாது. கண்ணைத் துடை முதலில்'' என்று அதட்டினான்.

''நான் ஜாஸ்தி அழமாட்டேன். ஆனால் இன்னிக் குத்தான்... இப்படி.... ஏன் என்று தெரியலை...''

''வீட்டுல யாரும் இல்ல? உன்னைத் தேட மாட்டாங் களா? சொல்லிட்டு வந்தாயா? இல்லை...''

''ஹய்யோ! மணி என்ன ஆச்சு? பாட்டி தேடுவாங்க'' என்று வீட்டு நினைவு வந்து பதறினாள்.

''மணி நாலாகப் போகுது. வீட்டுக்கு காரிலேயே போக லாம். கவலைப்படாதே. ஆனால் நான் கேட்ட கேள் விக்கு இன்னும் பதில் சொல்லவில்லையே? சொல்ல இஷ்டம் இல்லையா?''

''இல்லை. நான் படிச்ச ஸ்கூலுக்கு மதர் சுப்பீரியரைப் பார்க்கலாம் என்று போனேன். அங்கே, நான் எதிர்பாராத சில உண்மைகள் தெரிந்தது. நான் எவ்வளவு சுயநலமா என்னோட சந்தோஷத்தைப் பற்றி மட்டுமே நினைச்சு கிட்டு இருந்தேன் என்று புரிந்தது...'' என்று உள்ளடங் கிய குரலில், குற்ற உணர்வுடன் சொல்ல, ''உ..ங்..க அ..ம்..மா..வை அங்கே பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''பார்க்கலை. மதர் சில விஷயங்கள் சொன்னாங்க. எங்க அம்மாவைப் பற்றி நான் இத்தனை நாள் நினைத்து இருந்தது எல்லாம் தப்பு என்று புரிந்தது...''

''நல்ல விஷயம் தானே? சந்தோஷப் படாமல் கண் ணீர் எதுக்கு? அம்மா எங்கே இருக்காங்க என்று



கேட்டாயா? போய் பார்த்து சாஷ்டாங்கமா காலில் விழுந்து அவங்களிடமே மன்னிப்பு கேட்டு விட்டால் பிரச்னை முடிஞ்சுடுச்சு. இதுக்கா இவ்வளவு சோகம்? நீ விடுற கண்ணீரில் திருவண்ணாமலையை கிரிவலம் செய்யணும் என்று நினைப்பவங்க எல்லோரும் பட கோட தான் வரணும் போல இருக்கு'' என்று கேலியாகச் சொன்னான் அபிஷேக்.

''ரொம்ப புத்திசாலித்தனமாக பேசறதா நினைப்பா? மனசுல இருக்கும் வேதனை புரியாமல் ஜோக் அடிக்கா தீங்க அபிஷேக். எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு...'' என்று சொல்லும் போதே அவள் விழிகளில் நீர் உடனே நிரம்பி வழிய, அவனின் முகம் கனிந்தது.

அவளின் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்து வருடியபடி, ''வஸு! நீ சோகமா இருக்கிறாய் என்பது எனக்கும் புரியுது. ஒரு எதிர்மறை நினைவை, ஒரு பாசிடிவ் எண்ணத்தால் தான் சரி பண்ண முடியும் என்ப தால் தான் அப்படிப் பேசினேன். நானும் சேர்ந்து அழுவ தால் உன்னோட பிரச்னை தீர்ந்து விடுமா சொல்லு? கண்ணுல தண்ணி அதுவா வரலை என்றாலும், இந்த பாட்டிலில் இருக்கும் தண்ணியை விட்டாவது உடனே அழறேன். அதுனால யாருக்கும் என்ன பிரயோஜனம் சொல்லு பார்ப்போம்...'' என்று அதே பாணியை கை விடா மல், இப்போது மென்மையாக சொன்னான் அபிஷேக்.

''ப்ச்!'' என்ற ஒற்றை வார்த்தையுடன் அவளின் பிரதி பலிப்பு முடிந்து விட, அவனே தொடர்ந்தான். ''மனசுல இருக்கும் இந்த 'என்னால் முடியாது!', 'கஷ்டமா இருக்கு' 'சோகமா இருக்கு' என்ற நெகடிவ் எண்ணங்களை எல்லாம் முதலில் தூர தூக்கி போடு. அம்மாவும்

அப்பாவும் இப்ப வந்துடுவாங்க. முதலில் உங்க வீட்டுக்குப் போகலாம். ஒரு நல்ல குளியல் போடு. மனசு லேசாகும். அப்புறம் எல்லோரும் கிரிவலம் போகலாம். அப்ப பேசலாம்...''

''அது சரி, எங்க வீட்டை உங்க வீடு மாதிரி நினைச்சீங்களா? பாட்டிக்கு அப்படி எல்லாம் வெளி ஆட்களிடம்... அதுவும் இள வயது ஆண்களிடம் பேசினால் சுத்தமா பிடிக்காது...'' என்று அவசரமாக ஆட்சேபித்தவளின் குரலில் கண்ணீர் இல்லை. கவலையும் அவனின் உரிமையான பேச்சினால் குறைந்து இருந்தது.

''ஒகே, அப்ப நேரில் வேண்டாம், போனில் பேசு. யாருக்கும் சந்தேகம் வராது. உங்க அம்மாவைப் பற்றி உனக்கு என்ன விஷயம் தெரிய வந்தது என்று என்னிடம் சொல்லு. யார் மனசும் கஷ்டப்படாமல் என்ன செய்யலாம் என்று ரெண்டு பேரும் யோசித்து நல்ல முடிவு எடுக்கலாம். மேலே என்ன பண்ணலாம் என்று நான் சொல்றேன். எதுவா இருந்தாலும் சரி, உன் கண்ணில் தண்ணி வருவது இதுதான் கடைசி முறையா இருக்கணும். அது எனக்கு சுத்தமா பிடிக்கலை சொல்லிட்டேன்.''

''ம்ம்ம். உங்களுக்குப் பிடிக்கலையா? ஆனால் எனக்குப் பிடிச்சு இருக்கே...'' என்று சொல்லி விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் வாஸந்தி. அப்பா பாட்டி எல்லாம் என்ன சொல்வாங்க என்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல், எப்படி இப்படி வாயை விட்டாள்? அவன் மனதில் தேவை இல்லாமல் ஆசை வளர்க்கலாமா? என்று அவள் மனதிற்குள் குட்டிக் கொண்டாள்.



ஒரு கணம் விழித்தவன், அடுத்த வினாடி அர்த்தம் புரிந்து புன்னகைத்தான். ''பரவாயில்லையே, ரொம்ப சீக்கிரம் வார்த்தையாலும் உன் விருப்பத்தைச் சொல்லி விட்டாயே?'' என்று விழிகள் மலர உற்சாகமாகச் சொன்னான்.

''என் விருப்பமா? நீங்க என்ன சொல்றீங்க? போனில் பேசுற உங்க ஐடியா, எனக்குப் பிடிச்சு இருக்கு என்று சொன்னேன், நீங்க வேறே ஏதாவது நினைத்துக் கொண்டீர்களா?'' என்று உடனே தன் பாவனையைத் திருத்திக் கொண்டு, கேட்டாள் வாஸந்தி.

''இப்பதான் உன்னை மாதிரி ஒரிஜினலா பேசுற. போன வாக்கியம் அவசரப்பட்டு உன்னோட டுப் பேசிட்டாங்க. சரி பரவாயில்லை கிளம்பு அப்பா வந்துடுவாங்க'' என்று கை நீட்டினான்.

அவனின் கையை மறுத்து, தானே எழுந்தவள், காரில் இருந்த சுந்தரேசன் - கல்யாணி தம்பதியினரைப் பார்த்து சங்கடமாகப் புன்னகைத்தாள். கல்யாணி அம்மாவின் அருகில் ஏறி அமர்ந்தவள், வீடு இருக்கும் தெரு முனையில், காரை நிறுத்தச் சொல்லி, 'தப்பா நினைச்சுக்காதீங்க ஆன்ட்டி, பாட்டிக்குப் பிடிக்காது. நான் இங்கேயே இறங்கிக்கறேன். நீங்க ஒரு பத்து நிமிஷம் கழித்து வாங்க'' என்ற வேண்டுகோளுடன், இறங்கிக் கொண்டாள்.

''என்னடா இது! இந்தக் காலத்துல இப்படி ஒரு கட்டுப்பெட்டித் தனமா? நீ தனியா கூட அவளோட வரலையே? நாங்க ஒண்ணுக்கு ரெண்டு பேர் பெரியவங்க கூட இருக்கோம். இதை எப்படி தப்பா எடுத்துக்க முடியும்? யாருடா அவங்க பாட்டி? நல்லா நாலு கேள்வி

யாவது நறுக்குன்னு கேட்கணும்'' என்று மனசு ஆறாமல் பொருமினார் கல்யாணி.

''கல்யாணி, அந்த சின்ன பொண்ணுக்கு இருக்கும் அளவு பொறுமையும் முதிர்ச்சியும் உனக்கு இல்லையே? அவள் வருத்தமான சூழலில் கூட எவ்வளவு தெளிவா யோசிக்கிறா? நீங்க முக்கியமான வேலையா வாீங்க. வரும்போதே உங்களைப் பற்றிய நெகடிவ் அபிப்ராயம் வர வேண்டாம். பாட்டிக்கு உங்களைப் பிடிப்பது ரொம்ப முக்கியம் என்று சொல்லாமல் சொல்லிட்டுப் போறா. புரியுதா?'' என்று சிரித்தார் சுந்தரேசன்.

வாஸந்தியின் முன் யோசனை, அம்மாவின் கோபம், அப்பாவின் விளக்கம், எல்லாவற்றையுமே ரசித்த அபிஷேக், இருவரையும் பார்த்துப் பெருமிதமாகப் புன்னகைத்தான்.

வாஸந்தி அபிஷேக் சொன்ன மாதிரி, கோவிலுக்குப் போகும் முன்பு குளித்து விடுகிறேன் என்ற வார்த்தையுடன், சென்றுவிட பதினைந்து நிமிடம் கழித்து அந்த வீட்டுக்குள் சென்ற போது, சுந்தரேசனை, ஆவலாக விவேக்கும், அபிஷேக்கை விருப்பமாக தியாகராஜனும், மாதவி கல்யாணியையும் வரவேற்பதைப் பார்த்த பவானி அம்மாவிற்கு திருப்திதான்.

''நமஸ்காரம் பாட்டி, பிள்ளைகளை ஒழுங்கு முறையோடு வளர்க்க வேண்டும் என்பதில் நீங்க ரொம்ப கண்டிப்பா இருப்பீங்க என்று விவேக் உங்களைப் பற்றி நிறைய சொல்லி இருக்கான்...'' என்று பழக் கூடை ஒன்றை நீட்டி, ஒரு கையால் அவரின் பாதம் தொட்டு அபிஷேக் நெற்றியில் ஒற்றிக் கொள்ள, கல்யாணி, சுந்தரேசனை வியப்பாகத் திரும்பி பார்த்தார்.



''பசங்க எல்லாம் தெளிவா இருக்காங்க. நமக்குதான் இன்னும் நிறைய விஷயம் புரிபடலை'' என்று கல்யாணி முணுமுணுக்க சிரித்தார் சுந்தரேசன். அடுத்து அங்கே கழிந்த முக்கால் மணி நேரத்தில், அவர்களுக்கு காபியும் சிற்றுண்டியும் கொண்டு வந்து தந்த சில நிமிடங்கள் தவிர வாஸந்தி அவர்களின் கண்ணிலேயே படவில்லை.

'தனக்கு வாஸந்தியைப் பிடித்து இருக்கிறது என்ற விஷயத்தை எப்படிச் சொல்வது என்ற யோசனையில், அபிஷேக் தியாகராஜனிடமும், அத்தையைக் கண்டு பிடிப்பது தொடர்பாக, சுந்தரேசன் அங்கிளை எப்படிப் பயன்படுத்தலாம், என்ற யோசனையில் விவேக் அவருடனும், பவானி அம்மாவின் குணாதிசயங்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் கல்யாணியும், தனித் தனியே கண்ணாமூச்சி ஆடிக் கொண்டு இருக்க அந்த மாலைப் பொழுது முடிந்து முழு நிலவு வெளி வர பவானியையும், மாதவியையும் தவிர மற்றவர்கள் கிரிவலத்திற்குக் கிளம்பினார்கள்.

தியாகராஜனுடன் பேசியபடி, கிரிவலம் ஆரம்பித்த சில நிமிடங்களுக்குப் பிறகு, பிறர் கவனத்தை ஈர்க்காமல், வாஸந்தியை போனில் அழைத்து, ''அதெப்படி வஸு, வீட்டுல எங்க யாரையுமே தெரியாத மாதிரி ஒரு முக பாவனை? பிரமாதம் போ...'' என்று சிரித்தான் அபிஷேக்.

''ப்ச்! உங்களோட பேசினால் பாட்டியிடம் விளக்கம் சொல்லணும். தேவை இல்லாத பிரச்னை எதுக்கு? இருக்கும் பிரச்னை போதாதா? அதான்...'' என்று வருத்தமாகச் சொன்னாள்.

''ஓ.கே. இப்ப இருக்கும் பிரச்னையையே முதலில் பார்ப்போம். இன்று மதியம் உனக்கு உங்க அம்மா பற்றி என்ன தகவல் தெரிந்தது சொல்லு.''

''இத்தனை நாள் எங்க அம்மா என்னைப் பற்றிக் கவலைப் படாமல் விவரம் தெரியாத வயதில் விட்டுட்டுப் போய்ட்டாங்க என்று நினைத்தேன். ஆனால் அவங்க என்னைப் பற்றி, என் வளர்ச்சியைப் பற்றி, ஒரு நிமிசம் கூட மறக்கவே இல்லை. ஆண்டுக்கு இரண்டு தடவை, என்னை வந்து பார்த்து, எங்க மதர் மூலமா பரிசுகள் கொடுத்து என்னென்னவோ செய்ஞ்சு இருக்காங்க. அவங்களைப் போய் நான்...''

''மதர் இப்ப அங்கே இல்லையா? அவங்களிடம் அம்மா பற்றி விசாரிக்க வேண்டியது தானே?''

''ஸ்கூலில் எங்க அம்மாவோட தொடர்பு வச்சு இருந்த மதர் இப்ப உயிரோட இல்லை...'' என்றவளுக்கு கண்ணில் நீர் துளிர்த்தது.

''வஸு, ப்ளீஸ்! கடைசியா அவங்க இங்கே இருந்தாங்களா? எங்கே இறந்தாங்க என்ற தகவல் கிடைத்தால் அங்கே போய் பார்க்கலாமே?''

''கடைசியா அம்மா அவங்களைப் பார்த்து இருக்காங்க. பாண்டிச்சேரியில் மதர் இறந்தாங்க...''

''இதனை வச்சு சுலபமா கண்டு பிடிக்கலாமே? பின்னே ஏன் மூஞ்சியை இப்படி உம்முன்னு வச்சுக்கிட்டு இருக்க? நான் உங்க அம்மா பிறந்த ஊர் பற்றி மாமாவிடம் விசாரிக்கலாமா? அங்கே போகலாமா என்று எல்லாம் தீவிரமா யோசிச்சுட்டு இருக்கேன். இப்படி லட்டு மாதிரி விஷயத்தை வச்சுக்கிட்டு... உன்னை...'' என்று மிரட்ட, அவனின் உற்சாகத்திற்கான காரணம் அவளுக்குப் புரியவில்லை.

''பாண்டிச்சேரி என்ற ஒரு வார்த்தையை வச்சுக்கிட்டு எப்படிக் கண்டு பிடிப்பீங்க?''



''ஆண்கள் சிந்திப்பதற்கும் பெண்கள் சிந்திப்பதற்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கும் வஸு. அது தவிரவும், நீ இப்ப அப்செட்டா இருந்ததனால், இது உன் மனசில் படாமல் போய் இருக்கலாம். குறையா சொல்லவில்லை. நடப்பு உண்மையைச் சொல்கிறேன். அதோட, நீ எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்...'' என்று நிறுத்தினான்.

''உன்னை எனக்குப் பிடிக்கும்'' என்ற அவர்கள் இருவரின் வாழ்க்கை முழுவதையும் பாதிக்கக் கூடிய முக்கியமான விஷயத்தை அவன் சர்வ சாதாரணமாகச் சொன்னதைக் கேட்டு அவளுக்கு மூச்சடைத்தது. முடிவே பண்ணி விட்டானா? அவனுக்கு பதில் சொல்ல பொருத்தமான வார்த்தைகளை அவள் தேடிக் கொண்டு இருக்க, அவனே லேசாகச் சிரித்து விட்டு தொடர்ந்தான்.

''தப்பா எடுத்துக்க உனக்கு உலக அனுபவம் கம்மி. எங்க பாட்டியின் முந்தானையில் இருந்து இப்ப ரெண்டு மாசமா தானே வெளியே வந்து இருக்கிறாய். அதனால் தெரியவில்லை. பிறப்பு இறப்பு இப்ப கட்டாய பதிவு செய்யப்படுகிறது. பாண்டிச்சேரி சின்ன ஊர். அதில் அதிக பட்சம், பதினைந்து அல்லது இருபது மயானங்கள் இருக்கலாம். அதில் கிறிஸ்டியன்களுக்கு என்று இருக்கும் இடம் இன்னும் கம்மி. நாலைந்து இருக்கலாம். நீ போன ஸ்கூலில், அவங்க உத்தேசமா எப்போ இறந்தாங்க என்ற தேதி கிடைத்தால், அங்கே இருக்கும் பதிவேடுகளை பார்வையிட்டு, ஒரே நாளில், அவங்க முகவரியைக் கண்டு பிடித்து விடலாம்...''

''ஒரே நாளிலா? நிஜமாவா சொல்றீங்க?'' என்று நம்ப முடியாமல் கேட்டவளின் விழிகள் உற்சாகத்தில் விரிந்து பளபளத்தது.

''நான் ஏன் பொய் சொல்லணும் என்றுதான் கேட்கணும். ஆனால் இப்படி சாசர் மாதிரி விரியும் கண்களைப் பார்க்க பொய் சொன்னால் கூட தப்பில்லை...'' என்று சொன்னவனின் குரலில், அதுவரை இருந்த துப்பறியும் பாவனை மாறி, நெருக்கம் கூடி இருந்தது. பத்தடி தூரத்தில் நடந்தபடி வேறெங்கோ பார்த்தபடியே, அதுவரை போனில் பேசிக் கொண்டு வந்தவன், இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவளின் முகத்தில் பார்வையைப் பதித்து இருந்தான். நடையும் நின்று இருந்தது.

தன்னையும் அறியாமல் போனை நிறுத்தியவள், அவனை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அவன் அருகில் வந்து நின்றவளின் முகம் கேள்வியைத் தாங்கி இருந்தது. அந்தக் கேள்வியை சரியாகப் படித்து, ''உங்க அம்மாவே நேரடியா இறுதிச் சடங்கு செய்து இருந்தால் ஒரே நாள், இல்லை என்றாலும் யார் செய்தார்களோ, அவர்களிடம் உங்க அம்மாவைப் பற்றி விசாரித்து, கூட ஒரு நாள் ஆனாலும் கண்டு பிடித்து விடலாம்'' என்று அழுத்தமாய் சொன்னான் அபிஷேக்.

அவன் வலது கரத்தை எடுத்து, கண்களில் ஒற்றி, ''தேங்க்ஸ் அபி, எங்க அம்மாவைப் பார்க்கவே முடியாதோ என்று பயந்துட்டு இருந்தேன். நிச்சயம் பார்க்கலாம். அதுவும் இவ்வளவு சுலபமா என்று நம்பிக்கைக் கொடுத்த உங்களை என்னால் வாழ்க்கையில் மறக்கவே முடியாது...'' என்று உணர்வுப் பூர்வமாகச் சொன்னாள் வாஸந்தி.

''அப்ப இந்த விஷயம் சொல்லி இருக்கா விட்டால் மறந்து இருப்பாயா?'' என்று அவன் உடனே திரும்பிக் கேட்ட வினாடியில், விக்கித்து நின்ற அவளின் மௌனம், அவளின் உள் மனதை, அவளுக்கு மட்டும் இல்லாமல் அவனுக்கும் துல்லியமாக எடுத்துக் கட்டியது.



# 10



அம்மாவைக் கண்டு பிடிப்பது பற்றிய தகவல் சொல்லா விட்டால் என்னை மறந்து இருப்பாயா என்ற கேள்வியை அபிஷேக் கேட்ட வினாடியில் மறுப்பான எண்ணம் அவளின் மனதில் உடனே தோன்றியது. ஆனால் அதை வார்த்தைகளால் உடனடியாக வெளிப் படுத்தக் கூடாது என்ற எண்ணம் அதை விட வேகமாகத் தோன்ற, வாஸந்தியின் அமைதி தொடர்ந்தது.

அவனது கரத்தை முதலில் தானாகப் பற்றி இருந்தாலும், அவள் பற்றிய வினாடியே, தன்னுடைய கரங்களை அவன் எடுத்துக் கொண்டதால், விலக்க முயன்ற போதும் அவளால் முடியவில்லை.

''அபிஷேக், ப்ளீஸ், கையை விடுங்க. எல்லோரும் முன்னாடியே போய்ட்டாங்க. நாமும் போகலாம்...'' என்று பதட்டமாகச் சொன்னாள் வாஸந்தி.

''போகலாம்! போகலாம்! நான் உன்னை விரும்பும் விஷயத்தை உங்க அப்பாவிடம் எப்ப சொல்லலாம் என்று சாயங்காலத்தில் இருந்து யோசித்துக் கொண்டே இருக்கிறேன். இப்ப வீட்டுக்குப் போன உடனே எங்க அப்பாவை விட்டு அவரிடம் பேசச் சொல்லட்டுமா? சரி என்று சொல்லி விடு, உடனே போகலாம்...''

''விளையாடாதீங்க அபிஷேக். இது என்ன இப்படி ஒரே நாளில் முடிவு பண்ணக் கூடிய சாதாரணமான

விஷயமா? அப்படி அவசரப் பட முடியாது. முதலில் நான் எங்க அம்மாவைப் பார்க்கணும். அம்மா அப்பா விற்கு இடையே இருக்கும் மனக்கசப்பை நீக்கி, அவங் களைச் சேர்த்து வைக்கணும். அதுக்குப் பிறகு தான் என் வாழ்க்கையைப் பற்றி யோசிக்க முடியும்...''

''வஸு இன்னிக்கோ நாளைக்கோ கல்யாணம் பண் ணிக்கலாம் என்று சொல்லவில்லை. உங்க அம்மாவைக் கண்டு பிடித்து, பேசி, பிரச்னை முடிந்த பிறகு நாம் கல்யாணம் பண்ணிக்கலாம். முதலில் நம் கல்யாணத் தில், உன்னை தாரை வார்த்துக் கொடுக்க உங்க அம்மா அப்பாவோடு சேர்ந்து நிற்க வேண்டுமே? உன்னோட ஆசையில் தப்பே இல்லை...''

''அபிஷேக்! நான் என்ன சொல்றேன்? நீங்க என்ன சொல்லிக்கிட்டு இருக்கீங்க?''

''ரெண்டு பேரும் ஒரே விஷயத்தை தான் ரெண்டு பகுதியா பிரிச்சுப் பேசுறோம். நீ முதல் பாதியான உங்க அம்மா அப்பா சேர்வதைப் பற்றி யோசிக்கிறாய். நான் கொஞ்சம் அட்வான்ஸா, அதுக்குப் பிறகு நடக்க இருக்கும், நம் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கிறேன். அவ்வளவு தான். நம்ம கல்யாணத்திற்கு மண்டபம் கிடைக்க வேண் டாமா? பத்திரிகை அடிச்சுக் கொடுக்க வேண்டாமா? கல்யாண ஏற்பாடு எல்லாம் செய்ய வேண்டாமா? அதுக்கு முன்னாடி உன் சம்மதம் கிடைத்து விட்டால் தானே நல்லா இருக்கும்? எங்க அம்மா அப்பா நம்ம கல்யாண வேலை பார்ப்பாங்க. நாம், இந்த வேலை பார்ப்போம்...''

''உங்களை எல்லாம் திருத்தவே முடியாது. உலகமே தடம் புரண்டாலும், உங்களுக்கு உங்க காரியம் மட்டும் தான் முக்கியம். நீங்க இப்படியே பேசிட்டு இருங்க. நான்



போறேன்...'' என்று அவன் பிடியில் இருந்து கரத்தை விடுவித்துக் கொண்டு வேகமாக அவனைத் திரும்பியே பாராமல் சென்றாள் வாஸந்தி.

''பதில் சொல்லாமல் போறியே? எனக்கு என் காரியம் முக்கியம் என்றால் நீ மட்டும் என்ன? உன் வேலை முடிஞ்ச உடனே ஆளைக் கழற்றி விட்டுப் போகிறாய்?'' என்ற சீண்டலுக்குத் திரும்பி ஒரு முறைப்பைக் கொடுத்து விட்டே சென்றாலும், அதற்கும், 'ஹையோ பயமா இருக்கே...' என்று சொல்ல மறக்கவில்லை அபிஷேக்.

அவள் போகும் திசையை கண்கள் கனிய பார்த்தபடி மிக மிக மெதுவாக நடந்த அபிஷேக்கின் தோளில் ஒரு கரம் படிந்தது. திரும்பியவன் விவேக்கை கண்டு ஒரு வினாடி திகைத்தாலும், 'ஹேய், நீ என்ன முன்னாடி போன? இப்ப பின்னால் இருந்து வருகிறாய்? நீ என்ன கிரிவலம் மலை சுற்றுகிறாயா?'' என்று சமாளித்து கேட் டான்.

''அபிஷேக், பேச்சை மாத்தாதே! நீ கொஞ்சம் முன் னாடி சாந்தியிடம் சீரியஸாதான் பேசினாயா? இந்த விஷயம் உங்க அம்மா அப்பாவிற்குத் தெரியுமா...?'' என்று தீவிரமான குரலில் கேட்டான்.

''ஏண்டா இப்படிக் கேட்கிற? என்னைப் பார்த்தால், பொழுது போக்காக பல பெண்களிடம் பழகும் ஆள் மாதிரியா உனக்குத் தெரியுது? என்னை உனக்கு பத்து வருஷமா தெரியும்டா. டீன்ஏஜ்ல பண்ணாத தப்பையா இருபத்தி ஆறு வயசுக்கு மேலே பண்ணப் போறோம்?''

''எனக்கு உன்னைப் பற்றி தெரியும். நல்லவன்தான். ஆனால் சாந்தி ரொம்ப பாவம். உலகம் தெரியாத பொண்ணு. அவ வீட்டுல ஏகப்பட்ட பிரச்னை இருக்கு.

அதுக்குள்ளே வெளியே சொல்ல முடியாத பல ரகசியங்கள் புதைந்து இருக்கு. அது எல்லாம் உனக்கு சரி வருமா? உங்க அம்மா ஜாலியா இருந்தாலும், உங்க அப்பா கொஞ்சம் சம்பிரதாயங்கள் அதிகம் பார்ப்பவர். ஞாபகம் இருக்கா?'' என்று விவேக் இடையிட்டான்.

''விவேக்! அம்மா அப்பா ரெண்டு பேரும் சம்மதம் சொல்லியாச்சு. உங்க மாமாவிடம் பேசத்தான் வசுவிடம், சம்மதம் கேட்டேன். போதுமா? உனக்கு என் வார்த்தை மேலே நம்பிக்கை இல்லை என்றால், இப்பவே என்னோடு வா. எங்க அப்பாவிடம் நீயே கேளு...'' என்று அவன் கரத்தை பிடித்து இழுத்தபடி வேகமாக நடந்தான் அபிஷேக்.

''விடு அபிஷேக். உன் மேலே நம்பிக்கை இல்லாமல் இல்லை. சாந்தியின் வீட்டு குழப்பங்கள் தெரிய வந்தால் உங்க அப்பா என்ன சொல்வாங்களோ என்ற பயம் இன்னும் எனக்கு இருக்கு...'' என்று தயக்கமாக சொன்னான் விவேக்.

''என்னடா அவங்க அம்மாவும் அப்பாவும் ரொம்ப நாள் முன்னாடி பிரிஞ்சுட்டாங்க. அவ்வளவுதானே! நானும் வஸுவும் அவங்க இரண்டு பேரையும் சேர்த்து வச்சுட்டு தான் கல்யாணம் பண்ணிப்போம். போதுமா? அதுக்கு அப்புறம் எங்க அப்பா அதைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கு? அதை நான் பார்த்துக்கறேன். வஸு அம்மாவை நாளைக்கு நான் பார்க்கப் போறேன். போதுமா?'' என்று அழுத்தமான குரலில் சொன்ன அபிஷேக்கை வியப்பாகப் பார்த்தான் விவேக்.

''நீ அவங்க அம்மாவைப் பார்க்கப் போகிறாயா? அவங்க யாரு எங்கே இருக்காங்க என்று உனக்குத் தெரியுமா?''



''ம்ம், பேர் சுஜாதா, பதினெட்டு வருஷம் முன்னாடி வீட்டை விட்டு வெளியே போய் இருக்காங்க. இன்னமும், இந்த குடும்பத்தைக் கண்காணிச்சு, பொண்ணுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை புத்தகம் பரிசு கொடுக்கறாங்க. இப்ப புதுச்சேரியில் இருக்காங்க. போதுமா?''

''அபி! நான் என்னவோ நினைச்சுட்டேன் சாரிடா, நீ சீரியஸா தான் இருக்கிறாய் என்று புரியுது. ஆமா இவ்வளவு விஷயம் உனக்கு எப்படித் தெரியும்? எப்போ தெரியும்? எனக்கே பேர் தவிர மிச்ச விபரங்கள் தெரியாதே?''

''முதலில் உங்க மாமாவிடம் வாஸந்தியை நான் விரும்பும் விஷயம் சொல்லலாம். நைட் நாம் உட்கார்ந்து மிச்ச விபரம் எல்லாம் பேசலாம். அவருக்கு என்னை ஏற்றுக் கொள்வதில் ஏதாவது தயக்கம் இருந்தால், அதைப் போக்க நீ ஹெல்ப் பண்ணு. உங்க அத்தையை இங்கே கூட்டி வர மேட்டர் நான் பார்த்துக்கறேன். டீல் ஓகேயா?'' என்று கட்டை விரல் உயர்த்த, அவன் சிரித்தான்.

''எங்க மாமாக்கு தயக்கம் இருக்க வாய்ப்பு இல்லை. அவரே காதல் கல்யாணம் பண்ணி கொண்டவராச்சே? ஆனால் பிரச்னை எங்க பாட்டியிடம் இருந்து வர நிறைய வாய்ப்பு இருக்கு. அதை நான் பார்த்துக்கறேன். டீல் ஓகே...'' என்று அவன் கையில் அடித்து சிரித்தான் விவேக்.

கிரிவலம் வருவதற்கு ஆன நான்கு மணி நேரத்தில், முதல் அரை மணி நேரம் அபிஷேக்குடன் போனிலும், நேரிலும் பேசியதை தவிர வாஸந்தி, அவன் புறம் தப்பித் தவறிக்கூட திரும்பிப் பார்க்கவில்லை. முழு நேரமும், கல்யாணியின் அருகில் நடந்தபடி, 'நமசிவாயா' என்ற பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே வந்ததால், அவளிடம் ஓரிரு முறை பேச முயற்சி செய்த

அபிஷேக் அடுத்த சில நிமிடங்களிலேயே கை விட்டான். நினைத்த காரியம் நல்லபடியாக நிறைவேற இறைவன் அருளும் அவசியம் தானே? முயற்சியை நாம் செய்தால், வேண்டுதலை அவள் பார்த்துக் கொள்ளட்டும்.

* * *

அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கு, தியாகராஜன் ஜிம்மிற்குக் கிளம்பும் போதே 'நானும் வரேன் மாமா' என்று கிளம்பிய விவேக்கைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம்.

''என்னடா இது! ஆச்சரியமா இருக்கு? நைட் ரொம்ப நேரம் மொட்டை மாடியில் ரெண்டு பேரும் பேசிட்டு இருந்தீங்க போல. நீ இவ்வளவு சீக்கிரம் எழுந்து வந்துட்ட? உன் ப்ரெண்ட் எழுந்துக்கலையா?''

''நான் உங்களிடம், தனியாப் பேசணும். அவனை ஜிம்முக்கு ஏழு மணிக்கு மேலே வரச் சொல்லி இருக்கேன். நாம் முன்னால் போகலாம்'' என்று நடந்தான் விவேக்.

''என்னடா ஏதாவது காதல் கல்யாண விஷயமா?'' என்று கேலியாகக் கேட்டார் தியாகராஜன்.

''கரெக்ட் மாமா. சூப்பர் கெஸ் போங்க...'' என்று ஆர்வமாகச் சொன்னான்.

''பொண்ணு எந்த ஊரு? என்ன பண்றா? ரெண்டு பேருக்கும் பிடிச்சு இருக்கா? போட்டோ வச்சு இருக்கியா? உங்க அம்மா அப்பாவிடம் பேசணுமா?'' கேள்விகளை அடுக்கினார் தியாகராஜன்.

''பொண்ணு இதே ஊரு, என்னோட ஆபீஸ்ல தான் வேலை செய்றா. ரெண்டு பேருக்கும் ரொம்ப பிடிச்சு இருக்கு. போட்டோ எதுக்கு? பொண்ணு மாப்பிள்ளையை நேரே உங்களுக்குக் காண்பித்து விட்டால் போச்சு. பேச வேண்டியது அப்பா அம்மாவிடம் இல்லை. அவங்க பாட்டியிடம். எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லி விட்டேனா? ஏதாவது விட்டுப் போச்சா மாமா?'' என்று நிதானமாகக் கேட்டான் விவேக்.



''நீ சா..ந்..தி..யை..யா சொல்கிறாய்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டார் தியாகராஜன்.

''எதுக்கு மாமா இவ்வளவு ஷாக் ஆகறீங்க? உங்க பொண்ணு நல்லா இருக்கணும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், இதை விட நல்ல மாப்பிள்ளை நீங்களே தேடினாலும் கிடைக்காது மாமா...'' என்று நிதானமாகச் சொன்னான் விவேக்.

''நல்ல மாப்பிள்ளை எல்லாம் ஓகே. ஆனால் ஆனால்... அவளை அங்கே வேலைக்கு அனுப்ப பாட்டி பயந்ததே, இந்த மாதிரி ஏதாவது நடக்கக் கூடாது என்றுதானே? இப்ப அதே தப்பைச் செய்து விட்டு வந்து நின்றால், நான் எப்படி அம்மாவிடம் பேசுவது?'' என்று மலைத்தார்.

''பாட்டிக்கு எப்படி மாமா முன்பே அவள் அபிஷேக்கை லவ் பண்ணப் போறா என்று தெரியும்?''

''அ..பி..ஷே..க்..கா..? நான் உன்னை அல்லவா நினைத்தேன். என்னடா விளையாடறதுக்கு நேரம் காலம் இல்லையா?'' என்று அதட்டினார்.

''ச்சே ச்சே! என்ன மாமா இப்படி சொல்லிட்டீங்க? விளையாட்டு இல்லை மாமா. நான் சீரியஸா பேசிகிட்டு இருக்கிறேன். சாரி மாமா, சாந்தி வேலைக்காக சென்னைக்குக் கிளம்ப பாட்டியிடம் எவ்வளவு கஷ்டப்பட்

டேன் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறாள். அவள் ஏன் ஹாஸ்டலில் தங்கி இருக்கிறாள் என்பதும் எனக்குத் தெரியுமே! அப்படி இருக்க நான் எப்படி மாமா...? ஆனால், சாந்திக்கு நான் எப்படியோ, அதே மாதிரியே நீங்க அபிஷேக்கையும் நினைக்கலாம். அவனும் நல்லவன்தான் மாமா. அதை விட ரொம்ப முக்கியமான விஷயம் அவனை விடவும் அவங்க அம்மா ரொம்ப ரொம்ப நல்லவங்க. அவங்க சாந்தியை தங்கமா தாங்குவாங்க. அவளுக்கு எந்தப் பிரச்னையும் வராது. நீங்க அதை முதலில் பார்க்கணும்...''

''அதெல்லாம் சரிடா, ஆனால்... அம்மா...''

''முதலில் நீங்க சரி சொல்லுங்க. பாட்டியை எல்லோரும் சேர்ந்து ஒரு வழி பண்ணிடலாம்...''

''எனக்கு பிரச்னை இல்லைடா. ஆனால் அவங்க வீட்டில் ஒத்துக் கொள்வார்களா?'' என்று கேட்கும் போதே அவரின் குரல் உள்ளே போய் இருந்தது.

''அபிஷேக் ஒரே பையன். அவனோட விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்பாங்க. ஆனால் அத்தை பற்றிய பேச்சு வருமே மாமா? அதை எப்படிச் சமாளிப்பீங்க? என்ன சொல்லப் போறீங்க என்று சொன்னால், அதுக்குத் தகுந்த மாதிரி நானும்...'' என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றி பாதியிலேயே நிறுத்தினான் விவேக்.

''உண்மையை தான் சொல்லணும். அவங்க அதை காரணம் காட்டி, இவளைக் குறைவாகப் பேசக் கூடாதே என்ற கவலை அவள் படிப்பை முடிச்சதில் இருந்தே இருக்கு. எப்படி அவளுக்குக் கல்யாணத்தை முடிக்கப் போகிறோம் என்ற பயம் இருந்தது. ஆனால் ஆனால்



அ..வ..ளா..வ..து கடைசி வரைக்கும் சந்தோஷமான குடும்ப வாழ்க்கை வாழணும். அதை தவிர எனக்கு வேறென்ன வேண்டும் சொல்லு?''

''மாமா, நான் கேட்கிறேன் என்று தப்பா எடுத்துக் காதீங்க. அவங்க எங்கே இருக்காங்க என்ற தகவல் தெரிந்தால், அத்தையை நான் சமாதானப்படுத்தி இங்கே அழைத்து வந்தால் என்ன? நீங்க கூட போக வேண்டாம். நானும் சாந்தியும் போய் வருகிறோம்...'' என்று தயக்கத்தோடு ஆரம்பித்து அவசரமாக முடித்தான்.

''நீயும் சாந்தியும் போய் வருகிறேன் என்று சொன்னால், அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரியுமா? அவங்க ஊரில் அவள் இல்லை. எனக்குத் தெரியும்...'' என்று அவசரமாக இடையிட்டவரின் குரலில் அதிர்ச்சியும் ஆர்வமும் போட்டி போட்டது.

''என்ன மாமா இப்படிச் சொல்றீங்க? அவங்க ஊரில் இல்லை என்றால் என்ன? இப்ப எங்கே இருக்கிறாங்க என்ற இடும் தெரிஞ்சுடுச்சு என்று வச்சுக்கோங்க. உங்களுக்கு அவங்களை அழைத்து வரச் சம்மதமா?'' என்று விடாமல் மடக்கினான்.

''உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதில் எங்களுக்கு ரொம்ப சிரமம். அதனால் நான் இப்பயே கிளம்புறேன். நாங்க சந்தோஷமா இருக்கணும்'' என்ற அவளின் கடைசி வாக்கியம் நினைவு வந்தது.

''என் சம்மதம் இங்கே இரண்டாம் பட்சம் தான். அவளுக்கு இங்கே வர விருப்பம் இருக்கணும். அதை விட முக்கியம் அவள் வரும் நிலையில் இருக்கணுமே?'' என்று சொன்னவருக்கு, அவளுக்கென்று தனியாக ஒரு

வாழ்வு அமைந்து இருக்கும் பட்சத்தில் அதை விட்டு விட்டு எப்படி வருவாள் என்ற கவலை இருந்தது.

''அதைப் பற்றி நீங்க கவலைப்படாதீங்க. நாங்க பார்த்துக் கொள்கிறோம். இன்று காலை உணவிற்குப் பிறகு, பாட்டியிடம் கல்யாணப் பேச்சை அபிஷேக் அப்பா ஆரம்பிப்பார். நீங்களும் வந்துடுங்க. இன்னிக்கு எட்டு மணிக்கு மேலே ஜிம் லீவு விட்டுடுங்க. நான் போய் நீங்க வருவதற்குள் ஒரு குட்டித் தூக்கம் போட்டு விடுகிறேன். இந்தப் பேச்சுக்காக தான் அவசரமா என் தலையில் ஐஸ் தண்ணி ஊத்தி, நண்பன் என்று இருக்கும் விரோதி அஞ்சு மணிக்கே எழுப்பி விட்டான். வரட்டா... குட்நைட்...'' என்று கிளம்பினான் விவேக்.

''குட் நைட்டா? பொழுது விடிஞ்சுடுச்சுடா...''

''அது உங்களை மாதிரி தூக்கம் வராமல் சுத்திகிட்டு இருக்கும் வயசானவங்களுக்கு...''

''ஓஹோ! அப்ப உன் பிரெண்டுக்கும் வயசாயிடுச்சா?''

''நிச்சயமா அதுல என்ன சந்தேகம்? அவன் கால் சதம் போட்டுட்டான் மாமா. நான் இப்பதான் டீன் ஏஜை விட்டு வெளியே வந்து இருக்கேன்'' என்று சொல்லி விட்டு ஓடிப் போனான் விவேக்.

பவானி பாட்டியிடம் எப்படி திருமண விஷயத்தைப் பேச ஆரம்பிப்பது என்று சுந்தரேசன், கல்யாணி, விவேக் என்ற நால்வரும் அவரவர் மனதிற்குள் திட்டம் தயார் பண்ணிக் கொண்டு இருந்தனர்.

ஏற்கனவே விவேக் மூன்று நாட்களுக்கு முன்பே போனில் தயார் பண்ணி வைத்து இருந்ததால், காலை உணவின் போது, பவானி அம்மாவே, ''நீங்க பெரிய



ஜோசியர் என்று என் பேரன் சொன்னான். நல்ல பொருத்தம் பார்ப்பீங்களாம். உங்களிடம் மாப்பிள்ளை பொண்ணு, ஜாதகமும் இருக்கும் என்று சொன்னான். இன்று நீங்க சாவகாசமா இருந்தால் என் பேத்திக்கு ஒரு கல்யாண தசை வந்துடுச்சா என்று பார்த்துச் சொல்லணும். அப்படியே உங்க கைவசம் நல்ல ஒழுக்கமான பையனா இருந்தால் சொல்லுங்க...'' என்று பேச்சை ஆரம்பிக்க, அங்கே உணவு பரிமாறிக் கொண்டு இருந்த வாஸந்தியை தவிர மற்ற ஐந்து பேரின் முகத்திலும், ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரிந்தது.

# 11



பேத்திக்குக் கல்யாண யோகம் வந்து விட்டதா என்று சுந்தரேசனிடம் கோரிக்கை வைத்த பவானியின் வார்த்தைகள் வாஸந்தியின் மனதில் கலவரத்தை ஏற்படுத்தியது. அவர் தன் மேல் வைத்த அக்கறையினால் தான் சொல்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் இப்படி இவரே எடுத்துக் கொடுத்து விட்டால், அபிஷேக்கும், அவனின் பெற்றோர்களும் விடுவார்களா?

அவர்கள் திருமணப் பேச்சை எடுத்து பாட்டி ஒத்துக் கொண்டாலும் கஷ்டம். அம்மாவைத் தேடுவது தொடர்பான பேச்சு நின்று விடலாம். திருமணப் பேச்சை ஒத்துக் கொள்ளாமல், பெரியவர்களுக்கு இடையே வார்த்தைகள்

தடித்து விட்டாலும் தனக்கு சங்கடம். தனக்கும் பிடித்து இருக்கு என்று அவர்கள் பேச்சு வாக்கில் சொல்லி விட்டால், தான் இந்த வீட்டில் இருக்கும் காலம் முழுவதும் பாட்டியின் அர்ச்சனை தொடருமே?

இது எல்லாவற்றிற்கும் மேலாக, தான் திருமணம் ஆகிப் போன பிறகு தந்தையின் நிலை என்ன? பாட்டிக்கு எழுபத்தி ஐந்து வயசாகி விட்டது. தன்னுடன் வைத்துக் கொள்ள அவர்கள் சம்மதிப்பார்களா? அவர்கள் சம்மதித்தாலும் அப்பாவிற்கு அது சங்கடமாக இருக்காதா?

தான் இந்த வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பாகவே அப்பாவிற்கு அம்மாவைத் திருப்பிக் கொடுத்து விட்டால் நன்றாக இருக்குமே என்று பலவிதமான எண்ணங்களில் சிக்கித் தவித்தாள் வாஸந்தி. ஆனால் எத்தனையோ எண்ணங்கள் அலை மோதிய போதிலும், அதில் திருமணம் வேண்டாம் என்பதோ, அபிஷேக் வேண்டாம் என்ற எண்ணமோ எட்டிப் பார்க்கவில்லை.

''அதுக்கென்னம்மா? பார்த்து விட்டால் போச்சு. முதலில் நல்ல நேரம் வந்தால் தான் இந்த மாதிரி வாய்ப்பே வீடு தேடி வரும். பார்த்து விடலாம். கை வசம் சில ஜாதகங்களும் இருக்கு. பொண்ணு ஜாதகம் கொடுங்க. பார்த்துடலாம்'' என்று சந்தோஷமாகச் சொன்னார் சுந்தரேசன்.

''நல்ல வார்த்தை சொன்னீங்க. இவளுக்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் ஆகணும் என்ற கவலைதான் மனசை அரிச்சுக்கிட்டு இருக்கு. நேற்று உங்களைப் பார்த்த உடனே சந்தோஷமா இருந்தது. ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லுங்க'' என்று மரியாதையாக சொன்னார் பவானி.



''என் பையனுக்குக் கூட வரன் பார்த்துட்டு இருக்கோம். அவன் தான் இப்ப வேண்டாம் என்று தள்ளிப் போட்டுகிட்டே இருக்கான்'' என்று சந்தடி சாக்கில் சொன்னார் கல்யாணி.

''நான் எப்ப தள்ளி போட்டேன்? அதை இப்ப எதுக்கு இங்கே சொல்றாங்க?'' என்ற பாவனையுடன் அம்மாவைத் திரும்பி முறைத்தான் அபிஷேக்.

''டேய் ரொம்ப அலையாதே. பாட்டி நல்ல மூடில் இருக்காங்க. நாங்களே சமாளிச்சுக்குறோம். அளவா பேசு. வேலை ஆகிடும்'' என்று தாழ்ந்த குரலில் சொன்னார் கல்யாணி.

கல்யாணி கொடுத்த குறிப்பை உடனே பிடித்தவன், ''அம்மா, ப்ளீஸ், எதுக்கு இப்ப தேவை இல்லாமல் என் கல்யாண விஷயம் பேசுறீங்க? பாட்டி கேட்ட விஷயம் மட்டும் பேசுங்க. அப்பாவை ஏதாவது பேசிக் குழப்பாமல் இருங்க'' என்று முணுமுணுப்பாக ஆனால் பாட்டியின் காதில் விழக் கூடிய அளவில் சொன்னான் அபிஷேக்.

''நீங்களே சொல்லுங்கம்மா, இருபத்தி ஆறு வயசு ஒரு பையனுக்குக் கல்யாணம் பண்ணும் வயசில்லையா? இப்ப வேண்டாம் என்றால் என்ன அர்த்தம்? எங்களுக்கு என்ன நாலஞ்சு பிள்ளைகளா இருக்கு. இவன் இல்லாவிட்டால் இன்னொருத்தனுக்கு பண்ணி பார்க்கலாம் என்று இவனை இவன் இஷ்டத்திற்கு விட்டு விட...'' என்று புலம்பும் சாக்கில், அபிஷேக் தங்களின் ஒரே வாரிசு, என்ற விஷயத்தைச் சொன்னார் கல்யாணி.

''தம்பி மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இருக்கோ? இங்கே எங்க வீட்டிலும் ஒண்ணு இதே பாட்டை பாடிக்கிட்டு இருக்கே? கல்யாணம் என்றால் ஏன் இந்த பயம்

பயப்படுறாங்க என்று தெரியலை'' என்று உண்மையான விஷயம் புரியாமலேயே விவேக்கை சுட்டிக் காட்டி கல்யாணியின் வாதத்திற்கு ஒத்து ஊதினார் பவானி.

''பாட்டி நான் ஒண்ணும் கல்யாணத்திற்கு பயப்பட வில்லை. நான் சிஏ முடிச்ச உடனே கல்யாணம் பண்ணிக்கறேன் என்று சொல்லி இருக்கேன். அம்மா அப்பா விடம் பேசியாச்சு. அவன் அந்த மாதிரி ஏதாவது காரணம் வச்சு இருக்கானா என்று கேளுங்க. அப்ப ஓகே. இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேனே, உங்களுக்கு ரொம்ப நாளா ஒத்தை தலை வலி சொல்லிட்டு இருந்தீங்களே, அதுக்கு மருந்து தந்தது அபிஷேக் தான். அடுத்தவங்களுக்கு ஒரு தேவை என்றால் நல்லா உதவி செய்வான். எங்க ஆபீஸ்ல, என்னை விட இவனுக்கு தான் விசிறிகள் ஜாஸ்தி'' என்று அவன் கல்யாணத்திற்கு தயார் என்பதையும், அடுத்தவருக்கு உதவுபவன் என்பதையும் தன் பங்கிற்கு நிலை நாட்டினான் விவேக்.

''ஆமா! நீ ஆபீஸ்ல ஒரே கெடுபிடியா இருந்தால்...'' என்று மாதவி இடையிட்டார்.

''வேலை நடக்குற இடத்துல கெடுபிடியா இல்லாமல் வேற எப்படி இருப்பாங்களாம்?'' என்று மகளை தட்டிக் கேட்டார் பவானி.

மகனின் திருமணப் பேச்சை விட்டு உரையாடல் விலகுவதை விரும்பாத கல்யாணி உடனே ''அதில்லைம்மா, விவேக் சொன்ன மாதிரி இவன் படிச்சுட்டு இருக்கான். தொழில் ஆரம்பிக்கணும். கொஞ்சம் பெரிசா வளரட்டும் என்று காத்திருக்கவும் ஒரு காரணமும் இல்லை. டிகிரி முடிச்சான். கையோட ஒரு செல் போன் கடை வச்சுக் கொடுத்தாச்சு. மைலாப்பூரில் மெயின் ஏரியால சொந்த



இடத்துல கடை. மாசம் முப்பதாயிரம் வருது. அது போக சொந்த வீடு. பைக் இருக்கு. வசதிக்குக் குறைச்சல் இல்லை இவன் எதுக்குக் கல்யாணத்தைத் தள்ளிப் போடணும் சொல்லுங்க'' என்று இடையிட்டார்.

''இந்தக் காலத்துல பிள்ளைங்களை ஒண்ணும் சொல்ல முடியலை. தம்பி மனசுல யாராவது இருக்காங்களோ என்னவோ...'' என்று பவானிம்மா ஆரம்பிக்கும் போதே, ''பாட்டி கொஞ்சம் உள்ளே வாங்க...'' என்று வாஸந்தியின் குரல் அடுக்களையில் இருந்து கேட்டது.

''பாட்டி நேத்து பார்த்தவங்க வீட்டு சொந்த விஷயத்தை ஏன் இப்படித் தோண்டி துருவிட்டு இருக்கீங்க. இது உங்க பழக்கம் இல்லையே? நம்ம வீட்டுப் பிரச்னையே தலைக்கு மேலே கிடக்கு. அதை மட்டும் பேசுங்க'' என்று எரிச்சலை மறைத்த குரலில் முனகினாள் வாஸந்தி.

''அது சரி, இதுக்கா என்னமோ தலை போற அவசரமா கூப்பிட்டா? நான் என்னவோ ஏதோன்னு நினைச்சு பயந்துட்டேன்'' என்று மீண்டும் வெளியே வந்த பவானிக்கு வாஸந்தியின் கவலை பிடிபடவில்லை. வலியப் போய் அபிஷேக்கின் வாயை கிண்டுறாங்களே? தன்னிடம் என்ன போடு போட்டான்? அதில் பாதியை பாட்டியிடம் சொன்னால் கூட தான் தொலைந்தோம்! சிவ சிவா... காப்பாற்று'' என்று அண்ணாமலையானை சரணடைந்தாள்.

''உமது பக்தியை யாம் மெச்சினோம்! உனது வேண்டுதல் உடனே நிறைவேற்றப்படுகிறது'' என்று அண்ணாமலையானே நேரில் வந்து சொன்ன மாதிரி சுந்தரேசனின் குரல் கேட்டது.

''அதென்ன அப்படிச் சொல்லிட்டீங்க? அபிஷேக் வீட்டுக்கு அடங்கின பிள்ளை. நாங்க சொல்ற பேச்சைத் தட்ட மாட்டான். அப்படி யாராவது மனசுல இருந்தால் சொல்லுடா என்றும் கேட்டாச்சு. வாயைத் திறந்தால் தானே?'' என்று சொன்ன சுந்தரேசனை, கல்யாணி, விவேக், அபிஷேக் மூவருமே வியப்பாகப் பார்த்தனர்.

விவேக் அபிஷேக்கின் காலை சுரண்டி, ''டேய் உங்க அப்பா உனக்கு இவ்வளவு சப்போர்ட் என்று இன்னிக்குத் தாண்டா தெரிஞ்சது. என்னமா ரீல் விடறார் பாரேன்...'' என்று முனகினான்.

''ம்கூம், நீ வேற. எனக்கே இன்னிக்கு தான் தெரிஞ்சுது. ஆனால் அவர் ரீல் விடலைடா...''

''என்னடா சொல்ற?''

''நான் வஸு பற்றி அவரிடம் எதுவும் சொல்லலை. அவரா தான் கண்டு பிடிச்சார்.''

''என்னப்பா ரெண்டு பேரும் உங்களுக்குள்ளே பேசிக்கறீங்க? இவங்களுக்கு வேற வேலையே இல்லை என்றுதானே? வயசு பசங்க வீட்டுல இருந்தால் அப் படித்தான். அதுவும் பொண்ணா இருந்துட்டா, வேற கவலையே இருக்காது. சரி நாங்க கல்யாணம் பத்தி பேசலை. நீங்க நல்லா சாப்பிடுங்க. சாப்பாடு உங்க பக் குவம் மாதிரி இருக்கா?'' என்று விசாரித்தார் பவானி.

''எங்க கல்யாணம் பற்றி மட்டும்தான் நீங்க பேசணும்'' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, ''எங்க வீட்டுல சாப்பிடற மாதிரியே இருக்கு பாட்டி. கொஞ்சம் கூட வித்தி யாசமே இல்லை. எங்க அம்மாக்கு நீங்கதான் சமையல் கற்றுக் கொடுத்தீங்களா?'' என்று கேட்டான் அபிஷேக்.



''ஆமாம்மா, அதுலயும் இந்தக் குழி பணியாரம் அவன் ரொம்ப பிடிச்சுச் சாப்பிடுவான். இந்த வெங்காய கார சட்னி அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். அவங்க அப்பா காரம் சாப்பிட மாட்டார். அதனால் நான் தேங்காய் சட்னி அரைப்பேன். அவனுக்கு எரிச்சலா இருக்கும். ஒண்ணும் சொல்ல முடியாமல் பல்லைக் கடிச்சுக்கிட்டு சாப்பிடு வான். இங்கே ரெண்டும் இருக்கா? அதான் குஷி. சாப் பாடு உண்மையிலேயே ரொம்ப நல்லா இருக்கும்மா. எப்படி இவ்வளவு சீக்கிரம் எட்டு மணிக்குள்ளே, இப்படி ரெண்டு டிபன் செஞ்சீங்க? மின்னல் வேகம் தான்'' என்று தன் பங்குக்கு புகழ் மாலை சூட்டினார் கல்யாணி. அவர் சொன்னதும் உண்மையே.

அவங்க வீடு சாப்பாடு மாதிரியே இருக்கு என்று சொன்னதில், அவருக்கு பெரிய மன திருப்தியும் சந் தோஷமும் வந்தது. இந்த வீட்டுக்கு வந்த மருமகள் மாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் வேறுபாடு இல்லா மல் இருந்ததே?

தனக்கு தண்ணீர் கலக்காத பாலில் போட்ட ஸ்ட் ராங்கான பில்டர் காபி பிடிக்கும் என்றால், அவளுக்கு அதிகம் தண்ணீர் கலந்த பாலில் போட்ட ஏலக்காய் மணக்கும் சூடான டீ பிடிக்கும். அவரைப் பொறுத்த வரையில் டீ ஒரு மருந்து மாதிரி, கனமாகச் சாப்பிடும் விருந்து நாட்களில், மாலையில் இஞ்சி, ஏலக்காய் தட்டி போட்ட டீ அருந்துவதுதான் அவருக்குப் பழக்கம்.

ஆனால் காலையில் எழுந்த உடனே வெறும் வயிற்றில் எப்படி டீ குடிக்க முடியும்? என்பதில் ஆரம்பித்து, தனக் குப் பிடித்த காரம் அவளுக்கு சுத்தமாக ஒத்துக்கொள் ளாது. எல்லா வகை சமையலிலும், அவள் போட்ட

வாசனைப் பொருட்கள், அள்ளித் தெளித்த நெய், எல்லா உணவுகளிலும் சேர்த்த துளி சர்க்கரை...

இத்தனை நாட்களில் இல்லாமல் எதற்கு இப்போ அவளைப் பற்றிய சிந்தனை வந்தது? பேத்தி மணமாகிப் போகும் இடத்தில மாமியாருக்கும் இவளுக்கும் ஒத்துப் போக வேண்டுமே என்ற கவலை அது என்பது புரிந்தது. ஆனால் இந்த வீட்டில் அவள் பொருந்துவாளா என்ற சிந்தனை ஏன் வந்தது?

விவேக் தன் ப்ரெண்ட் வீட்டில் இருந்து வருகிறார்கள் என்றதுமே அவனிடம் 'அவங்க நம்ம ஆளுங்களா?' என்று தான் கேட்ட கேள்வி ஞாபகம் வந்தது. ''பாட்டி! இந்த காலத்துல போய் ஏன் இப்படி எல்லாம் இருக்கீங்க? நம்ம ஆளுங்க இல்லை. ஆனால் சைவம். போதுமா?'' என்று பல்லைக் கடித்தான்.

அதுவும் நல்லதுதான். சாந்திக்கு இது வரை ப்ரோக்கரிடம் சொல்லி வைத்து, வந்த நாலைந்து வரன்கள் அவளின் அம்மா பற்றிய ஆராய்ச்சியை முதலில் வைத்தார்கள். காதல் கல்யாணமா? வடநாட்டுக்காரியா? அதுலயும் வீட்டை விட்டு ஓடப் போன அம்மாவா? பொண்ணும் அம்மா மாதிரி இருந்தால் என்ன செய்வது? என்ற கேள்விகள்.

அந்த ஒவ்வொரு கேள்விக்கும் வந்த பதிலின் குறையை ஈடுகட்ட, கூடின சீர் வரிசைகள், எல்லாமே அவரை கவலைப் படுத்தியது. அதனாலேயே விவேக்கின் வார்த்தைகள் அவருக்கு ஆறுதல் தந்தது. அதிலும் தான் சொல்வது சரி என்று அவன் அழுத்தாதது பிடித்து இருந்தது.



சட்டென்று அபிஷேக்கைத் திரும்பிப் பார்த்தார். உணவில் கவனமாக இருந்தான். அவன் சாப்பிடும் தட்டைப் பார்த்தார். மூன்று விதமான சிற்றுண்டி வகைகள் இருந்தாலும், ஒரு நேரத்தில் ஒரு உணவு மட்டும் என்ற அந்த ஒழுங்கு கண்களைக் கவர்ந்தது. அதிலும் சுத்தமாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். வேண்டாத கழிவுகள் என்று அதிகம் இல்லை. உணவை வீணடிக்காத பழக்கம் மனதை நிறைத்தது.

இவனை சாந்திக்குப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் தோன்ற, ''அந்தக் குழி பணியாரமும், வெங்காய கார சட்னி செய்ய சொன்னது சாந்திதான்...'' என்று பவானிம்மா பேச ஆரம்பித்த வினாடியில் அபிஷேக்கின் விழிகள் வாஸந்தியை தேடிக் கண்டு பிடித்தது. தவறு செய்து மாட்டிக் கொண்ட சின்னக் குழந்தை மாதிரியான பாவனை அவள் முகத்தில் இருந்தது. அதை பார்த்த அபிஷேக்கிற்கு சிரிப்பு வந்தது.

'என்னைப் பிடிக்காத மாதிரி என்ன ஒரு பாவனை? ஆனால் இரண்டு வாரத்திற்கு முன்னால் மதிய உணவு வேளையில் பேச்சு வாக்கில் தனக்குப் பிடிக்கும் என்று சொன்னதை நினைவு வைத்து இன்று காலை உணவுக்கு செய்தது மட்டுமில்லாமல், ஒண்ணுமே தெரியாத மாதிரி நிற்பதை பாரேன்! ஹேய்! லூசு! உனக்கு நான் ஸ்பெஷல். என்னை உனக்கு ரொம்பப் பிடிக்கும் என்ற உண்மையை நேரில் என்னிடம் ஒத்துக் கொள்ள மறுக்கிறாய்?

ஆனால் உன் ஒவ்வொரு செய்கையும் அதை ஊர் கூட்டி மைக் போட்டு சொல்லாத குறையாக அறிவித்துக் கொண்டு இருக்கிறது தெரியுமா?'' என்று

மனதிற்குள் அவளைச் சீண்டிச் செல்லமாய் சண்டை போட்டு கொஞ்சிக் கொண்டு இருந்த அபிஷேக்கின் வாய் சாப்பிடும் வேலையை நிறுத்தி விட்டதால், அவனின் விழிகள் இரட்டிப்பு வேகத்தில் வேலை செய்து, அவளை விழுங்கிக் கொண்டு இருக்க அவனை நேராகப் பார்க்க முடியாமல், அந்த இடத்தை விட்டு வேகமாக விலகி, உள்ளே சென்று விட்டாள்.

உள்ளே சென்று விட்டாலும், கண்கள் ஜன்னல் வழியே சாப்பாட்டு மேஜையைப் பார்க்க முடியாமல் தவித்தது. காதுகளில் பாட்டியின் பாராட்டு மழை தொடர்ந்து விழுந்தது.

''அடுப்பு வேலை மட்டும் தான் நான் செய்தேன். சுத்து வேலை செய்தது சாந்திதான். அவளுக்கு சமைக்கத் தெரியும். எல்லாம் சொல்லிக் கொடுத்து இருக்கேன். போற இடத்துல தாய் இல்லாத பொண்ணுக்கு ஒண்ணும் தெரியலை என்று ஒருத்தர் ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாது என்று கண்டிப்பாவே வளர்த்து வச்சு இருக்கேன். என் பேத்தியும் வீட்டுக்கு அடங்கின பொண்ணுதான். நாங்க சொன்ன பேச்சை மீற மாட்டாள்...'' என்று பவானி பேச, வாஸந்திக்கு மட்டும் இல்லாமல் தியாகராஜனுக்குமே, அவரின் பேச்சு ஆச்சரியமாக இருந்தது.

''அம்மா, நீங்களும் சாப்பிட்டுவிட்டு, வாஸந்தி ஜாதகத்தை எடுத்துட்டு வாங்க பார்த்துடலாம்'' என்று உணவை முடித்து விட்டு எழுந்த சுந்தரேசன் சொல்ல, அடுத்து வந்த பதினைந்து நிமிடம் மனசுக்குள் தீவிரமாக யோசித்த பவானிம்மா, அவசரமாக மகனை அழைத்தார்.

''நீ இந்த பையன் அபிஷேக் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று அவர் ரகசியமாகக் கேட்ட அந்த



ஒற்றைக் கேள்வியை ஒட்டுக் கேட்ட, அந்த பேச்சில் சம்பந்தப்பட்ட இருவருமே ஹுர்ரே! என்று உற்சாகத்தில் துள்ளிக் குதிக்காத குறைதான்!

# 12



உணவு வேளைக்குப் பிறகு, பவானி அம்மாவின் ஒவ்வொரு அசைவையும் பாராமல் பார்த்தபடி கவனித்துக் கொண்டு இருந்த அபிஷேக்கிற்கு, அவர் ஜாடையில் அழைத்து தியாகராஜன் அங்கிள் எழுந்து சென்றதுமே புலன்கள் கூர்மை பெற்றது. பின்னால் சென்றவன், உணவு மேஜையில் இருந்த ஜக்கில் இருந்து நீரை ஊற்றுவது போல அவர்களின் பேச்சை கவனித்தான்.

அடுக்களையை ஒட்டி இருந்த சாமான்கள் அறையில் நின்றபடி தியாகராஜனிடம் அவர் கேட்ட அந்த கேள்வி, அவனுக்குள் பூமழை பொழிந்தது என்றால், அதற்கு தியாகராஜன் சொன்ன பதில் சர்க்கரை பந்தலில் தேன் மாரிப் பொழிந்தது.

''நானே உங்களிடம் பேசணும் என்று நினைத்தேன் அம்மா. இவங்க கிளம்பட்டும் என்று தான் காத்திருந்தேன். நீங்களே சொல்லிட்டீங்க. அப்புறம் என்ன? இப்ப ஜாதகம் பார்ப்பது கூட அவசியம் இல்லை. மனசுப் பொருத்தம் இருக்கா என்று பார்த்துப் பேசி முடிச்சுட

லாம். வாங்க'' என்று சந்தோஷமாக அழைத்தார் தியாக ராஜன்.

அவர்கள் அறைக்குள் இருந்து வெளிவரும் முன்பே, தண்ணீர் ஜக்குடன் ஹாலுக்கு நகர்ந்த் அபிஷேக், அங்கே இருந்தவர்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்து கொண்டு இருக்க, அதைப் பார்த்த பவானி அம்மாவின் மனம் மேலும் அவன் புறம் சாய்ந்தது.

கல்யாணியின் பக்கத்தில் வந்து அமர்ந்தவர், ''எனக்கு உங்க குடும்பத்தையும், உங்க பையனையும் பிடிச்சு இருக்கு. உங்களுக்கு சாந்தியைப் பிடித்து இருந்ததால், நாம் மேற்கொண்டு பேசலாம்'' என்று நேரடியாக விஷயத்தைச் சொல்லி விட்டார் பவானி.

''ஹய்யோ! ரொம்ப சந்தோஷம்மா, இப்பதான் நானும் சாந்தியைப் பார்க்கவும், அவளோடு பழகவும் ரொம்ப பிடிச்சு இருக்கு என்று இவரிடம் சொல்லிட்டு இருந்தேன். எப்படி உங்களிடம் பேச்சை ஆரம்பிக்கணும் என்று நான் இருக்க, நீங்க ஆரம்பிச்சுட்டீங்க. என்ன இருந்தாலும் பெரியவங்க பெரியவங்கதான். அபி... நீ என்னப்பா சொல்ற?''

''நான் சொல்ல என்னம்மா இருக்கு? நீங்க பெரிய வங்க பார்த்து என்ன முடிவு பண்ணினாலும் எனக்கு சம்மதம்தான்'' என்று சொல்லி விட்டு அம்மாவிடம் கண் சிமிட்டினான் அபிஷேக்.

''பாட்டி இந்தக் கல்யாணத்துக்கு சாந்திக்கு நீங்க என்ன செலவு செய்யப் போறீங்களோ, அதுல பாதி நீங்க எனக்குதான் செய்யணும். இப்பவே சொல்லிட்டேன். என்னால தானே உங்க பேத்திக்கு ஒரு சூப்பர் மாப்



பிள்ளை கிடைத்தது...'' என்று விவேக் சந்துல சிந்து பாடினான்.

''எங்க மருமகளுக்கு, கட்டிக் கொள்ள புடவை வாங்கிக் கொடுத்து, அவள் போட்டுட்டு வர தேவையான நகைகளும் போட்டு நாங்க அழைச்சுட்டுப் போவோம். பாட்டி செலவு பண்ணத் தேவையே இல்லையே? அப்புறம் இல்ல, அதுல பாதி உனக்குச் செய்ய?'' என்று கல்யாணி இடையிட்டார்.

திருமணப் பேச்சுக்கள் கேலியும் கிண்டலுமாகச் சிரிப் புடன் மும்முரமாக ஹாலில் நடந்து கொண்டு இருக்க, ஸ்டோர் ரூமில் இருந்து வெளியேறிய வாஸந்தி பின் புறம் போவதை கவனித்த அபிஷேக், முன் வாசல் வழி யாக பிறரின் கவனத்தை ஈர்க்காமல் வெளியேறினான்.

இவ்வளவு நேரம் அவள் உள்ளே இருந்தாளா? இதை கவனிக்கவில்லையே? தான் ஹாலில் இருந்து அவர் களின் பேச்சைக் கேட்ட மாதிரி, அவள் உள்ளே இருந்த படி, அவளின் அப்பாவும் பாட்டியும் பேசியதையும் அவள் தன்னைப் போலவே கேட்டு இருப்பாள். எல்லோரும் ஹாலில் இருக்க, அவள் தோட்டத்தில் தனியாக அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை அறியும் ஆவலுடன் நுனிக்காலில் நடந்து பின்புறம் வந்தான் அபிஷேக்.

* * *

பாட்டியாக அப்பாவை அழைத்து, 'அபிஷேக் பற்றி என்ன நினைக்கிறாய்?' என்பதை இன்றே கேட்கக் கூடும் என்பதை கனவிலும் எதிர்பார்த்து இராத வாஸந்திக்கு பேச்சென்ன, மூச்சே வரவில்லை. அளவில்லாத சந் தோஷத்தில், கால்கள் மடிய அங்கேயே சரிந்து அந்த சின்ன ஸ்டோர் ரூமில் அமர்ந்தாள்.

தொடர்ந்த அப்பாவின் பதில் அவளின் மனதை நிறைத்தது. இவ்வளவு எளிதாக எல்லாமே நடந்து விடுமா? நேற்று மாலை அம்மாவை பற்றிய உண்மை தெரிந்து மனம் தாளாமல் விம்மி அழுததென்ன? அடுத்த சில நிமிடங்களில் அபிஷேக்கை கண்ணில் காட்டி, தான் கொஞ்சமும் எதிர்பாராமல், அவனுடைய பெற்றோர்களே அந்தத் துயரத்தைத் துடைத்து, தன்னை தேற்றியது மட்டும் அல்லாமல், அடுத்த நாளே திருமணப் பேச்சு வார்த்தை வரை கொண்டு வந்து சேர்த்த இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் போல ஒரு உணர்வு அவளை உந்தித் தள்ளியது.

வீட்டின் பின்னால் இருக்கும் கிணற்றில் கோவிலின் கோபுரம் தெரியும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று எண்ணியவள் அவசரமாகப் பின்னால் சென்றாள். கிணற்றின் கைப்பிடிச் சுவரில் குனிந்து பார்த்தவளுக்கு முதலில் பொன் வண்ணத்தில் மின்னிய கோபுர கலசம் தெரிந்தது. கூர்ந்து பார்க்க, அலையலையாக நெளிந்த தண்ணீரில் கோபுரத்தில் செதுக்கப்பட்டு இருக்கும் வண்ண வண்ணச் சிலைகள் தெரிந்தது.

கண்களை மூடி மானசீகமாய் முதல் நாள் இரவில் பார்த்த மூலவரான அண்ணாமலையானுக்கு நன்றி கூறி கன்னத்தில் நுனி கையால் ஒற்றியபடி, கண்ணைத் திறந்த போது கிணற்று நீரில் அபிஷேக்கின் முகம் ஆடியது. அவசரமாகத் திரும்பியவள் நேரிலும் அவன் அங்கே நிற்பதைப் பார்த்து பதறினாள்.

''ஹையோ! நீங்க எங்கே இங்கே வந்தீங்க? யாராவது பார்த்துடப் போறாங்க. ப்ளீஸ், சீக்கிரம் யாரும் பார்ப்பதற்கு முன்பு வீட்டுக்குள் போங்க...'' என்று அவசரமாகச் சொன்னாள் வாஸந்தி.



அவளின் அவசரத்தைக் கண்டு கொள்ளாமல், கைப்பிடிச் சுவற்றில் தாவி ஏறி அமர்ந்தவன், அவளின் கை பற்றி அருகில் இழுத்து, ''ஹேய் அதான் உங்க பாட்டியும் அப்பாவுமே நம்ம கல்யாணத்துக்கு ஓகே சொல்லிட்டாங்களே? இன்னும் என்ன பதட்டம்? உனக்கு நார்மலாவே இருக்கத் தெரியாதா?'' என்றபடி அருகில் இழுக்க அவன் பிடியில் இருந்து விடுபட முயன்றாள்.

''பாட்டி எவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்கிறாங்களோ, அவ்வளவு சீக்கிரம் மாத்திக்கவும் செய்வாங்க. இப்படி நீங்க என் கையைப் பிடிச்சுகிட்டு நிற்பதைப் பார்த்தால், உடனே கல்யாண பேச்சை நிறுத்த வாய்ப்பு இருக்கு. உங்களுக்கு எங்க பாட்டியைப் பற்றித் தெரியாது.''

''பாட்டியைப் பற்றி நான் ஏன் தெரிஞ்சுக்கணும்? எனக்கு உன்னைப் பற்றித் தெரிஞ்சா போதாது?''

இழுத்த இழுப்பிற்கு அருகே வந்தவளுக்கு மனதிற்குள் ஆசையும் வெளியே பதட்டமான முகமும் இருந்தது. ''என்னைப் பற்றி என்ன தெரியணும்? சீக்கிரம் கேளுங்க, சொல்லிட்டுக் கிளம்பறேன்.''

''எப்போ என் கூடவே இருக்கப் போற என்று நான் யோசிச்சுட்டு இருக்கேன். நீ போறதிலேயே இருக்கியே?'' என்ற அபிஷேக்கின் கரங்கள், அவளின் உச்சியை வருடியது. அந்த அன்பான குரலும், ஆதரவான வருடலும், அவளை இளக்க, ''அபி ப்ளீஸ், பாட்டி தேடப் போறாங்க'' என்று முணுமுணுத்தாள்.

''பாட்டி தேடுறது மட்டும் தான் உன் கண்ணில் படுமா? நான் உன்னைத் தேடுறதில்லையா?'' குரல் அன்பில் இருந்து காதலுக்கு மாறி இருந்தது.

''இப்படிப் பேசினால் நான் என்னம்மா பண்றது?''

''நீ என்ன பண்ணனும் என்று சொல்லட்டுமா?'' என்றவன் கரங்கள் அவளின் கன்னத்தைப் பற்றி தன்னை நோக்கி நிமிர்த்த, குரல் குழைந்து கொஞ்சியது.

''புரிஞ்சுக்கோங்க அபி, பாண்டிச்சேரியில் அம்மாவைத் தேடுற விஷயம் என்ன ஆச்சு? நான் எப்ப, எப்படி அம்மாவைப் பார்ப்பது? நீங்க எப்போ கிளம்புறீங்க?''

''போச்சுடா! எப்ப கிளம்புறியா? இதெல்லாம் ரொம்ப ஓவர். எப்போ அபி போகலாம் என்று கேட்டால், இப்பவே என்று சொல்லி இருப்பேன்...''

''அ...பி! நான் உங்களுக்கு என்ற நம்பிக்கை இன்னும் வரலையா? இப்படியே பேசிட்டு இருந்தால் என்ன அர்த்தம்? நான் என்ன சொல்றேன்? நீங்க என்ன கேட்க றீங்க?'' என்றவள் குரலில் செல்லக் கோபமும், இவன் தன்னை எப்போது நல்லபடியாக புரிந்து கொள்வான் என்ற ஆதங்கமும் இருந்தது.

''நீ எனக்கு என்ற நம்பிக்கையா? அது எப்படிம்மா வரும்? நீ என் உயிர். நீ இன்றி நான் இல்லை. உனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று பக்கம் பக்கமா வசனம் பேசி உருகி இருக்கிறாயா? நான் மறந்துட்டேனா என்ன?'' என்று கேலியாகக் கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் முறைக்க, ''சரி, உருகி உருகி காதல் வசனம் பேச வேண்டாம். எப்பவாவது நீ என்னை விரும்புகிறேன். கல்யாணம் பண்ணிக்கறேன் என்று தகவலாகச் சொல்லி இருக்கிறாயா? சரி அதுவும் வேண்டாம். இந்த கண்ணோடு கண் நோக்குங்கால், வாய் சொல் பயன் இல்லை என்று வள்ளுவர் சொன்ன



மாதிரி, கண்ணால் காதல் கவிதை வாசித்து இருக்கிறாயா?''

''ச்சே, உங்களிடம் பேசுவதே வேஸ்ட். நின்னு பேசின என் புத்தியை...'' என்று வேகமாகச் சொல்லி விட்டு, அவன் பிடியில் இருந்த கையை உதறி விடுவித்தபோது, அனிச்சையாக, மார்பில் வைத்து லேசாக அழுத்த, கைபிடி சுவற்றில் சாதாரணமாக அமர்ந்து இருந்தவன், 'அம்மா' என்ற அலறலுடன் விழப் போனான்.

அம்மா என்ற அலறல் கேட்கும் முன்பே வீட்டை நோக்கி நகர ஆரம்பித்தவள், அவனின் சத்தத்தில் பதறி திரும்பி ஓடி வந்து எட்டிப் பார்த்தாள். அவளைப் பார்த்த உடன், கண் சிமிட்டி, ஒரே தாவில் கைப்பிடிச் சுவற்றை தாண்டி வெளியே குதித்து, 'பயந்துட்டியா?' என்று சிரித்தான்.

''ஏய், இடியட்! பயந்துட்டியா என்று கேள்வி கேட்கிறாய்? லூசாடா நீ? எதுல விளையாடுவது என்று இல்லையா? எதெடுத்தாலும் ஒரு விளையாட்டு. ஒரு கிண்டல், ஒரு சிரிப்பு...''

''ஹேய்! ஓகே, ஓகே! சும்மா விளையாட்டுக்கு... இப்ப என்ன ஆச்சு? எதுக்கு இவ்வளவு சீரியஸா...'' என்று அவளைப் பற்றி சமாதானம் சொல்ல அவனை உதறியவள் அவன் சட்டை காலரைப் பிடித்தாள்.

''உன்னை யாருடா இப்படி கிணத்து மேலே ஏறி உட்காரச் சொன்னது? இப்படி வந்த இடத்துல ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகிடுச்சுன்னா நான் என்ன பண்ணுவேன்? ஒரு நிமிஷத்துல என் உயிரே போய் விட்டது தெரியுமா?''

''வஸு, எனக்கு ஒண்ணும் ஆகாது. நமக்கு படிப்புதான் வராது. அதைத் தவிர நிறைய விஷயம் தெரியும். மரம் ஏறுவதில் ஆரம்பித்து, நீச்சல், சிலம்பம், கத்தி சண்டை... கத்தி என்ற உடன்... கத்தி பேசும் சண்டை என்று நினைத்து விடாதே. பென்சிங் (Fencing) ஸ்போர்ட் பார்த்து இருக்கிறாயா? அது வரைக்கும் அய்யாவிற்குப் பழக்கம். போயும் போயும், இந்த சின்ன கிணத்தோட சுவரில் ஏறமாட்டேனா? இந்த சுவற்றில் ஏறுவது மட்டுமில்லை, தண்ணியிலும் மூழ்கிவிட மாட்டேன், போதுமா?'' என்று அவளை தன்னோடு சேர்த்து அணைத்தான்.

அவனது அணைப்பிலும், ஆறுதலான வார்த்தைகளிலும், அதுவரை இருந்த படபடப்பு கொஞ்சம் குறைய, ''ம்கூம், ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது. எல்லாத்தையும் விளையாட்டாவே எடுத்துக்குவீங்களா? வாழ்க்கைல எதுக்காவது சீரியஸா இதுதான் வேண்டும் என்று இருந்து இருக்கீங்களா?'' என்று அவன் மார்பில் சாய்ந்தபடி, கொஞ்சலாக கேட்டாள் வாஸந்தி.

''இதுவரைக்கும் இல்லை. இனிமேல் ஒரு விஷயத்துல மட்டும் சாகுற வரைக்கும் சீரியஸா இருக்கணும் என்று தோணுது...'' என்றவன் கரங்கள் உயர்ந்து அவளின் கன்னத்தை வருட, பட்டென்று அவனின் கன்னத்தில் அடித்தாள்.

'சீரியஸா இருக்கணும் சரி. அதென்ன சாகுற வரைக்கும்? இன்னும் வாழவே ஆரம்பிக்கலை. இப்ப என்ன சாகுறதுக்கு அவசரம்?'' என்று சற்று முன்பு நடந்த நிகழ்ச்சியின் நினைவில் அவளின் உடல் தூக்கிப் போட படபடப்பாகக் கேட்டாள்.



அனிச்சையாக அவனின் கன்னத்தில் விழுந்த அந்த அடியில், ஏற்கனவே தெரிந்த அவளின் அன்பின், முழு ஆழத்தை உணர்ந்து புன்னகைத்தான். அணைப்பை இன்னும் இறுக்கி, ''வஸு, உனக்குத் தெரிஞ்சதை நீ கொடுத்து விட்டாய். எனக்குத் தெரிஞ்சதை நான் கொடுக்க வேண்டாமா? ஐ லவ் யு டார்லிங்'' என்று கொஞ்சலாகச் சொல்லி கன்னத்தில் முத்தமிட்டான்.

அவனின் வார்த்தைகளும், கன்னத்தில் பதித்த முத்தமும் அவளின் மனதிலும் உற்சாகத்தைக் கொண்டு வர, அவனைத் தள்ளி விட்டு அவசரமாக வீட்டை நோக்கி ஓடினாள் வாஸந்தி.

* * *

அபிஷேக்கும் வாஸந்தியும் அங்கே இல்லை என்பதை உணராமல், தேட வேண்டிய அவசியம் எழாமல், அங்கே திருமணப் பேச்சு வார்த்தைகள் கேலி கிண்டலுக்கு இடையே நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

''உங்க பொண்ணை ஒரு வார்த்தை சம்மதமா என்று கேட்டு விடுங்க தியாகு சார்'' என்று சுந்தரேசன் ஆரம்பித்தார்.

''சார் என்ன சார்? சம்பந்தி என்று சொல்லுங்க...'' என்று கல்யாணி இடையிட, அதையும் மீறி பவானி அம்மாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

''சாந்தியை சம்மதம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்க சொன்ன வார்த்தைக்கு மறு பேச்சு அவள் பேச மாட்டாள். நீங்க வேண்டுமானால், உங்க பையனிடம் சம்மதமா என்று கேட்டுக்கோங்க'' என்று தன் நம்பிக்கையுடன் சொன்னார்.

ஏற்கனவே அபிஷேக் மனதையும் அறிந்து இருந்த தால், ''எங்க பையன் நாங்க சொல்லும் பேச்சைத் தட்ட மாட்டான். உங்க பெண் அவ்வளவு கட்டுப்பாட்டோடு இருக்கும்போது எங்க பையன் அதுக்குப் பொருத்தமா இருக்க வேண்டாமா? அவனோட சம்மதம் கேட்கணும் என்ற அவசியம் இல்லை'' என்று உறுதி அளித்தார் கல்யாணி.

முந்தைய தினம் இரவு கிரிவலம் வரும்போது விவேக் தன்னிடம் கோடி காட்டி சொன்ன விருப்பத்தை நினைவு வைத்து சுந்தரேசன் தியாகராஜனிடம், ''உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணுமே'' என்று ஆரம்பித்தார்.

''நீங்க எதுவும் கேட்கவே வேண்டாம். எனக்கு இருப் பது ஒரே பொண்ணு. என்னிடம் இருப்பது எல்லாமே அவளுக்குத்தான்...''

''நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. பணம் நகை பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை. நான் சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கை உடையவன். மனித மனம், அதன் சந்தோஷம் தான் வாழ்க்கைக்கு அடிப்படை என்றாலும், சம்பிரதாயங்களை வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட முடியாது. அதில் எனக்கு உடன்பாடு இல்லை...''

இவர் என்னவோ விபரீதமாகச் சொல்ல போகிறார் என்ற உணர்வில், தியாகராஜன் பவானி இருவருக்குமே முகம் யோசனைக்கு மாற அமைதியாக இருந்தனர்.

''உங்க மனைவி உயிரோடு இல்லை என்றால் அது வேறு விஷயம். உங்களுக்கு சட்டப்படி விவாகரத்து ஆகி விட்டது என்றாலும் பரவாயில்லை. அவங்க



உயிரோடு இருக்கும்போது, அவங்க இல்லாமல் இந்த திருமணம் நடப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. என் பையன் திருமணம் சாஸ்திரப்படி நடக்கணும். அதுக்குப் பிறகு நீங்க இருவரும் சேர்ந்து இருப்பதோ பிரிவதோ உங்களின் விருப்பம். அதில் நான் தலையிட விரும்ப வில்லை. ஆனால் திருமணத்திற்கு அவங்க வேண்டும். கண்டிப்பாக வேண்டும்'' என்று சுந்தரேசன் முடிக்க, அவரின் உள்நோக்கம் புரியாமல், திகைத்துப் போய் அவரையே வெறித்துப் பார்த்தது தியாகராஜனும், பவானி அம்மா மட்டுமில்லை. கல்யாணி அம்மாவும் தான். மூன்று பேர் திகைப்பில் மூழ்க, விவேக், அபிஷேக், வாஸந்தி மூவருமே, சந்தோஷக் கடலில் மூழ்கினார்கள்.

# 13



வாஸந்தியின் அம்மாவை வைத்து தான் திருமணம் நடக்க வேண்டும் என்று சுந்தரேசன் முடிவாகச் சொன் னதைக் கேட்ட பவானி அம்மாவிற்கு ஆயாசமாக இருந்தது. இந்தப் பிரச்னை வராது என்ற நம்பிக்கையில் தானே அவசரமாக நல்ல குடும்பம், நல்ல பையன், படிப்பு, சொந்த தொழில் என்று இருக்கும் இந்த மாப்பிள் ளையைப் பார்க்கலாம் என்று பேச்சை ஆரம்பித்தது? மறுபடியும் அதே கதையா!

அம்மாவின் முக பாவனையை உணர்ந்த உடன், ''சுந்தரேசன் சார், நான் அவளை சில முறை தேடி

இருக்கிறேன். சொந்த ஊரிலும் சொல்லி வைத்து இருக்கிறேன். அவங்க நான் அழைத்தால் வரக் கூடிய நிலையில் இருக்காங்களோ இல்லையோ தெரியலையே'' என்று தயங்கியபடி சொன்னார் தியாகராஜன்.

''அவளைப் பற்றிய பேச்சை நாங்க மறந்து பதினெட்டு வருஷம் ஆச்சு. அவள் எங்கே இருக்கிறாள் என்ன செய்கிறாள் என்று எங்களுக்கு எதுவும் தெரியாது. நாங்க அதைப் பற்றி மறக்க விரும்புகிறோம். நீங்க உங்க முடிவை மறு பரிசீலனை பண்ணிட்டு சொல்லுங்க. உங்க வீட்டுக்கு வரப் போறதும், வாழப் போறதும் என் பேத்திதான். அவளைப் பாருங்க. பிடிச்சு இருக்கு என்றால் பேசலாம். பழைய கதையைக் கிளறுவது என்றால், மன்னிச்சுக் கோங்க...'' என்று முடிவாகச் சொன்னார் பவானி.

பாட்டியின் கை பற்றி உள் அறைக்குச் சென்று, ''என்ன பாட்டி நீங்க? எதுக்கு இப்பவே இந்த சம்பந்தம் வேண்டாம் என்ற மாதிரி பேசறீங்க? ரெண்டு மாசம் அவகாசம் கேட்போம். தேடுவோம்...'' என்று சொன்னான் விவேக்.

''ப்ச்! நீ பேசறது எல்லாம் கதைல தான் நடக்கும்...''

''இல்லை பாட்டி, நாளைக்கு என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. முயற்சியே பண்ணாமல் கிடைக்காது என்று ஏன் எண்ண வேண்டும்? தேடிப் பார்த்துட்டு, கிடைக்கலை என்று சொல்லலாம். அவங்களுக்கும் நாம் முயற்சி பண்ணி இருக்கிறோம் என்பது புரிந்தால், அத்தை இல்லாமலே சாந்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்கலாம். யாரும் எதிர்பாராத அதிசயமாக அத்தையே நம் முன்னால் வந்து குதிக்கலாம்...''



''ஆமா பதினெட்டு வருஷமா இந்த வாசப்படி மிதிக்காதவ, இனிமேல் தான் வரப் போறாளா?''

''சுந்தரேசன் அங்கிள் என்ன சொன்னார்? விவாகரத்து ஆகி இருந்தால் பரவாயில்லை என்று சொல்லி இருக்கார் இல்லையா? நாம் விவாகரத்து பண்ண ஏற்பாடு பண்ணலாமே? ஏழு ஆண்டுகளாக எங்கே இருக்கிறார் என்ற தகவல் இல்லை என்றால், அவர் இறந்து விட்டார் என்ற அடிப்படையில்...''

''விவேக்...'' என்ற தியாகராஜனின் அதட்டல் அவனை வாய் மூட வைத்தது.

''நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து விடாது என்று தெரியும். ஆனால் அவள் எங்கே இருந்தாலும் சந்தோஷமாக இருக்கட்டும். அப்படி பண்ணுவது என்றால், பதினெட்டு வருஷத்திற்கு முன்னாலேயே பண்ணி இருக்க மாட்டேனா? நீ இந்தக் காலத்து பையன். கல்யாணம் பண்ணிக் கொள்வதும், அதை உடனே ரத்து பண்ணிக் கொள்வதும், அதுக்குப் பின்னால் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்வதும் உனக்கு வேண்டுமானால், சர்வ சாதாரணமாக இருக்கலாம். எனக்கு அப்படி இல்லை. இந்தப் பேச்சை இதோடு விடு. வெளியில் விருந்தினர்களை வைத்துக் கொண்டு, உள் அறையில் நாம் இப்படி மாநாடு நடத்துவது சரி இல்லை. இரண்டு மாசம் அவகாசம் கேட்போம். யோசித்து முடிவு சொல்லுவோம்'' என்று முடித்து விட்டுச் சென்றார் தியாகராஜன்.

* * *

உள்ளே கருத்தரங்கம் நடக்கும் வேளையில், வெளியே ஒரு உரையாடல் நடைபெற்றது. ''என்ன நீங்க திடுதிப்புன்னு இப்படிச் சொல்லிட்டீங்க? நேற்றே வஸு அம்மா

பற்றி துருவாதீங்க என்று அபி சொன்னானே, மறந்துட்டீங்களா?'' என்று கணவரிடம் கேட்டார் கல்யாணி.

''அம்மா, டென்ஷன் ஆகாதீங்க. அது நானும் விவேக்கும் அப்பாவிடம் சொன்னோம். அப்பா ஒண்ணும் தப்பா சொல்லவில்லை. வாஸந்தியோட இஷ்டம் தான் அது'' என்று அபிஷேக் அவசரமாக அம்மாவைச் சமாதானப்படுத்த அவர் வாஸந்தியிடம் கண்ணால் கேள்வி கேட்டார்.

அவளின் மலர்ந்த முகத்தில் இருந்து விஷயத்தை நொடியில் கிரகித்தவர், ''அது சரி, ஒரு வேளை பாட்டிக்கு அது இஷ்டம் இல்லை என்று உங்களை வேண்டாம் என்று சொல்லி விட்டால் என்ன செய்வீங்களாம்?'' என்று கேலியாகக் கேட்டார்.

''அதை விவேக் பார்த்துப்பான்...'' என்று சிரித்தான் அபிஷேக்.

''ஓஹோ! அவங்களை இத்தனை வருஷமா தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொன்னாரே? ஒருவேளை இப்பவும் அவங்க கிடைக்கவே இல்லை என்றால் என்ன செய்வீங்க?''

''அதை அபிஷேக் பார்த்துப்பார்'' இம்முறை பதில் வாஸந்தியிடம் இருந்து வர, கல்யாணியும் சுந்தரேசனும் சிரித்தனர்.

''இனிமேல் எங்களுக்கு எதுவும் கேள்வி இல்லை. ரெண்டு பேரும் சேர்ந்து ஜமாயுங்கோ...'' என்று சந்தோஷமாக ஆசீர்வாதம் செய்தனர்.

''வஸு, நாங்க உடனே கிளம்புகிறோம். என்னை பாண்டிச்சேரியில் விட்டுட்டு அம்மாவும் அப்பாவும்



சென்னைக்குக் கிளம்பிடுவாங்க. நான் விசாரித்து விட்டு நைட் போன் பண்ணுகிறேன்.''

''சாப்பிட்டு விட்டு கிளம்பலாமே?'' என்று விட்டு ஆளாய் உபசரித்தாள் வாஸந்தி.

''இல்லைம்மா, இப்ப உடனடியா உங்க அம்மாவைத் தேடிக் கண்டு பிடிப்பதுதான் அவசியம். மதியமா கிளம்பினால் அங்கே போகவே சாயங்காலம் ஆகிடுமே? ஒரு நாள் கால தாமதம் தேவை இல்லை. நீ நாளைக்குக் காலை விவேக்குடன் கிளம்பி வா. அதுக்குள்ளே நல்ல சேதி ரெடி பண்ணி விடுகிறேன். ஓகே?'' என்று கனிவாகக் கேட்டான் அபிஷேக். எப்படி பேசினாலும், அவன் சொல்வதைச் செய்ய வச்சுடறானே, என்ற சிணுங்கலுடன் தலை அசைத்தாள்.

அவள் தலை அசைக்கும் நேரத்தில், அப்பாவும் பாட்டியும் உள் அறையில் இருந்து வெளியே வர, கிளம்பத் தயாராக இருந்தவர்களைப் பார்த்த உடனே, ''என்ன இது? பாதி பேச்சில் கிளம்புறாங்க? ஒருவேளை கோபமோ?'' என்று அவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன அங்கிள் கிளம்பிட்டீங்களா? மதிய உணவு முடித்து விட்டுப் போகலாமே?'' என்று அவசரமாகச் சொன்னான் விவேக். மற்ற இருவரும் இன்னமும் சுதாரிக்கவில்லை.

''கொஞ்சம் வேலை இருக்கு. இன்னொரு நாள் வருகிறோம். நீங்க யோசிச்சுட்டு நல்ல முடிவு சொல்லுங்க. விவேக்கிடம் சொன்னால் கூட போதும்'' என்று சுந்தரேசன் கை குவித்தார்.

''திருவண்ணாமலையில் சுவாமி தரிசனம் ரொம்ப அமர்க்களமா நடந்தது. சீக்கிரமே நல்ல செய்தி சொல்லி

அனுப்புங்க. நாங்க கிளம்புறோம். வரோம் வஸு'' என்று அவளின் கன்னத்தில் தட்டிய அம்மாவின் காதில், 'மை ப்ராப்பர்ட்டி. டோன்ட் டச்' என்று அபிஷேக் முனக, அது காதில் விழுந்ததால், வாஸந்தி கல்யாணி இருவருமே, புன்னகையோடு ஒரே மாதிரியாகச் சிந்தித்து, ஒரே நேரத்தில் அடுத்தவரை அணைத்துக் கொண்டனர்.

அணைப்பில் இருந்து விலகிய போது, இருவரும் அபிஷேக்கின் காதில் இருந்து புகை வரும் என்று எதிர் பார்க்க, 'நான் நினைத்தது நடந்தது' என்ற பெருமிதப் புன்னகை அவன் கண்களில் வழிந்தோடியது. அவர்களின் முக பாவனை, மற்றும் போன் பண்ணுங்க என்ற வேண்டுகோளில் நிம்மதிப் பெருமூச்சே வெளியேற்றி அவர்களை வழி அனுப்பி வைத்தனர்.

அவர்கள் கிளம்பிய பிறகு தன் அறைக்குள் முடங்கப் போன தியாகராஜனை பின் தொடர்ந்து வந்தான் விவேக். ''மாமா, நான் எதுவும் தப்பா சொல்லவில்லை மாமா. நீங்க கோபப்படாதீங்க பாட்டி உடனடியா மறுப்பா ஏதாவது அவர்களிடம் சொல்லி விடக் கூடாதே என்பதற்காக, சமாதானப் படுத்த தான் அப்படி சொன்னேன்...''

''தெரியும்டா. தப்பா எடுத்துக்கலை. ஆனால், நீ சொன்ன அந்த வார்த்தை...''

''விவாகரத்து என்ற வார்த்தை உங்களை இவ்வளவு பாதிக்கிறது என்றால் அத்தையை நீங்க இன்னும் மறக்கவில்லை என்று அர்த்தமா மாமா? நீ யார் என் பெர்சனல் விஷயத்தில் தலையிட என்று கேட்க மாட்டீங்க தானே?'' என்று கேட்டான்.

''அவள் என்னை நம்பி ஊரில் இருந்து கிளம்பி வந்தவள். அவளை சந்தோஷமா வைத்துக் கொள்வது



என்னுடைய கடமை என்று நினைத்தேன். அவள் என்னைப் பிரிந்து வாழ்வது சந்தோஷம் என்று நினைத்தாள். அதை அவளுக்குக் கொடுத்து விட்டேன். அவ்வளவுதான். அதுக்காக நான் அவளை மறக்கணும் என்பது அவசியம் இல்லை. நீ காலையில் என்னவோ நான் பார்த்துக்கறேன் என்று சொன்னாயே? அத்தையை எங்கேயாவது பார்த்தாயா? எங்கே இருக்கா என்று உனக்குத் தெரியுமா?'' என்று ஆர்வமாகக் கேட்டார் தியாகராஜன்.

''சென்னையில் அவங்க நாலாம் தேதி சாந்தியைப் பார்த்துப் பேச வந்தாங்க...''

''என்னடா சொல்ற? இந்த நாலாம் தேதியா? எங்கே வந்தா? ஏன் என்னிடம் அப்போதே சொல்லவில்லை?'' என்று அவனின் சட்டையைப் பிடித்து உலுக்கினார் தியாகராஜன்.

''மாமா! ரிலாக்ஸ், அவங்க நான் வருவதற்குள் போய் விட வேண்டும் என்று கிளம்பிட்டாங்க. எங்கிருந்து வந்தாங்க? எப்படி போனாங்க எதுவும் தெரியலை. ஆனால் கவலைப்படாதீங்க மாமா. இன்று இரவே, அவங்க எங்கே இருக்காங்க என்று கண்டு பிடித்து விடுவோம். நல்ல சேதியாக இருந்தால், அதன் பிறகு உங்களிடம் சொல்லலாம் என்று...''

''நல்ல சேதியா என்றால் என்ன அர்த்தம்?'' குழப்பத்தோடு கேட்டார் தியாகராஜன்.

''அவங்க எப்படி இருக்காங்க... தனியாவா... இல்லை...'' விவேக் முடிக்காமல் நிறுத்த, அவர் விலகிச் சென்று விட்டார். ''மாமா... மாமா...'' விவேக்கின் குரல் அவரை எட்டவே இல்லை. அதற்குள் அவனின் மொபைல் அழைக்க, அபிஷேக்கின் பெயர் ஒளிர, எடுத்தான்.

'பத்து தினங்களுக்கு முன்பு சுஜாதா சாந்தியை வந்து பார்த்தாள்' என்று விவேக் சொன்ன தகவல் தியாக ராஜனை உலுக்கி விட்டது. அவள் வந்தாளா? சாந்தி அங்கே இருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்? இது தான் முதல் முறையா? இதற்கு முன்பும் சந்தித்து இருக் கிறாளா? சாந்திக்கு அவளைத் தெரியாதே? எப்படி என்ன திடீர் என்று மகளின் நினைவு...? ஒரு வேளை அது திடீர் நினைவு இல்லையோ? எப்போதும் தொடரும் நினைவுகளா?

அப்படி என்றால் ஏன் இங்கே வரவில்லை? எதற்காக தன்னை விட்டுப் பிரிய வேண்டும்? அதுவும் குழந் தையை தன்னிடம் விட்டு விட்டுப் போனது... அதற்கு அவளைக் குறை சொல்ல உனக்கு எப்படி மனசு வந்தது? நீ சொன்ன வார்த்தை அப்படி அதை மீறி அவள் எப்படி எடுத்துப் போவாள்? அந்த பொல்லாத தினத்தில், கிளம்புகிறேன் என்று சொல்லி விட்டு குழந்தையைத் தூக்கிய போது, தான் அள்ளித் தெளித்த வார்த்தைகள்...

''நீ முடிவு எடுத்து விட்டாய். உன்னைத் தடுக்க எனக்கு மனமோ, உரிமையோ இல்லை. ஆனால் இந்த குழந்தையை நீ எடுத்துப் போக வேண்டாம். என் குழந்தையை நானே பார்த்துக்கறேன்...''

''என் பெண்ணை எடுத்துப் போக எனக்கு உரிமை இல்லையா?''

''குழந்தை உனக்கு மட்டும் தான் சொந்தம். எனக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் நீ எடுத்துப் போகலாம். எனக்கும் இந்த குழந்தைக்கும் சம்பந்தம் இருக்கு என்றால் இங்கேயே விட்டுடு. உன் சந்தோஷ



வாழ்விற்கு நானோ, என் பெண்ணோ தடையாக இருக்க விரும்பவில்லை'' என்று சொன்ன வினாடியில் குழந் தையை விட்டு விட்டுச் சென்று விட்டாள்.

அவள் வீட்டை விட்டு வெளியேறிய மூன்றாவது நாள், அவள் மணவிலக்கு பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டாள். அதனால் அவளுக்கு அது அவசியம் என்றால், பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று ஒரு வேகத்தில் தானும் கையெழுத்து போட்டுத் திருப்பி அனுப்பி விட்டார்.

ஆண்டுக்கு ஒருமுறை, ஜனவரி இறுதியில், மகர சங்கராந்தி முடிந்து வரும் வார இறுதிக்கு, குஜராத்திற்கு போய் வருவது உண்டு. அங்கே யாருக்கும் அவரை அவ்வளவாக அடையாளம் தெரியாது. அங்கே வந்தாளா, இருக்கிறாளா? என்று அக்கம் பக்கத்தில் விசாரித்து விட்டு வந்து விடுவார். அதன் பிறகு எந்த விதமான எழுத்து தொடர்பும் இல்லை. பார்க்கவும் இல்லை.

அவள் மேல் வைத்த அன்பில், அவளைப் போக விடாமல் தடுக்கச் சொன்ன வார்த்தை என்று இப்போது விளக்கம் சொன்னாலும், தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு அல்லவா? அந்த வார்த் தையை தான் சொல்லி இருக்கக் கூடாது என்று பல ஆயிரம் முறை இரவும் பகலும் அவளிடம் மானசீகமாக காலில் விழுந்து மன்னிப்பு கேட்டாகி விட்டது. ஆனால் நேரில் ஒரு முறை கேட்க வேண்டும். அதற்கு வாய்ப்பு கிடைக்குமா? குல்மோகர் மரத்தில் சாய்ந்து கண் மூடி யோசனையில் மூழ்கி இருந்த தியாகராஜனின் கண்ணில் நீர் வடிந்தது.

# 14



வீட்டில் இருந்து கிளம்பிய பத்தாவது நிமிடம் விவேக்கை அழைத்த அபிஷேக், 'ரொம்ப தேங்க்ஸ் விவேக். நீ இல்லாமல் இவ்வளவு சுலபமா என்னோட கல்யாண விஷயம் முடிஞ்சு இருக்காது. பாட்டியையும், மாமாவையும் ரொம்ப அழகா பேசி, கல்யாணத்திற்கு சம்மதிக்க வைத்தாய். உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை'' என்று உற்சாகமாக, சொன்னான் அபிஷேக்.

''அட! இதுக்கு இவ்வளவு வரவேற்பு கிடைக்கும் என்றால், நான் ஆடிட்டர் வேலையை விட்டுட்டு, கல்யாண ப்ரோக்கர் வேலை பார்க்கலாம் போல இருக்கே?'' என்று சிரித்தான்.

''ப்ரோக்கர் வேலை பார்த்தால் ஆடிட்டருக்கு கிடைக்கும் அளவுக்கு வருமானம் கிடைக்குமா? இந்த மாதிரி நாலு வார்த்தை பாராட்டாக கிடைக்கும். அவ்வளவுதான். திருமணம் நல்லபடியா முடிஞ்சுதோ, இந்த பாராட்டு. ஏதாவது சொதப்பி இருந்தால், என்னிடம் தர்ம அடி கிடைக்கும். அதை மறந்து விட்டாயே?'' என்று கேலி செய்தான் அபிஷேக்.

''உனக்காக மாமாவிடம் பேசி, உன்னிடம் அடி வாங்குவது எனக்குத் தேவைதான். என்ன நீ பாட்டுக்க



கிளம்பி விட்டாய்? அத்தையை எப்படிக் கண்டு பிடிப்பது என்று சொல்லவே இல்லை'' என்று விசாரித்தான் விவேக்.

''அதுக்கு தான் இப்ப போன் பண்ணினேன். நாளைக் காலையில் நீ கிளம்பும்போது, சாந்தியை அழைத்து வந்து என்னிடம் பாண்டிச்சேரியில் விட்டுட்டு நீ உங்க அம்மா அப்பாவோடு சென்னைக்குக் கிளம்பு. நான் அவளை அவங்க அம்மாவிடம் பேச வைத்து இரவிற்குள் கூட்டி வந்து விடுகிறேன். ஓகேயா?''

''பாட்டி ரெண்டு நாள் சாந்தி இருந்துட்டு வரட்டும் என்று சொன்னால்...''

''ஆண்டு இறுதிக் கணக்கு முடிக்கணும். வேலை இருக்கு என்று ஏதாவது சொல்லேண்டா...''

''நடுவில் பாட்டி என்னிடம் போன் பேசி சாந்தி எங்கே என்று கேட்டால்...''

''எல்லாம் என்னிடமே கேளு! பாண்டிச்சேரிக்கு அப்புறம் சென்னை போய் சேரும் வரை உன் மொபைலை சைலென்ட் மோடில் போடு. பாட்டியைத் தவிர வேற ஆட்கள் பேசினால் மட்டும் பேசு. இதெல்லாம் கூடவா சொல்லித் தரணும்? ப்ரெண்ட்டுக்காக இது கூடச் செய்ய மாட்டாயா?''

''டேய்! இதெல்லாம் உனக்காகச் செய்றேன் என்று நினைச்சுக்காதே. சாந்தி சின்ன வயசுல இருந்து ரொம்ப கட்டுப்பாடுகளோடு வளர்ந்தவள், கல்யாணம் பண்ணி போகும் வீடாவது கொஞ்சம் ப்ரீயா இருக்கட்டுமே, என்ற எண்ணத்தில், உங்க அம்மா மேலே வைத்து இருக்கும் நம்பிக்கையில் இந்த வேலை செய்றேன் தெரியுமா?''

''அடப் பாவி! என்னை விட எங்க அம்மாவிற்காக கல்யாண ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லும் நீ நண்பன் இல்லைடா. துரோகி...''

''இன்று காலை இதே வார்த்தைகளை உன்னைப் பற்றி நான் மாமாவிடம் சொன்னேன். இப்போ நீ சொல்கிறாய். இதுதான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமா? நான் சொன்னதை நினைவு வச்சுக்கோ. நைட் போன் பண்ணு. நாளைக்கு எங்கே வரணும் என்று சொல்லு. உன்னுடைய அழைப்பிற்காக சாந்தி காத்திருப்பாள் என்பதை மறந்து விடாதே'' என்று சிரிப்போடு ஆரம்பித் தாலும், சீரியசான குரலில் சொல்லி முடித்தான் விவேக்.

* * *

அபிஷேக் குடும்பத்தினர் கிளம்பிய பின்பு, தன் அறைக்குள் சென்ற வாஸந்தி, மதர் தனக்கு பள்ளியில் சேர்ந்த நாளில் இருந்து புத்தாண்டிற்கும், அக்டோபரில் வரும் பிறந்த நாளைக்கும் பரிசளித்த புத்தகங்களைத் தேடி கண்டு பிடித்து அடுக்கினாள். பதினெட்டு ஆண்டு களில் அளித்த முப்பத்தி ஆறு பரிசுகளில், இருபத்தி ஆறு தான் கண்டு பிடிக்க முடிந்தது. காலேஜிற்குள் அடி எடுத்து வைத்த ஆண்டில் கொடுத்த, வாழ்க்கையில் இலக்குகள் நிர்ணயம் செய்வது தொடர்பான ஒரு தன்னம்பிக்கை ஊட்டும் புத்தகம், தாகூரின் கீதாஞ்சலி, விவேகானந்தரின் சிந்தனைகள், அரவிந்தரின் போதனைகள், காணோம்.

''காலையில் இருந்து மாதவி இங்கே தனியா சமைச்சு கிட்டு இருக்கிறாள். நீ அங்கே ரூமிற்குள் புதையலா தோண்டி எடுக்கிறாய்?'' என்ற பாட்டியின் அதட்டல் வரும் வரை இரண்டு மணி நேரம் அந்த தேடுதல் வேட்டை யில் தன்னை தொலைத்து இருந்தாள் வாஸந்தி.



''அங்கே அத்தை தனியா வேலை செய்றா. இங்கே என்ன பண்ணிட்டு இருக்க?''

''என்னோட புக்ஸ் சென்னைக்கு எடுத்துட்டுப் போக லாம் என்று...''

''என்ன புத்தகம்?''

''மதர் கொடுத்த காலேஜ் புக்ஸ். வேலைக்குப் பயன்படும்...'' என்று திணறினாள்.

அவளின் திணறலைப் பார்த்த பவானிக்கு சந்தேகம் வந்தது. அலமாரியில் அவள் திணித்து இருந்த புத்தகத்தை உருவிப் பார்த்தார். கடைசியாக சுஜாதா கொடுத்த, அந்த தன்னம்பிக்கை ஊட்டும் ஆங்கிலப் புத்தகம். முதல் பக்கத்தில் 'வாழ்க வளமுடன்' என்ற அடைமொழியுடன் இருந்த கையொப்பம், சுஜாதாவினுடையது என்பதை அவரால் இனம் காண முடிந்தது.

வீட்டை விட்டு வெளியேறிய பிறகு, வந்த அந்த விவ காரத்திற்கான பத்திரத்தில், இருந்தது இந்த கையெழுத்து தான். இந்த 'வாழ்க வளமுடன்' என்ற அடைமொழி வாக்கியம், தியாகராஜன் வழக்கமாகச் சொல்வது. எழுதும் எல்லா கடிதங்களிலும், பயன்படுத்துவார். இந்தப் பழக்கம் அவளுக்கும் தொற்றி இருக்கலாம்.

''நீ சு..ஜா..தா..வை பார்த்தாயா?'' என்ற பாட்டியின் கேள்வியைக் கேட்டு அதிர்ந்தாள் வாஸந்தி.

''பாட்டி... நான்... இல்லை... அம்மா... வந்து...''

''பயப்படாதே சாந்தி, உண்மையைச் சொல்லு, அவளை எங்கே பார்த்தாய்? பேசினாயா?''

''நீங்க நினைப்பது மாதிரி அம்மா கெ..ட்..ட..வ..ங்..க இல்லை பாட்டி...''

''உங்க அம்மா கெட்டவள் என்று நான் எப்போ உன்னிடம் சொன்னேன்?'' என்ற பவானி அம்மாவின் கேள்வியில் வாஸந்தி குழம்பினாள்.

''அப்ப அங்கே நிற்காதே. இங்கே போகாதே. அப்படிப் பேசாதே என்று கட்டுப்பாடு விதித்தது?''

''இதுல உங்க அம்மா கெட்டவள் என்ற அர்த்தம் எங்கே வருது? இங்கே பாரு, பொண்ணு என்றால் எப்படி இருக்கணும் என்று நான் வைத்து இருக்கும் இலக்கணம் வேறு. உங்க அம்மா வளர்ந்த சூழ்நிலை வேறு. அவளுக்குச் சரி என்று படுவது எனக்குச் சரியாகப் படவில்லை. அதனால் சில கருத்து வேறுபாடுகள் வந்தது. அதற்காக நான் அவளை வீட்டை விட்டுப் போகச் சொல்லவில்லை...''

''அப்புறம் ஏன் பாட்டி அம்மா வீட்டை விட்டுப் போனாங்க?''

''அது அவளும் அவள் புருஷனும் பேசி முடிவெடுத் தாங்க. இதுல என் கருத்தை யாரும் கேட்கவே இல்லை. அவள் பண்ணினது ரெண்டு தப்பு. முதலில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவங்க பெற்றவர்களைத் தூக்கி எறிந்தாள், இங்கே வந்து மூன்று வருஷம் வாழ்ந்த பிறகு, ஒரு கோபத்தில், இந்த வீட்டையும் துச்சமென்று தூக்கி எறிந்து விட்டாள்...''

''பெரியவங்க என்று நீங்க இருந்த போது, உங்களுக்கு அவங்க நல்லவங்க என்ற அபிப்ராயம் இருக்கும்போது, அம்மாவைத் தடுத்து இருக்கலாமே பாட்டி...''

''அந்த நேரத்தில் எனக்கு சொல்லப் பிடிக்கவில்லை. முதல் தப்பு அவளுடைய பெற்றோர்களுக்கு எதிராகச் செய்த போதும் சின்ன வயசு என்று மன்னித்தேன். ஆனால் மூன்று வருடம் கழித்து, நீ பிறந்த பிறகு அவளுக்கு புத்தி சொல்ல எனக்கு விருப்பம் இல்லை. ஒரு பொண்ணு தனக்குப் பிறந்த இரண்டு வயதான பெண் குழந்தையை விட்டு விட்டு வீட்டை வெளியே போகிறாள் என்றால் அவள் நெஞ்சில் என்ன திண்ணக்கம் என்ற ஆத்திரம் எனக்கு...''



அதே கேள்வி அவளுக்கும் இருந்ததால், அம்மாவிற்கு சாதகமாகப் பேச முடியவில்லை. அவள் மௌனம் சாதித்தால், பாட்டியின் கோபம் தொடர்ந்தது.

''... அவளுக்கு எல்லாவற்றிலும் அவசரம். பொண் ணுக்கு அந்த அவசரம் கூடாது. அது உனக்கு வந்துவிடக் கூடாது என்று உன்னைக் கண்டித்து இருக்கிறேன். அது உன்னுடைய நன்மைக்குத்தான். அவளைக் கெட்டவள் என்று நான் எப்போதும் யாரிடமும் சொன்னதில்லை. அவளை மாதிரி அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டக் கூடாது என்று சொல்லி இருக்கிறேன். அவளிடம் எனக்குப் பிடிக்காத சில விஷயங்கள் இருந்தாலும், பிடித்த சில விஷயங்களும் உண்டு. நீ அவளைப் பார்த் தாயா? எங்கே பார்த்தாய்? பேசினாளா? உனக்கு அவளைத் தெரிந்ததா?'' என்று இன்றைய நடப்பிற்கு வந்து விட்டார் பவானி.

''நான் எங்கே போய் பார்ப்பேன் பாட்டி? அவங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?'' என்றவள் வார்த்தை களில் இன்று அம்மா கெட்டவள் இல்லை என்று வியாக் யானம் கொடுப்பவர், இதை இத்தனை நாளாக ஏன் செய்யவில்லை? அவரைப் பற்றிய பேச்சு வார்த் தையை ஏன் தவிர்த்தாராம் என்ற கோபம் இருந்தது.

''அப்ப சுஜாதா வந்து உன்னைப் பார்த்தாளா?''

''ம்ம்ம், பத்து நாளுக்கு முன்பு சென்னை ஆபீசில் வந்து பார்த்தாங்க. நேரில் பார்த்த எனக்கு அப்ப அது யார் என்று தெரியவில்லை. ஆனால் பார்க்காத நீங்க எப்படி பாட்டி, அம்மா என்னைப் பார்த்தாங்களா என்று இந்தப் புத்தகத்தைப் பார்த்த உடனே சொன்னீங்க?''

''அவளிடம் நான் பார்த்த நல்ல குணங்களில் ஒன்று. அடுத்தவரிடம் இருந்து நல்லதாக தோன்றும் குணங் களைப் பார்த்த வினாடியில் கற்றுக் கொள்வாள். அதை கடைசி வரையில் கடைப்பிடிப்பாள். உங்க அப்பாவிடம் அவள் கற்றுக் கொண்டது. 'வாழ்க வளமுடன்' என்ற வாசகம். அதுதான் எனக்கு அவளை இனம் காட்டியது...''

அவள் அவசரமாக முன்பு வந்த புத்தகங்களில் தேடினாள். அந்த வாசகம் இல்லை. அப்படி என்றால் தன் எண்ணம் தவறோ? இவை எல்லாம் அம்மா கொடுத்தது இல்லையோ? உண்மையிலேயே மதர் கொடுத்ததோ? மனம் சந்தேகத்தில் ஊஞ்சலாடியது.

'என்ன யோசனை?'

''பாட்டி, என் முக பாவனை பார்த்து விசாரிக்கிறீங்க. என்னிடம் இவ்வளவு நேரமா நின்று பேசுறீங்க. அதுவும் இத்தனை வருஷத்தில் நீங்க பேசத் தங்கிய ஒரு விஷ யத்தைப் பற்றி மனம் திறந்து பேசறீங்க. உங்களுக்கு என்ன ஆச்சு என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்...''

''இன்னிக்குதான் எனக்கு ஞானோதயம் பிறந்தது. பேத்தி, இத்தனை வருடமாக பழகிய என்னை, அவ ளுடைய அப்பாவை விட்டு விட்டு, தனக்கு இரண்டு மாதமாகத் தெரிந்த ஒரு குடும்பத்தில் உள்ளவர்களிடம், தன் அம்மாவைப் பற்றி பேசி இருக்கிறாளே என்ற



வருத்தம் வந்தது. அது இனிமேலும் தொடர வேண்டாம் என்று...''

''இல்லை... பாட்டி... நான் எதுவும் யாரிடமும் சொல் லவே இல்லை.''

''நீயாக பேச்சை ஆரம்பித்து இருக்க மாட்டாய். ஆனால் பேச்சு வந்த போது தொடர்ந்து இருக்கலாம். அத னால் தான் இன்று அபிஷேக்கின் அப்பா அந்த நிபந் தனையை விதித்தார். மற்ற விஷயங்களில் எவ்வளவோ விட்டுக் கொடுத்துப் போகிறவர்கள் இந்த ஒரு விஷயத் தில் ஏன் இவ்வளவு பிடிவாதமாய் இருக்க வேண்டும் என்ற சந்தேகம் வந்தது. இந்த புத்தகம் பார்த்தேன். சந்தேகம் உறுதியாகி விட்டது...'' என்று அழுத்தம் திருத்த மாக பவானி அம்மா சொல்ல, அவரின் ஊக சக்தியில், பிரமித்து வாய் அடைத்து நின்றாள் வாஸந்தி.

''சொல்லு, உங்க அம்மாவை எங்கே எப்போது எப்படிப் பார்த்தாய்?'' பவானி அம்மாவின் கூர்மையான பார்வையுடன் விசாரணை துவங்கியது.

''நான் எங்கேயும் போய் பார்க்கவில்லை பாட்டி. அவங் களே என்னைத் தேடி ஆபீசிற்கு வந்தாங்க'' என்று ஆரம் பித்தது தான் முதல் நாள் பள்ளியில் விசாரித்ததையும் அவ்வப்போது கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்த படி, சின்னச் சின்ன விசும்பல்களுக்கிடையே சொல்லி முடித்த வினாடியில், பவானி அம்மா சேர்ந்து அமர்ந்தார்.

''இப்போ அவள் எங்கே இருக்கிறாள் என்று தெரி யுமா?'' என்று விசாரித்தார் பவானி.

''அவங்களைத் தேடித்தான் பாண்டிச்சேரிக்கு அபி ஷேக் போய் இருக்கார் பாட்டி...''

''அப்படி என்றால் அவனுக்கு முன்பே...''

தலைக்கு மேல் போய் விட்டது, இனி ஏன் மறைக்க வேண்டும்? நடப்பது நடக்கட்டும் என்று தோன்றிவிட, ''தெரியும் பாட்டி...'' என்று அழுத்தம் திருத்தமாக சொன்ன வினாடியில் பவானி அம்மாவிற்கு சுஜாதா வந்து போனார். அவளும் இப்படித்தான்.

தனக்கு சரி என்று பட்டதை, தைரியமாக முகத்தைப் பார்த்து நேரடியாகச் சொல்வாள். அதை கேட்டு எதிரில் இருப்பவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயமோ, அதற்காகப் பேச்சை மாற்றுவதோ கிடையாது. அந்த குணத்தை, பார்த்து இருக்கிறார். தியாகராஜன் மேல் அவளுக்குத் தோன்றிய காதலைத் தவிர...

இந்த இடத்தில் அவரின் சிந்தனைக்குத் தடை வந்தது. அதுவும் அவரின் தவறான எண்ணமோ? அவளும் தியாகு மாதிரியே தன் காதலில் உறுதியாக இருந்து இருப்பாளோ? அந்த விவாக ரத்து பத்திரம்? முதல் முறையாக தன் மருமகள் இந்த வீட்டை விட்டு வெளியேறியதற்கான காரணம் என்று அவர் இத்தனை நாளாக நம்பி வந்ததில் சந்தேகம் தோன்றியது.

# 15



விவேக் தியாகராஜனிடம், அபிஷேக் அத்தையை தேடிப் போய் இருக்கும் விஷயத்தை சொல்ல அதில்



அதிர்ந்து முன் வாசலுக்குச் சென்ற தியாகராஜன் தன் சுய நினைவிற்கு வர வெகு நேரமானது. வாஸந்திக்கு சுஜாதாவைத் தெரியாது. பெற்ற தாய் தன் மகளை தேடி வரும் போது அடையாளம் தெரியாமல் இருப்பது எவ்வளவு வருத்தத்திற்குரிய விஷயம்? அம்மாவின் புகைப்படத்தைக் கூட சாந்தி பார்த்ததில்லை.

அவள் இன்னொரு திருமணம் செய்து கொள்ளும் பட்சத்தில், அது அவரின் மரியாதையை குறைக்கலாம் என்ற எண்ணத்தில் சுஜாதா பற்றிய அறிமுகம் மகளுக்கு தேவை இல்லை என்று அவரும் அம்மாவும் சேர்ந்து பேசி முடிவெடுத்தது தான். இப்போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டும் போல தோன்ற, தன் புத்தக அடுக்கிற்கு இடையே மறைத்து வைத்து இருந்த புகைப் படத்தை எடுத்துப் பார்த்தார்.

பத்தொன்பது வயது பருவப் பெண். ஒடிசலான தேகம், களையான சிரித்த முகம். விசாலமான அறிவுக் கூர்மையை பறை சாற்றும் கண்கள். புதிதாக தினமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அறிவு தாகம் நிறைந்த பெண். மாற்றங்கள் அவளுக்குப் பிடிக்கும்.

தலை அலங்காரத்தில் ஆரம்பித்து, உடை அணியும் பாங்கு, வீட்டை அலங்கரிக்கும் விதம், தினசரி சமையலில் கூட புதிதாகச் செய்து பார்க்க வேண்டும். இந்த ஆர்வம் தான், அவளுக்கு திருமணத்தின் மேலும் நம்பிக்கை இல்லையோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்ததோ?

ஆனால் இப்போது பார்க்கும்போது, சிறு வயதில் மதர் கொடுத்த படக்கதை புத்தகங்களில், வித்தியாசம் தெரியவில்லை. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில்,

அவள் கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்த பின்பு வந்த புத்தகங்களில் இந்து சமய கருத்துக்கள் இருந்ததைப் பார்த்த பின்பும், இவளுக்கும் அம்மா மாதிரியே ரசனை இருக்கிறதே என்ற சந்தேகம் வரவில்லையே என்று தன்னை தானே நொந்து கொண்ட தியாகராஜனுக்கு இருப்பு கொள்ளவில்லை. நிலை கொள்ளாமல், அபிஷேக் கிடம் இருந்து வரப் போகும் அழைப்பிற்கு காத்திருக்க ஆரம்பித்தார்.

* * *

அபிஷேக், புதுச்சேரியில் மதியம் ஒரு மணி அளவில் இறங்குவதற்கு முன்பே, கூகிள் மேப்பில், புதுச்சேரியில் எத்தனை சர்ச்சுகள் இருக்கின்றது என்பதைக் கண்டு பிடித்து, புதுச்சேரிக்கு நுழைவதற்கு முன்பே தெரிந்த முதல் சர்ச்சில் இறங்கிக் கொண்டான். கிறிஸ்துவர்களுக் கான கல்லறை தோட்டங்கள் எங்கே இருக்கிறது என் பதை சர்ச்சில் விசாரித்தபோது அவனை வித்தியாசமாகப் பார்த்தனர்.

அடுத்த சர்ச்சில், அவன் உள்ளே போகவில்லை. அருகில் இருந்த ஆட்டோ டிரைவரை கிண்டி, விபரம் சேகரித்து, ஐந்து கல்லறைத் தோட்டங்கள் இருப்பதைக் கண்டு பிடிக்க மாலை நாலு மணி ஆகி விட்டது. முதல் கல்லறைத் தோட்டத்திற்குள் நுழையும்போதே, மணி ஐந்து ஆகி விட்டது.

உள்ளே சென்று, தன்னை காவல் துறை அதிகாரியாக அறிமுகம் செய்து கொண்டான். பொய் தான். ஆனால் இதனால் யாருக்கும் எந்தக் கெடுதலும் விளைவிக்கப் போவதில்லையே என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு சிஸ்டர் ஐரீன், இறந்து மூன்று மாதமாகிறது



அவர்களின் முகவரி வேண்டும் என்று விசாரித்ததில், லாஸ்பேட், என்ற இடத்தில் வசிக்கும், கிஷோர் குமார் படேல் என்ற பேரைக் கண்டதும் அவனுக்குக் கலவை யான உணர்வுகள் ஏற்பட்டது.

அந்த வட இந்திய பேரும், பட்டேல் என்ற அடை மொழியும், அவனுக்கு சுஜாதாவை நெருங்கி விட்டோம் என்ற உற்சாகத்தைக் கொடுத்தாலும், அந்த கிஷோர் குமார் யாரோ? அவருக்கு என்ன உறவோ? இவரை விட்டு சுஜாதா ஆன்ட்டி விலகி வரும் நிலையில் இருப்பாரா?

அவரால் ஒரு வேளை வர முடியாவிட்டால், அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வசுவால் முடியுமா? அதன் பிறகு அப்பா போட்ட கண்டிஷனை விலக்குவது அப்பாவிற்கு கௌரவக் குறைச்சலாக இருக்குமோ என்ற குழப்பங்கள், அவனின் முகத்தில் வந்து போனது. எதுவாக இருந்தாலும் முன் வைத்த காலை பின் வைக்க வேண்டாம். முழு விசாரணையை முடித்து விடலாம், என்று தொலைபேசியில் விவேக்கிற்கும் வாஸந்திக்கும் தகவல் சொன்னான்.

கிஷோர் குமார் என்ற பெயரைச் சொல்லி, அவரின் முகவரியில் இரவு விசாரித்து விட்டு தகவல் சொல்வ தாகச் சொன்ன உடனேயே 'அவர் தான் கடைசியாக அத்தையை வந்து பார்த்தவர், அவரோடுதான் அத்தை சென்றார்' என்ற விபரத்தை தியாகராஜன் மூலமாக அன்று காலை அறிந்து இருந்த விவேக்கிற்கு உற்சாகம் வடிந்து விட்டது.

அந்த தகவலை தியாகராஜனிடம் சொல்ல யோசித் தான். அரை குறையாகச் சொல்லி அவரை ஏன் அலைக் கழிக்க வேண்டும்? மாமாவிடம் சொல்வதை ஒத்திப்

போட முடிவெடுத்தாலும், அபிஷேக் நேரடியாக வாஸந்தியிடம் விபரம் சொல்லி விட, அவளால் ஒரு நிமிஷம் கூட காத்து இருக்க முடியவில்லை.

விவேக்கை, 'உடனே கிளம்ப வேண்டும்' என்று விடாமல் நச்சரித்து, பாட்டியின் சந்தேகப் பார்வையையும், அப்பாவின் ஆராய்ச்சிப் பார்வையையும், சமாளித்து, தங்களுக்கு அவசரமான அலுவலக வேலை வந்து விட்டதாகச் சாதித்து, தகவல் வந்த அரை மணி நேரத்தில் தனியாக கார் பிடித்து புதுச்சேரிக்குக் கிளம்பினார்கள்.

திருவண்ணாமலையில் இருந்து புதுச்சேரி செல்ல தேவையான ஒன்றரை மணி நேர கார் பயணம் முழுவதும் பத்து நிமிடத்திற்கு ஒரு முறை, 'அம்மாவைப் பார்த்தாச்சா?' என்று அபிஷேக்கை விடாமல் வாஸந்தி துருவி எடுக்க அவன் பொறுமையாக பதில் சொன்னான்.

''நீ ஹைவேல வரம்மா. நீ சீக்கிரம் வந்து விடுவாய். லீவ் நாள் பாரு, இங்கே நகரத்திற்குள் மாலை நேர போக்குவரத்துக்கு நெரிசல் ஜாஸ்தி இருக்கும்மா...'' என்று ஒரு முறை.

''எனக்கு ஏரியா பழக்கம் இல்லை வஸு. அப்பாவிடம் லாப்டாப்பை கொடுத்து அனுப்பிட்டேன். இருந்தால் அட்ரஸ் ஸ்பீடா கூகிள் மேப்பில் கண்டு பிடிக்கலாம்'' என்று ஒரு முறை.

''வஸு, அட்ரஸ் பார்த்துட்டேன். உள்ளே போய் பேசப் போறேன். நீ பதினஞ்சு நிமிஷம் என்னைத் தொந்தரவு பண்ணாமல் இருப்பாயா? உங்க அம்மாவைப் பார்த்து உடனே போன் போட்டு உன்னிடம் தருகிறேன்'' என்று



ஒரு முறை என்று ஒவ்வொரு முறையும் ஒரு காரணம் சொல்லிச் சமாதானப்படுத்தினான்.

கிஷோர் குமாரின் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி விட்டுக் காத்திருந்த அபிஷேக்கிற்கு, 'சுஜாதா எப்படி இருப்பார் என்பது தனக்குத் தெரியாவிட்டாலும், அவர் இங்கேயே இருந்தாலும், அவர் கிஷோர் குமாரின் மனைவியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மனம் தப்பை கட்டு கட்டினாலும், இந்த நிமிஷம் இந்த வீட்டுக் கதவை அந்த சுஜாதா ஆன்ட்டி வந்து திறக்கக் கூடாது' என்ற பிரார்த்தனை படு தீவிரமாக நடைபெற்றது.

இதுவரை இவ்வளவு தீவிரமாகப் பிரார்த்தனை செய்ததில்லை. வாஸந்தியை விரும்புவதை உணர்ந்த போது கூட அவனுக்கு அம்மா மீது நம்பிக்கை இருந்ததால், அப்பாவை அம்மாவை சமாளித்துக் கொள்வார் என்று அவன் இறைவனிடம் கோரிக்கை எதுவும் வைக்கவில்லை.

ஆனால் இந்த வினாடியில், வாஸந்தியின் மன நலம், அவளின் குடும்பத்தினர்களுக்கு, அப்பாவின் நிபந்தனையால் ஒரு தர்மசங்கடமான நிலை வந்து விடக்கூடாது என்ற பயம். அப்பா நிபந்தனையை திரும்பி பெறுவது மாதிரி ஒரு சூழல் வந்தால், அவருக்கு கௌரவக் குறைச்சலாக இருக்குமே என்ற கவலை, என்று அவனின் கட்டுப்பாட்டில் இல்லாத பல சூழ்நிலைகள் கண் முன் தோன்ற, அவன் மனம் ஆண்டவனிடத்தில் சரணடைந்தது.

கதவைத் திறந்தது ஒரு மத்திய வயது கிறிஸ்துவ பெண்மணி. அவரின் பொட்டு இல்லாத நெற்றியும், சிலுவைக் குறியிட்ட கனத்த சங்கிலி புடவைக்கு வெளியே தொங்கியதையும் பார்த்த வினாடியே அவன் முகத்தில் மலர்ச்சி வந்தது.

''வணக்கம் ஆன்ட்டி, நான் அபிஷேக். திருவண்ணா மலையில் இருந்து வருகிறேன். சுஜி ஆன்ட்டியைப் பார்க்கணும். கிஷோர் அங்கிளைப் பார்த்தால் முகவரி கிடைக்கும் என்று சிஸ்டர் சோபியா சொல்லி அனுப்பி னாங்க'' என்று துணிந்து கதை விட்டான் அபிஷேக்.

''என்னங்க, அக்காவைத் தேடி யாரோ வந்து இருக் காங்க...'' என்று உள்ளே குரல் கொடுத்தவர் காத்ரீன், திருமதி கிஷோர் குமார், மதர் ஐரீன் ஒத்துழைப்புடன், பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு சுஜாதா முன்னின்று நடத்தி வைத்த திருமண பந்தம் தோற்றுவித்த உறவு அந்த அக்கா என்ற அழைப்பு.

அவரின் அந்த சத்தமான குரலில், எட்டிப் பார்த்த வரை வட இந்தியர் என்று சுலபமாக அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தது. ''வணக்கம் அங்கிள், நான் சுஜி ஆன்ட்டியை அவசரமா ஒரு கல்யாண விஷமாக பார்த்துப் பேசணும்'' என்று சொன்ன அபிஷேக்கை விழி தெறிக்கப் பார்த்தார் கிஷோர்.

அந்த 'சுஜி ஆன்ட்டி' என்ற அழைப்பில், திருவண்ணா மலை என்ற வார்த்தையில் அவனை விவேக் என்று தாமாகக் கற்பனை செய்து கொண்ட கிஷோர், 'கம் இன்' என்று வரவேற்றார்.

''இல்லை பரவாயில்லை அங்கிள் இப்பவே நேரமாச்சு. நான் அவசரமா அவங்களைப் பார்க்கணும். ஆன்ட்டி முகவரி சொன்னால் நான் கிளம்பறேன். நான் இரவே ஊருக்குத் திரும்பணும்'' என்று வாஸந்தியை மனதில் வைத்துச் சொன்னான்.

''சரி, இரு, நானும் வருகிறேன். உன்னைத் தனியாக அவளிடம் அனுப்ப எனக்கு இஷ்டம் இல்லை'' என்று சொன்ன கிஷோரைப் பார்த்துப் புன்னகை செய்தான்.



''நான் நீண்ட நாட்கள் கழித்து, அவர்களின் திருமண உறவுகளிடம், இருந்து ஒரு தகவலுடன் போகிறேன். அவர்கள் நன்றாக இருப்பதில் உங்களுக்கு உண்மை யான அக்கறை இருக்கும் பட்சத்தில் எங்களை தனியாகக் கொஞ்ச நேரம் பேச விடலாமே? என்னை நம்பலாம். அவங்க உயிர், உடைமைகளுக்கு நிச்சயம். எந்த ஆபத்தும் வராது என்று என்னால் உறுதி அளிக்க முடியும். இப்பவும் நீங்க வந்தே ஆகணும் என்று சொன்னால், எனக்கு ஆட்சேபணை இல்லை. வாங்க வெளியே கார் இருக்கு. நான் காத்து இருக்கிறேன்'' என்று வாஸந்தி தனிமையில் அவரைச் சந்தித்தால் நன்றாக இருக்கும் என்ற ஆதங் கத்தில் சொல்லி விட்டுத் திரும்பி நடக்க முயற்சி செய் தான், அபிஷேக்.

''ஓகே நான் உன்னை நம்புகிறேன். அவங்க ஆரோ வில் க்ளோபல் வில்லேஜில் இருக்காங்க. அங்கே அன்பு மட்டுமே மதம். அங்கே கடுமையான வார்த்தைகளைப் பேசவோ, சண்டை போடவோ, அதிரடியாக நடந்து கொள்ளவோ உங்களுக்கு மனசு வராது என்று நம்பி இந்த முகவரியைத் தருகிறேன்'' என்று எழுதிக் கொடுத் தார் கிஷோர்.

''நிச்சயமா உங்க நம்பிக்கையை நான் காப்பாற்று வேன் அங்கிள். தேங்க்ஸ். நான் ஆன்ட்டியைப் பார்த்து விட்டு உங்களைத் தொடர்பு கொள்கிறேன்'' என்று விடை பெற்றவன் காருக்குள் கால் வைக்கும் முன்னே, வாஸந்தியை அழைத்தான்.

அவள் போனை எடுத்த வேகத்தில், தொலை பேசி வழியாகவே அழுத்தமாக முத்திரை பதித்தான் அபிஷேக். அவள் அந்தக் கொஞ்சலை சரியாகப் புரிந்து, 'அபி,

கண்டு பிடிச்சாச்சா?' என்று கேட்டவளின் குரலில் கண்ணீரும் சந்தோஷமும் ஒன்றை ஒன்று விஞ்சி நின்றது.

''எஸ் டியர், நான் உனக்கு சொன்ன அந்த ஸ்பெஷலான புத்தாண்டு வாழ்த்து உடனேயே பலிக்கப் போகிறது. நீ உங்க அம்மாவை இப்போ பார்க்கலாம்.'

''தேங்க்ஸ் அபி... தாங்க்யு சோ மச்...'' என்றவளின் குரல் உணர்ச்சிப் பெருக்கில் திணறியது.

''நீ விவேக்கிடம் போனை கொடும்மா, முதலில் நான் வழி சொல்லி விடுகிறேன்.''

''தரேன்! நீங்க அம்மாவைப் பார்த்துட்டீங்களா? அதை முதலில் சொல்லுங்க.''

''இல்லைடா, நீ முதலில் பார்க்கணும் என்று வெளியே தான் இருக்கேன். இன்னும் பத்து நிமிடத்தில் போய்டலாம். இடம் கண்டு பிடித்து வைக்கிறேன். நீயே முதலில் பாரு. விடிய விடியப் பேசு. உங்க அப்பாவைக் கூட காலையில் வரச் சொல்லலாம். அவசரம் வேண்டாம். நீ அம்மாவிடம் பேசிய பிறகு அவங்க என்ன மூடில் இருக்காங்க என்பதற்குத் தகுந்த மாதிரி உங்க அப்பாவை வரச் சொல்லலாம்.''

''அம்மா என்னோட பேசுவாங்களா அபி...'' என்றவளின் குரல் தழுதழுத்தது.

''இதென்ன கேள்வி வஸூம்மா! நிச்சயம் பேசுவாங்க...''

''அவங்களை யார் என்றே தெரியாமல் இத்தனை நாள் இருந்து விட்டேனே என்ற கோபம் இருந்தால்...''

''பெற்றவங்க கோபம் பிள்ளைகள் மேலே ரொம்ப நாள் நீடிக்க முடியாது வஸூ. அப்படியே இருந்தாலும் அதைத் தீர்க்க வேண்டியது உன் கடமை. நானும் உனக்கு உதவி பண்றேன். நீ போனை விவேக்கிடம் கொடும்மா. இந்த இடத்தைத் தாண்டி போய்டப் போறீங்க. இது பாண்டிச்சேரிக்கு போவதற்கு முன்னாடியே இருக்கு'' என்று அவசரமாகச் சொன்னான் அபிஷேக்.



''எங்கே சொல்லுங்க, எனக்கு இந்த ரோட் விவேக்கிற்குத் தெரிந்ததை விட நல்லாத் தெரியும். நான் இங்கே காலேஜ் படிக்கும்போது ஆரோவில் மாத்ரி மந்திர் பார்க்க வந்து இருக்கிறேன்'' என்று வாஸந்தி சொல்லி முடிக்க அவன் திகைத்தான்.

''உங்க அம்மா அங்கேதான் இருக்காங்க. நான் குடியிருப்பு பகுதி நுழைவிடத்திலேயே இருக்கேன்'' என்று முடிக்கும் முன்பு அவள் விசும்பினாள்.

''ஆறு மாசம் முன்னாடி அந்த இடம் நான் போய் இருக்கேன். ஆனால் எனக்கு... எங்க அம்மா அங்கே இருப்பது தெரியாமல்...'' என்று விசும்ப அபிஷேக் தேற்றினான்.

''ஷ்! வஸூ! ப்ளீஸ் அழாதே, என்னம்மா இது? எல்லாப் பிரச்னையும் தீரும் நேரத்தில் போய் கண்ணைக் கசக்கிட்டு... முதல் முதல்ல உங்க அம்மாவைப் பார்க்கப் போகிறாய். இப்படியா அழுதுட்டுப் போய் நிற்கப் போகிறாய்? சியர் அப் பேபி, அழகா சிரிச்ச முகத்தோட, பெரிய பொக்கேயோட, இல்ல ஒரு ஸ்வீட் பாக்ஸோட, ஓடிப் போய் உங்க அம்மாவைக் கட்டிப் பிடிச்சு... கன்னத்தில் இதனை வருஷத்து அன்பை எல்லாம் சேர்த்து வச்சு அழுத்தமா முத்தமிட்டு, ஐ லவ் யூம்மா சொல்லி...'' அவன் பேச்சில் அவளைத் தேற்றிக் கொண்டு இருக்கும்போதே, கார் உள்ளே நுழைவது தெரிய அவன் புன்னகைத்தான்.



# 16

பொங்கல் திருநாளுக்கு மறுநாள் தான் திருவண்ணாமலையில் இருந்து கிளம்பிய நாள். இன்றோடு பதினெட்டு ஆண்டுகள் முடிந்து விட்டது. தனது திருமணத்திற்கு உதவிய தன்னுடைய மாமா மகனின் திருமணத்திற்கு உதவ தான் நினைத்தது அவ்வளவு பெரிய தவறா? தன்னுடைய காதல் திருமணத்தை ஏற்றுக் கொண்டவர்களால் ஏன் கிஷோரின் காதல் திருமணத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை? காதலுக்கு மதம் தடையாக இருக்கக் கூடும் என்பதை அன்றுதான் கண் கூடாக அறிந்தார்.

தனது தேவையை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றி, தனக்கு ஒரு முழுமையான திருமண வாழ்வைப் பரிசாகத் தந்தவன், ஒரு உதவியைக் கேட்ட போது, அதுவும் அவன் செய்த அதே மாதிரியான உதவியைக் கேட்டபோது, எப்படி அவளால் மறுக்க முடியும்? தனக்குப் புரிந்த அந்த நியாயம் ஏன் தியாகுவிற்குப் புரியவில்லை. எங்கே அவள் தவறு செய்தாள்? இத்தனை ஆண்டுகள் கழிந்தும் அவருக்குப் புரியவில்லை.

மன அமைதியைக் குலைக்கும் பழைய நினைவுகளை விரட்டி, அடிக்க அன்றாடம் சரணடையும் ஆன்மீகப் புத்தகங்களை அன்றும் கையில் எடுத்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் சுஜாதா.



''தெய்வ தரிசனம் கனவிலும், தியானத்திலும், நிஷ்டையிலும் கிடைப்பதுண்டு. கண் திறந்துள்ள பொழுதும் கிடைப்பதுண்டு. மனம் மௌனமடைந்த நேரத்திலும், நெஞ்சம் நெகிழ்ந்த பொழுதும், தியானம் சிறப்பாகச் சித்தித்த பொழுதும், உயர்ந்த ஆன்மிகச் சூழலை நாம் அணுகிய பொழுதும், நம்பிக்கையோடு அன்னையை நினைவு கொள்ளும் பொழுதும், அன்னை பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறார்.''

ஆரோவில் என்ற புண்ணிய பூமி உருவாகிய விதத்தைப் பற்றியும், பகவான் ஸ்ரீ அரவிந்தர், மற்றும் அன்னை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைக் கூறும் புத்தகத்தில் கவனத்தைப் பதித்து இருந்த சுஜாதா அழைப்பு மணி ஓசை கேட்டு நிமிர்ந்தார். 'இந்நேரத்தில் யார் இங்கே?' என்ற கேள்வியுடன் கதவைத் திறந்தவர் விழிகள் இமைக்க மறந்தது.

நம்பிக்கையோடு அன்னையை நோக்கியவர்களுக்கு அவர்கள் விரும்பும் வடிவத்தில் அவர் காட்சி அளித்து இருக்கிறார். சில நேரங்களில் இளைய வயதினராகவும், சில நேரங்களில், பகவான் ஸ்ரீ அரவிந்தராகவும் பக்தர்களின் எண்ணத்திற்கேற்ப அவர் காட்சி அளித்து இருப்பதை புத்தகங்களில் படித்து இருந்த சுஜாதாவிற்கு, அன்னை இப்போது தனது நெடுநாள் ஆசையை நிறைவேற்ற தனது மகளின் ரூபத்தில் வந்து விட்டாரோ என்ற எண்ணத்தில் மனம் நெகிழ்ந்து கண்ணில் நீர் துளிர்த்தது.

'வா..ஸ..ந்..தி... து..ம்...'' இதழ்கள் அசைந்ததை வாஸந்தியால் உணர முடிந்தாலும் சத்தம் என்னவோ சுஜாதாவின் தொண்டையில் இருந்து வெளிவரவில்லை.

''அம்மா...'' என்ற ஒற்றை வார்த்தை அழைப்பு தொண்டையில் இருந்து வெளிவருவதற்குள், மளமள வென்று கண்களில் நீர் பெருகி கன்னத்தில் வடிய துவங்க, சுஜாதா என்ற சிலைக்கு உயிர் வந்தது. இடது கரம் மகளை தோளோடு சேர்த்து அணைக்க, வலது கரம் உயர்ந்து, அவளின் கண்களைத் துடைத்தது. ''மத் ரோ பேட்டி, ப்ளீஸ் பேபி...'' என்றவரின் சுஜாதாவின் கரங்கள் மகளின் கண்ணீரைத் துடைக்கும் வேலையில் ஈடு பட்டு இருந்தாலும் அவரின் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்யும் பணியில் இரு மடங்கு வேகத்தில் ஈடுபட்டு இருந்தது.

அந்த பாசப் பிணைப்பில், இருவருக்குமே மேலே வார்த்தைகள் வராமல், தொண்டை சத்யாக்ரகம் செய்ய அவர்களுக்கு வார்த்தைகள் இல்லாத அமைதியும், இறுகிய அணைப்புமே, ஒருவர் மனதை அடுத்தவருக்கு உணர்த்த போதுமானதாக இருந்தது. பல நிமிடங்கள் கழிந்த பிறகே தன்னை நிதானப்படுத்தி சாதாரணமான பேச்சு வார்த்தையை சுஜாதாவால் தொடர முடிந்தது.

''உள்ளே வாடா, இந்நேரத்தில் தனியாகவா வந்தாய்?'' என்றவரின் பார்வை அவள் பின்னால் கணவரைத் தேடி ஏமாந்ததோ?

''இல்லைம்மா, கூட வந்தாங்களே?'' என்றவளின் பார்வை சுற்றும் முற்றும் அலைய அங்கே அபிஷேக் விவேக் இருவரையும் காணவில்லை.

''நம்ம ரெண்டு பேரும் தனியா பேசட்டும் என்று விட்டுட்டுப் போய்ட்டாங்க போல. கொஞ்ச நேரம் கழித்து வருவாங்க'' என்று சொன்னவளின் முகத்தில் அபிஷேக்கை நினைத்த நிமிடத்தில் கனிவும் பெரு



மிதமும் போட்டி போட்டது. அந்த உணர்வை, தியாக ராஜனுக்கு அவள் தருகிறாள் என்று நினைத்த சுஜாதா வின் மனம் இரு கூறாகப் பிரிந்து சண்டை போட்டது.

அப்பாவின் மேல் இவ்வளவு மரியாதையும் ஆசையும் வைத்து இருக்கும் மகள் மேலே பெருமிதமும், இத்தனை ஆண்டுகள் கழித்த மகளுக்காக வந்தவருக்கு, தன்னைப் பார்த்து ஒரு வார்த்தை பேசத் தோன்றவில்லை என்ற வருத்தமும் ஒருங்கே தோன்றியது. ''அவங்களுக்கு எப்ப தோணுதோ அப்போ வரட்டும். நீ உள்ளே வா'' என்றவரின் குரல் வருத்தத்தில் இருந்தது.

அவரின் பின்னால் நடந்தவளுக்கு அவரின் வருத் தத்தை உணர முடிந்தது. அவரின் கை பற்றி நிறுத்தி, ''ரொம்ப சாரிம்மா, நேற்றுதான் எனக்கு நீங்க யார் என்ற உண்மை தெரியும். நீங்க யார் என்று தெரியாமல் அன்று ஆபீசில்...'' என்று சிதைந்த வார்த்தைகளை துண்டு துண்டாக வெளியேற்றி, 'என்னை மன்னிச்சுடுங்கம்மா' என்ற வேண்டுதலுடன் காலில் விழுந்தாள்.

''அச்சோ என்னடா இது? எழுந்திரி'' என்று குனிந்து தூக்கியவர், ''உன்னை மன்னிக்கும் அளவுக்கு நீ தப்பு பண்ணவில்லை. தப்பை எல்லாம் பெரியவங்க பண் ணிட்டு அதற்கான தண்டனையை உன்னை அனுபவிக்க விட்டு விட்டோம். உண்மையைச் சொன்னால் நீதான் என்னை மன்னிக்க வேண்டும்'' என்று அவளின் கை பற்றி தன் நெற்றியில் அழுத்தி சொன்னார் சுஜாதா. அவரின் கண்கள் கலங்கிக் குரல் தழுதழுத்தது.

''ஹய்யோ... என்ன வார்த்தை சொல்லிட்டீங்கம்மா? நான் போய் உங்களை...''

''ஆமா வாஸந்தி. நீதான் என்னை மன்னிக்கணும். அவசரப்பட்டுப் பெரியவங்க சம்மதம் இல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டது நாங்க. அப்படிச் செய்த திருமணத்தில், விட்டுக் கொடுத்து வாழ்ந்து அந்த பந்தத்தின் புனிதத்தைக் காப்பாற்றத் தவறியது நாங்க. தங்க விக்ரகம் மாதிரி ஒரு அழகான பெண் குழந்தை இருக்கும்போது அதன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல், என் மனசை முன்னிருத்தி சின்ன சண்டையைப் பெரிதாக்கி வீட்டை விட்டு வெளியே வந்தது நான்...''

''ஏன்மா அப்படி என்னை விட்டுட்டு வெளியே வந்தீங்க?'' என்று கேட்கத் துடித்த வாயை அடக்கினாள் வாஸந்தி. நல்லதோ கெட்டதோ, தனக்கு ஒரு காய்ச்சல் தலைவலி என்றால், உடனே நெற்றியில் இஞ்சி பற்றுப் போடவும், ஜீரக கஷாயம் வைத்துத் தரவும் ஆள் இருந்தது. தனக்கு ஒன்று என்றால் பதறித் துடிக்க ஒரு குடும்ப சூழல் இருந்தது. இவர் இங்கே தனியாக இருப்பதைப் பார்த்தால் இங்கே மூன்று நாட்கள் எழாமல் இருந்தால் கூட அதைப்பற்றி கவலைப்பட ஒரு ஈ காக்காய் இருக்காதே? எத்தனை ஆண்டுகள் இந்த தனிமை சிறையில் வாழ்ந்து இருக்கிறார்? அம்மாவின் நிலை தன்னைக் காட்டிலும் மோசம் என்ற ஞானோதயம் தோன்றி, அவளை அந்தக் கேள்வியைக் கேட்க விடாமல் தடுத்தது.

''என்னடா ஏதோ கேட்க ஆரம்பிச்சு நிறுத்தி விட்டாய்? ஏன் உன்னை விட்டுட்டு வந்தேன் என்றுதானே கேட்க நினைத்தாய்?'' என்று சொன்னவரின் காதுகளில் தியாகராஜனின் அன்றைய வார்த்தைகள் மீண்டும் கேட்டு



அதே வலியுடன் துடிக்க வைத்து, கண்களில் நீர் துளிர்த்தது.

அந்த கண்ணீரைப் பார்த்து பதறி, உறுதியான குரலில், ''இல்லைம்மா, அது பற்றி எனக்கு எந்தக் கேள்வியும் இல்லை. உங்களால தாங்க முடியாமல் போனதால் தானே அங்கே இருக்க முடியாமல் வெளியே வந்துட்டீங்க. அது பரவாயில்லை. ஆனால் இத்தனை நாள் நேரில் பார்க்க வரலை. மதர் மூலமா மட்டுமே பார்த்தீங்க. பேசினீங்க. பரிசுகள் கொடுத்தீங்க. அது வேற விஷயம். ஆனால் இந்த முறை நேரில் வந்து பார்த்துப் பேசிட்டு ஏன்மா என்னிடம் நீங்க யார் என்று சொல்லவில்லை? எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்ததும்மா'' என்று அவரைத் தேற்றும் விதமாகவும், தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் கேட்டாள் வாஸந்தி.

''அது என்னுடைய விதி வாஸந்தி. எல்லா குழந்தைகளுக்கும் அம்மா தான் அப்பா யார் என்று அடையாளம் காட்டணும். ஆனால் என் நிலையைப் பார்த்தாயா? அந்த எண்ணம்தான் என்னை வாயைத் திறக்க விடாமல் பண்ணி விட்டது. நீ ஒரு மடங்கு கஷ்டப்பட்டாய் என்று தெரிந்தால், அது மாதிரி நாலு மடங்கு எனக்குக் கஷ்டமா இருக்கும் வாஸந்தி. நீ என் பொண்ணுடா. நீ என் வயிற்றில் நான் பத்து மாசம் சுமந்து பெற்ற, என் உயிரிலும் உணர்விலும் நீக்கமற கலந்து இருக்கும் ஒரு உயிர் இல்லையா? உன்னை கஷ்டப்படுத்தணும் என்று நான் நினைப்பேனா வாஸந்தி?'' என்று சுஜாதா சொல்லி முடிக்கும் முன்பே வாஸந்தி பதறித் துடித்து விட்டாள்.

''நான் அப்படிச் சொல்லலைம்மா. என்னைக் கஷ்டப்படுத்தணும் என்ற எண்ணம் உங்களுக்குக் கிடையாது

என்று தெரியும். என்னை மாதிரி பெற்ற தாயை அடையாளம் தெரியாமல் ஒரு பொண்ணு இந்த உலகத்தில் இருக்க வாய்ப்பே இல்லை என்ற குற்ற உணர்வில் தவிச்சுப் போயிட்டேன். இதை வெளியே சொல்ல முடியாமல் நான் தவித்தது அந்த கடவுளுக்குத்தான் தெரியும்'' என்று கண்ணில் கண்ணீர் பெருக அவள் சொல்லி முடித்த போது, முந்தைய தினம் மகள் அனுபவித்த பல மடங்கு அதிகமாக அனுபவித்தார் சுஜாதா.

வெளியே சொல்ல முடியாமல் அழுவது எப்படி வலிக்கும் என்று எனக்குத் தெரியும் பெண்ணே! உனக்காவது ஒரு நாள் துன்பம். ஒரு வார்த்தை நீ சொன்ன உடன், உன் சந்தோஷத்திற்காக உன் அப்பா உன்னை இங்கே அழைத்து வந்து விட்டார். உன் கஷ்டம் இதோ தீர்ந்து விட்டது. என்னுடையது நீண்ட கால கஷ்டம். அது தீரவும் வாய்ப்பு இல்லை. நீ இங்கே வந்த விதத்திலேயே, அவருக்கு நான் இருக்கும் இருப்பிடம் தெரிந்து இருக்கு என்பதும் புரியுது. ஆனால் அவருக்குத் தானாக வர விருப்பமோ மனமோ இருக்கவில்லை. இப்படி வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு தான் செய்த பிழை என்ன என்று அவரின் மனம் ஊமையாய் அழுதது.

''உங்களை அழ வைக்கவோ, குறை சொல்லவோ வரலைம்மா. உங்களைப் பார்த்து சந்தோஷமா பேசணும் என்று வந்தேன். நேற்றைய வேதனை தாங்க முடியாமல் ஏதேதோ சொல்லிட்டேன். அதை மறந்துடலாம். நீங்க எப்படிம்மா இருக்கீங்க?'' என்று தன் கண்களையும், அம்மாவின் கண்களையும் துடைத்தபடி உற்சாகமூட்டும் குரலில் விசாரித்தாள் வாஸந்தி.

''நீயே பாரு! எப்படி இருக்கேன் என்று சொல்லு?'' என்று தானும் புன்னகைத்து எதிர்கேள்வி கேட்டார்



சுஜாதா, ''ம்ம்ம்...'' என்று அவரை சற்று தள்ளி நிறுத்தி, உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்வையால் அளந்தாள் வாஸந்தி.

''ம்ம்ம், என்னளவு இல்லாவிட்டாலும் நீங்களும் கொஞ்சம் அழகாதான் இருக்கீங்க. உங்களை முதன் முதலா சென்னையில் பார்த்தபோது ஐம்பது வயசு இருக்குமோன்னு எனக்குத் தோணுச்சு. அப்ப தூக்கிப் போட்டு இருந்த கொண்டை இப்ப இல்லை. அதுக்கு ஒரு அஞ்சு வயசு மைனஸ் பண்ணிடலாம். இந்த முகத்தில இப்ப என்னைப் பார்த்த பிறகு சேர்ந்த புன்னகை உங்க வயசுல அஞ்சைக் குறைச்சுடுச்சு. இந்த தொள தொள ப்ளவுஸ், அழுது வடியும் கலரில் ஒரு காட்டன் சேரி இல்லாமல் ஒரு சுடிதார் போட்டா, ஒரு அஞ்சு வயசு குறைச்சுடலாம். அதோட ஷாம்பூ போட்டு, லூஸ் ஹேர் விட்டோ, இல்லை போனி டெயில் போட்டு விட்டால், இன்னும் ஒரு அஞ்சு வயசு குறைச்சுடலாம் அப்புறம்...''

''போதும் போதும் நிறுத்து, இப்பவே இருபது வயசைக் குறைச்சாச்சு, இன்னும் எதையும் குறைக்க வேண்டாம். நான் உன் அம்மா.''

''அதைத்தான் நானும் சொல்றேன். எ..ங்..க அ..ம்..மா இப்படியா இருப்பது? ஆளை அசத்துவது மாதிரி சூப்பரா இருக்க வேண்டாமா?'' என்று கண் சிமிட்டி, அவரின் கன்னம் கிள்ளி கொஞ்ச, சுஜாதாவிற்கு கண்களில் நீரும், இதழ்களில் புன்னகையும் ஒரே சமயத்தில் மலர்ந்தது.

''இங்கே என்னம்மா செய்றீங்க? மதுரை உங்களுக்கு எப்படிம்மா தெரியும்? உங்களுக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது எல்லாமே சொல்லுங்க. என்னைப் பற்றி உங்களுக்கு நிறைய விஷயம் தெரிஞ்சு இருக்கு.

ஆனால் எனக்கு தான் உங்களைப் பற்றி ஒண்ணுமே தெரியலை. யாருமே சொல்லலைம்மா'' என்று வருத்தமாகச் சொன்னாள்.

''எனக்கு உன்னைப் பிடிக்கும். உனக்குப் பிடிக்காத எதுவும் எனக்குப் பிடிக்காது. அவ்வளவுதான். வீட்டுல அ..ப்..பா பா..ட்..டி எல்லாம் நல்லா இருக்காங்களா?'' என்று விசாரித்தார் சுஜாதா. பின் பாதி வாக்கியத்தில் குரல் தேய்ந்து வெளியே வரவில்லை.

''எல்லோரும் நல்லா இருக்காங்கம்மா. அப்பா வீட்டில் இருக்கும் முக்கால்வாசி நேரம் வாசலில் இருக்கும் குல்மோகர் மரத்தடியில் இருப்பார். நீங்க வச்சதோ?'' என்று விசாரித்தாள். கணவனைப் பற்றி காதில் விழும் முதல் தகவல் இதமாக இருக்க அதை மனம் ஆவலுடன் ரசித்தது.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''பொதுவா இந்தப் பக்கம், தென்னை மரம், வேப்ப மரம் தான் முதல் விருப்பம். அப்புறம் பழ மரங்கள், கொய்யா, மா, எலுமிச்சை, இப்படி வைப்பாங்க. வீட்டுல இந்த மரம் வைப்பது கம்மிதான். பொது இடங்களில் இருக்கும். அது அப்பாவிற்குப் பிடித்த இடம் அது. அதான் கேட்டேன்'' என்று புன்னகை செய்ய, சுஜாதா பெருமிதம் பொங்க தலை அசைத்தார்.

''நினைச்சேன், அப்பா வெளியே உங்களைப் பற்றி அதிகம் பேச மாட்டாரே தவிர, பாட்டி உங்களைப் பற்றிப் பேசவும் விடமாட்டார். அதுல அவரோட மனசு புரியும். உங்களைப் பற்றி பேச்சு வந்தால், அப்பா மனசு கஷ்டப் படுகிறார் என்பதால் தான் நான் அவரிடம் விசாரிக்க



வில்லை. பாட்டி எப்போவுமே கெடுபிடிதான். நீங்களும் என் கண் முன் வந்ததில்லையே? அதனால் உங்களுக்கு என் மேலே அக்கறை இல்லையோ என்று...'' சொல்லும் போதே வலியில் சுருண்ட தாயின் முகம் பார்த்துப் பதறினாள்.

''ஹய்யோ! அந்த எண்ணம் இப்போ இல்லை. வருஷத்திற்கு இரண்டு முறை வந்து பார்த்து இருக்கீங்க. எனக்கு பரிசு கொடுத்து இருக்கீங்க. உண்மை தெரிவதற்கு முன்னால் உங்களைத் தப்பா நினைத்ததை எண்ணி ரொம்ப வருத்தப்படுகிறேன். சாரிம்மா...'' என்று வருந்தினாள்.

''உன் மேலே தப்பில்லைடா. நீ வருத்தப்படத் தேவை இல்லை...''

''புக்ஸ் படிப்பது தான் உங்களுக்குப் பொழுது போக்கா? பரிசுகள் எல்லாமே அதுவா இருந்ததே?''

''ம், பிடிக்கும். அங்கே எங்க வீட்டில் இருந்து அவசரமா கிளம்பும்போது கூட என்னோட பையில் இருப்பது புத்தகம் இருந்தது...''

''எனக்கும் பிடிக்கும்மா. அதுவும் அப்பா சொல்லிக் கொடுத்ததுதான். தினமும் இரவில் ஒரு மணி நேரம் கட்டாயம் படிக்கணும். அதுவும் நகைச்சுவை துணுக்குகள், இல்லை ஆன்மீக புத்தகங்கள், அல்லது பாசிடிவ் எண்ணங்களைத் தூண்டும் கட்டுரைகள், படிக்கச் சொல்வார். சொல்வது மட்டும் இல்லை. அவரும் செய்வார்...''

''இது ஒண்ணும் புதுசு இல்லையே? ராத்திரி நேரம் நிலா கட்டி சோறூட்டும்போதே புராண கதைகளைச்

சொல்வது பழக்கம் தானே? கேட்பதற்கு பதில் படிப்பது...'' என்று சமாதானமாகச் சொல்லும்போதே தன் விருப்பங்களும், பழக்க வழக்கங்களும், தன் கணவனும் மகளும் கடைபிடிப்பது தெரிந்து மனம் பெருமிதத்தில் விம்மியதை அவரால் மறைக்க முடியவில்லை.

''மணி ஆச்சே! நீ சாப்பிட வேண்டாமா? உனக்கு இப்ப சாப்பிட என்ன பண்ணட்டும்?'' என்று விசாரிக்கும்போதே அழைப்பு மணி அடித்தது. அந்த சத்தத்தில் வேகமாகத் திரும்பி, ''அபி...'' என்ற அழைப்போடு வேகமாக வாசலுக்கு ஓடிய வாஸந்தியை ஆச்சரியமாகப் பார்த்தார் சுஜாதா.

வாசலுக்கு வந்த அந்த இளைஞனைத் தாவி அணைத்தவள், ''தேங்க்ஸ் அபி. உங்களை நான் என் வாழ்க்கையில் மறக்கவே முடியாது. உங்களுக்கு நான் ரொம்ப கடமைப்பட்டு இருக்கேன். நான் மனசுல ஆசைப்பட்டதை ஒரே நாளில் சாதித்துக் காட்டி, என்னை உலகத்தையே வென்ற அளவுக்கு சந்தோஷப்பட வச்சுட்டீங்க. ஐ லவ் யு அபி'' என்று சொன்ன ஒவ்வொரு வாக்கியத்திற்கும் வார்த்தைகளின் அழுத்தம் கூட இடைவெளியின்றி பேசி முடித்த வாஸந்தி, முத்தாய்ப்பாய், அவன் கன்னத்தில் இதழ் பதித்ததைப் பார்த்து பிரமித்தவருக்கு, பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையில் பொங்கல் தினத்தில் தன் வீட்டிற்கு, மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பின், பிறந்த வீட்டுச் சொந்தம் என்று வருகை தந்த கிஷோரை தான் வரவேற்ற விதத்தை ஆக்ஷன் ரீப்ளே பார்த்த மாதிரி இருந்தது.



# 17



தன்னைக் கண்டதும் இப்படி ஓடி வந்து அணைத்து முத்தமிடுவாள் என்பதை எதிர்பாராத அபிஷேக், திக்குமுக்காடிப் போனான். ''ஹேய் வஸு! வஸும்மா, அம்மா பார்க்கறாங்க பாரு...'' என்று அவள் முதுகில் லேசாகத் தட்டி, அவளின் அணைப்பை விலக்க முயன்றான்.

அவனின் குரலிலும் வருடலிலும் விலகியவள், அம்மாவிடம் திரும்பி ஒரு கூச்ச சிரிப்பை உதிர்த்து, ''அம்மா, இது அபிஷேக், அபிதான் உங்க அட்ரஸ் கண்டுபிடிச்சு எனக்குச் சொன்னது...'' என்று சொல்லிவிட்டு, ''எங்கே விவேக்?'' என்று தேடினாள்.

''உங்களுக்கு நான் கண்ணில் படுவேனா? உங்க கூடவே இருந்து பாட்டிகிட்டே அப்பா கிட்ட எல்லாம் கதை சொல்லி, திருவண்ணாமலையில் இருந்து காரில் கூட்டிட்டு வந்த ஆளை விட்டுட்டீங்க. வெறும் தகவல் போனில் சொன்ன ஆளுக்கு என்ன கவனிப்பு?'' என்று வாஸந்தியிடம் அலுத்துக் கொண்டவன், சுஜாதாவிடம் திரும்பினான்.

''அத்தை, என்னை ஞாபகம் இருக்கா? மாதவியோட பையன் விவேக். பார்த்து நாளாச்சு, நீங்க அப்படியே இருக்கீங்க. ஆனால் நான் வளர்ந்துட்டேன். அபி என்னோட பிரெண்ட். அதுக்கு மேலே சாந்தியைக்

கல்யாணம் பண்ணிக்கப் போறவன். மேடம் அதைச் சொல்ல மறந்துட்டாங்க'' என்று சிரிப்போடு தன்னையும் அபிஷேக்கையும் அறிமுகம் பண்ணிக் கொண்டான்.

''வாப்பா, நீ விவேக் என்று அறிமுகம் செய்யா விட்டாலும், நீ சாந்தியிடம் பேசிய விதத்தில் இருந்து நீ யார் என்பதை சுலபமா ஊகிக்க முடியுமே? வாங்க அபிஷேக். பேசிட்டு இருங்க. நான் சாப்பிட ஏதாவது எடுத்து வருகிறேன்'' என்று அடுப்படிக்கு திரும்பினார் சுஜாதா.

''இது ரொம்ப அநியாயம், இதை ஒத்துக்க முடியாது'' என்று அபிஷேக் போர்க்கொடி உயர்த்த, வாஸந்தி சிரித்தாள்.

''எதுடா அநியாயம், அவங்க மருமகனுக்குச் சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வரேன் என்று போறாங்க. உனக்கு வேண்டாம் என்றால் சும்மா இரு. அவங்க எனக்கு தருவதை ஒத்துக் கொள்ளவோ மறுக்கவோ நீ யாரு?'' என்று வேண்டும் என்றே தவறாகப் பொருள் கொண்டு அபிஷேக்கிடம் சண்டைக்கு நின்றான் விவேக்.

''நீங்க என்ன பேசிக்கிறீங்க என்றே எனக்குப் புரியலை. இப்போ எதுக்கு சண்டை விவேக்?''

''விவேக்கை வாப்பா என்றும், அபியை வாங்க என்றும் சொன்னதை ஒத்துக் கொள்ளவில்லை. வீட்டு ஆளாக நடத்தச் சொல்லி கேட்கிறார் அபி. விவேக் சும்மா பிரெண்டை வம்பிழுக்கிறான். ஒண்ணும் சீரியஸா இல்லை. எனக்குப் பசிக்குது, வாங்க ஏதாவது சாப்பிட எடுத்துட்டு வரலாம்'' என்று வாஸந்தி விளக்கம் சொல்ல மூவரும் புன்னகைத்தனர்.

''இல்லை அத்தை, இன்று நீங்க அடுப்படியில் கஷ்டப்பட வேண்டாம். நானும் விவேக்கும், சாப்பிட்டுட்டு



உங்களுக்கும் சாப்பிட வாங்கி வந்து இருக்கிறோம். நீங்க உங்க பொண்ணோட நேரம் செலவு பண்ணுங்க. நானும் விவேக்கும் சென்னைக்குக் கிளம்புகிறோம்'' என்று கனிவோடு சொன்னான் அபிஷேக்.

''ஏன் என்ன அவசரம்? இரவு தங்கி விட்டுக் காலையில் போகலாமே? இருங்க, ஒரு டீயாவது எடுத்துட்டு வரேன்'' என்று உள்ளே சென்றார்.

''என்னடா திடீர் என்று சென்னைக்குப் போகலாம் என்று சொல்ற? இதை நீ ஹோட்டலில் சொல்லவே இல்லியே?'' என்று புரியாமல் கேட்டான் விவேக்.

''வஸு! இதுல ரசகுல்லா இருக்கு. அத்தைக்குப் பிடிக்கும் என்று விவேக் சொன்னான். கொண்டு போய் உங்க அம்மாவிற்குக் கொடுத்து உன் அன்பை அழுத்தமா நான் அப்ப போனில் சொல்லிக் கொடுத்த மாதிரி சொல்லு பார்ப்போம்'' என்று அவளை உள்ளே அனுப்பினான் அபிஷேக்.

வாஸந்தி உள்ளே போன பிறகு விவேக்கிடம் திரும்பி, ''எனக்கு முன்னாடி தோணலையே? இப்பதான் தோணுச்சு. வஸுவிடம் இருந்து இப்படி ஒரு வரவேற்பை நான் எதிர்பார்க்கவே இல்லை விவேக். அம்மாவைப் பார்த்ததற்கே இவ்வளவு சந்தோஷம் அவளுக்கு இருக்கு என்றால், மாமா நிலையைக் கொஞ்சம் நினைத்துப் பாரு. அவருக்கு நாம் இன்னும் தகவலே சொல்லலை. இவங்க தனியாக இருப்பது தெரிந்தால் உடனே வரணும் என்று அவர் நினைக்கலாம். பதினெட்டு வருஷம் என்பது மிக நீண்ட காலம். நீ சொல்வதைப் பார்த்தால் ரெண்டு பேரும் ஒருவர் மேல் ஒருவர் பிரியமாக இருப்பது போல தான் தோன்றுகிறது. அதான், அவர்களுக்கு தனிமை கொடுக்கலாம் என்று நினைத்தேன்...''

''நீ சொல்றது சரிதான். ஆனால் நாம் சாந்தியையும் அழைத்துப் போகலாம். அவங்களுக்குள் இருக்கும் மன வேறுபாடுகளை சண்டை போட்டோ, பேசியோ அவங்களே தீர்த்துக் கொள்ளட்டும், அதனால் இப்ப மாமாவிடம் போன் பண்ணிச் சொல்லி காலையில் வரச் சொல்வோம். கொஞ்சம் முன்னாடியே நாம் கிளம்பி விடலாம் நைட் சாந்தி அவங்க அம்மாவோடு வேண்டிய அளவுக்குப் பேசட்டும். நாம் வெராண்டாவிலேயே படுத்துக்கலாம். என்ன சொல்ற?''

''ம்ம்ம் எனக்குப் பிரச்னை இல்லை. காலையிலேயே போகலாம். அம்மாவிடம் தகவல் சொல்லிட்டு வரேன்'' என்று போனுடன் வெளியே சென்றான் அபிஷேக்.

* * *

அபிஷேக் சொன்ன ஸ்வீட்டோடு உள்ளே சென்ற வாஸந்தி, அடுப்படியில் தேயிலை போட்ட நீர் கொதித்துப் பொங்கி வழிந்து கொண்டு இருந்ததைப் பார்த்தும் பாராமல் அடுப்பின் எதிரேயே நின்று இருந்த சுஜாதாவைப் பார்த்து வாஸந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

அடுப்பு மேடை மேலே ஸ்வீட் பாக்சை வைத்தவள், தேநீரில் பாலைக் கொஞ்சம் ஊற்றி அடுப்பை அடக்கி விட்டு அவரின் தோளைத் தொட்டு 'அம்மா', என்று அழைக்கும் வரை சுஜாதாவிற்கு அவள் வந்ததே தெரியவில்லை.

''என்னம்மா டீ பொங்கி வழியுது, பார்க்கலையா? என்ன ஆச்சு? ஏதாவது பிரச்னையா?''

''வாஸந்தி... ப்ச்! சாரி... சாந்தி, நீ உன் பாட்டியை எதிர்த்துப் பேசுவாயா? சொன்ன பேச்சு கேட்க மாட்டாயா?'' என்று அவசரமாகக் கேட்டார் சுஜாதா.



''பாட்டியை எதிர்த்து அப்பாவே ஒண்ணும் சொல்லாத போது நான் எப்படிம்மா? பாட்டி பேச்சை மீறி நாங்க எதுவும் செய்ய மாட்டோம்மா. ஏன் இப்படிக் கேட்கறீங்க?''

''கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு, நீங்க இங்கே வந்தது பாட்டிக்கு அப்பாவிற்கு தெரியுமா?''

''இல்லைம்மா. தெரியாது. விவேக் வேலை இருக்கு என்று சொல்லிக் கூட்டிடு வந்தான். அத்தை மாமா, விவேக் எல்லாம் பொங்கலுக்காக அங்கே வந்து இருந்தாங்க. என்னம்மா ஆச்சு?''

''அப்ப டீ குடிச்சுட்டு உடனே கிளம்பு. முதலில் வீட்டுக்குப்போய் பாட்டியிடம் எல்லா விஷயமும் சொல்லிடு. பாட்டிக்குத் தெரியாமல், அவங்க சம்மதம் இல்லாமல் நீ இனிமேல் ஒரு காரியமும் செய்ய மாட்டேன் என்று எனக்கு ப்ராமிஸ் பண்ணு...''

''இதுவரைக்கும் அப்படித்தான் இருக்கேன்மா. இனிமேலும் இருப்பதில் எனக்குப் பிரச்னை இல்லை. ஆனால் நீங்க கேட்ட இத்தனை கேள்விக்கு பதில் சொன்னேன் இல்லையா? நான் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்கு நீங்க ஏன்மா பதில் சொல்ல மாட்டேங்கறீங்க? ஏன் திடீர் என்று டென்ஷன் ஆகிட்டீங்க? அபி வருவதற்கு முன் நிமிஷம் வரைக்கும்...'' வாஸந்தியின் பேச்சு அங்கே நின்றது.

''அம்மா, உங்களுக்கு அபிஷேக்கை பி..டி..க்..க..லை..யா?''

''பிடிக்கும் பிடிக்காது என்று அபிப்ராயம் சொல்லும் அளவிற்கு உன் மேல் எனக்கு உரிமை இல்லை. உங்க பாட்டிக்கும் அப்பாவிற்கும் பிடித்த மாப்பிள்ளை

என்றால் எனக்கு சந்தோஷம். ஆனால்...'' என்று தயக்கத்தோடு நிறுத்தினார் சுஜாதா.

''ஆனால் என்னம்மா? எதுவா இருந்தாலும் சொல்லுங்க.''

''நீ... இ..ப்..ப..டி... எல்லோரிடமும் தொ...ட்..டு... பே..சு..வா..யா? இதுக்குப் பா..ட்..டி ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?'' திணறலுக்கிடையே தன் சந்தேகத்தைக் கேட்டு விட்டார் சுஜாதா.

அம்மாவின் கவலை என்ன என்று புரிந்து விட்டதால், முன்பே இருந்த குற்ற உணர்வு மேலும் கூடியது. ''இல்லைம்மா. விவேக்கிடம் கூட அப்படிப் பேச மாட்டேன். பாட்டிக்கு பிடிக்காது. ஆனால் அபிஷேக்... அவர்தான், எனக்காக... உங்களை... பார்த்த சந்தோஷத்தில்...'' பதில் சொல்ல வார்த்தைகளைக் கண்டு பிடிக்க முடியாமல் திணறி தவித்தாள் வாஸந்தி.

''சந்தோஷம் எல்லாம் சரிதான். ஆனால்... நான் ஒரு ஆள் தனிமையில் கஷ்டப்படுவது போதாதா? இனிமேல் எந்தச் சூழலிலும், இந்த மாதிரியே சுய கட்டுப்பாட்டை இழக்கக் கூடாது. அது சரியா தப்பா என்ற விவாதத்திற்கே நான் போக விரும்பவில்லை. அபிஷேக் உனக்கு பார்த்து இருக்கும் மாப்பிள்ளை மட்டும் தான். உன்னுடைய வாழ்க்கை சிறப்பாக அமைந்து நீ சந்தோஷமா இருக்கணும் என்ற அக்கறையில் இதைச் சொல்கிறேன். வயசு பொண்ணுக்கு தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஒரு கட்டுப்பாடு இருக்கணும். அது இல்லை என்றால் வாழ்வே வீணாகி விடும். இனிமேல் பார்த்து நடந்துக்கோ. இந்த டீயை கொடுத்துட்டு, நீ ஊருக்குக் கிளம்பும் வழியைப் பாரு. நான் விவேக்கிடம் சொல்றேன்.''



''அம்மா! நீங்க சொல்லும் வார்த்தைகளை நான் மதிக்கிறேன். ஆனால் அதற்காக என்னை உடனடியாக நீங்க கிளம்பச் சொல்வது சரி இல்லை. நாங்க என்ன மாதிரி சூழ்நிலையில் இங்கே எப்படி வந்தோம் என்ற விஷயம் உங்களுக்கு இன்னும் சொல்லவே இல்லை. நான் நாளைக் காலை கிளம்புகிறேன்...''

''நீ என்ன காரணம் சொன்னாலும், அப்பாவிற்கும் பாட்டிக்கும் தெரியாமல், நீ இவங்களோடு சேர்ந்து இங்கே வர நினைத்தது தப்பு...''

''இப்ப அவங்களுக்குத் தெரியாது என்பது உண்மை தான். ஆனால் சொல்ல முடியாது மறைக்கப் போகிறோம் என்று சொல்லவே இல்லையே? இந்நேரம் விவேக் அப்பாவிடம் பேசி இருப்பான்...''

''சாந்தி, உனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. நீ விவேக் அபிஷேக்குடன் சேர்ந்து, வீட்டுக்குத் தெரியாமல் என்னைத் தேடி வந்தது தப்பு என்று சொல்கிறேன்...''

''அம்மா, ஏன் நீங்க சொன்னதையே சொல்லிட்டு இருக்கீங்க. நீங்க என் மேலே வச்சு இருக்கும் அக்கறை புரியுது. அபிஷேக் உங்களைத் தேடியது பாட்டிக்குத் தகவலாகத் தெரியும், போதுமா? நான் எல்லா விபரமும் சொல்றேன். நீங்க பதட்டப் படாமல் இருங்க ப்ளீஸ் என்னை நம்புங்க. நான் உங்க பொண்ணும்மா...''

''பரவாயில்லை, என்ன விஷயமா என்னைத் தேடி வந்தீங்க? இப்பவே சொல்லு...''

"அபிஷேக் அப்பா, என்னோட ஆசையை முன்னிறுத்தி, நீங்க வந்தால் தான் இந்த கல்யாணம் நடக்கும் என்று நிபந்தனை விதித்தார். அதுக்காக அபிஷேக், என்னோட பழைய ஸ்கூல், இங்கே கிஷோர் அங்கிள் வீட்டு முகவரி விசாரிச்சு கண்டு பிடிச்சு என்னை இங்கே கூட்டிட்டு வந்தார். இப்ப தகவல் சொன்னதும் அப்பா நாளைக்குக் காலையிலேயே உங்களை தேடி வந்துடுவார். பாட்டிக்கும் இந்த தேடல் தொடர்பான விஷயம் தெரியும். போதுமா?"

"அப்ப ஏன் நீ இப்போ விவேக்குடன் கிளம்பி இங்கே வருவதை பாட்டியிடம் சொல்லவில்லை?"

"அது... வந்து... நீங்க தனியா இருந்தால், அப்புறமா அவங்களிடம் சொல்லலாம், இல்லை என்றால் சொல் லாமல் விட்டு விடலாம் என்று..." முடிக்க முடியாமல் வாஸந்தி திணற அவரின் முகம் வாடியது. அப்படியே அடுப்படியில் சரிந்து அமர்ந்தார்.

பதினெட்டு ஆண்டுகளாக கட்டிய கணவர், மாமியார், பெற்ற பெண் ஆகியோர், தான் வேறு யாருடனோ குடித்தனம் நடத்தலாம் என்ற சந்தேகத்தில் இருந்து இருக்கிறார்கள். அதை நீக்க தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை வீட்டை விட்டு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வெளிவந்தது பரவாயில்லை. ஆனால் மீண்டும் ஒருமுறை அங்கே போய் தன்னிலை விளக்கம் சொல்லி இருக்க வேண்டுமோ? ஆனால் தனக்கு தாலி காட்டியவருக்கு தான் என்ன ஆனோம்? என்ன செய் கிறோம்? தன் விருப்பம் என்ன? என்று அதன் பிறகு தெரிந்து கொள்ளும் விருப்பம் இருக்கவில்லையா? தன்னுடைய பிடிவாதத்தால், இழந்த இளமை காலம் திரும்ப வருமா?



சுஜாதாவின் மனம் பதினெட்டு ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்வுகளைச் சுற்றிச் சுழன்றது. தனக்கு புத்திச் சொல்ல ஆள் இல்லாமல் போனதாலேயே தன் வாழ்வு இப்படி தனி மரமாகி விட்டது. அதே மாதிரி தன் மகளின் வாழ்வும் ஆகிவிடக் கூடாது என்ற எண்ணத்திலேயே, முதல் முறை பார்க்கும் மகளிடம் பாசத்தை விட கண் டிப்பை அதிகம் காட்ட வேண்டிய இக்கட்டான சூழலுக் குத் தள்ளப்பட்டார் சுஜாதா.

* * *

திருவண்ணாமலையில் தொலைபேசி மணி சத்தம் கேட்டு அதை எடுத்த தியாகராஜனுக்கு அந்த அழைப்பு முக்கியமான செய்தியைத் தாங்கி வருகிறது என்று தோன்றியது. எதிர் முனையில், 'மாமா நான்தான்' என்ற விவேக்கின் குரல், அந்த ஊகத்தை உறுதி படுத்தியது.

"விவேக்... அபிஷேக் போன் பண்ணினாரா?" என்று வேகமாகத் துடித்த இதயத்தை கை வைத்து அழுத் தியபடி விசாரித்தார்.

"சந்தோஷமான செய்தி மாமா. இப்படி பயந்துட்டே கேட்க வேண்டிய விஷயம் இல்லை. அத்தை எங்கே இருக்காங்க என்று கண்டு பிடிச்சாச்சு" என்று உற்சாக மாகச் சொன்னான் விவேக்.

"சொல்றா? நீ எங்கே இருக்க?" பதட்டம் மேலும் கூட வார்த்தைகள் திக்கியது.

"அபிஷேக் அத்தை இருக்கும் இடம் கண்டு விட்ட தாக கொஞ்ச நேரம் முன்பு போனில் சொன்னான். எங்கே என்று விசாரித்தால் பாண்டிச்சேரி என்று சொன்னான். உடனே நானும் சாந்தியும் இங்கே வந்து விட்டோம்..."

''பாண்டிச்சேரியா? அங்கே எங்கே...? நான் இப்பவே கிளம்பி வரேன்...''

''இப்ப ரொம்ப லேட் ஆகிடுச்சு. காலையில் கிளம்பி ஆரோவில் வந்துடுங்க. அத்தையைப் பார்த்துடலாம்.''

''அத்தை நான் பார்த்துக்கறேன். நீ அட்ரஸ் சொல்லு...''

''ஆரோவில்லில் ஸ்கூலில் டீச்சரா வேலை செய் றாங்க. அங்கேயே கொடுத்து இருக்கும் வீட்டில் தனியா, கடந்த பதினெட்டு வருஷமா இருக்காங்க...'' மேலே தொடர்ந்து விவேக் பேசியது அவரின் காதில் விழ வில்லை.

தனியாக வசிக்கிறாள். ஆசிரியர் பணி செய்து ஜீவனம் நடத்துகிறாள். கேவலம் நூறு கிலோ மீட்டர் தூரத்திற் குள் வசித்து வரும் தன்னில் பாதியை அவரால் பதி னெட்டு ஆண்டுகளாக கண்டு பிடிக்க முடியவில்லை. ஏதேதோ சப்பை கட்டு கட்டினாலும், இந்த சின்ன பசங்க ரெண்டே நாளில் சாதித்ததை தான் இத்தனை நாட்களாகச் செய்ய முடியாமல் இருந்ததற்கு என்ன காரணம்?

அவள் மேல் தான் வைத்த காதல் தவிர வேறென்ன காரணம் இருக்க முடியும்? காதலுக்காக காதலியையே தியாகம் செய்த முட்டாள் தனம் தன்னைத் தவிர இந்த உலகத்தில் வேறு யாரும் செய்து இருக்க மாட்டார்கள்? அந்த கிஷோர் என்ன ஆனான்? அவனை அவள் ஏன் மணம் செய்து கொள்ளவில்லை? அதற்காக தன்னிடம் மணவிலக்கு கேட்டாள் என்றுதானே, அவர் நினைத்தார். அது சரி இல்லையா?

அவனும் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக அவர் களின் சொந்த ஊருக்குப் போகாததற்கு காரணம்



என்ன? அதனால் தானே அவர்கள் இருவரும் மணம் செய்து கொண்டார்கள். அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும் என்று தான் அவளைத் தேடாமல் விட்டது? இப்போ அவள் முன்னால் போய் நின்று தனது பதினெட்டு ஆண்டு கால மௌனத்திற்கு என்ன விளக்கம் சொல்வது?

ஆனால் அவளும் ஏன் தன்னைத் தேடி வர முயற்சி செய்யவில்லை? பெண்ணை தேடி பார்க்க தோன்றிய வளுக்கு தன்னைப் பார்க்கத் தோன்றவில்லையா? தான் அவ்வளவு தூரம் அவளின் மனதில் ஒன்றவில்லையா? தன் காதல் எங்கே தோற்றது? கேள்விகள் அவரை தொடர்ந்து அரித்தெடுக்க, அவரின் அறைக்குள் சென் றவர் அவள் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அனுப் பிய விவாகரத்து பத்திரத்தோடு வந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தார்.



# 18

அன்புள்ள... என்று ஆரம்பித்த அந்த கடிதத்தை சட்டை பையில் எடுத்துத் திணித்தவர், அவசரமாக அம்மாவை அழைத்தார் தியாகராஜன்.

'அம்மா, விவேக் பேசினான். சுஜாதா பாண்டிச்சேரி யில் இருக்கிறாள் என்று அபிஷேக் போன் பண்ணி னாராம். நான் போய் பார்த்துக் கூட்டி வருகிறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

''விவேக் இப்ப பாண்டிச்சேரியிலா இருக்கிறான்? சென்னைக்குப் போகிறேன் என்று சொன்னான். சாந்தியும் கூட இருக்காளா?'' என்று அவசரமாக விசாரித்தார் பவானி.

''சந்தேகமா? விவேக் வெளி ஆள் மாதிரி பேசாதீங்கம்மா. அவன் மாதவி பையன்.''

''இது சந்தேகம் இல்லை. அவளின் பாதுகாப்பு பற்றிய அக்கறை. உன் அவசரம் எனக்கு புரியுது. நல்லபடியா பேசி, அழைச்சுட்டு வா. அங்கே போய் பழசை நினைச்சு தேவை இல்லாததைப் பேசி சண்டை போட வேண்டாம். நமக்கு இப்ப சாந்தி கல்யாணம் நல்லபடியா முடியணும். அதுதான் முக்கியம்'' என்ற பவானி அம்மாவின் பேச்சு அவர் காதிலோ மனசிலோ ஏறவே இல்லை.

''சரி கிளம்பறேன். இப்ப யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம். நாளைக்கு பார்த்துக்கலாம்'' என்று முணுமுணுத்து விட்டு, வெளியே வந்தவர் கண்ணில் பட்ட பேருந்தில் ஏறி அமர்ந்தார். பேருந்தின் பயணம் சாலையில் முன்னோக்கி தொடர, மூடிய கண்களுக்குள் எண்ணங்களின் ஊர்வலம் கால தேவனின் கண்ணுக்கு மாறாக பின்னோக்கி நகர்ந்தது.

அந்தக் கடிதத்தை இதுவரை எத்தனை முறை படித்து இருக்கிறார்? ஒவ்வொரு முறை படிக்கும் போதும் இனி இந்தக் கடிதத்தைத் தொடக்கூடாது என்ற முடிவோடு வைப்பார். அம்மா அல்லது சாந்தியின் ஏதாவது ஒரு சொல்லில், ஒரு அசைவில், ஒரு ஜாடையில், அவளின் நினைவு வரும்போது, அவளின் ஞாபகமாக வைத்து இருக்கும், பழைய புகைப்படங்களும், இந்தக் கடிதமும் அவருக்கு ஆறுதலை அளிக்கும்.



தன்னுள்ளே நிறைந்து உயிரோடு உயிராகக் கலந்து இருக்கும் அவள், உண்மையிலேயே 'கிஷோரை மணந்து கொள்ள நினைத்து தான் இந்த விவாக ரத்து பத்திரத்தை அனுப்பினாளா?' என்பதில் சந்தேகம் வரும். அதை எடுத்துப் படிப்பார்.

படித்து முடிக்கும் போது ஒரு விரக்தியும் இயலாமையும் வந்து விடும். கடிதத்தை முடிக்கும்போது இனி தொடக்கூடாது என்ற முடிவாடு வைப்பார். மீண்டும் தோற்பார். இது கடந்த பதினெட்டு ஆண்டுகளில் எத்தனை முறை நடந்தது என்பதற்கு எந்தக் கணக்கும் கிடையாது.

அன்புள்ள தியாகுவிற்கு, என்று ஆரம்பித்த அந்தக் கடிதத்தில், அன்புள்ள என்ற வார்த்தையின் குறுக்கே கோடு போட்டு அடிக்கப்பட்டு இருந்தது.

*சுஜாதா சொல்றேன். எங்க அம்மா சொல்றது சரி. எங்களுக்குப் பேசத் தெரியலை. அம்மாக்குப் பிடிச்ச மாதிரி வேலை செய்யலை. ஒண்ணு தெரியும். நீ சண்டை போடக்கூடாது. சந்தோஷமா இருக்கணும்.*

*நீ நல்லவன். அம்மா நல்லவ. கிஷோர் எனக்கு நிறைய ஹெல்ப் செஞ்சு இருக்கான். என்னால் மறக்க முடியாது. நான் போறேன். அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகலைன்னா அவன் ரொம்ப ஏமாந்துடுவான். ரொம்ப ரொம்பக் கஷ்டப் படுவான்.*

*என்னால் இங்கே சந்தோஷமா இருக்க முடியாது. அதான் கிளம்பிட்டேன். உன்னை கல்யாணம் பண்ணிகிட்டதில், எங்களுக்கு ரொம்ப நாளா கஷ்டம். இதுல டைவர்ஸ் பத்திரம் இருக்கு.*

*கையெழுத்து போட்டுக்க. நாங்க சந்தோஷமா இருக்கணும். போறேன். நன்றி, வணக்கம்.*

*பொறுப்பு இல்லாத அவசரமான*

*சுஜாதா.*

எந்தப் பொண்ணும் தன்னைத் தானே பொறுப்பில்லாதவள் என்று சொல்லிக் கொள்வாளா? இதுதான் எப்போதும் இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் தோன்றும் முதல் கேள்வி. இவள் அப்படிச் சொன்னாள் என்றால் நல்லவள் என்றுதானே அர்த்தம்.

ஒவ்வொரு வார்த்தையையும் தனித் தனியாகப் படித்து வேறு பொருள் இருக்குமா என்று பலமுறை ஆராய்ந்து பார்த்து இருக்கிறார். இவள் ஏன் தமிழில் இந்தக் கடிதத்தை எழுதினாள் என்று ஆயிரம் முறை அவரைத் திட்டி இருக்கிறார். ஆங்கிலத்தில் எழுதி இருந்தால், இப்படி இருக்குமோ அப்படி இருக்குமோ என்ற சந்தேகம் எழாமல் இருந்து இருக்குமே?

டைவர்ஸ் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு வச்சுக்கோ என்றால் தனக்கு அனுப்பிய மாதிரி தானே இருக்கு? அது உண்மை என்றால், தான் அனுப்பியதை அவள் திருப்பி அனுப்பவும் இல்லை. ஏன் என்று கேள்வியும் கேட்கவில்லையே? அது ஏன் என்று பல ஆயிரம் முறை மண்டையை உடைத்துக் கொண்டு இருக்கிறார்.

அவருக்கு கிஷோரை நேரடியாக அறிமுகம் இல்லை. அங்கே சூரத்தில் நான்கு நாட்கள் தங்கி இருந்த போது அவன் அங்கே இல்லை. தொழில் தொடர்பாக ஊர் ஊராகச் சுற்றுவான் என்று சுஜா சொல்லி இருக்கிறாள். அவனுக்கு மணம் முடிக்க வீட்டில் ஏற்பாடு செய்த போதுதான் அங்கிருந்து கிளம்பினாள்.



அந்தக் கெடுபிடியான சூழலில் அவனே முன் வந்து அந்த வீட்டில் இருந்து வெளியேற உதவி செய்தான் என்பதை சுஜாதாவின் மூலமாகக் கேட்டு இருக்கிறார். ஆனாலும் நேரடியாகப் பார்த்தது அவள் இங்கிருந்து கிளம்பியதற்கு முதல் நாள் தான். என்ன மாதிரியான சந்திப்பு அது?

பொங்கல் திருநாள். மறுநாள் திருவண்ணாமலையில் ஒரு நெருங்கிய உறவினருக்குக் கல்யாணம் என்று மாதவி, தன் கணவன் குழந்தை மற்றும் மாமனார் மாமியாருடன் வந்து இருந்தாள். தியாகராஜன் - சுஜாதா திருமணம் அவசர கதியில் நடந்ததால், நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே தகவல் தெரிந்து இருந்தது. அடுத்த சுற்று உறவுகளுக்கு சுஜாதாவை அறிமுகம் செய்ய வாய்ப்பு இல்லை. அவரைப் பார்க்க வந்த உறவினர் கூட்டமும் வீட்டில் இருந்தது.

வீடு திருவிழாக் கோலம் பூண்டு இருந்ததால், அவர்களை கவனிக்க வேண்டும் என்ற ஆவலில் தானே முன் வந்து சமையலில் உதவ முயற்சி செய்த சுஜாதாவை, அம்மா ஒதுக்கி வைத்தாரோ? குறை சொல்லி மருமகளின் மனதை நோகடிக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலேயே போகிற போக்கில், 'உருளைக் கிழங்கை நீளமா நறுக்காதே', 'வெங்காயம் பொடியா நறுக்கணும், வட்டமா இருந்தால் தயிர் பச்சடிக்கு நல்லா இருக்காது', 'குழம்புக்கு யார் உன்னை தேங்காய் அரைச்சு ஊத்தச் சொன்னது?', 'தெரியலன்னா பேசாமல் ஓரமா உட்கார், என்னை ரெண்டு வேலை செய்ய வைக்கதே' என்று எப்போதும் சொல்லும் வார்த்தைகள் தான் என்றாலும், அன்று, விருந்தினர்கள் முன்னிலையில் சொன்னது அவளின் மனதை பாதித்து இருக்கலாமோ?

கூடுதலாக வந்த வேலையும், சில விருந்தினர்களின் இடக்கு மடக்கான கேள்விகளும், அவளின் இயல்பான சமையல் விருந்தினர்களுக்கு பிடிக்காமல் போய் விடுமோ என்ற கவலையில் அம்மா சொன்ன சின்னச் சின்ன குற்றச் சாட்டுக்களும் அவரை மனம் நோக வைத்து இருந்த அந்த நேரத்தில் கிஷோரை எதிர் பாராமல் கண்டதும், அவளின் முகத்தில் வந்த அந்த மலர்ச்சியை என்ன சொல்வது?

அன்றைய சந்தோஷத்தை அவள் வெளிக்காட்டிய விதம் தமிழ்நாட்டின் பழக்க வழக்கங்களுக்கு அதிகம் என்பது அப்போதும் இப்போதும் சரியாகவே புரிகிறது. ஆனால் அவளுடைய வளர்ப்பு முறைக்கு, அவள் அன்று இருந்த மன நிலைக்கு, அது பெரிய தப்பில்லை என்பது அன்று புரியவில்லை. இன்று புரிகிறது.

அவனுடைய வருகையின் போது, அவள் அவனை வாசலுக்கு ஓடிச் சென்று, அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு, குதூகலமாக இடைவெளியின்றி தனது தாய் மொழியில் மடமடவென்று பேசி வரவேற்ற அந்த செய்கை வீட்டின் ஹாலில் இருந்தவர்களை அதிர வைத்தது. தொடர்ந்த அவளின் நடவடிக்கைகள், அவர்களுக்குள் கிசுகிசுக்க வைத்தது.

வம்பு பேசவே வந்த உறவினர்கள் பேசியதை மறந்து விடலாம். அதன் பிறகு அம்மா அவளை விசாரித்தபோது சுஜாதா நடந்ததை, பாம்பென்று கொல்லவும் முடியவில்லை. பழுதென்று தள்ளவும் முடியவில்லை. இன்று வரை அப்படித்தான் இருக்கிறது.

ஆனால் கிஷோர், அவளின் உறவினர் இல்லையா? திருமணம் செய்து கொள்கிறேன் என்று வீடு தேடி வந்து ஆசை காட்டி விட்டு, பின் தொடர்ந்து சென்றவளை,



மூன்றாவது ஆள் மாதிரி அவளை தனியே தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டானா? எங்கே போனான்? எப்போது போனான்? முதல் சில நாட்களிலேயே சென்று விட் டானா? அவன் அங்கே குஜராத்திற்கும் போகவில் லையே? இதை அவர் ஒவ்வொரு வருடமும் கண்காணிக் கிறாரே? விடை அறியா கேள்விகளின் பட்டியல் நீண்டு கொண்டே போனது.

* * *

''அம்மா, விவேக் அண்ணி இருக்கும் இடத்தை கண்டு பிடிச்சுட்டானாம். போன் பண்ணினான். அண் ணன் கிளம்பிட்டாரா?'' என்று பவானியைத் தேடி வந்து அவசரமாக விசாரித்தார் மாதவி.

''ம்ம், இப்பதான் கிளம்பினான்...'' என்ற பவானி சுவரில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்தார்.

''என்னம்மா? இத்தனை நாள் கழிச்சு அண்ணன் அவங்களைக் கூப்பிடப் போய் இருக்கார்? நீங்க இப்படி இருக்கீங்க? உங்க கோபம் இன்னும் தீரலையா? இத் தனை நாளா இங்கேயே பக்கத்துல தனியா அவஸ்தை பட்டுகிட்டு இருந்து இருக்காங்க. அண்ணி ரொம்ப பாவம்மா...'' என்றபடி அருகில் அமர்ந்த மாதவியை திரும்பி முறைத்தார் பவானி.

''உங்க அண்ணி மட்டும்தான் பாவமா? ஏன் உங்க அண்ணன் பாவம் இல்லையா? அந்த சின்ன பொண்ணு சாந்தி பாவம் இல்லையா? எனக்குப் போட்ட விதி மாதிரியே என் பையனும் கல்யாணம் ஆகி மூணே வரு ஷத்துல, ஒத்தை மரமா என் கண் முன்னால நிற்பதைப் பார்த்து, இத்தனை வருஷமா, தினம் தினம் செத்துக் கிட்டு இருக்கேனே நான் பாவம் இல்லையா? பெரிசா பேச வந்துட்டா...'' என்று பொருமினார் பவானி.

''நீங்க மூணு பேரும் பாவம் தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நீங்க மூணு பேரும் பக்கத்துல இருந்தீங்க. அவங்க நிலையை யோசிச்சுப் பாருங்க. யார் ரொம்ப பாவம் என்று புரியும். நாளைக்கு அண்ணன் அவங்களைக் கூட்டிட்டு வந்த பிறகு, இப்ப டியே ஏடாகூடமா பேசிட்டு இருக்காதீங்க...''

''உனக்கு என்ன கொழுப்பா? நானா ஏடாகூடமா பேசு றேன்? அவளைப் பேசுனது உன் மாமியார். எனக்குப் பிடிச்சதோ இல்லையோ, என்னிக்கு என் மகன் அவள் கழுத்தில தாலி கட்டினானோ அன்றில் இருந்து இன்று வரைக்கும் அவள் என் மருமகள் தான். நான் அவள் வேலை செய்வதற்கு ஏதாவது அதட்டினாலும், அவள் என் மருமகள் என்பதில் எனக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அவளும் மனசுல ஒண்ணு வச்சு வெளியில் ஒண்ணு பேசும் ஆள் இல்லை. அவனைக் கல்யாணம் பண்ணிக்க இந்த வீட்டை விட்டு போகிறேன் என்று லெட்டர் போட்ட போது கூட நீ நல்லவன் உங்க அம்மா நல்லவள் என்று எழுதி வச்சுட்டுப் போன மகராசி...''

''அ..ம்..மா! அதை தான் சொல்றேன். நீங்களும் எங்க மாமியார் மாதிரியே அந்த விஷயத்தைத் தோண்டித் துருவி, அவன் எங்கே போனான்? நீ எங்கே இருந்த என்று கேள்வி கேட்டுட்டு இருக்காதீங்க. அந்த அம்மா புண்ணியத்துல பதினெட்டு வருஷம் அண்ணனும் அண் ணியும் பிரிஞ்சு இருந்தது போதும். எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம். போன காலம் திரும்பி வராது. ஏதோ சாந்தி சம்பந்தகாரங்க. புண்ணியத் துல அவங்க சேர ஒரு வாய்ப்பு கிடைச்சு இருக்கு. ரெண்டு பேரும் இனியாவது சந்தோஷமா இருக்கட்டும்...''



''நானா வேண்டாம் என்கிறேன்? அவனே அதை பெரிசு படுத்தவில்லை என்றால், அவனுக்கே அவளோட சேர்ந்து இருப்பது சந்தோஷம் என்றால், நான் ஏன் அவங்க சந்தோஷத்திற்கு குறுக்கே நிற்கப் போகிறேன்? என்னோட கவலை எல்லாம் அவள் இவனோட கிளம்பி வரணுமே என்றுதான் இருக்கு'' என்று பெருமூச்சோடு சொன்ன பவானியை தோளில் கை வைத்து அழுத்தி ஆறுதல் படுத்த முயன்றார் மாதவி.

* * *

வாஸந்தி தான் விவேக்கோடு வந்ததற்கு எவ்வளவோ விளக்கம் சொல்ல முயன்ற போதும், அதில் முழுமை யாக சமாதானம் ஆகாமல், அவளை உடனே திருவண்ணா மலைக்கு திருப்பி அனுப்ப முயன்ற சுஜாதாவின் ஆதங்கம், விவேக்கிற்கும், அபிஷேக்கிற்கும் பிடிபட வில்லை. தன் முன்னிலையிலேயே தியாகராஜனிடம் பேச முயன்ற விவேக், 'நீங்க பேசறீங்களா' என்று கேட்க அவரிடம் பேசவும் சுஜாதாவிற்கு மனமில்லை.

''அத்தை, இப்ப மணி ஒன்பது. இப்ப கிளம்பினால் பதினோரு மணியாகும். நாங்க ரெண்டு பேரும் இங் கேயே எங்கேயாவது ரூம் போட்டு தங்கிக்கிறோம். காலையில் அஞ்சு மணிக்கு வந்து அவளைக் கூட்டிட் டுப் போய் திருவண்ணாமலையில் பாட்டியிடம் பத்திரமா சேர்த்து விடுகிறேன். அவளுக்கு உங்களைப் பார்த்துப் பேசணும் என்று ரொம்ப ஆசையா இருக்கும் அத்தை. அதை கொஞ்சம் நினைச்சுப் பாருங்க...'' என்று அபிஷேக் சமாதானம் செய்ய முயன்றான்.

''பாட்டியை நான் சமாளிச்சுக்கறேன். யாரும் உங்க பொண்ணை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அதுக்கு

நான் காரண்டீ. போதுமா?'' என்று விவேக் தன் பங்கிற்கு சேர்த்துச் சொன்னான்.

''ஒரு நிமிஷம் உள்ளே வா சாந்தி...'' என்று அழைத்தார் சுஜாதா.

அவர் பின்னால் எழுந்து வந்த வாஸத்தி, சுஜாதாவின் கழுத்தை கட்டி, கன்னத்தில் முத்தமிட்டு, ''என்னம்மா, முதன் முதலில் இத்தனை வருஷம் கழித்து உங்களைப் பார்க்க ஆசையா ஓடி வந்த என்னைப் பார்த்து நீங்க ரொம்ப சந்தோஷப்படுவீங்க என்று நினைத்தேன். இப்படி போ போ என்று துரத்துவீங்க என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை'' என்று சலுகையாய் குறை சொன்னாள்.

''பல தேசத்து மனிதர்கள் வாழும். இந்த ஆரோவில் கிராமத்தில், படிக்கும் பள்ளி குழந்தைகளுக்கு, ஜாதி, மதம், இனம் என்ற எல்லா தடைகளைத் தாண்டி, அன்பை மட்டும் மொழியாகப் பிரகடனம் செய்யும் ஆசிரியர் பணி புரிபவள் நான். என் நிலைமை என்னோட எதிரிக்குக் கூட வரக்கூடாது என்று நினைப்பவள் நான். அப்படி இருக்கும்போது, என் பெண்ணான உன்னை இத்தனை வருஷம் கழித்துப் பார்க்கும் இந்த வேளையில் துரத்த வேண்டும் என்று நான் நினைப்பேனா? என் நிலைமை அப்படி. புரிஞ்சுக்கோ...''

''அம்மா, உங்க கெட்ட காலம் எல்லாம் போயே போச்சு. ராமர் பதினாலு வருஷம் காட்டுக்கு போன மாதிரி, உங்களுக்கும் கெட்ட நேரம் பிடிச்சு ஆட்டி வச்சு இருக்கு. இனிமேல் உங்களுக்கு நல்ல நேரம் மட்டும்தான். சும்மா ராணி மாதிரி இருக்கப் போறீங்க. அப்பாவிடம் விவேக் தகவல் சொல்லியாச்சு. அவர் நாளைக்கு காலை வரை கூடப் பொறுக்க மாட்டாமல், உடனே கிளம்பி



உங்களைக் கூட்டிட்டுப் போக வந்துடுவார். அப்புறம் என்ன...''

''வா...ஸ..ந்..தி! போதும். இந்த மாதிரி கனவெல்லாம் எனக்குக் கிடையாது. அபிஷேக் அப்பா உன் கல்யாணத்திற்கு நான் இருக்கணும் என்று சொன்னார். இருப்பேன். அவ்வளவுதான். இப்ப கிளம்பு. உங்க அப்பா பாட்டி சம்மதத்தோட நாளைக்கே வேண்டுமானாலும் கிளம்பி இங்கே வா. எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கலாம்'' என்று தீர்மானமாக முடித்தார் சுஜாதா.

அப்போதுதான் முதல் முறையாக, அம்மா அப்பா பிரிந்ததற்கு அடிப்படையாக வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அதனால் அம்மா பயப்படுகிறார்கள் என்று தோன்ற, 'சரிம்மா, நான் கிளம்புகிறேன். உங்களை அந்த வீட்டின் ராணியாகப் பார்க்க ஆசைப் படுகிறேன்'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தாள் வாஸந்தி.

''நாம் கிளம்பலாம்'' என்று சொன்ன வாஸந்தியை வியப்பாகப் பார்த்த அபிஷேக் விவேக்கை திரும்பிப் பார்த்தான். சில வினாடிகள் முன்புதான் தியாகராஜன் உடனே கிளம்பக் கூடும் என்ற தகவலை விவேக் சொல்லி இருந்ததால், அவர்களுக்கு தனிமை கொடுக்க எண்ணி, 'சரி அத்தை நாங்க கிளம்புகிறோம். அப்புறம் பேசுறோம்' என்று விடைபெற்று கிளம்பினார்கள்.

காரில் ஏற முயன்ற வாஸந்தியை தோள் பற்றி திருப்பிய சுஜாதா, ''என் மேலே கோபமா சாந்தி?'' என்று கனிவாகக் கேட்க, அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''எனக்கு உன் மேலே எவ்வளவு பிரியம் இருக்கு என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாதும்மா. ஆனால்

நான் உன்னை இப்படி...'' வார்த்தைகள் கண்ணீரில் தத்தளித்தது.

''எனக்குத் தெரியும்மா. நீங்க வச்ச அன்புதான் என்னை இப்படி துரத்துது. அதே அன்பை வைத்து, பாட்டியின் சம்மதத்தோடு, உங்க மனசு குளிர, நான் இங்கே வருவேன், உங்களிடம் விடிய விடிய கதை பேசுவேன். இது நிச்சயம் நடக்கும். அதுவும் சீக்கிரமே! ஐ லவ் யு ம்மா...''

வாஸந்தியை அணைத்து நெற்றியில் முத்தமிட்டு, 'காட் ப்ளேஸ் யு மை சைல்ட்' என்று சொல்லி கண்களில் பெருகிய நீர், மூடிய இமைகளின் கட்டுக் காவலை மீறி வெளியே வழிய, ஆசீர்வாதம் செய்து அனுப்பி வைத்தார் சுஜாதா.



# 19

அவளின் எதிர்காலத்தில், வேறெதுவும் பிரச்னை அவளுக்கு எதிராக யார் மூலமாகவும் கிளம்பி விடக் கூடாது என்ற பயத்தில், மனமின்றியே, அவளை திருவண்ணாமலையில் இரவே சேர்த்து விடச் சொல்லி, ஒரு தடவைக்கு பலமுறை விவேக்கிடமும், அபிஷேக்கிடமும் சொல்லி விட்டு, இறங்கிய உடனே தனக்குத் தகவல் சொல்ல சொன்னார்.

போனே வைத்துக் கொள்ளவில்லை என்று தன்னிடம் சென்னையில் சொன்னாரே?'' என்ற வியப்புடன்,



திரும்பி வாஸந்தி விழிப்பதைப் பார்த்த பிறகுதான், உண்மை புரிந்தது. அத்தனை ஆண்டுகளில் முதல் முறையாக தன்னிடம் போன் இல்லாததை ஒரு குறையாக உணர்ந்தார்.

தகவலா? எப்படிச் சொல்வது? என்று விழித்த மூவரில் முதலில் சுதாரித்த அபிஷேக், ''கிஷோர் அங்கிளுக்குப் போன் பண்ணவா? ஆனால் ரொம்ப நேரமாகி விடுமே? அவருக்கு தெரிந்தாலும், அவர் எப்படி அந்நேரத்தில் இங்கே வந்து சொல்வார்? பரவாயில்லையா? அவருக்கு தொந்தரவா இருக்காதா?'' என்று குழப்பத்தோடு கேட்டான்.

''இல்லை பரவாயில்லை. நான் ஏதோ ஞாபகத்தில் சொல்லி விட்டேன். காலையில் ஆறு மணிக்குச் சொன்னால் போதும் பத்திரம்'' என்று முடித்து அனுப்பி வைத்தார். அவர்களை வழி அனுப்பிய சுஜாதாவால், தன் வீட்டிற்குள்ளே நுழைந்து கதவைச் சாத்த மட்டுமே முடிந்தது. அதற்கு மேல் ஒரு அடி எடுத்து வைக்கக் கூட அவரின் கால்களில் தெம்பு இல்லை. அப்படியே தரையில் சரிந்து கதவில் சாய்ந்து அமர்ந்தவர், தன் முட்டியில் முகத்தைப் புதைத்து, அதுவரை பெரும் சிரமப்பட்டு அடக்கி வைத்து இருந்த பல விதமான உணர்வுகளை விடுதலை செய்தார்.

இத்தனை ஆண்டுகள் கழித்து தன்னைத் தேடி வந்த தான் பெற்ற மகளை இப்படிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அடித்துத் துரத்த வேண்டிய தன்னுடைய துரதிர்ஷ்ட நிலையை நினைத்து மனம் வாடி, விம்மி அழுதார்.

பொங்கலுக்கு அங்கே வந்து இருந்ததாகச் சொன்ன மாதவியும், அவளின் குடும்பத்தினரும், இப்படிப் பொய்

சொல்லி விட்டு, தன்னை தேடி விவேக்குடன் சேர்ந்து கிளம்பி வந்ததை பற்றி என்ன தவறாக பேசுவார்களோ? அதனால் வாஸந்தியின் எதிர்கால வாழ்க்கையில் ஏதாவது பிரச்னை வந்து விடுமோ என்று பயந்து நடுங்கினார்.

பெற்றவர்களின் பாவ புண்ணியங்கள் பிள்ளைகளின் வாழ்வை பாதிக்கும் என்று சொல்வார்களே? அந்த அடிப்படையில் தன்னை இளவயதில் தனியாக தவிக்க விட்ட தியாகராஜனுக்கு தண்டனை கொடுக்கிறேன் என்று கடவுள் வாஸந்தியின் வாழ்வை கேள்விக் குறியாக்கி விடாதே என்று கடவுளிடம் மன்றாடினார்.

பார்த்துப் பழகிய நான்கே நாட்களில் 'இவன் தன்னை இறுதி வரை கண் கலங்காமல் காப்பான்' என்று முழுமையாக நம்பி, தனக்கு கிஷோருடன் நடக்க இருந்த திருமணத்தை உதறித் தள்ளி விட்டு, அவனின் துணையோடு அந்த வீட்டை விட்டு வெளியேறிய தன்னுடைய அவசர புத்தியை நினைத்து இருபது ஆண்டுகள் கழிந்த பின், புதிதாக தன்னையே நொந்து கொண்டார்.

கிஷோர், தன்னை மாதிரியே காதல் வசப்பட்டு, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் வீட்டோடு போராடி, தோற்று, பெண் வீட்டார்களின் சம்மதத்தோடு, மதம் மாறி திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்து, எனக்குத் துணையாக, என்னுடன் இருக்க ஒரே உறவாக நீ வா என்று வருந்தி அழைத்தான். அவனின் ஆசையை மதித்து, அவனுக்கு தன் புகுந்த வீட்டினரின் சம்மதம் இல்லாமல், தன்னுடைய அன்பையும், நன்றிக் கடனையும் செலுத்த நினைத்த தவறுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? தவறுக்கேற்ற அளவில் தண்டனை இல்லையே? கடவுளின் நியாய தராசு, தனக்கு நியாயம் செய்யவில்லை என்று குமுறினார்.



'நீ என்ன வேண்டுமானாலும் உளறிக்கோ, அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையைக் காட்டிலும் தாயின் அரவணைப்பு அவசியம் என்று சொல்லி, தான் பெற்ற மகளை பிடிவாதமாக தன்னுடன் தூக்கி வர வேண்டும் என்று தனக்குத் தோன்றாமல் போன மடத்தனத்தை எண்ணி வருந்தினார்.

வீட்டை விட்டு வெளியேறிய மனைவியை, அதுவும் தனக்காக அவ்வளவு தூரத்தில் இருந்து குடும்ப உறவுகளைத் தூக்கி எறிந்து விட்டு, காதல் கொண்டு, தன்னையே தஞ்சம் என்று தேடி வந்தவள் ஒரு கோபத்தில் வீட்டை விட்டு வெளியேறி விட்டால், அவளை அதோடு தொலைந்து விடும், ஒரு ஆண்மகனை நம்பி வந்த தன்னுடைய முட்டாள் தனத்தை எண்ணி, கொதித்து சில நிமிடங்கள் அவரை திட்டித் தீர்த்தார்.

இப்படி ஒரு மனிதனை நம்பி, தன்னைப் பெற்று, இருபது ஆண்டுகள் வளர்த்து, ஆளாக்கி இந்த சமூகத்தில் ஒரு முழு மனுஷியாய் உலவவிட்ட தன்னைப் பெற்றவர்களைத் தூக்கி எறிந்தோம் என்ற குற்ற உணர்வில் அழுதார்.

தன்னைப் பெற்றவர்களை மதிக்காமல் தூக்கி எறிந்த தவறுக்கு, ஈடுகட்டத்தான் தான் பெற்ற மகளுக்கு தன்னையே அடையாளம் தெரியாமல் இருபது ஆண்டுகள் தன்னை ஆற்றாமையில் புழுங்கித் தவிக்க விட்டானோ இறைவன் என்று அவனிடம் பாவமன்னிப்பு கேட்டார்.

சுஜாதா பல்வேறு உணர்வுகளில் சிக்கித் தவித்து, கண்ணீர் விட்டுப் புலம்பி அழுது, சோர்ந்து சுய நினைவை இழக்கும் வேளையில் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது.

புடவை முந்தானையால், தன் முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு எழுந்தார். சுற்றிலும் பார்த்தவருக்கு திக் என்று இருந்தது. பொழுது விடிந்து விட்டதன் அடையாளம் தெரிந்தது. தியாகராஜனாக இருக்குமோ? எவ்வளவு நேரமாகக் கதவைத் தட்டிக் கொண்டு இருக்கிறார்? இப்படி அழுது சிவந்த முகத்துடன் திறக்க விரும்பவில்லை.

வாஸந்தியின் திருமணம் தன்னால் தடைபட்டு நிற்க அவர் விட மாட்டார் என்பது முழுக்க முழுக்க வேறு விஷயம். ஆனால், தனக்காக தன்னை தேடாமல், தனக்கு ஒரு காரியம் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில், தன்னை அழைக்க வந்த அவரிடம், 'இன்னும் நான் உன்னை எண்ணி ஏங்கித் தவிக்கிறேன்' என்ற அர்த்தம் தொனிக்கும்படி, தன்னுடைய நடவடிக்கை இருக்கக் கூடாது என்று முடிவு செய்தார். கதவைத் திறக்க வேண்டாம் என்று அவசரமாக குளியல் அறைக்குள் புகுந்து கொண்டார்.

நீண்ட நேரம் குளித்த பிறகே வெளியே வந்தவர், பள்ளிக்குக் கிளம்பினார். மீண்டும் அழைப்பு மணி ஒலிக்க காத்து இருந்தவரின் காதுகளில் அந்த சத்தம் மட்டும் விழவே இல்லை. ஐந்து, பத்து, இருபது முப்பது நிமிடங்கள்... ம்ஹூம்... கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்தவரின் காதுகளில் என்னென்னவோ சத்தங்கள் விழுந்தது. பேப்பர் போடுபவர்களின், பால் ஊற்றுபவரின் சைக்கிள் மணி சத்தம், பள்ளி குழந்தைகளை அழைக்க வரும் ஆட்டோ சத்தம். எப்போதாவது போய் வரும் இரு சக்கர வாகனங்கள்.



அழைப்பு மணி ஒலிக்கவில்லையே? போய் விட்டாரோ? தன் தேவை அவ்வளவுதானா? அன்று செய்த மாதிரியே தான் இன்றும் தவறு செய்து விட்டோமோ? முதலிலேயே கதவைத் திறந்திருக்க வேண்டுமோ? ஏன் எனக்கு இந்த எண்ணம் வந்தது? மீண்டும் கண்ணில் நீர் எட்டிப் பார்க்கவா என்று அனுமதி கேட்ட வேளையில், அழைப்பு மணி விடாமல் ஒலித்தது.

அந்த அழைப்பு மணி சத்தத்தில் அவருடைய கட்டுப்பாட்டையும் மீறி, தெரியும் ஆவலை மறைக்க முயன்றபடி, கதவைத் திறந்து, 'யார் நீங்க' என்று கேட்கலாமா என்று எண்ணிய சுஜாதா வாயைத் திறந்த வினாடியில் அவரின் வாயில் இருந்து வார்த்தைகள் வரவே இல்லை.

ஆனால் அவரின் மௌனத்திற்கும் சேர்த்து வைத்து வாசலில் நின்று இருந்த கிஷோர் ஹிந்தியில் இடைவெளியின்றி பொரிந்தார். ''இவ்வளவு நேரமாக என்ன பண்ணிக் கொண்டு இருந்தாய்? குளிக்கிறாய் என்று முதலில் நினைத்து காத்திருந்தேன். முழு பேப்பரையும் படித்து முடித்து அரை மணி நேரம் ஆகியும் நீ கதவைத் திறந்த பாடில்லை. வாசலில் ஒரு கோலத்தைக் கூட காணோம்? நான் என்ன நினைப்பது? நேற்றே இரவு அபிஷேக் என்று ஒருத்தன் வந்தானே? அவன் எதுக்கு வந்தான்? என்ன சொன்னான்? அவன் காலங்கார்த்தால ஆறு மணிக்கே போன் பண்ணிட்டான். திருவண்ணாமலைக்கு நைட்டே போய் சேர்ந்து விட்டோம். பாட்டியிடம் நீ ஒப்படைக்கச் சொன்ன அரிய பொக்கிஷத்தை பத்திரமாகச் சேர்ப்பித்து விட்டேன் என்று சொல்லச் சொன்னான். அப்படி என்ன அவனிடம் கொடுத்து விட்டாய்? சு..ஜா! நீ இவ்வளவு நேரம் அழுதாயா? ஏன்

உன் முகம் இப்படி இருக்கு?'' என்று ஆதங்கத்தில் ஆரம்பித்து, சந்தேகத்தில் பயணித்து, அக்கறையில் முடித்தார் கிஷோர்.

''ஒன்றும் இல்லை. நீ இந்த நேரத்தில் வருவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை...'' என்று ஹிந்தியில் அவர் முணுமுணுத்தது காதில் விழ கிஷோர் அவரை ஆச்சரிய மாகப் பார்த்தார்.

''சுஜா...'' வெறும் அழைப்பே கேள்வி கேட்டது.

''என்ன இப்பதான் என் பேரைச் சொல்லிப் பழகு கிறாயா? நேரமாச்சு. நான் பள்ளிக்குக் கிளம்பறேன். நீ டீ குடிக்கிறாயா?''

''எனக்கும் நேரமாச்சு. நானும் கிளம்பறேன். அபிஷேக் போன் பண்ணின தகவல் சொல்லத்தான் வந்தேன். அப்படி என்ன பொக்கிஷம் கொடுத்தாய் என்று கேட் டேனே? பதிலைக் காணோம்...''

''நான் கூடத்தான் டீ குடிக்கிறாய் என்று கேட்டேன். நீ பதில் சொன்னாயா?''

''ஹூம், எப்படியோ போ. உன்னிடம் இருந்து ஒரு வார்த்தை வாங்க நான் படும் பாடு இருக்கே? இதென்ன இன்னிக்கு நேற்றா நடக்குது? பதினெட்டு வருஷமா நடக்குது. எனக்கு டீ வேண்டாம் தாயே. நான் கிளம்ப றேன்.''

''ம்ம், சரி...''

''தமிழ்நாட்டுல தடுக்கி விழுந்தால் ரூபாய்க்கு ரெண்டு போன் என்று கூறு போட்டு விக்காத குறைதான். ரோட்டுல போறவன் வரவன் எல்லாம் ஒண்ணுக்கு நாலு



போன் வச்சு இருக்கான். நீ ஒரு அவசரத்துக்கு உன்னைத் தொடர்பு கொள்ள உதவியா இருக்கும், ஒரு போன் வச் சுக்கோ என்று சொன்னால் கேட்கிறாயா? எதுக்கு இந்தப் பிடிவாதம் பிடிக்கிறாய்? போன் இருந்தால்...''

''இன்னிக்கு சாயங்காலம் எனக்கு ஒரு போன் வாங் கிட்டு வா. போதுமா? இப்ப கிளம்பு'' என்று உடனடியாக சம்மதம் சொன்ன சுஜாதாவை விழி தெறிக்கப் பார்த் தவர், ''எதுக்கு இப்படி வீட்டுக்குள்ளேயே விடாமல் அவ சரமாக துரத்துகிறாள் என்று யோசித்தவருக்கு, ஒரு ஊகம் தோன்ற, தலை அசைத்து விடைபெற்று, கிளம்பினார் கிஷோர்.

அவரின் ஊகம் சரி என்பது போல, அவரது பைக், அந்த தெரு முனையைக் கடக்கும் முன்பே, எதிர் சாரியில் விழிகளில் தேடலுடன் நடந்துபோனது தியாகராஜன் தானே? திகைத்த அவரின் கையில், ஒரு கணம் வாகனம் தடுமாறி நேரானது.

இத்தனை ஆண்டுகள் கழித்து இவர் சுஜாதாவை தேடி வந்து இருப்பது நல்லதற்குத்தானா? சண்டை பெரிதாக வந்து விட்டால்... அவர்களுக்கு என்ன பிரச்னை வந்து இருந்தாலும் அது தன்னால்தான் வந்தது என்ற அளவிற்கு கூட ஊகிக்க முடியாத முட்டாள் இல்லையே? தான் அங்கே போகலாமா வேண்டாமா? மனம் தடுமாறியது.

அவர்கள் சேர்ந்து சந்தோஷமாக வாழ்ந்தால், அதை விட தனக்கு மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை. ஆனால், இத்தனை நாட்கள் உற்சாகம் என்று இல்லாவிட்டாலும் அமைதியில் இருந்தாள். அதுவும் இன்று இவரது வருகை யால் குலைந்து விட்டால்...

அவரால் வீட்டுக்குப் போக முடியவில்லை. அப்படியே சாலையோரத்தில், பைக்கை நிறுத்தி, அதிலே அமர்ந்து சுஜாதாவின் வீட்டை கண்காணிக்க ஆரம்பித்தார்.

* * *

தியாகராஜன் அன்று இரவு ஒன்பதரை மணி அளவில் திருவண்ணாமலையில் பேருந்தில் ஏறி, ஆரோவில்லில் இறங்கிய போது மணி பனிரெண்டை தாண்டி இருக்க, இந்த நேரத்தில் போய் கதவைத் தட்டுவது அநாகரீகமாகத் தோன்றியது. தன்னுடைய ஆர்வக் கோளாறு, அவசரமாகக் கிளம்ப வைத்து விட்டது. தான் தாலி கட்டிய மனைவி தனியாக வசிக்கும் வீட்டிற்குச் செல்ல யோசிக்கும் தன்னுடைய நிலையை எண்ணி அவருக்கே சங்கடமாக இருந்தது. இவ்வளவு பெரிய இடைவெளி விழ யார் காரணம்?

அவள் வீட்டை விட்டு வெளியேறிய போது, கிஷோர் திருமணத்திற்குச் செல்கிறேன் என்பதை தான் திருப்பித் திருப்பிச் சொன்னாள். அவனை திருமணம் செய்து கொள்ள எண்ணும் பட்சத்தில், தன்னை விட அவனை உசத்தியாக நினைத்தாள் என்பதும் அவருடைய ஈகோவை பலமாகத் தாக்கியது என்பதும் உண்மைதான். அதே கிஷோரை வேண்டாம் என்றுதான், அவனுடைய உதவியால் தான் அவளே வீட்டை விட்டு வெளியேறி வந்து தன்னை மணந்தாள் என்பது அந்த பொல்லாத தினத்தில் அவருக்கு நினைவில்லாமல் போய் விட்டது.

இரவு முழுவதும் கொட்டும் பனியில் சாலையோரமே அமர்ந்து தன்னைத் தானே ஆராய்ந்து பொழுதைக் கழித்தவர், டீக்கடையில் தண்ணீர் வாங்கி முகத்தைக் கழுவி, ஏழு மணி அளவில் விசாரித்து சுஜாதாவின்



வீட்டை நெருங்கினார். அழைப்பு மணியை அழுத்த கை உயர்த்தியபோது, திறந்த கதவு, இருவரையும் பல வினாடிகள் திகைக்க வைத்தது.

தூய வெள்ளை உடலில், ஆரஞ்சு வண்ண குட்டிப் பூக்கள் பிரிண்ட் போட்ட கைத்தறி புடவையும், பளிச் என்று சருமம் தெரியக்கூடாது என்பதற்காகவே போட்ட, வெள்ளை ரவிக்கையும், எளிமையான பின்னலும், அலங்காரம் எதுவும் இல்லாமலே, மாசு மருவின்றி மின்னிய புன்னகை இல்லாத முகமும், லேசாக சிவந்த கண்களும், அவரின் கலங்கிய மனநிலையை தியாகராஜனுக்கு வார்த்தைகள் இன்றி படம் பிடித்துக் காட்டியது.

இரவு பயணம், தூக்கம் இல்லாததால் களைத்த கண்கள், கலைந்த தலை, முன்னேற்பாடின்றி அவசரமாகக் கிளம்பியதால் கையில் அகப்பட்டதைப் போட்டு வந்த பொருத்தமில்லாத உடை, எல்லாவற்றிற்கும் மேலே, கண்களில் அதீதமாக தென்பட்ட குற்ற உணர்வு, அவரின் உள்ளத்தை சுஜாதாவிற்கு எடுத்துக் காட்டியதோ?

இரவு முழுவதும், அவர்மேல் இருந்த கோபம் காணாமல் போனது. பார்த்த உடன் 'யார் நீங்க?' என்று கேட்க வேண்டும் என்று யோசித்தது மறந்து போனது. 'வாங்க...' என்ற ஒற்றை வார்த்தை தானாக உதிர்ந்து கால்கள் நகர்ந்து வழி விட்டது.

ஒரு வெரண்டா, ஒரு சின்ன ஹால், அதை ஒட்டி ஒரு புறம் சமையல் அறை, மறுபுறம் ஒற்றைப் படுக்கை அறை. அதிகம் பொருட்கள் இல்லாத எளிமையான வீடு. யார் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்ற யோசனையில் மௌனம் நீண்டது.

''நேற்று உங்க பொண்ணு உங்களுக்குத் தெரியாமல் இங்கே வந்து இருந்தாள். நான் உடனேயே திருப்பி அனுப்பி விட்டேன். வந்து விட்டாளா?'' என்று சுஜா தாவே கேட்டார்.

''ம்ம்ம், வந்துட்டோம் என்று விவேக் சொன்னான். நீ எ..ப்..ப..டி இ..ரு..க்..க?'' தடுமாறியது தியாகராஜனின் குரல்.

''இங்கே நில், அங்கே போகாதே, அதைச் செய்யாதே என்ற கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி ரொம்ப சந் தோஷமாக இருக்கிறேன்...'' என்று வேண்டும் என்றே ஹிந்தியில் சொன்னார் சுஜாதா.

அவரின் குத்தல் புரிந்தது போல சில கணங்கள் அமைதியாக இருந்த தியாகராஜனை பார்த்து அவருக்கே ஒரு மாதிரியாகி விட்டது. ''உங்க அம்மா நல்லா இருக் காங்களா?'' என்று சமாதானமாகக் கேட்டார். அப்போதும் நீ எப்படி இருக்கிறாய் என்ற கேள்வி வரவில்லை என் பதை கவனித்த தியாகராஜனின் மனம் மேலும் நொந்தது. தனக்கு இது போதாது.

'கிஷோர் எங்க இருக்கிறார்? நல்லா இருக்கிறாரா?'' என்று விசாரிக்க, சுஜாதாவின் பொறுமை பறக்கத் தயாரானது.

''நல்லா இருக்கிறார். அவரும், அவர் மனைவியும், காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும், நம்மளை மாதிரி பாதியில் சின்னச் சண்டையை ஊதி பெரிசாக்கி பிரியவில்லை. சந்தோஷமா இருக்காங்க. ஒரு ஆண், ஒரு பெண் என்று அளவான குடும்பம், போதுமான



அளவு வருமானம், இதே பாண்டிச்சேரியில சொந்த வீடு, வாகனம், பிசினெஸ் என்று அமோகமா இருக்காங்க. பார்க்கணுமா? அட்ரஸ் தரவா?'' என்று கோபத்தை அடக்கி சொன்னார்.

அவர் பேச பேச, அந்தக் கடிதத்தில் தான் சந்தேகப் பட்ட வாக்கியங்கள் உண்மை என்று புரிந்தது. காலம் கடந்த ஞானோதயம். யாருக்கு இந்த வருத்தத்தால் என்ன பிரயோஜனம்? தலை குனிந்து அமைதியாக இருக்க, சில நிமிடங்களில் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தி, ''இப்ப என்ன விஷயமா வந்தீங்க?'' என்று பட்டென்று கேட்டார் சுஜாதா.

''சா..ந்..தி நேற்று சொல்லவில்லையா?'' தியாகராஜ னின் குரல் திக்கியது. என்னுடைய பெண்ணின் திரு மணப் பேச்சு வார்த்தை நடந்த போது, மாப்பிள்ளை வீட்டார் உன்னை கேட்டார்கள் என்ற உண்மையை சொல்ல நாக்கு கூசியது. கடந்த காலத்தில் பிரிந்தே வாழ்ந்து இருந்தாலும் இரவு பகல் உன்னை நினைக் காமல் இருந்ததே இல்லை என்றாலும், அவளை தான் தேடவில்லை என்பதற்கான உண்மையான காரணம் அவளுக்குத் தெரியாதே?

''இல்லை நான் அவளிடம் அதிகம் பேசவில்லை. தன்னைப் பெற்ற தாய் யார் என்பதை அவள் இத்தனை வருடம் கழித்து வெளி ஆளிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள். அப்புறம் எப்படி நீங்க என்ன விஷயமா என்னைப் பார்க்க இன்னிக்கு வருவீங்க என்று அவளுக்கு நேற்றே தெரியும்? எல்லா விஷயத்தையும் மறைக்காமல் அவளிடம் சொல்லி வைத்து இருக்கிறீர்களா என்ன?'' சாட்டையாய் சுழன்றது அவரின் கேள்வி.

"சாந்திக்கு மாப்பிள்ளை பார்த்து இருக்கிறோம்..."

"ஓ! ரொம்ப சந்தோஷம்..."

"கல்யாணத்திற்கு நீ வந்து தாயாக கலந்து கொள்ளணும். உன்னை அழைத்துப் போக நான் வந்தேன்..."

"என்னிக்குக் கல்யாணம்?"

"இன்னும் முடிவாகலை..."

"முடிவு பண்ணிட்டுச் சொல்லுங்க. கல்யாணத்திற்கு முதல் நாள் நான் வந்து கலந்துக்கிறேன். அப்புறம் வேறென்ன விஷயம்?"

"வேற என்னவா...? நான் உன்னை அங்கே அழைத்துப் போக..."

"சாரி, இப்ப எனக்கு அங்கே வர முடியாது. கல்யாணத்திற்குக் கட்டாயம் வருகிறேன். தைரியமா போங்க. யாருக்கு வாக்குக் கொடுத்தாலும் அதைக் காப்பாற்றி தான் பழக்கம். அது காதலனாக இருந்தாலும் சரி, நட்பு, உறவாக இருந்தாலும் சரி, மாஜி கணவனாக இருந்தாலும் சரி..."

"சு..ஜா..தா..." அதிர்ச்சியுடன் அழைத்தார் தியாகராஜன்.

"எனக்கு ஸ்கூலுக்குப் போக நேரமாச்சு. அப்ப கிளம்புறீங்களா?" என்று கரம் குவித்தவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்த தியாகராஜன் எழுந்து தளர்ந்த நடையுடன் செல்வதைப் பார்த்தபடியே கதவைச் சாத்தி பூட்டத் துவங்கினார் சுஜாதா.



# 20



'பள்ளிக்கு நேரமாகி விட்டது. நீ உடனே கிளம்பு' என்று தியாகராஜனை துரத்திவிட்டு, கிளம்பி விட்டாலும், பள்ளிக்குச் செல்லும் வழியில் அவருக்கு அந்த கடைசி நாள் நினைவுகள் மீண்டும் படமாக ஓடியது. எங்கே தான் தவறு செய்தோம்? தன் திருமணத்திற்கு உதவிய ஒருவன், அவன் தன் நெருங்கிய உறவினரும் கூட அவனின் காதல் திருமணத்திற்கு உதவ நினைப்பது எந்த விதத்தில் தப்பு?

கிஷோரைப் பார்த்த வினாடியில் தான் ஓடிப் போய் அவனை அணைத்துக் கொஞ்சிப் பேசியது தப்பு என்று புரிகிறது. ஆனால் தன்னை வேண்டாம் என்று ஒதுக்கி வைக்க தியாகராஜனுக்கு அது மட்டும் போதுமா என்ற கோபம் இத்தனை ஆண்டுகள் கழித்தும் ஆறவே இல்லை.

கிஷோரைப் பார்த்த உடனே, சுஜாதாவின் பிரதிபலிப்புகளும், வீடு நிறைய ஆட்கள் இருந்ததால், அவர்கள் தோட்டத்தில் தனியாகப் போய் பேசியதும், அவருக்கு கோபமூட்டத்தான் செய்தது. அதை சுஜாதாவிடமும் வெளிப்படுத்தினார்.

"உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? வீட்டுல இத்தனை விருந்தாளிங்க இருக்கும்போது நீ தனியாகப்

போய் பேசுவது சரி இல்லை. அவன் நம்ம கெஸ்டா இருக்கட்டும். நாளைக்குக் கல்யாணம் முடிச்சு இவங்க எல்லாம் போன பிறகு அவரோடு நீ பேசு. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை'' என்று கடிந்தார்.

''இல்லை தியாகு, அவன் அவசரத்தில் இருக்கிறான். ரொம்ப முக்கியமான விஷயம். அவனுக்கு உடனே கல்யாணம் நடக்கணும், நம்ம ஹெல்ப் கேட்கிறான்'' என்று ஆங்கிலமும் ஹிந்தியும் கலந்து வேகமாகப் பேச, அவருக்கு அதில் பாதி புரியவில்லை. மனைவி ஏதோ சொல்கிறாளே, அது என்ன என்று புரிந்து கொள்ள முயற்சியாவது செய்வோம் என்று தோன்றவில்லை.

''ப்ச்! ஆரம்பிச்சுட்டியா? உனக்கு எத்தனை தடவை சொல்றது? தமிழில் பேசு...''

''சாரி தியாகு... கிஷோருக்கு நாளைக்குக் கல்யாணம் நடக்குமா நடக்காதா தெரியலை...''

''என்ன பேசுற? உடனே கல்யாணம்னு சொல்ற. அப்புறம் நடக்குமா நடக்காதா சந்தேகம் என்றால் என்ன அர்த்தம்? நீ போனால் தான் அந்தக் கல்யாணம் நடக்குமா?'' அவர் எரிச்சலில் கேட்கிறார் என்பதைக் கூடப் புரியாமல், பிரச்னையை தீர்க்க, அவனுக்கு உறுதுணை யாக இருக்க தான் போகணும் என்று அர்த்தத்தில், வேக வேகமாக சுஜாதா தலை அசைக்க, தியாகராஜனின் கோபம் மேலும் கூடியது.

சுஜாதாவிடம் எரிச்சலோடு அவர் பேச வாய் எடுக் கும்போதே, பவானி அம்மா வந்து விட்டார். ''வீடு நிறைய ஆளை வச்சுக்கிட்டு, நீங்க ரெண்டு பேரும் இங்கே என்ன மாநாடு நடத்திட்டு இருக்கீங்க? முதலில் அவள் அவனோடு பேசி அந்த அம்மா வாயில் விழுந்தா. இப்ப



நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து பேசி என் மானத்தை வாங் கணுமா? முதலில் உள்ளே வாங்க. எதுவா இருந்தாலும் ரெண்டு நாள் கழிச்சுப் பேசிக்கலாம்'' என்று அதட்டினார் பவானி.

''அம்மா நீங்க சொல்லுங்க. கிஷோர் எனக்கு ஹெல்ப் பண்ணி இருக்கான். அவனுக்கு கல்யாணம் என்றால் நான் போக வேண்டாமா?'' என்று சுஜாதா இடையிட்டார்.

''எங்கே போறதா இருந்தாலும், போறதுக்கு முன்னாடி அவனிடம் அனுமதி வாங்கிக்கோ. நீ அந்தப் பையனை ரெண்டு நாள் கழிச்சு வரச்சொல்லு. அப்புறம் நிதானமா பேசிக்கலாம். நாளைக்கு முடியாது. இங்கே மாதவி வீட்டு...''

''தியாகு ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க. நான் நாளைக்கு அவனோட வரேன் என்று சொல்லி இருக்கேன். கட்டாயம் போகணும்...'' பவானி அம்மாவின் மறுப்பை அவர் பேச ஆரம்பித்த தொனியிலேயே புரிந்து கொண்ட சுஜாதா, தன்னுடைய வேண்டுதலை கணவரிடம் மாற்றினார்.

''எங்கே எப்போ கல்யாணம்?'' என்று தியாகராஜன் அரை மனசாகக் கேட்க, ''தெரியலை அவன் போன் பண்ணுவான்'' என்ற சுஜாதாவின் பதில் அவர்களின் எரிச்சலைக் கூட்டியது.

''அதென்ன நாளைக்கு கல்யாணம் என்று சொல்ற. இடம் தெரியாது என்றால் என்ன அர்த்தம்? இதுவரைக் கும் முடிவாகாத ஒரு விஷயத்திற்காக, மாதவி வீட்டு சம்பந்தக்காரங்க கல்யாணத்தை அசால்ட்டா விடுறதா? அவன் சொல்றது உனக்கு நாங்க சொல்றதை விட ரொம்ப முக்கியமா?'' என்று இடையிட்ட இருவரின் குரலிலும் எரிச்சல் பரிபூரணமாக இருந்தது.

''ஹாம்மா! வோ பச்பன் மே பீ...''

''ப்ச்! அவனிடம் ஹிந்தியில் பேசறதே, எனக்குக் கஷ்டமா இருக்கு, இந்த லட்சணத்துல என்னிடமேவா? என்று பவானி அம்மாவும்,

''அம்மா இருக்கும்போது அவங்களுக்குப் புரியாத பாஷையில் பேசினால் அவங்களை ஒதுக்கி வைக்கிறோம் என்று நினைக்க மாட்டாங்களா? தமிழ்... தமிழ்... தமிழில் மட்டும் பேசு...'' என்று தியாகராஜனும் அதட்ட, பதட்ட மான சூழலில் தமிழில் பேச முயன்ற சுஜாதாவிற்கு மொழி மறந்து போன உணர்வே மிஞ்சியது.

தங்களுக்கிடையே இருந்த நட்புணர்வை, சின்ன வயசுல இருந்து, ஒண்ணா சாப்பிட்டு, ஒண்ணா வளர்ந்து, ஒண்ணா தூங்கி, ஒரே வீட்டில் ரொம்ப நெருக்கமா இருந்தோம் என்ற விஷயத்தைப் பாதி தமிழிலும், பாதி ஜாடையிலும் வெளிப்படுத்தியது தான் அங்கே பிரச்னை பூதாகரமாக உருவெடுக்க வழி வகுத்ததோ?

குழந்தைகளுடன் இந்த குழம்பிய மனநிலையில் இயல்பாக இருக்க முடியாது என்று தோன்ற, பள்ளிக்கு அனுமதி சொல்லி விட்டு, எப்போதும் மனம் அமைதியை நாடி தவிக்கும் வேளையில்தான் வழக்கமாகச் செல்லும் அரவிந்தர் ஆஸ்ரமத்திற்குச் சென்றார். அங்கே வெள்ளை மார்பிள் கற்களால் அமைக்கப்பட்ட அன்னையின் சமா திக்கு அருகே அமர்ந்து, கண்களை மூடி அந்த சமாதியில் தலை சாய்த்து அமர்ந்தார்.

எட்டரை மணி அளவில் உள்ளே சென்றவர், பனி ரெண்டு மணிக்கு உணவு இடைவேளைக்கு என்று பணி யாளர்கள் வந்து தோளை தொடும் வரை, அதே இடத்தில்



அசையாமல் இருந்தார். வரும்போது இருந்த மனக் கொதிப்பு கொஞ்சம் அடங்க இருந்தது.

நிதானமான நடையுடன் சமாதியை விட்டு வெளி வருவதற்கு, இருபதடி இடைவெளியில் முன்னால் நடந்து செல்வது தியாகராஜன் என்பதை அறிந்ததும், மனம் கனிந்ததோ? இவர் எங்கே இங்கே வந்தார்? தன்னை பின் தொடர்ந்தா? மனசுக்குள் சமாதியை விட்டு வெளியே வரும்போது இருந்த அமைதியான நிலையை யும் தாண்டி, இதமான ஒரு உணர்வு பூ மலர்வது போன்று பரவுவதை அவரால் தடுக்க முடியவில்லை.

* * *

நள்ளிரவில் திருவண்ணாமலைக்கு, திரும்பி வந்த மூவரையும் பார்த்த பவானி அம்மாவிற்கு முதலில் தோன் றியது சுஜாதாவின் பயத்தைப் பற்றிய ஆச்சரியம்தான். தன் சம்மதத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து இருந்தால், இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, தன்னை பார்க்க எவ்வளவு வீடு தேடி வந்த பெண்ணை, உடனே திருப்பி அனுப்பி இருப்பாள்.

''எப்படி இருக்கா உங்க அம்மா?''

''இதுக்கு நான் என்ன பதில் சொல்வது பாட்டி? நல்லா இருக்காங்க என்று சொன்னால் அது வெறும் சம்பிரதாய மான வார்த்தை இல்லையா? உயிரோடு இருக்காங்க. நோய் நொடி இல்லாமல் இருக்காங்க. சந்தோஷமா இருக் காங்களா என்று கேட்டால் இல்லை. இப்ப சொல்லுங்க. அவங்க நல்லா இருக்காங்களா? இல்லையா?''

''உங்க அம்மா வீட்டை விட்டுப் போனதுக்கு நான் தான் காரணம் என்று நினைக்கிறாயா சாந்தி?'' குற்ற

உணர்வில் பரிதவிப்பாக வந்தது பவானி அம்மாவின் கேள்வி.

''அம்மாவே அப்படி நினைக்கவில்லை. அப்புறம் நான் எப்படி அப்படி நினைப்பேன் பாட்டி. இத்தனை வருஷம் கழித்தும் அவங்க உங்க மேலே நிறைய மரியாதையை வச்சு இருக்காங்க. அவங்களுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''அவளும் உங்க அப்பாவும் சந்தோஷமா இருக்க என்னால் எந்தத் தடையும் வராது. அது போதுமில்லையா உனக்கு?''

''தடை அங்கிருந்து வந்தால் என்ன செய்வீங்க பாட்டி?'' வாஸந்தியின் கேள்விக்கு அவருக்கு விடை தெரியவில்லை.

''நீக்க முயற்சி பண்ணனும். உங்க அப்பா மேலே அவளுக்குக் கோபம் இருந்தால் அதுல தப்பு சொல்ல முடியாது. என் மேலேயும் இருக்கலாம். அதனால நீயும் அந்தப் பையனும் போய் பேசுங்க. இப்போதைக்கு வேறென்ன சொல்வது?''

''பாட்டி... அந்த பையன் என்பது...'' விடையை ஊகிக்க முடிந்தாலும் அவரின் வாயால் தெரிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது.

''அபிஷேக் தான். சரி தூங்கு, காலையில் உங்க அப்பாவிடம் விசாரி. அவனால் உங்க அம்மாவை சமாதானப் படுத்த முடியவில்லை என்றால் நீங்க ரெண்டு பேரும் போங்க. என் மகனுக்காக, அவன் சந்தோஷத்திற்காக, தேவைப் பட்டால் நானும் வரேன்'' என்று சொன்ன பாட்டியை நம்ப முடியாமல் தாவி அணைத்து கன்னத்தில்



அழுந்த முத்தமிட்டு, ரொம்ப தேங்க்ஸ் பாட்டி... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்...'' என்று சிரித்தாள் வாஸந்தி.

மறுநாள் காலையில், 'நீ ரெண்டு மூணு நாள் ஆனாலும் இருந்து, இந்த நீண்ட கால பிரச்னையை நல்ல படியா தீர்த்து விட்டு மெதுவா வா'' என்று வாஸந்தியிடம் சொல்லி விட்டு, அபிஷேக்கின் தோளில் தட்டி, ''பாட்டி வாயால் நல்ல பையன் பட்டம் வாங்கிட்ட போல, ஜமாய்'' என்று சிரித்துவிட்டுக் கிளம்பினான் விவேக்.

எட்டரை மணி அளவில் தியாகராஜனிடம் அபிஷேக் பேசிய போது அவரின் குரலில் சுரத்தே இல்லை. சுஜாதா அவரிடம் சரியாகப் பேசவில்லை என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. மேலே துருவாமல் விட்டு விட்டவன், ''மாமா, பாட்டி எங்க ரெண்டு பேரையும் அங்கே போகச் சொன்னாங்க. நாங்க வந்துடுறோம். நீங்க அங்கேயே இருங்க'' என்று அவர் கிளம்புவதை ஒத்தி வைத்தான். கிளம்புவதற்கு முன்பு பாட்டியிடம் விடை பெற வந்தான் அபிஷேக்.

''பத்திரம் அபிஷேக். என்மேலே நம்பிக்கை வச்சு அவங்க அம்மா ராத்திரியோட ராத்திரியா திருப்பி அனுப்பினாளே? அந்த நம்பிக்கை நான் உன் மேலே வச்சு இவளை உன்னுடன் அனுப்புறேன்...'' மேலே அவர் என்ன சொல்லி இருப்பாரோ?

''என் மேலே நம்பிக்கை வைச்சு வைஸுவை என்னுடன் அனுப்புவதற்கு சந்தோஷம் பாட்டி. உங்க நம்பிக்கையை இன்று மட்டும் இல்லை. என் வாழ்நாள் முடியும் வரைக்கும் காப்பாற்றுவேன். அவளை சந்தோஷமா வச்சுக்கறது என் பொறுப்பு. அவ வெங்காயம் உரிச்சு, அதனால் கூட கண் கலங்கக் கூடாது. அந்த வேலையை நானே

பார்த்துக்கறேன். போதுமா? சந்தோஷம் தானே?'' என்று வாஸந்தியுடன் அவர் காலில் விழுந்தான்.

''ஷ்! அபி...'' என்று வாஸந்தி, பாட்டியிடம் இப்படி கேலி பேசுகிறானே என்று கண்டிக்க, அவர் முகத்தில் சின்ன ஆச்சரியம் மட்டுமே தெரிந்தது.

''பாட்டி, இப்ப முதல் வேலை, அத்தையை இங்கே கூட்டிட்டு வருவது. செஞ்சுடலாம். பிரச்னை இல்லை. ஆனால் எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள் உங்களிடம் இருக்கு. அதை எப்படிச் சொல்வது என்று தயக்கமா இருக்கு...'' என்று இழுத்தான்.

''இவன் என்ன சொல்ல வருகிறான்?'' என்பது புரியாமல் வாஸந்தி, பவானி இருவருமே அவனைக் குழப்பத்தோடு பார்த்தனர்.

''அங்கே இருந்து அத்தை கிளம்ப, ஒரு வார்த்தை வாம்மா, என்று நீங்க போனில் சொன்னால் போதும், நான் சமாளிச்சுக் கூட்டிட்டு வந்துடுவேன். அங்கே போயிட்டு போன் பண்ணட்டுமா? பரவாயில்லையா?'' என்று பாவமாகக் கேட்டான் அபிஷேக்.

''தேவைப்பட்டால் நேரில் வரத் தயார் என்று சொல்லிட்டாங்க என்று இவனிடம் காலையிலேயே கிணற்றடியில் வைத்து சொல்லியாச்சே? இப்ப எதுக்கு மறுபடியும் நோண்டுறான்'' என்று எரிச்சலோடு வாஸந்தி பேச முயல, பவானிம்மா கை காட்டி அடக்கினார்.

''பரவாயில்லைப்பா. எனக்கு என் பையன் சந்தோஷம் ரொம்ப முக்கியம். அதைவிட என் பேத்தி கல்யாணம் நல்லபடியா நடப்பது ரொம்ப ரொம்ப முக்கியம். நான் பேசறேன். எனக்கென்ன நஷ்டம்? நீ போன் பண்ணு.''



''தேங்க்ஸ் பாட்டி, என்ன சொன்னாலும் பெரியவங்க பெரியவங்க. இன்னிக்கு நடு ராத்திரி ஆனாலும் சரி, எல்லோரும் இங்கே வந்துடுவோம். நீங்க ஆரத்தியோடு ரெடியா இருங்க, அப்ப நாங்க கிளம்புறோம்'' என்று விடைபெற்றான்.

பாட்டியின் ஆசீர்வாதத்தோடு, தன் தாய் தந்தையைப் பார்க்க தன் வருங்கால கணவனோடு, தனியாகப் போகிறோம் என்ற எண்ணம் விளைவித்த சந்தோஷத்தில், அவனை நெருங்கி அமர்ந்து, தோளில் சாய்ந்தபடி, ''அடேயப்பா! என்ன நடிப்புடா சாமி! காலையில் நான் தான் சொன்னேனே? அப்புறம் என்ன? பாட்டியிடம் ஒண்ணுமே தெரியாத மாதிரி அப்படி ஒரு நடிப்பு...'' என்று விசாரித்தாள் வாஸந்தி.

''ஓ! நீ காலையில் பாட்டியிடம் அனுமதி வாங்கித் தான் பேச வந்தாயா? முன்னாடியே இதெல்லாம் சொல்வது இல்லையா?'' என்று கேலியாகக் கேட்டான்.

''கொழுப்புதானே? உங்களைத் தனியா பார்க்க கிணற்றடிக்குப் போறேன் என்று நான் பாட்டியிடம் அனுமதி வாங்கி வரணுமா? நடக்கிற கதையா இது? நான் வாழை இலை வெட்ட வந்தேன். நீங்க அங்கே இருந்தீங்க. சொன்னேன். அவ்ளோதான். நான் இலை வெட்ட வந்தேன். நீங்க எதுக்கு வந்தீங்க?'' என்று குறுகுறுப்புடன் கேட்டாள்.

''நான் அங்கே எதுக்கு வந்தேன் என்பதை நீ என்னிடம் கேட்டு தெரிந்து கொள்ளும் அளவில் இருக்கு நம்முடைய உறவு நேரம்தான்...'' என்று அவள் புறம் நெருங்கி அமர்ந்து காதுகளில் கிசுகிசுத்தான் அபிஷேக்.

''இது என்ன சிதம்பர ரகசியமா? எதுக்கு இப்படி காதுல உரசுறீங்க. கொஞ்சம் தள்ளி தான் உட்காருங்களேன்...'' என்றவளின் குரல் அவளுக்கே கேட்டு இருக்காது.

''கிட்டே உட்கார்ந்தாலே, நீ பேசுறது கேட்க மாட்டேங்குது. இன்னும் தள்ளி உட்கார்ந்தால்...'' அவன் இன்னும் கொஞ்சம் நெருங்க, ''அபி... ப்ளீஸ்... டிரைவர் அப்பாக்குத் தெரிந்தவர்...'' என்று முனகியவள் அவசரமாக கார் ஜன்னல் கண்ணாடியை இறக்கினாள்.

சில்லென்று காற்று முகத்தில் மோத கொஞ்சம் சுதாரித்தவன், ''வஸு! உங்க அம்மாவை எப்படி வீட்டுக்குக் கூப்பிடலாம். உங்க அப்ப மேலே அவங்களுக்குக் கோபம் இருந்தால் நாமாத்தான் தலையிட்டு சமாதானம் பண்ணனும். அதுக்கு...'' என்று ஆரம்பித்தவன் வேகமாகத் திட்டமிட்டான்.

இரண்டு முறை தியாகராஜனிடமும், கிஷோரிடமும் பேசினான். கிஷோரின் மூலமாகவும், அவனுக்கு மொபைல் போன்கள் சப்ளை பண்ணும் டீலர்கள் மூலமாக புதுச்சேரியில் மேலும் சிலருடன் பேசினான். அவனுடைய பேச்சில் அம்மாவின் முகவரிக்கு, குடித்தனம் நடத்தத் தேவையான அனைத்து எலெக்ட்ரானிக் சாதனங்களும், கட்டில் பீரோ, சோபா செட், போன்ற பொருட்களுக்கும் ஆர்டர் கொடுக்க, வாஸந்தி குழம்பினாள்.

''அபி! அங்கிருந்து அம்மாவைக் கூட்டிட்டு வரணும் என்று நான் சொல்லிட்டு இருக்கேன். நீங்க எதுக்கு இப்ப இதுக்கு எல்லாம் ஆர்டர் கொடுக்கறீங்க?'' என்று புரியாமல் கேட்டாள் வாஸந்தி.



''பொறுத்திருந்து பார். எதுவும் வேஸ்ட் ஆகப் போவதில்லை. அத்தைக்கு அங்கேயோ, இங்கேயோ, இல்லை நம் வீட்டிலேயே எங்கேயாவது பயன்படும். கவலைப்படாதே...'' என்று மர்மப் புன்னகை பூத்தான் அபிஷேக்.

அவனின் திட்டம் என்ன என்பது கூடவே இருந்து எல்லாவற்றையும் கவனித்த வாஸந்திக்கு மட்டும் இல்லை. பார்வையாளராக மட்டும் இருந்த தியாகராஜனிற்கும், பங்கேற்ற கிஷோருக்கும், கூட புரியவில்லை. மாலை ஆறு மணி அளவில் வீட்டுக்குள் நுழைந்தபோது, கணவன், மகள், மற்றும் அவளை மணக்கப் போகிறவன் சகிதமாக வாசலில் பல விதமான பார்சல்களும் அணி வகுத்து இருந்ததைப் பார்த்த சுஜாதாவும் பிரமித்துப் பேச்சிழந்துதான் போனார்.

# 21



மாலையில் தன் வீட்டுக்கு திரும்பி வந்த சுஜாதா தன்னுடைய சின்னஞ்சிறு வீட்டின் முன்னே அணி வகுத்து நின்ற பார்சல்களையும், அதற்கு மேலே வாசலில் காத்து நின்ற, தியாகராஜன், வாஸந்தி, அபிஷேக்கையும் பார்த்து திகைத்துப் போனார். காலையில் தான் சரியாக முகம் கொடுத்துப் பேசாததில், அவர் திருவண்ணாமலை திரும்பிவிடக் கூடும், என்று எதிர்பார்க்கவில்லை.

மீண்டும் கிஷோர் மூலமாகவோ, வாஸந்தி மூலமா கவோ தனக்கு அழைப்பு வரும், அதை எப்படி தவிர்ப்பது என்று யோசித்து திட்டமிட்டு இருந்தார். கிஷோர் சொன் னால், ''நான் உன் குடும்ப விஷயத்தில் தலையிடு கிறேனா? என் மேலே உனக்கு நிஜமாகவே அக்கறை இருந்தால், என் சந்தோஷத்தைத் தீர்மானிக்கும் என் உரிமையில் தயவு செய்து நீ தலையிடாதே'' என்று சொல்ல முடிவு பண்ணி இருந்தார்.

வாஸந்தியிடம், ''நீ இங்கே வருவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. எப்போ வேண்டுமானாலும் வரலாம். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் தங்க லாம். ஆனால் என்னை அங்கே வரச் சொல்லிக் கட் டாயப்படுத்தாதே. எனக்கு மனசு சரி இல்லை' என்று சொல்லத் திட்டமிட்டு இருந்தார். ஆனால் இது இரண் டுமே இல்லாமல் இந்தத் திட்டத்தை அவர் எதிர்பார்க்க வில்லை.

இதை எப்படி எதிர்கொள்வது என்றும் யோசிக்க முடியவில்லை. காலையில் தியாகராஜனைத் தனியாக பார்த்த போது வெகு இயல்பாகக் கோபத்தை அவரால் காட்ட முடிந்தது. ஆனால் அவர் மேலே இருந்த கோபமே, அன்னையின் சமாதியில் இரண்டு மணி நேரத்தை கழித்த பின்பு குறைந்து இருந்தது. அங்கே அவரையும் பார்த்த வினாடியில் இளக்கமே இருந்தது.

இப்போதோ, வாஸந்தி மட்டும் இல்லாமல் அவளை மணம் செய்து கொள்ளப் போகும் மாப்பிள்ளையும் உடன் இருக்கும் போது குத்தலாகக் கேள்வி கேட்க, பிடிக் காத கணவராக இருந்தாலும் அவருக்கு மனம் வர வில்லை.



தியாகராஜனின் உடல் வலிமை அவருக்கே தெரியும். அவரின் பலத்திற்கு, இந்த சின்ன பூட்டு எம்மாத்திரம்? ஒரு கையால் சும்மா பிடித்து இழுத்தாலே பாட்லாக் கோடு சேர்த்தே கழன்று விடும். அவரின் வலிமை போதாது என்று இளவயதில், அவருக்கு சற்றும் குறையாத வலி மையோடு அபிஷேக்.

கிஷோரிடம் ஒரு சாவி இருக்கு. அவனைப் பார்த்து பேசி, அவனிடம் பைக்கை வாங்கி வர முடிந்தவனால், சாவி வாங்கி வர முடியாதா? இவர்கள் தனக்கு மரியாதை கொடுத்து, வாசலில் காத்து இருக்கிறார்கள். சுஜாதாவிற்கு எப்படி அவர்களிடம் பேசுவது என்றே புரியவில்லை.

''என்னம்மா அப்படி நின்னுட்டீங்க? சர்ப்ரைஸ் இல்ல? அப்பா, பாட்டி சம்மதத்தோட நீ எத்தனை நாள் வேண்டு மானாலும் இங்கே இருக்கலாம் என்று சொன்னீங்களே? அதான் வந்துட்டேன். அப்பா இங்கேயே இருக்காங்க. பாட்டி ஓகே சொல்லி அனுப்பினாங்க. நாலு மணில இருந்து காத்திருக்கிறோம்'' என்று வாஸந்தி ஓடி வந்து, வேகமாகப் பேசினாள்.

''நான் இன்று ஸ்கூலுக்குப் போகவில்லை. வெளியே போக வேண்டி இருந்தது. நீ வருவது எனக்குத் தெரிந்து இருந்தால் முன்பே வந்து இருப்பேன்...'' என்று சமாதான மாகச் சொன்னபடி, அபிஷேக்கிடம் வரவேற்பு புன்னகை ஒன்றை செலுத்தினார் சுஜாதா.

''ஹலோ அத்தை, கிஷோர் அங்கிள் உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க. காலையில் கேட்டீங்களாமே?'' என்று ஒரு புத்தம் புது மொபைலை எடுத்து நீட்டினான் அபிஷேக்.

''காலையில் இருந்து நான் இவனோடு தானே இருக்கிறான்? எப்போ கிஷோர் அங்கிள் மொபைல் கொடுத்தார். பார்க்கவே இல்லையே?'' என்று ஒரு கணம் குழம்பினாலும், சிரித்துக் கொண்டாள் வாஸந்தி.

''உன்னை வரச் சொன்னேன். நீ மட்டும் வர வேண்டியதுதானே? எதுக்கு இவங்க எல்லாம்? அதோட வாசலில் என்ன அத்தனை சாமான்? அது இல்லாமல் உன்னால் இருக்க முடியாதா? இது எல்லாம் எனக்குத் தேவை இல்லை'' என்று வாஸந்தியிடம் எரிச்சலை மறைக்காத குரலில் சொன்னார் சுஜாதா.

'தெரியலைம்மா, என்னோட அம்மாவோடு நான் சந்தோஷமா இருக்க, அவர் வாங்கி தரும் கிஃப்டா இருக்கும்...'' என்று சந்தோஷமாகச் சிரித்தாள். இத்தனை வருடங்களில் அவளுக்குக் கிடைக்காத புதிய அனுபவம் இது. அம்மாவும் அப்பாவும் ஒரே இடத்தில் இருப்பதே அவளைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய விஷயம்.

அதற்கும் மேலே, காலையில் பாட்டியே மனம் வந்து அபிஷேக்குடன் தன்னை அம்மாவைப் பார்க்க அனுப்பி வைத்ததைச் சொல்லலாம். இரண்டுமே அவளை கால்கள் தரையில் கால் பாவாமல் மிதக்க வைக்க போதுமானவை. இதற்கும் மேலே, அந்த இளம் வயதுக்குரிய கல்யாணக் கனவுகளும், நாள் முழுவதும் கூடவே இருந்து, அவ்வப்போது தன்னைச் சீண்டி சிரிக்க வைக்கும், தன் மேல் அளவில்லாத அக்கறை வைத்து இருக்கும், வெங்காயம் உரித்து கூட என் மனைவியின் கண்ணில் கண்ணீர் வரக்கூடாது என்று சொல்லும் வருங்கால கணவன், எல்லாமே சேர்ந்து உலகமே பூந்தோட்டமாய் பூத்துக் குலுங்கிக் கொண்டு இருந்தது.



காலையில் தனியாக இருக்கும் போதே அவளிடம் சகஜமாகப் பேச முடியவில்லை. இப்போது இவர்கள் இருவரையும் வைத்துக் கொண்டு எப்படிப் பேசுவது? அவளோ தன் மேல் போகிற போக்கில் ஒரு பார்வையை வீசி சென்றதோடு சரி. மகளின் உற்சாகமான முகம் பார்க்க சந்தோஷமாய் இருந்தது. இத்தனை நாள் இழந்த சந்தோஷத்தை அவள் இப்போது அடையட்டும். அவளுக்காக தன் இங்கே புறக்கணிக்கப் பட்டாலும், பரவாயில்லை என்று அவர் வாசலிலேயே அமர்ந்து இருந்தார்.

அவரை அத்தைக் கூப்பிடவில்லை என்பதை உணர்ந்த அபிஷேக்கிற்கும் சங்கடமாக இருந்தது. ஆனால் இதை அவர்கள் பேசித் தீர்க்க வேண்டும். தன் வேலை அவர்களை ஒரே இடத்தில் இருக்க வைப்பது என்று முடிவு பண்ணி உள்ளே சென்றான்.

''அத்தை, இடையில் பேசுவதற்கு சாரி. இந்த பொருள் வாங்கியதற்கும், வஸுவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான்தான் வாங்கி வந்தேன்...''

''எதுக்கு இதெல்லாம்? வாங்குவதற்கு முன்னால் என்னிடம் கேட்க வேண்டாமா? நீங்க வாங்கி வந்தால் என்ன அர்த்தம்? இதெல்லாம் திருப்பிக் கொடுத்துடுங்க. வஸந்தி இங்கே தங்க அவளுக்கு ஏதாவது தேவைப் பட்டால், அதை என் பொண்ணுக்கு என்னால் வாங்கித் தர முடியும்...''

''அத்தை! நீங்க தப்பா நினைத்துக் கொள்ளக் கூடாது. இது அவளுக்காக நான் வாங்கவில்லை. உங்க பொண்ணுக்கு என்ன வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா என்ன? உங்களைப் பார்த்த உடனே, நேற்று இரவு எங்க அம்மாவிடம் பேசினேன். அவங்க உடனே உங்களைப் பார்க்கணும். பேசணும், என்று அடம். உடனே உங்க

ளால் திருவண்ணாமலை வர முடியாது என்று மாமா சொன்னாங்க. எங்க அம்மாவிடம் பத்து நாள் பொறுங்க என்று சொன்னால் கேட்டால் தானே? அந்த கல்யாணி அம்மா பிறந்த இடத்திலும் புகுந்த வீட்டிலும் செல்ல பொண்ணு. நினைச்ச உடனே எல்லாம் நடந்துடணும்...''

பேசும்போதே இருவரையும் நோட்டம் விட்டான். வாஸந்தி சிரிப்பை அடக்க போராடுவதும், அம்மாவைப் பற்றி பிரெண்ட் போல இவன் கேலியாகப் பேசுகிறானே என்ற வியப்பு சுஜாதாவின் முகத்தில் தெரிய, உற்சாக மாகத் தொடர்ந்தான்.

''அவங்களால் திருவண்ணாமலை வர முடியலை என்றால் என்ன? நான் பாண்டிச்சேரியில் வந்து பார்க்கி றேன் என்று சொல்லிட்டாங்க. சரி, ஒரு நாள் டைம் கொடுங்க. நாளைக்கு வாங்க என்று சொல்லி இருக் கேன். வேற வழி இல்லை. அம்மாவிற்கு, ஆர்த்ரைடிஸ், கீழே உட்கார முடியாது. நான் அப்பா மாமா எல்லோரும் இருக்கும்போது அவங்க மட்டும் மேலே உட்கார்ந்தால் ஒரு மாதிரி இருக்கும் இல்லையா? அப்பாக்கு மதிய தூக்கம் கட்டாயம். அவங்க கீழே படுக்க மாட்டாங்க. ரெண்டு மூணு நாளைக்கு வாடகைக்கு எடுத்து இருக்கேன். இங்கிருந்து கிளம்பும்போது, திருப்பிக் கொடுத்து விட லாம். பிரச்னை இல்லை. வேண்டும் என்றால், இதுக்கு எல்லாம் நீங்களே செலவு பண்ணுங்க. நான் மறுக்க மாட்டேன். பணம் வாங்கிக்கறேன்..'' என்று கூலாகச் சொன்ன அபிஷேக்கை விழி தெறித்து விடும் போலப் பார்த்தாள் வாஸந்தி.

''உங்க அம்மா இங்கே என்னைப் பார்க்க வராங்களா?'' என்ற சுஜாதாவிற்கு வீட்டுக்கு வருகிறவர்களை எப்படி வர வேண்டாம் என்று சொல்வது?



''உங்களுக்கு வீண் சிரமம் கொடுக்க வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால் பாருங்க. எங்க அம்மாக்கு நீண்ட பயணம் கஷ்டம். அதனால் திருவண்ணா மலையை விட பாண்டிச்சேரி பக்கம். ஈ.சி.ஆர்.ல வந்த ரெண்டே மணி நேரத்துல அங்கே இருப்பேன் என்று சொல்லிட்டாங்க. எங்க அப்பாவும் அம்மா உடல் நிலையை அனுசரிச்சு இங்கேயே பார்த்து விடலாம் என்று சொல்லிட்டாங்க. நாளைக்குக் காலை பதினோரு மணிக்கு அம்மா அப்பா ரெண்டு பேரும் வருவாங்க. சாயங்காலம் வரை இருப்பாங்க. நாளைக்கு ஒரு நாள் மட்டும் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க ப்ளீஸ்...''

''என்ன இப்படி சொல்லிட்டீங்க? நல்லாவே கவனிச் சுடலாம். சாந்திக்கு வேண்டியவங்க எனக்கும் வேண்டிய வங்க...''

''அம்மா அப்பாக்கு இந்த லாஜிக் ஓ.கே. நானும் இந்த வகைதானா அத்தை? நான் கொ..ஞ்..சூ..சூ..ண்..டு ஸ்பெஷல் இல்லையா?'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு அபிஷேக் நடிக்க, அவரையும் மீறி சின்ன முறுவல் மலர்ந்தது.

''நீங்க சைலண்டா சிரிப்பதைப் பார்த்தால் ஏதோ வில்லங்கமா மனசுல நினைப்பது மாதிரி இருக்கே? நீங்க நல்லா கவனிச்சுடலாம் என்று சொன்னது இப்படி இல் லையே?'' என்று கை ஓங்கிக் காட்ட, அவனின் பாவ னையைப் பார்த்து வாஸந்தி விழுந்து விழுந்து சிரிக்க, சுஜாதாவிற்கும் புன்னகை பெரிதாகவே விரிந்தது.

எத்தனை ஆண்டுகள் சாத்திய கதவின் கீழ், தனிமை சிறையில் வாய் விட்டுப் பேச சிரிக்க துணை என்று ஒரு ஜீவன் இல்லாமல் வாழ்ந்து வந்தவருக்கு, இந்த

கலகலப்பான சூழல் நல்ல ஒரு மாற்றமாய் இருக்க, அவரும் 'பயப்படாதீங்க. அப்படி எல்லாம் இல்லை' என்று மறுப்பாகத் தலை அசைத்தபடி சிரித்தார்.

''வஸு! அம்மா சிரிச்சாச்சு, சீக்கிரம் வா, சாமான் எல்லாம் பிரித்து அடுக்கலாம்...'' என்று துள்ளலோடு அவளின் கைப்பற்றி இழுத்துச் சென்றவன் அடுத்த இரண்டு மணி நேரம் பிசியாக இருந்தான்.

''மாமா, இங்கே ஒரு கை பிடிங்க; அத்தை எனக்கு மணக்க மணக்க ஒரு ஸ்பெஷல் ஏலக்காய் டீ உங்க கையால் கொடுங்க பார்ப்போம்' 'மாமாக்கு பொண்ணா இருந்துட்டு இப்படிச் சொங்கியா இருக்க? ஒரு சிங்கிள் சோபா தூக்க மாட்டியா? சாப்பிடுவியா? சாப்பாட்டை முகர்ந்து மட்டும் பார்ப்பாயா?'' என்று எல்லோரையும் பேச்சுக்குள் இழுத்தான். கலகலப்பாக இருந்தான். சுஜாதாவையும் தியாகராஜனையும் தனித் தனியாகப் பேச்சுக்குள் இழுக்க முயன்றான். இருவரும் அவனிடம் பதில் சொன்னாலும், தொடர்ந்து அவர்களுக்குள் பேச்சு நடைபெறவில்லை.

தியாகராஜனும், அபிஷேக்கும், இரவு உணவிற்குப் பின் கிளம்பி விடுவார்கள். வெளியில் எங்காவது தங்கிக் கொண்டு காலையில் வருவார்கள் என்று சுஜாதா எதிர் பார்க்க, அவர்கள் அசையவே இல்லை.

''வஸு! பாய் கொண்டு வந்து இந்த வெராண்டாவில் விரி, நானும் மாமாவும் இங்கே படுத்துக்கறோம்...'' என்று வாஸந்தியிடம் அபிஷேக் சொல்ல, ''இங்கே கொசு இருக்கு. போர்வை வச்சுக்கோங்க அப்பா'' என்று மகள் தன் பங்கிற்கு அப்பாவை கவனித்து, அங்கேயே தங்கப் போவதை உறுதி பண்ண, சுஜாதா விழித்தார்.



''அபி, காலையில் அஞ்சு மணிக்கு எழுந்திரிக்க முடியுமா?'' என்று விசாரித்தாள் வாஸந்தி.

''யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னாய்? நாலு மணிக்கு வேண்டுமானாலும் எழுந்திரிப்பேன். ஏன் ராத்திரி தூங்காமலேயே இருப்பேன். உனக்கு என்ன வேண்டும் கேளு. அதை விட்டுட்டு இந்த டெஸ்ட் பண்ற வேலை எல்லாம் வேண்டாம்.''

''அபி, சூர்யோதயத்தில், மாத்ரி மந்திர் வெளி சுவர் தங்கப் பாளங்கள் ஒட்டப்பட்டு இருப்பதால் ஜொலிக்கும். நெட்டில் போட்டோ பார்த்தேன். காலையில் போய் பார்க்கலாமா?'' என்று கேட்டவளின் விழிகள் வேறு சேதி சொன்னது.

''பார்க்கலாமா என்று என்ன கேள்வி? கட்டாயம் போகலாம். இங்கே வந்து மூணு நாளா ரெகுலர் ஜாகிங் மிஸ் ஆகிடுச்சு. அதை நாளைக்குத் தொடங்கலாம். நீ உங்க அம்மாவைப் பேசிப் பேசியே கொல்லாமல் படுத்துத் தூங்கு, காலையில் அஞ்சு மணிக்கு போகலாம். குட் நைட் அத்தை'' என்று வசதி குறைவை பெரிது படுத்தாமல் படுத்து விட்டான்.

தூங்குவதற்கு முன்பு, பவானி பாட்டிக்கு போன் பண்ணி, ''பாட்டி, அத்தை விஷயத்துல என் கணக்கு தப்பா போச்சு. இன்னும் கிளம்பலை. சீக்கிரமே கூட்டி வந்துடறேன். நீங்க சாப்பிட்டீங்களா? ஜாக்கிரதை'' என்று தகவல் சொல்ல மறக்கவில்லை.

பெரிய மனக்கவலை எதுவும் இல்லை என்பதால் அபிஷேக்கும், அம்மா கையால் சாப்பிட்டு, அம்மாவின் அருகில் படுத்து அவரை கட்டிப் பிடித்து தூங்குவது

எல்லை இல்லா சந்தோஷத்தைக் கொடுத்ததால் வாஸந்தியும் படுத்த சில நிமிடங்களிலேயே தூங்கி விட்டனர்.

ஆனால் இத்தனை ஆண்டுகள் கழித்து பார்த்த பிறகும், ஒரே வீட்டில் இருந்து கொண்டு, திருமண பந்தம் இன்னும் ரத்து செய்யப்படாத நிலையில் கணவன் மனைவியாக இருக்கும்போது இப்படி முகத்தைப் பாராமல், பேசாமல், இருப்பது இரவு முழுவதும், இருவர் நெஞ்சையும் அறுத்தது.

அவளுக்கு இருக்கும் கோபம் தீரட்டும் என்று அமைதியாக தியாகராஜனும், காலையில் வந்ததில் இருந்து, இது வரை ஒரு நாள் முழுவதும் இருந்தும் அவர் என்னிடம் பேசிய வார்த்தைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். இப்போதும் அவர் தன் மனைவியைத் தேடி வரவில்லை. மகளின் திருமணத்திற்காகவே வந்து இருக்கிறார் என்ற கோபத்தில் சுஜாதாவும் புழுங்க, இருவருக்கும் அது தூக்கம் இல்லா இரவானது.

விடிகாலையில் அவர்களையும் மீறிய களைப்பில் சற்றே கண் அசர, அபிஷேக்கும், வாஸந்தியும் முகம் கழுவி, 'ஏழு ஏழரைக்குள் வந்து விடுவோம்' என்ற துண்டு சீட்டை எழுதி வைத்து விட்டுக் கிளம்பி விட்டனர்.

காலை ஆறு மணிக்கு சூரிய ஒளி கண்ணில் பட விழித்த சுஜாதா அவசரமாக எழுந்தார். அருகில் மகளைக் காணவில்லை. இப்படி தூங்கி விட்டோம் என்ற குற்ற உணர்வில் அவசரமாக எழுந்து முகம் கழுவி, விட்டு வெளியே வந்தார். வெளியே தியாகராஜன், கண் மூடி பாயில் யோகாசனம் செய்வது தெரிந்தது. முடிக்கப் போகிறார்.



அவசரமாக காபி கலந்து எடுத்து வந்து வெராண்டாவில் இருந்த சின்ன திண்டின் மேல் வைத்து விட்டு உள்ளே சென்றார் சுஜாதா. டம்ளரை எடுத்துப் பார்த்து விட்டு அது காபி என்றதும், 'அவள் நினைவில் தான் காபி குடிப்பதை நிறுத்தி பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகிறதே என்ற எண்ணத்தில் அந்த டம்ளருடன் அவரே பின் தொடர்ந்து வந்தார்.

"நான் காபி சாப்பிடுவதில்லை. நிறுத்தி ரொம்ப நாளாச்சு. காலையில் டீதான்" என்று சின்னக் குரலில் சொன்னார் தியாகராஜன். வார்த்தைகள் சொன்ன சேதியை தாண்டி, கண்கள் உனக்காக என்ற சேதியைச் சேர்த்துச் சொன்னது. திக்கான பாலில் ஸ்ட்ராங்கான பில்டர் காபி என்று அம்மாவும் பையனும் அப்பப்போ அழுத்திச் சொன்ன வரின் அவரின் நினைவில் ஆட, அதை எடுத்து வந்தால் இப்படிச் சொல்கிறாரே?

ஏற்கனவே இரவு முழுவதும் தூங்காமல் பழைய நினைவுகளில் உழன்றதால் வந்த எரிச்சல், தாமதமாக எழுந்ததில் வந்த குற்ற உணர்வு, வாஸந்தியும் அபிஷேக்கும், திட்டமிட்டு இவருடன் தன்னை தனியாக விட்டு விட்டுப் போய் விட்டார்கள் என்றதில் வந்த கோபம், இவருக்கு காபி பிடிக்கும் என்று தான் சிரமப்பட்டு அதை தயாரித்தால், அதை வேண்டாம் என்று சொல்வதோடு, புதிதாக கதை வேறு சொல்கிறாரே என்ற ஆத்திரம் எல்லாம் சேர்ந்து கொள்ள, அதை எல்லாம் வார்த்தைகளில் கொட்டி, "காபி வேண்டாமா? நான் கொடுப்பதால் உங்க டேஸ்டுக்கு சரியாக இருக்காது என்ற நம்பிக்கையில் வேண்டாமா?" என்று கேட்டார்.

"காபி வேண்டாம் என்றுதான் நான் சொன்னேன். நீ ஏதாவது கற்பனை பண்ணி கொள்ளாதே..."

''ஆமா! எனக்கு வேற வேலை என்ன? பொழுது விடிந்து பொழுது போனால், கற்பனை பண்ணி அடுத்த வரை தரக்குறைவாக குறை பேசுவதை தவிர வேறென்ன எனக்குத் தெரியும்? கண்டபடி கற்பனை பண்ணி வாழ்க்கையை வீணடித்துக் கொண்டது நான்தானே?''

''சுஜாதா, முடிந்து போன பழைய கதையை தேவை இல்லாமல் மறுபடியும் பேசி மனசை புண்படுத்திக்க வேண்டாம் விடு...'' என்று திரும்பி வாசலுக்கு நடக்க முயன்றார்.

''எது தேவை இல்லை? கட்டின மனைவியை அடுத்தவர் கண்டபடி பேசினால், அதை தட்டிக் கேட்கத் தேவை இல்லையா?''

''அடுத்தவர் என்று யாரைச் சொல்கிறாய்? அம்மாவையா? அவங்க தனி ஆளா, என்னைக் கஷ்டப்படுத்தி ஆளாக்கி இருக்காங்க. அவங்க ஏதோ ஒரு கோபத்தில், மன வருத்தத்தில் உன்னையோ என்னையோ ஒரு வார்த்தை சொன்னால்...''

''நான் உங்க அம்மாவைச் சொல்லவில்லை. பேச்சை சும்மா திசை திருப்பாதீங்க...''

''அம்மாவைத் தவிர என்றால், மாதவியின் மாமியார் கொஞ்சம் அதிகமா பேசினாங்க. அங்கே என் தங்கை நல்லபடியா வாழ வேண்டாமா? அவர்களுடன் ஒரு வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம் என்று நினைத்தேன். சாக்கடையில் கல்லை விட்டு எறிந்தால் அசுத்தம் நம் மீது தெறிக்கும் என்று ஒதுங்கிப் போவதில் என்ன தப்பு?''

''அப்ப அவங்க என்ன வேண்டுமானாலும் பேசலாமா?''



''ப்ச்! இது விதண்டாவாதம் சுஜா. நான் அப்படிச் சொல்லவில்லை...''

''எது விதண்டாவாதம்? கிஷோரைப் பிடிக்கும். அவன் பேச்சைக் கேட்கணும் என்று நான் சொன்னால், என்னைப் பிடிக்காது. நான் சொல்வதைக் கேட்க மாட்டாய் என்று வாதம் பண்ணியது விதண்டாவாதம். மாதவி வீட்டுக் கல்யாணம் நடக்க, உறவினர்கள் ஐநூறு பேருக்கும் மேலே அங்கே ஆட்கள் இருக்க, கிஷோருக்கு துணையாக நான் ஒரே ஒரு ஆள் கட்டாயம் போக வேண்டும் என்று சொன்னால், அவனை நீயா கல்யாணம் பண்ணிக்கப் போகிறாய் என்று நீங்க கேட்பது விதண்டாவாதம். என் பெண்ணை நான் எடுத்துப் போக முயன்றபோது ஒரு வார்த்தை சொன்னீங்களே? அது விதண்டாவாதம். எல்லாத்துக்கும் மேலே, நான் உன்னை நினைத்துக் காபி குடிப்பதை நிறுத்தி விட்டேன். டீ தான் குடிப்பேன் என்று கொஞ்சம் முன்னாடி நடிச்சீங்க பாருங்க. அது எல்லாத்தையும் விட சூப்பர் விதண்டாவாதம்.''

''சு..ஜா..தா! மற்றதெல்லாம் எப்படியோ, நான் கடைசியா சொன்னது சத்தியம். அதுவும் காபி குடிக்கலை என்ற இந்த சின்ன விஷயத்துல நான் ஏன் பொய் சொல்லணும்? இத்தனை ஆண்டுகள் தனிமையில் நீ பட்ட கஷ்டத்தை என்னால் ஊகிக்க முடிந்து நான் அமைதியாக இருப்பதால், நீ ஜாஸ்தி பேசுகிறாய்'' என்று கேட்ட தியாகராஜனின் குரலில் கோபம் துளிர் விட்டு இருந்தது.

''ஆமா, நீங்க பேசாமல் இருந்ததற்கும் சேர்த்து வச்சு நான் பேசுறேன். பேச வேண்டிய நேரத்துல நீங்க பேசாமல் இருந்தீங்க. தப்பித் தவறி பேச வாய் திறந்தால் பேசக் கூடாத, கேட்கவே காது கூசும். அபாண்ட வார்த்தை

களைப் பேசினீங்க. உங்க பொண்ணு கல்யாணம் நல்லபடியா நடக்க அமைதியா இருக்கீங்க...''

''என் பொண்ணா? அவளுக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லையா? அவள் கல்யாணம் நடப்பதில் உனக்கு அக்கறை இல்லையா?''

''அவள் என் பொண்ணு என்பதை அவளிடம் சொல்லவே இன்று வரை உங்களுக்கு மனசு வரலையே? இந்த கேள்வியை என்னிடம் கேட்க உங்களுக்கு எப்படி வாய் வந்தது? நீங்க எப்படியோ? நான் என் பொண்ணு மேலே அக்கறை வைத்து இருக்கிறேன். அதனால் தான், நேற்று காலையில் நீங்க கல்யாண விஷயம் சொன்ன உடனே, கல்யாணத்துக்கு முதல் நாள் வரேன் என்று சம்மதம் சொல்லியாச்சு. அதுக்கு அப்புறமும், என் பின்னால் நேற்று முழுவதும் சுற்றி, இந்த மாதிரி சாமான்கள் வாங்கி, என்னை மயக்கி...''

''என்னைத் திட்டுவதாக நினைத்து உன்னை நீயே தரம் தாழ்த்திக் கொள்ளாதே. உன் பின்னால் வர எனக்கு எல்லா உரிமையும் இருக்கு. உன் பாதுகாப்பில், உன் நல்வாழ்வில் என்னை விட வேற யாருக்கும் அதிக உரிமை இருக்க முடியாது. இது இருபத்தி ஒரு வருஷ உரிமை...''

''ஆஹா! இந்தக் கதை எல்லாம் கேட்க ரொம்ப நல்லா இருக்கு. ஆனால் நம்ப தான் முடியலை. இருபத்தி ஒரு வருஷ உரிமையை இத்தனை நாள் காற்றில் பறக்க விட்டுட்டு இன்னிக்கு திடீர் என்று வந்து உரிமையை நிலை நாட்டுறீங்க? நேற்று மதர் சமாதியில் போதி மரம் இருந்ததா? அங்கே ஞானோதயம் பிறந்ததா?''



''இல்லை நேற்று ஞானோதயம் பிறக்கவில்லை. எப்போதும் இருக்கும் ஞானம் தான். காதலிக்கும் போது, மனசை பறி கொடுக்கும் போது நான் அமைதியாக இருந்தது பிடித்தது. அப்ப பிறருக்கு விட்டுக் கொடுக்கும் நல்ல சுபாவமாய் தோன்றிய என்னுடைய மென்மையான அணுகுமுறை, இப்போது கையாலாகாத்தனமாக தெரிகிறதா? என்னுடன் இருந்த நாட்களில், ''உங்க உடம்புல இருக்க வலிமை மனசுல இல்லை என்று எத்தனை முறை சொல்லி இருப்பாய்? உனக்கு மறந்துடுச்சோ என்னவோ? எனக்கு மறக்கலை...''

''ஆமா, நான் பேசியதை நீங்க எப்படி மறக்கலையோ, அதே மாதிரி நீங்க பேசியதையும் நானும் மறக்கவில்லை. மறக்க முடியவில்லை...''

''ஹூம்! நான் நல்ல விதமாகச் சொல்வதை. நீ குதர்க்கமாகப் பயன்படுத்துகிறாய். நீ பேசிய ஒவ்வொரு வார்த்தையும் என் மனசுல பொக்கிஷமா பத்திரமா பாதுகாப்பா இருக்கு. நீ என்னைப் பற்றி நல்ல விதமாகச் சொன்னதைக் காட்டிலும் கிஷோரைப் பற்றி சொன்னது அதிகம். அதனால் எனக்கு வந்த பொறாமையில், பாதிக்கப்பட்ட நேரத்தில், எதாவது தவறாக சொல்லி இருக்கலாம். அதற்கு நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்...''

''யாருக்கு வேண்டும் இந்த மன்னிப்பு? இந்த மன்னிப்பை நான் கொடுத்து விட்டால், உங்களால் நான் இழந்தவற்றை திருப்பித் தர முடியுமா?''

''நீ கோபத்தில் பேசுகிறாய். நான் ஒரு சில சமயத்தைத் தவிர பெரும்பாலான நேரத்தில் நிதானமாகப் பேசி இருக்கிறேன். இழந்தது நீ மட்டும் இல்லை சுஜாதா. நானும் தான்...''

''அதனால்...''

''அதனால் வார்த்தையை அள்ளிக் கொட்டாதே. நமக்கு வயசும் அனுபவமும் அதிகம் ஆகி இருக்கிறது. இருபதில் இருந்த மாதிரியே இப்போதும் இருக்க வேண்டாம் என்று சொல்கிறேன். நமக்குள் இருக்கும் வேறுபாட்டை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறேன். நான் இத்தனை நாட்களாக உன்னைத் தீவிரமாக தேடாமல் இருந்ததற்கு காரணம்...''

''தெரியும். நான் கிஷோரைக் கல்யாணம் செய்து கொண்டதாக நினைத்து இருப்பீர்கள்...''

''இல்லை, மற்றவர்கள் என்ன நினைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் முதலில் அப்படி நினைக்கவில்லை. நீ கிஷோர் திருமணம் முடிந்த உடன் திரும்பி வருவாய் என்று தான் நினைத்தேன். ஆனால் நீ வராமல் போனது...''

''அப்படி முதலில் நினைக்கவில்லை. ஆனால் அப்புறம் ஜோடனை செய்து கொண்டீர்களோ? நீங்கதானே போனால் வராதே என்று சொன்னீர்கள்...''

''அது ஒரு கோபத்தில் சொன்னது சுஜா. அதை வேத வாக்காக எடுத்துக் கொண்டு...''

''அவ்வளவு அக்கறை இருந்தால் அதன் பிறகு என்னைத் தேடி இருக்கலாமே?''

''எங்கே எப்படி என்று தேடுவது? கிஷோரின் கல்யாணம் எங்கே? பெண் வீடு யார் என்ற விபரம், எனக்குச் சொல்லி இருந்தாயா?''

''எனக்கே சரியாக தெரியாத விபரத்தை நான் எப்படி உங்களிடம் சொல்ல முடியும்?''



''உனக்கே சரியாக தெரியாத விபரத்தை வைத்து நான் எப்படி உன்னைத் தேடி வர முடியும்? எனக்குத் தெரிந்தது ஒரே முகவரி. அது சூரத் முகவரி. வேறெங்கே போய் நான் தேடுவது? ஆண்டுக்கு இரண்டு முறை வாஸந்தியைப் பார்க்க திருவண்ணாமலை வர முடிந்தால் உன்னால், அதே ஊரில் இருக்கும் வீட்டிற்கு வர முடியாது. என்னையோ அம்மாவையோ பார்க்க முடியாது. கோபமாக இன்று போடும் சண்டையை அன்றே போட முடியாது. செய்ய வேண்டிய எதையும் நீ செய்யாமல் விட்டு விட்டு, நான் உன்னைத் தேடி வரவில்லை என்று கோபம் மட்டும் வளர்த்துக் கொள்வதில் என்ன நியாயம்?''

''என்னைத் திருமணம் செய்து கொண்டவன், என்னைத் தேடி வர வேண்டும் என்று நான் எதிர்பார்ப்பது பெரிய பிழையா?''

''நிச்சயம் இல்லை. உன் எதிர்பார்ப்பில் பிழை இல்லை. ஆனால் நான் உன்னைத் தேடி வர எனக்கு நீ என்ன தகவல் விட்டுச் சென்று இருந்தாய்? நீ கட்டாயம் கிஷோர் கல்யாணத்திற்குப் போக வேண்டும் என்று சொன்னது. பெண் வீடு பற்றி எந்தத் தகவலும் சொல்லாதது, கல்யாணம் முடிந்த பிறகு, நீ வீட்டிற்குத் திரும்பி வராதது, அது போதாது என்று தப்பும் தவறுமாகத் தமிழில் பல அர்த்தங்கள் தொனிக்கும்படி ஒரு கடிதமும், விவாகரத்து பத்திரமும் உங்க சூரத் முகவரியை அனுப்புனர் முகவரியில் எழுதி அனுப்பியது, எல்லாம் சேர்ந்து என்னை அப்படி நினைக்க வைத்து விட்டது...''

''நீங்கதானே உங்களுக்கும் உங்க அம்மாவிற்கும் புரியும் மொழியில் நான் பேச வேண்டும் என்று குட்டிக் கொண்டே இருந்தீர்கள். எனக்கு ஆங்கிலமும் ஹிந்தியும்

நல்லா வரும். ஹிந்தி உங்க ரெண்டு பேருக்குமே வராது. ஆங்கிலம் அம்மாவிற்கு வராது. நான் சொல்ல வேண்டிய தகவலை இரண்டு பேருக்கும் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். நான் வேறென்ன செய்ய?''

''இருந்தாலும் நான் சூரத்திற்கு சென்றேன். அங்கே நீ கடந்த மூன்று ஆண்டுகளில் வரவே இல்லை என்றும், கிஷோர் மூன்று மாதங்களாகவும் வரவே இல்லை என்றும் தகவல் கிடைத்தது. என்னை என்ன செய்ய சொல்கிறாய்? என்னால் முடிந்த வரை, ஆண்டுக்கு ஒரு முறை உன் ஊருக்குப் போய் வருகிறேன். மனசில் உன்னை, உன் நினைவுகளை பூட்டி வைத்து இருக்கிறேன். சாந்தியிடம் உன்னைப் பற்றி சொல்லாததற்குக் காரணம், உனக்கு வேறு ஒரு வாழ்க்கை அமைந்து இருக்கும் பட்சத்தில், அவளுடைய மனதில் நீ குறைவாகப் பதியக்கூடாது என்பதுதானே தவிர வேற எண்ணம் இல்லை.''

பேச முயன்ற சுஜாதாவை கை காட்டி நிறுத்தினார். ''நான் முடித்து விடுகிறேன் அதென்னவோ நான் பிறந்த நேரம் அப்படி. நான் செய்த செய்யாத எல்லாமே பிறர் கண்ணில் குற்றமாகப் படுகிறது. உன்னை நினைத்து வாழ்ந்தது உனக்கு தவறு. வேறு மணம் செய்து கொள்ளாததற்கு அம்மாவிற்கு தவறு. உன்னைத் தேடி வந்தால், அது உன் கண்ணில் காரியத்திற்காக வந்த மாதிரி தோன்றுகிறது...''

''சாந்தி கல்யாணத்தில் நான் வேண்டும் என்று அபிஷேக் அப்பா சொல்லவில்லையா? அதனால்தானே...''

''சொன்னார். அவர் சொன்னதே இவளுக்காக தான். இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. நீயும் நானும் இல்லாவிட்டாலும் அபிஷேக் வாஸந்தியை நிச்சயம் கல்யாணம்



பண்ணி கொள்வான். அவன் சாமர்த்தியசாலி. என்னை விடவும் அதிர்ஷ்டசாலி. அதனால் அந்தக் கல்யாணத்திற்காக நான் உன்னைக் கூப்பிட வந்தேன் என்று நினைத்துக் கொள்ளாதே. நான் உன்னை விரும்பினேன். விரும்புகிறேன். விரும்புவேன். அதனால் தான் நீ தனியாக இருப்பது தெரிந்த அடுத்த நிமிடம் கிளம்பி நள்ளிரவில் இங்கே வந்து சேர்ந்தேன். இதை நம்புவதும் நம்பாததும் முழுக்க முழுக்க உன் இஷ்டம். நம்பினால் என் வீடு உனக்காக என்றும் திறந்து இருக்கும். இப்ப நான் திருவண்ணாமலை கிளம்புகிறேன். சாந்தியிடம் சொல்லி விடு'' என்று தீரான குரலில் சொல்லி விட்டு வெளியேறியவரை இமைக்காமல் பார்த்துத் திகைத்துப் போய் நின்றார் சுஜாதா.



# 22

பொழுது விடிந்தும் விடியாத அந்த இளங்காலைப் பொழுதில், தன்னுடைய சந்தோஷத்திற்காக, கடந்த மூன்று நாட்களாக, தன் வேலைகளை எல்லாம் விட்டு விட்டு, பெற்றோர்களையும் அனுப்பி வைத்து விட்டுக் கூடவே அலைந்து திரிந்து, சாமர்த்தியமாக பேசி, என்னென்னவோ செய்யும் அபிஷேக்கின் கைகளைப் பற்றி, பெருமிதத்துடன் நடந்தாள் வாஸந்தி.

''என்ன வஸு! ஒண்ணுமே பேசலை? யோசனையா?'' என்று கைகளை அழுத்தி மென்மையாகக் கேட்டான் அபிஷேக்.

''ஆமா அபி, அம்மாவை எப்படித் தேடப் போறேன் என்று முதலில் பயந்தேன் அது சாதாரணமான விஷயம் என்று எனக்கு தைரியமூட்டியதோடு நின்று விடாமல் வேலையையும் முடிச்ச உங்களுக்கு எப்படி நன்றி சொல்ற துன்னு யோசிச்சுட்டு இருக்கேன்...'' என்று மனப்பூர்வ மாகச் சொன்னாள் வாஸந்தி.

அவளின் கைகளை உயர்த்திப் புறங்கையில் மென்மை யாக முத்தமிட்டு, ''அதெல்லாம் நீ கவலைப்படாதே. கணக்கு வழக்கு எல்லாம் நான் பார்த்துக்கறேன். ஒரு ரெண்டு வாரம் பொறு. செட்டில் பண்ணிடலாம்'' என்று புன்னகை செய்தான்.

''ரெண்டு வாரம் என்ன கணக்கு? என்ன செட்டில் மென்ட்?'' என்று புரியாத மாதிரி கேட்டாள்.

''இப்போதைக்கு புரியாமல் இருப்பது பரவாயில்லை. நல்லதுதான். ஆனால் ரெண்டு வாரம் கழிச்சுச் சொல் லிக் கொடுக்கும் போதும் புரியலை என்றால் தான் கவலைப் படணும்...''

''தூக்கத்துல நடப்பது மாதிரி உங்களுக்குத் தூக்கத் துல பேசுற வியாதியும் சேர்ந்து இருக்கோ?''

''ரெண்டு பேருக்கும் ஒரே வியாதி இருந்தால் நல்லது தானே? எல்லா வேலையையும் தூக்கத்திலேயே முடித்து விடலாம். அதை விடு. நேற்று ராத்திரி நல்லா தூங்கி னாயா?'' என்று ரகசியச் சிரிப்போடு கேட்டவன் கரங்கள் அவளின் கைகளை விட்டு நகர்ந்து மேலேறி, தோளில் பதிந்து தன் பக்கம் இழுத்தது.

அந்த அரையிருட்டில் பனி படர்ந்த அதிகாலைப் பொழுதில், அவன் இழுத்த இழுப்பிற்கு வந்தவள்,



அவன் தோளில் இதமாகச் சாய்ந்தபடி, ''ம்ம்ம், இன்னும் தூக்கம் தொடர்வது மாதிரியே இருக்கு இது கனவா? இல்லை நிஜமா?'' என்று கேட்டாள்.

''நிஜம்தான் வஸு! ஏன் இந்த சந்தேகம்? கன்னத்தில் கிள்ளிக் காட்டட்டுமா?'' என்று கேட்டவன் விரல்கள், வார்த்தைகளுக்கு மாறாக, கன்னத்தில் வருடியது.

''அபி, நாம் சந்தோஷமா இருக்கோம். ஆனால் அம்மா வும் அப்பாவும் இந்நேரம் எழுந்து நாம் எதிர்பார்த்த மாதிரி பேசுவாங்களா? நேற்று ஒண்ணும் நல்லபடியா பேசின மாதிரி தெரியலையே?'' என்று கேட்டாள் வாஸந்தி.

''கொஞ்சம் டைம் ஆகும் வஸு! எத்தனை ஆண்டு காலம் தனிமையில் தவிச்சு இருப்பாங்க? அந்தக் கோபம் ஆதங்கம் எல்லாம் வெளிவர வேண்டாமா? யார் மேலே தப்பு என்றாலும் இழந்தது ரெண்டு பேரும் தானே? அந்தக் கோபம் எல்லாம் வார்த்தைகளா வெளியே வந்த பிறகுதான் அவங்களால் சாதாரணமா இருக்க முடியும்...''

''அதென்ன இழந்தது ரெண்டு பேர் என்று சொல் றீங்க? என்னை கணக்கில் எடுத்துக்கலையா? எனக்கு இழப்பு இல்லையாக்கும்?'' ஆதங்கத்தோடு உதடு பிதுக்கிச் சொன்னாள் வாஸந்தி.

''பொய் சொல்லாமல் சொல்லு வஸு! உண்மை யாகவே நீ உங்க அம்மாவை மிஸ் பண்ணினாயா? இந்த ரெண்டு நாளில் உண்மை தெரிந்த பிறகு நீ தேடி இருக்கலாம். ஆனால் உன் தேடல் உடனே முடிவிற்கும் வந்து விட்டது. அம்மாவின் அருகாமை ஸ்பெஷல் தான்.

இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்த தாய் அன்பை, தாயும் கொடுக்கலாம். அந்த நிலையில் இருந்து அடுத்தவரும் கொடுக்கலாம். உங்க அப்பா, உங்க பாட்டியை நீ மறக்கலாமா? அப்பப்போ ஏதாவது கண்டிப்பாக ஏதாவது சொல்லி இருந்தாலும், உனக்கு செஞ்சாங்க தானே? அந்தக் கடுமை கூட, உன்னை யாராவது குறை சொல்லிடக் கூடாது என்ற இரட்டிப்பு கவனத்தினால் தான் என்று அன்று சாப்பிடும்போது கூடச் சொல்லலையா? ஆனால் ஒரு கணவன் மனைவிக்குச் செய்வதற்கும், மனைவி கணவனுக்குச் செய்வதற்கும், ஈடு கிடையாதே?'' நீளமாக அவன் விளக்கம் சொல்ல, வாஸந்திக்குமே தன்னை விட தன் பெற்றோர் பாவம் என்பதில் மாற்று கருத்து இருக்கவில்லை.

''நீங்க சொல்றது சரிதான் அபி. ஆனால் ஏற்கனவே அவங்க இளமைக் காலம் முழுவதும் போயாச்சு, இன்னும் எத்தனை நாள் இப்படியே, ஒருத்தர் முகம் பார்க்காமல்...''

''ஹேய்! கவலைப் படாதே. சீக்கிரமே எல்லாம் சரியாகிடும். ஒரு ஸ்டார்ட்டிங் ட்ரபிள் இருக்கும். மூணு வருஷம் சேர்ந்து இருக்காங்க இல்லையா? நிறைய விருப்பு வெறுப்புகள் ரெண்டு பேருக்கும் இருக்கும். படுக்கை சுத்தி வைக்கறது, காபி, டீ, வாய் வச்சுக் குடிப்பது, குடிச்ச டம்ளர் சிங்க்-ல போடாதது, ஏதாவது ஒரு புள்ளில அது மோதி வெடிச்சால் அப்படியே தொடர்ந்து பேசிடுவாங்க. அதுக்காகத்தான் காத்திருக்கேன். நிறைய நேரம் அவங்களை தனியா விடலாம். தனியா விடுறோம் என்பது தெரியாத மாதிரி இருக்கணும், நாம் ஏழரை என்று சொல்லிட்டு வந்தாலும் கூட உடனே போக வேண்டியதில்லை. நாம் கிஷோர் அங்கிளைப் பார்த்துப் பேசிட்டு ஒன்பது மணிக்குப் போகலாம்...''



''அத்தை மாமா எல்லாம் வராங்க என்று சொன்னீங்களே? சமையலில் அம்மாக்கு ஹெல்ப் பண்ண வேண்டாமா?''

''வராங்க என்று சொன்னேன். எப்ப வராங்க என்று சொன்னேனா?''

''காலை உணவுக்குப் பிறகு கிளம்புவாங்க, பதினோரு மணிக்கு வந்துடுவாங்க. இன்று மாலை வரை இருப்பாங்க என்று சொன்னீங்களே?''

''சொன்னேன்ல, அப்ப அதை மாத்திடலாம்...''

''அபி...'' பல்லைக் கடித்தாள் வாஸந்தி.

''ஹேய்! எதுக்கு டென்ஷன்? ரிலாக்ஸ். அவங்க பேச்சை இதுலையே ஆரம்பிக்கலாம். ஏழு மணி ஆகட்டும். அப்புறமா உங்க அப்பாக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம். இதை அவர் எப்படியும் அத்தையிடம் சொல்லித் தானே ஆகணும்? அப்படியே பேச்சு தொடரலாமே? நாம் கிஷோர் அங்கிளைப் பார்த்துட்டு, அங்கேயே ப்ரேக்பாஸ்ட் முடிச்சுட்டு, மெதுவா போகலாம். இப்ப ப்ளான் ஓகே தானே?'' என்று சிரித்தான்.

''அவங்க வீட்டுல சொல்லத் தேவை இல்லையா?''

''அவர் நேற்று இரவே கூப்பிட்டார். நான் தான் அத்தை மாமா சாதாரணமா ஆகட்டும் என்று சொல்லி இருக்கேன். இப்ப என்ன? அவருக்கு நாங்க வரோம் என்று போன் பண்ணலாம். அதுவும் தேவை இல்லை என்றால் வெளியே சாப்பிடலாம். அதுவா இப்ப பெரிய பிரச்னை?''

''உங்க கூட பேசிட்டு இருந்தால் எதுவுமே பிரச்னையா தெரியலை அபி. எல்லாமே ரொம்ப சாதாரணமா

தெரியுது. உங்க அம்மா அப்பா வருவதா சொன்னது நிஜமா? அதுவும் பொய்யா?''

''வருவாங்க. எப்ப வரணும் என்று நான் சொல்றேனோ அப்ப வருவாங்க. அப்படித்தான் அம்மாவிடம் சொல்லி வச்சு இருக்கேன். அதை ஏன் பொய் என்று சொல்கிறாய்? இப்பவே அத்தை மாமா சரியாகி விட்டால், இன்றே இல்லை என்றால் நான் சொல்லும்போது...''

''அபி...'' இப்போது குரல் குழைந்து கனிந்து திக்கியது. அவளின் பார்வையில் பொங்கி பெருகிய காதல் அவனையும் இளக்கியது.

''அதென்ன வஸு! அபி என்ற ரெண்டே எழுத்துல இத்தனை எமோஷன் காண்பிக்கிற?'' குரல் கொஞ்ச, கைகள் அவளின் தோளை இறுக்கி அணைத்தது.

''ஐ லவ் யு அபி...'' அவன் தோளில் சாய்ந்தபடி கனிவோடு சொன்னாள்.

''தேங்க்ஸ், மீ டூ. உன்னிடம் ஒரு விஷயம் சொல்லணும். இதே மாதிரி என்ன சந்தேகம் என்றாலும், உடனே உடனே வெளிப்படையா கேட்டு தெளிவு படுத்திக்கணும். இப்ப மட்டும் இல்லை. நம் வாழ்க்கை பூராவுமே. நான் வாழ்க்கையில பலர் நல்லா இருக்க சில சின்னச் சின்ன பொய் சொல்றது தப்பில்லை என்று நினைக்கும் ஆள். அதை அரை குறையா நீயாகவோ, யார் மூலமாகவோ கேட்டுட்டு, மனசுல போட்டுக் குழப்பாம, அப்பப்போ என்ன விஷயம் என்று கேட்டுடு...''

''கேட்கவில்லை என்றால்...'' சீண்டலாக வந்தது அவளின் கேள்வி.

''உதை போட்டு கேட்க வைப்பேன்...''



''உதைப்பீங்களோ? எங்க கை என்ன பூ பறிக்குமோ?''

''அட! இது கூட நல்லா இருக்கு. வாய் பேச முடியாத நேரத்துல கையாவது பேசிடணும். வீட்டை விட்டு வெளியே போறது மட்டும் கூடாது. புரிஞ்சுதா?''

''நல்லா புரிஞ்சுது...'' வேகமாக தலை அசைத்தாள்.

''என்ன புரிஞ்சுது?'' சிரிப்போடு கேட்டான்.

''உள்ளிருப்புப் போராட்டம் நடத்தலாம், சாப்பிட மாட்டேன் என்று சத்தியாக்ரகம் பண்ணலாம். உங்களை அடிக்கலாம். உங்களோடு பேசாமல் இருக்கலாம். என்ன வேண்டுமானாலும் பண்ணலாம். ஆனால் வீட்டை விட்டு மட்டும் போகக் கூடாது. கரெக்டா?'' என்று கண் சிமிட்டினாள்.

''ரொம்ப கரெக்ட். நம்மால் எல்லாம் பொண்டாட்டிய பிரிஞ்சு வருஷம் என்ன? நாள் கணக்கில் இருப்பது கூட முடியாதுப்பா'' என்று சொன்னவன் அவளை இறுக்கிக் கொண்டான்.

''அது சரி, கை கொஞ்சம் கட்டுப்பாட்டோடு இருக்கட்டும். அங்கே பாருங்க சன்ரைஸ் பார்க்க நம்மளை மாதிரி எத்தனை பேர் வந்து இருக்காங்க?'' என்று அவசரமாக அவனின் அணைப்பில் இருந்து விலகியபடி, அந்த மாத்ரி மந்திருக்கு எதிரே இருந்த திறந்த வெளி தோட்டத்தைச் சுட்டிக் காட்டினாள் வாஸந்தி.

அவள் காட்டிய இடத்தைப் பார்த்தவனுக்கு சிரிப்பு வந்தது. அங்கே இருந்த சுமார் நாற்பது பேரில், பதினைந்து ஜோடிகள். அதிலும் முக்கால்வாசி பேர் வெளிநாட்டு தம்பதியினர். இவர்களைவிட நெருக்கமாக

இருந்ததைப் பார்த்தவன் சிரிக்க ஆரம்பிக்க, அந்த சிரிப்பில் அவளும் இணைந்து கொண்டாள்.

* * *

முதல் நாள் இரவே விவேக்கிடம் இருந்து சுஜாதா இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டேன் என்று போனில் தகவல் வந்த நிமிடத்தில், அவசரமாகக் கிளம்பி, ஆர்வத்தோடு தேடி வந்த தன்னை சுஜாதா கோபமாகப் பேசி விட்டார் என்பது தியாகராஜனுக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது.

பிரிந்து இருந்த காலத்தில், அவரும் சந்தோஷ ஊஞ்சலில் உல்லாசமாக ஆடிக் கொண்டு இருக்கவில்லையே? அது ஏன் அவளுக்குப் புரியவில்லை? அவள் தனியாக இருந்தால், உண்மைதான். ஆனாலும் குடும்பத்தில் இருந்தாலும் தான் தனிமையை உணரவில்லையா? அம்மாவிடம் மனம் விட்டுப் பேச முடியாமல், மகளிடம் உண்மையை உடைத்துச் சொல்ல முடியாமல், தவிக்கவில்லையா?

தனக்கு இன்னொரு திருமணம் செய்து வைக்க பல நூறு முறை, பல விதமாக முயன்ற அம்மாவைத் தவிர்க்க, அதையும் கடினமான வார்த்தைகள் பயன்படுத்தாமல் சொல்வது அவ்வளவு சுலபமா? மனம் நொந்து தவிக்க வேகமாக நடந்த தியாகராஜன், தன் கைகளைப் பற்றி யாரோ இழுப்பதை உணர்ந்த பின்பே நின்று திரும்பிப் பார்த்தார்.

கிஷோர். இவன் எங்கே இங்கே வந்தான்? எதற்கு தன்னைப் பற்றி நிறுத்துகிறான்? குழப்பத்தோடு பார்த்தவரிடம், ''நமஸ்தே ஜி, நான் கிஷோர். ஞாபகம் இருக்கா?'' என்று புன்னகைத்தார்.



''ம்ம்ம், இருக்கு. ஒரே ஒரு முறை பார்த்து இருக்கிறேனே? எங்க வீட்டுக்கு வந்து இருக்கீங்களே?'' என்று சொல்லியபடி கரம் குவித்தார்.

''நேற்றுதான் அபிஷேக் உங்களைப் பற்றி எல்லா விபரமும் சொன்னார். நான் கூட கொஞ்ச நாள் உங்களைத் தவறாக நினைத்து விட்டேன். ஜி. நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது. சுஜாவுக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும். உங்களை ரொம்ப மிஸ் பண்ணுவாள். இத்தனை நாள் நீங்க ஏன் வரலை என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குள் என்ன பிரச்னை என்றும் எனக்குத் தெரியலை. அவளால், நான் சந்தோஷமாக இருக்கிறேன். ஆனால் என்னால்தான் அவள் சந்தோஷமாக இல்லையோ என்ற குற்ற உணர்வு கடந்த பல ஆண்டுகளாக என்னை அரித்தெடுக்கிறது...''

''இல்லை அப்படி இல்லை. தமிழில் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று ஒரு பழமொழி இருக்கு. எங்க பிரச்னைக்கு நீங்க காரணம் என்று நான் நினைத்ததில்லை கிஷோர். அவங்கவங்கதான் அவங்க வாழ்க்கையை சந்தோஷமாக மாற்றி அமைக்க முடியும். மனசு விட்டுப் பேசாமல் இதனை ஆண்டுகளை வீணாகக் கழித்தது நாங்க. அதனால் நீங்க வருத்தப்பட வேண்டாம்...'' என்று அவசரமாக இடையிட்டார்.

''நீங்க ஏன் அதுக்குள்ளே கிளம்பிட்டீங்க? நான் கூப்பிட்டது கூட உங்கள் காதில் விழவில்லை. நேற்று இரவே உங்களை வீட்டுக்கு அழைத்துப் போக நினைத்தேன் அபிஷேக் நாளைக்கு வருகிறோம் என்று சொன்னார். நீங்க கிளம்பிட்ட மாதிரி இருக்கு?''

''இங்கேதான் பக்கத்தில்...'' என்று இழுத்தார். இவனிடம் உண்மையைச் சொல்வதா? அவளுக்கே

சீக்கிரம் கோபம் ஆறி விடாதா? தற்காலிக கோபத்தை இவனிடம் அவசியம் சொல்ல வேண்டுமா? யோசனையில் அவர் இருக்க கிஷோர் தொடர்ந்தார்.

''தனியாகவா?'' ஒற்றை வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்து இருந்தது. ''என் மேலே வருத்தம் இல்லை என்று சொல்லிட்டீங்க. சுஜா மேலயும் வேண்டாமே? இத்தனை நாள் அவள் கஷ்டப்பட்டது போதாதா? ஒவ்வொரு நாளும், உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். நேற்று கூட காலையில் உங்களை ரொம்ப எதிர்பார்த்து இருக்க வேண்டும். என்னைப் பார்த்ததும் நீயா என்று கேட்டாள்.''

இதற்கு என்ன பதில் சொல்வது? அவர் அமைதியாக இருக்க, அவருக்கு பதிலாக அவரின் அலைபேசி, மெசேஜ் வந்த தகவலை சத்தமாக சொன்னது. எடுத்துப் பார்த்தவர் திகைத்தார்.

'மாத்ரி மந்திரி சுற்றிப் பார்த்து விட்டு, கொஞ்சம் தாமதமாக வருவதாகவும், தங்களுக்கு காலை உணவு தேவை இல்லை என்றும், அம்மா இன்று மாலை நாலு மணிக்கு மேல் கிளம்பி வருவதாக தற்போது தகவல் சொன்னதாகவும், மதிய உணவு அவர்களுக்கு தேவை இல்லை என்ற தகவலை அத்தையிடம் சொல்லி விடுங்க'' என்று தகவல் அனுப்பி இருந்தான் அபிஷேக்.

அதைப் பார்த்த உடன் சுரீர் என்றது. அபிஷேக் பெற்றோர் வருவதை மறந்துவிட்டு கிளம்பி விட்டாரே? நன்றாக இருக்குமா? அவசரமாக முகத்தை சரி பண்ணி, ''அபிஷேக் மெசேஜ் அனுப்பி இருக்கார். அவங்க பேரண்ட்ஸ் இங்கே சுஜாவைப் பார்க்க இன்று மாலை



வராங்களாம். நான் ஏதாவது சாமான் வாங்கணுமா என்று கேட்டு விட்டு கடைக்குப் போறேன். வீட்டுக்கு வாங்களேன், ஒரு டீ சாப்பிடலாம். இத்தனை நாள் அவளுக்கு ஆதரவா இருந்ததற்கு நன்றி'' அவர் பேசப் பேச ஆச்சரியத்தில் வாய் பிளந்தார் கிஷோர்.

அபிஷேக் மெசேஜ் அனுப்ப வேண்டும் என்றால் அவர்கள் வீட்டில் இல்லை. இவர்களுக்குள் சரியாகி விட்டதா? தனது நீண்ட நாள் வேண்டுதலில் பலித்து விட்டதா? ''நான் இரவு வருகிறேன். அவங்களையும் பார்த்த மாதிரி இருக்குமே? நீங்க வேலையைப் பாருங்க. சுஜாவிடம் சொல்லிடுங்க'' என்று அவசரமாக விடை பெற்றுப் போனார்.

* * *

நான் திருவண்ணாமலைக்குக் கிளம்புகிறேன், சாந்தியிடம் சொல்லி விடு என்று சொல்லி விட்டுக் கிளம்பிய தியாகராஜனை தடுத்து நிறுத்தத் தோன்றாமல், தளர்ந்து சோபாவில் சரிந்து அமர்ந்த சுஜாவிற்கு, ஆற்றாமையில் கண்ணீர் பெருகியது. இப்போது எதற்கு இந்த அழுகை? தான் என்ன டீன் ஏஜ் பெண்ணா? திருமண வயதில் தனக்கே ஒரு பெண் இருக்க, அவளுக்கு புகுந்த வீட்டில் எப்படி நடந்து கொள்ள...

சிந்தனை ஆரம்பித்த வேகத்தில் நின்றது. ஹய்யோ! அபிஷேக் பெற்றோர் வருவதாகச் சொன்னாரே? அதற்குதானே இந்த சோபா செட் எல்லாம் வாங்கினார்? இப்போது அவர் கிளம்பி விட்டால், நன்றாக இருக்காதே? தங்களுக்குள் எப்படி இருந்து கொண்டாலும், வெளியில் இருப்பவர்களுக்கு அதை அப்படியே சொல்ல வேண்

டும் என்ற அவசியம் இல்லையே? இன்று ஒரு நாள் நாடகத்தை... இல்லை இல்லை... அபிஷேக் - வாஸந்தி திருமணம் முடியும் வரை நல்லபடியாக நாடகத்தை நடத்த வேண்டுமே?

தியாகராஜனை எப்படிக் கூப்பிடுவது? ச்சே! கிஷோர் ஒரு போன் வாங்கிக்கோ என்று எத்தனை முறை படித்துப் படித்து சொன்னான்? நேற்று வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லி அபிஷேக் கொடுத்தானே? அது வேலை செய்யுமா? அப்படியே வேலை செய்தாலும் அவரின் நம்பர் தனக்குத் தெரியாதே? ஆற்றாமையோடு எடுத்து அதை அழுத்தியவரின் விழிகள் விரிந்தது.

உங்களுக்குக் குழப்பமே வேண்டாம் என்று, திருவண்ணாமலை வீட்டு எண், தியாகராஜனின் எண், வாஸந்தி, அபிஷேக், விவேக்கின் மொபைல் எண்கள், மாதவியின் வீட்டு எண், கிஷோரின் மொபைல் எண், வீட்டு எண், எல்லாமே எஸ்டிடி எண்களுடன் தேவைப் பட்ட இடங்களில் புகைப்படத்துடன் சிரித்தது. இத்தனை நேரம் அவரை நேர் பார்வையாகப் பாராமல், பார்த்த போதும் கோபம் நிறைந்த கண்களில் பார்த்தால் மனதில் பதியாமல் இருந்த தியாகராஜனின் உருவம், கண்களை நிறைத்து, மனதிற்கு இதம் தந்தது.

ஒரு நரை இல்லை. முன் வழுக்கை இல்லை. இதழ்களில் இருந்த சிரிப்பு கண்களில் இல்லையே? கடைசியாய் அவர் சொல்லி விட்டுப் போன வாசகம் காதுகளில் ஒலித்தது.

நீயும் நானும் இல்லாவிட்டாலும் அபிஷேக் வாஸந்தியை நிச்சயம் கல்யாணம் பண்ணிக் கொள்வான். அவன் சாமர்த்தியசாலி. அந்தக் கல்யாணத்திற்காக நான்



உன்னை கூப்பிட வந்தேன் என்று நினைத்துக் கொள்ளாதே. நான் உன்னை விரும்பினேன். விரும்புகிறேன். விரும்புவேன். என் வீடு உனக்காக என்றும் திறந்து இருக்கும்...

சோபாவின் கண்களை மூடி அமர்ந்தார். மூடிய கண்களுக்குள் அவரின் உருவம் தோன்றியது. இளகக் கூடாது என்று சொன்ன மூளையை மனம் அலட்சியம் செய்தது. உன்னை எந்தக் காலத்திலும் நான் மறக்கவே இல்லை. உயிராக நேசிக்கிறேன் என்ற வார்த்தையில் உருகிக் கரைந்தது. அதைச் சொல்ல நீங்க எடுத்துக் கொண்ட கால அவகாசம் போதுமா? நல்லவேளை பொண்ணு கல்யாணத்திற்கு முன்பே சொன்னீங்க?

'அப்புறமா சண்டை போடலாம். முதலில் போன் பண்ணி அவரை வரச் சொல்லு' என்று மூளை அறிவுறுத்த விரல்கள் நடுங்க, தியாகராஜன் என்று சேமித்து வைக்கப்பட்டு இருந்த எண்ணை அழுத்த, அது, 'கண்களின் வார்த்தைகள் புரியாதா? காத்திருப்பேன் என்று தெரியாதா? என்று பாடிய குரல் அவரின் வீட்டு வாசல் அருகே ஒலிக்க திடுக்கிட்டு நிமிர்ந்தவரின் கண்களில் வாசல் நிலைப்படியில் சாய்ந்து நின்ற தியாகராஜன் பட்டார்.



# 23

தியாகராஜனை தான் போனில் அழைக்கும்போது அவர் நேரில், அந்த வினாடியில் வந்து வீட்டு வாசலில்

நிற்பார் என்பதைக் கொஞ்சமும் எதிர்பார்த்து இராத சுஜாதாவிற்கு, முகம் சிவந்து வார்த்தைகள் திக்கியது. எதற்காக அவரை அழைத்தோம் என்ற விஷயமும் மறந்து போனது.

சுஜாதாவின் முகத்தில் பார்வையை பதித்து இருந்த தியாகராஜன் வீட்டிற்கு வந்து சில நிமிடங்கள் ஆகி இருந்தது. அவர் சோபாவில் அயர்வுடன் கண் மூடி அமர்ந்தது. திடீர் என்று விழித்து எதையோ தேடியது, போனை கண்டு பிடித்து எடுத்து ஆராய்ந்தது, அவரின் புகைப்படத்தைப் பார்த்து ரசித்தது, செல்லமாய் உதடு சுழித்து, தலை சாய்த்து போட்டோவுடன் சண்டை போட்டது, எல்லாவற்றையும் இமைக்காமல் பார்த்த வருக்கு இதயம் பறந்தது.

அந்த நேரத்தில் சிவ பூஜை கரடியாக அலைபேசி அழைக்க எரிச்சலுடன் எடுத்தவருக்கு உற்சாகம் பொங்கியது. முந்தைய தினம் மாலை அபிஷேக் சேமித்த சுஜாவின் எண். இவள் தன்னை அழைக்கிறாளா? எல்லை இல்லாத மகிழ்ச்சியில் அவசரமாக நிமிர்ந்து சுஜாவைப் பார்த்த போது, நான்கு கண்கள் கலந்தது.

அந்த வினாடியில் அவர்களுக்கிடையே இருந்த நீண்ட பிரிவு காலம் காணாமல் போய் இருபத்தி ஒரு ஆண்டுகளுக்கு முந்தைய காதலில் கனிந்த ஒரு நாளின் நெருக்கம் வெறும் பார்வையிலேயே தோன்ற, இருவ ராலும் பார்வையை விலக்கிக் கொள்ள முடியவில்லை.

போனில் இருந்து காலர் டியூனாக வெளிவந்த பாட்டின் வரிகள் அவரின் மனதில் எண்ணங்களைச் சொல்லாமல் சொல்ல, அவருக்கு அதை நிறுத்தவும்



தோன்றவில்லை. கால்கள் சுஜாதா அமர்ந்திருந்த சோபாவை அணுக, அவர் இருக்கையில் இருந்து எழுந்தார்.

சுஜாதாவின் தோளில் கை வைத்து ஒரு கையால் அமர வைத்தவர் தானும் அருகில் அமர்ந்து அவரின் கைகளை எடுத்து வருடியபடி, ''என்ன விஷயமா போன் பண்ணினாய் சுஜா?'' என்று கண்கள் மலர விசாரித்தார் தியாகராஜன்.

''நான்... உங்களை... இங்கே... வரச் சொல்லி'' வார்த்தைகள் திக்கித் திணற, அவர் அவசரமாகக் கைகளை விலக்கிக் கொண்டு எழ, ''தேங்க்ஸ், ஆனால் நீ சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்து முடிவு பண்ணுவதற்கு முன்பே நான் முடிவெடுத்து வந்து விட்டேன்...'' என்று நிதானமாகச் சொன்னார் தியாக ராஜன்.

''நான் ஒன்றும் எனக்காகச் சொல்லவில்லை...'' என்று அழுத்தமான குரலில் சொல்ல முயன்று ஓரள விற்கு வெற்றியும் பெற்றார் சுஜாதா.

''நீ எப்படியோ? நான் நமக்காக, நம்முடைய குடும்ப சந்தோஷத்திற்காக தான் வந்தேன். அதுதான் முக்கிய மான முதல் காரணம். கூடவே அபிஷேக் ஒரு மெசேஜ் அனுப்பி இருந்தார். அதில் உன்னிடம் சொல்லச் சொல்லி ஒரு தகவல் இருந்தது. அதைச் சொல்லலாம் என்றும் வந்தேன். எனக்கு ஒரு கப் டீ கிடைக்குமா?'' அப்போது தியாகராஜனின் குரல் சரளமாகவும் உரிமை யாகவும் வந்தது.

''அபிஷேக் என்ன மெசேஜ் அனுப்பி இருந்தார்?'' அவர் டீ கேட்டதற்கு, சரி என்றோ முடியாது என்றோ சொல்லாமல், பேச்சை மாற்றினார் சுஜாதா.

''நீ எதுக்காக இங்கே வரச் சொல்லி போன் பண்ணி னாயோ, அந்தக் காரணம் தேவை இல்லை என்று எனக்கு மெசேஜ் அனுப்பி இருக்கிறார். அதை நான் உன் மொபைலுக்கு அனுப்பி விடுகிறேன். நீயே தெரிஞ்சுக்கோ. டீ கேட்டேனே'' என்று சிரிப்புடன் நிறுத்தினார் தியாகராஜன்.

''நான் எதுக்காக வரச் சொன்னேன் என்று உங்களுக்கு எப்படி...''

''தெரியும். என்னுடைய எண்ணம் சரி என்று நீ இந்த மெசேஜ் பார்த்த உடன் புரிந்து கொள்வாய். நாம் பல ஆண்டு காலமா பிரிந்து இருந்தாலும், காதலித்து மணம் செய்து கொண்ட தம்பதியர். ஒரு பெண் குழந்தைக்கு பெற்றோர். நம்முடைய மனசில் என்ன எண்ணம் ஓடும் என்பதை ஊகிக்க முடியாதா?'' என்று சொல்லிவிட்டு தனக்கு வந்த அபிஷேக்கின் தகவலை அனுப்பும் பணியில் ஈடுபட்டார்.

அபிஷேக் பெற்றோரின் வருகைக்காக என்று திரு வண்ணாமலை கிளம்பியவர் திரும்பி வந்து விட்டாரா? அவர்கள் வரவில்லை என்ற தகவல் கிடைத்த உடனே இப்ப செய்யும் மெசேஜ் அனுப்பும் வேலையை அங் கேயே செய்து விட்டுப் போக வேண்டியதுதானே? யார் இவரை இங்கே வரச் சொன்னாங்க? என்று பொருமியவள் டீக்கு தண்ணீர் கொதிக்க வைக்க மறக்கவில்லை.



நீண்ட இடைவெளிக்குப் பிறகு முதல் முறையாக இல்லை என்றாலும், இப்போது, கோபம் குறைந்து இருக்கும் சமயத்தில், இருவர் மட்டும் இருக்கும் வேளை யில், அவரே ஆசையாகக் கேட்ட டீயைக் கொடுக்கும் முன்பு, வாசனையாக இருக்கிறதா? நிறம் போதுமா? சர்க்கரை சரியாக இருக்குமா? என்று இரண்டு மூன்று ஸ்பூன் வாயில் ஊற்றி சரி பார்த்த பின்பு, திருப்தியோடு எடுத்து வந்தவருக்கு சின்ன பெண் போல இதயம் படபடத்தது.

தேநீர் கோப்பையை எடுத்த தியாகராஜன், ''நீ குடிச்சாச்சா?'' என்று கேட்டார்.

'ம்ம்ம்', என்று முணுமுணுத்தவரின் குரலில் என்ன வித்தியாசம் கண்டாரோ? எழுந்து அடுக்களைக்குப் போய் பார்த்தவரின் இன்னொரு டீ குடித்ததற்கான அடையாளம் இல்லை என்பதால், இன்னொரு டம்ளரை எடுத்து வந்து தன்னுடையதில் பாதியை ஊற்றி நீட்டி னார்.

''அம்மாவும் வாசந்தியும் இருப்பதால், நான் சமையல் அறைக்குப் போக வேண்டிய தேவை வரவில்லை. எனக்கு டீ போடத் தெரியாது. ஆனால் இருப்பதை பகிர்ந்து கொள்ளத் தெரியும். குடிச்சுட்டுப் போய் மெசேஜ் பாரு'' என்று ஜன்னலோரம் நின்று வெளியே பார்த்தபடி டீயை ரசிக்க ஆரம்பித்தார் தியாகராஜன்.

டீ குடித்து முடித்த உடனே, அந்த டீயின் சுவை யிலும், சுஜாதாவின் சின்னச் சின்ன ஜாடைகளிலும் உற்சாகமாக உணர்ந்தவர், டீயின் சுவையைப் பாராட்டி சுஜாதாவிற்கு ஒரு மெசேஜும், சுஜாதா தன்னை

மொபைலில் அழைத்தார் என்ற தகவலை மகளுக்கும் ஒரு மெசேஜ் அனுப்பி வைத்தவர், கண் மூடி சோபாவில் அமர்ந்து, கடந்த சில நிமிடங்களில் நடந்த சுக அனுபவத்தை மனக்கண்ணில் மீண்டும் ரசிக்க ஆரம்பித்தார்.

* * *

சுஜாதா தியாகராஜனை, போனில் அழைத்து இருக்கிறார் என்ற செய்தி வாஸந்திக்கு வந்து சேர்ந்ததுமே, ''ஹேய் அபி, அப்பாவிடம் இருந்து என்ன மெசேஜ் வந்திருக்கு என்று கொஞ்சம் பாருங்க'' என்று உற்சாகத்தில் துள்ளிக் குதித்தாள். அதை பார்த்தவனின் முகத்தில் அவர் வீட்டிலேயே இருக்கும் பட்சத்தில் அவரை போனில் அழைக்க வேண்டிய அவசியம் என்ன?

தியாகராஜன் மகளிடம் வெளிப்படையாக சொல்லா விட்டாலும், அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்த இருக்கிறது. அதன் முடிவில் அவர் கோபமாகவோ, வருத்தமாகவோ கிளம்பி இருக்க வேண்டும். வெளியேறிய பின்பு அவரை போனில் அழைப்பது என்றால் சுஜாதாவின் மனம் கொஞ்சம் இளகி இருக்க வேண்டும். தியாகராஜனின் தகவல் இந்த உற்சாகத்தைப் பகிர்ந்து கொள்கிறதே?

''எஸ் வஸு, நாம் எதிர்பார்த்தது நடந்து விட்டது. நான் அம்மாவை மதிய உணவுக்கு மேல் கிளம்பி நாலு மணி அளவில் வரச் சொல்றேன். அதுக்குள்ளே நீ உங்க அம்மா அப்பாவிடம் பேசு'' என்று சொல்லி விட்டு சற்றே நகர்ந்து அம்மாவை அழைத்தான்.



''அபி! எங்களை எல்லாம் ஞாபகம் இருக்கா? கடை திறந்து மூணு நாளாச்சு. இப்பதான் நான் கடைப் பக்கம் எட்டிப் பார்க்கலாமா என்று நினைத்தேன். கடையில் வேலை பார்க்கும் பையன் நல்லவன் தான் என்றாலும், நம்ம கண்காணிப்பும் இருக்க வேண்டாமா? நீ எப்போ வருகிறாய் ஒண்ணும் தகவல் சொல்லவில்லையே? என்ன விசேஷம்? காலங்கார்த்தால போன்?'' என்று உற்சாகமாக விசாரித்தார் கல்யாணி.

''கல்யாணி மேடத்தை மறக்க முடியுமா? என்னோட ஸ்வீட் மம்மி ஆச்சே? உங்களை வச்சு தானே நம்ம ப்ளான் எல்லாம் ஓடுது. நானே இன்னிக்கு ஒரு நாள் மட்டும் கடையை ஒரு பார்வை பார்த்துட்டு வாங்க என்று சொல்ல நினைத்தேன். நான் நினைத்ததை நீங்களும் நினைச்சுட்டீங்க. இதுக்கு பேர் தான் டெலிபதி...'' என்று சிரித்தான்.

''ஹச்சு! இப்படி ஐஸ் மழையில் நனைஞ்சால் என் உடம்பு தாங்குமா? தை மாசம் பனி நேரம்டா. சரி, நீ எப்ப வருகிறாய்? போன வேலை முடிஞ்சதா இல்லையா?''

''எஸ் மேடம், தொண்ணூறு பெர்சன்ட் ஓவர். நீங்க வந்து ஒரு தார் குச்சி போட்டால், உடனே சுஜா மேடம் திருவண்ணாமலைக்குக் கிளம்பிடுவாங்க. நானும் நைட்டே சென்னைக்கு வஸுவோடு கிளம்பிடலாம்'' என்று தூண்டில் போட்டான்.

''அதுக்கு நான் நேரில் வரணுமா? போனில் பேசட்டுமா? தேவைப்பட்டால் வருகிறேன்...''

''பேசுங்க. அதுக்கு முன்னாடி ஒரு முக்கியமான விஷயம் ஞாபகம் வச்சுக்கோங்க. உங்களுக்கு ஆர்த்ரைடிஸ்

இருக்க விஷயம் அத்தைக்குத் தெரியும்...'' என்று சிரிப்போடு சொன்னான்.

''லூசாடா நீ! மூட்டு வலியோட எப்படிடா மலை சுத்த முடியும்? நான் திருவண்ணாமலை போனதே கிரிவலத் துக்குடா! ஏண்டா இப்படி ஏடாகூடமா சொல்லி வைக் கிற? நீ நல்லவனா? கெட்டவனாடா? இஷ்டத்துக்கு அள்ளி விடு'' என்று எரிச்சலோடு சலித்துக் கொண்டார்.

''தெரியலையேம்மா, நாலு பேர் நல்லா இருக்க ணும்னா, எதுவுமே இந்த அபிஷேக்கிற்கு தப்பு இல்லை...'' என்று சிரிப்போடு மிமிக் பண்ண, ''மகனே நேரில் வந்தேன், உன்னை அடி பின்னிடுவேன்' என்று செல்ல மாக மிரட்டினார் கல்யாணி.

''அதை தான் நானும் சொல்றேன். வாங்க வந்து ரெண்டு சாத்து சாத்தி, கையோட பத்திரமா என்னை அழைச்சுட்டுப் போங்க'' என்று சிரித்து விட்டு போனை வைத்தான்.

* * *

அவருக்குக் கொடுத்த தேநீரில் பாதியை தனக்குக் கொடுத்து விட்டு தியாகராஜன் நகர்ந்ததில், ஏற்கனவே இளகி இருந்த மனம், மேலும் உருக ஆரம்பிக்க, தன் னுடைய முகபாவனையை மறைக்க அவசரமாய் அடுக் களைக்கு ஓடிச் சென்றார் சுஜாதா.

அங்கே இருந்த போனை எடுத்தபோது, அதில் மூன்று புதிய தகவல்கள் இருந்தது. அபிஷேக்கிடம் இருந்து வந்த தகவலை தியாகராஜன் அனுப்பி இருந்ததை முதலில் படித்தார். அபிஷேக்கின் பெற்றோர் மாலையில் வரலாம் என்ற செய்தி இருந்ததாலேயே அவர் திரும்பி



வந்து விட்டார் என்று எண்ணியவருக்கு, சில வினாடிகள் முன்பு பூத்த உற்சாகம் சற்றே குறைந்தது.

அவர் மனம் வாடி, காலை உணவுக்குத் தயார் செய்து கொண்டு இருந்த போது, அடுக்களையில் இருந்த மொபைல் அழைக்க ஆச்சரியத்துடன் எடுத்துப் பார்த் தார். அபிஷேக் வீட்டில் இருந்து அழைப்பு? தனக்கா? யார் பேசுவது? என்ன பேசுவார்கள்? எப்படி பேசுவார் கள்? என்ன பேர்? என்று ஒன்றுமே தெரியாமல்...

போனில் உன்னைக் கடித்தா தின்று விட முடியும்? எடுத்துப் பேசிப் பாரேன். அனேகமா அபிஷேக்கின் அம்மாவாக இருக்கலாம். சில ஆழ்மூச்சுக்களை வெளி விட்டு, நிதானப்படுத்தி கொண்டு, பேசப் போகும் முதல் அழைப்பை மங்களமாக தொடங்க எண்ணி, ''வாழ்க வளமுடன், நான் சுஜாதா பேசறேன்...'' என்று ஆரம்பித் தார்.

''வணக்கம். நான் கல்யாணி. அபிஷேக்கின் அம்மா. அபிஷேக் உங்களைப் பற்றி நேற்று இரவு நிறைய சொன்னான். அவன் சொன்னது ரொம்ப கம்மி என்று நிரூபிக்கும் விதமாக உங்களிடம் இருந்து வரும் முதல் வார்த்தை அமோகமா காதில் விழுந்து இருக்கே? இப்படியே எல்லோரும் வளமுடன் வாழணும். அதுதான் எங்களோட ஆசை.''

''நல்லது நினைப்பவர்களுக்கு எப்போதும் நல்லது மட்டுமே நடக்கும். நீங்க எப்படி இருக்கீங்க? உங்களைப் பற்றி அதிகம் தெரியாது. என் பெண்ணை நல்லபடியா வச்சுக்கணும் என்று அன்போடு கேட்டுக் கொள் கிறேன்.''

''எனக்கு உங்களைப் பற்றி நிறைய தெரியும். இலக்கண சுத்தமா பேசுறது ரொம்பப் பிடிச்சு இருக்கு. இப்ப எல்லாம் தமிழ் ஆட்களுக்கே தமிழ் சரியா பேச வருவதில்லை தெரியுமா?'' என்று கல்யாணி அம்மா சிரிக்க, 'இந்த தமிழ் சரியாகக் கற்றுக் கொள்ளாததால் நான் இழந்தவை அதிகம் ஆச்சே' என்று மனதிற்குள் வாடினார் சுஜாதா.

''ஹலோ, நான் பழைய வேண்டாத நினைவுகள் எதை யாவது நினைவு படுத்தி விட்டேனா? பழசை நினைத்து இன்றைய சந்தோஷத்தைக் குறைத்துக் கொள்ள வேண் டாம். உங்களை பார்க்கணும் என்று வருவதாகச் சொன் னேன். ஆனால்...''

''பரவாயில்லை, இப்பதான் திருவண்ணாமலை வந்து போனீங்க என்று வாஸந்தி சொன்னாள். உடம்பு எப்படி இருக்கு? கால் வலி அதிகமோ?'' கவலையோடு விசா ரித்தார்.

''அதெல்லாம் அமோகமா இருக்கு...'' என்று ஆரம் பித்த பின்னரே அபிஷேக் வேலை மெனக்கெட்டு சொன்ன விஷயம் நினைவு வந்து நாக்கைக் கடித்தார்.

'கால் வலிக்கிறது என்பதைக் கூட இவ்வளவு சந் தோஷமாகச் சொல்லும், இவரிடம் இருந்துதான் அபி ஷேக்கின் உற்சாகம் வந்து இருக்க வேண்டும்' என்று நினைத்தபடி சம்பிரதாயமாகப் பேசி பேச்சை முடித்தார் சுஜாதா.

''அப்ப சீக்கிரமே உங்க வேலை முடிச்சு நீங்க அங்கே போங்க. உங்களை வந்து திருவண்ணாமலையில் வந்து பார்க்கிறேன். அருணாச்சலேஸ்வரருக்கு ஒரு நன்றி



சொல்லணும். கிரிவலம் போனதுக்கு கை மேலே பலன்...'' என்று போகிற போக்கில், கல்யாணி நன்றிப் பெருக்கில் சொல்ல சுஜாதாவிற்கு ஆச்சரியமாக இருந்தது.

நடக்கவே சிரமப்படும் ஆர்த்ரைடிசை வைத்துக் கொண்டு கிரிவலம் வரும் இவரின் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் என்ன சொல்வது என்று பெருமை யுடன் எண்ணியபடி போனை வைத்த போது புதிதாக இரண்டு செய்திகள் வந்து இருப்பதாய் மொபைல் காட்ட அதைத் திறந்தார்.

'மாற்றங்களே இந்த உலகில் மாற்றம் இல்லாதது' என்ற தன்னுடைய சித்தாந்தத்தை அலைபேசி உப யோகிப்பதில்லை என்ற தன் நிலையை மாற்றிக் கொண் டதன் மூலம், மீண்டும் ஒரு முறை நிரூபித்த சுஜாதா மேடத்திற்கு என்னுடைய மனம் கனிந்த வாழ்த்துக்களும், பாராட்டுக்களும், அன்புடன் வாஸந்தி என்ற அடுத்த தகவலைப் பார்த்ததும் இறங்கி இருந்த உற்சாகம் மீண்டது.

தன் சித்தாந்தம் இவளுக்கு எப்படித் தெரியும்? அதை விட தான் போனைப் பயன்படுத்துவது அதற்குள் இவள் காதுக்கு எப்படிப் போய் சேர்ந்தது? இவர் தானே சொல்லி இருக்க வேண்டும்? பேசிய சத்தம் கேட்கவே இல்லையே? அப்ப தகவல் அனுப்பி இருக்கிறாரா என்ற ஆச்சரியம் வந்தது. வாஸந்தியின் மெசேஜுக்கு பதில் சொல்ல முயன்றவருக்கு, முதல் முறை என்பதால் அது சரியாக வரவில்லை. அதனால், அவளின் மொபை லுக்கு அழைத்தார் சுஜாதா.

"ஹாய் அம்மா! என்ன பண்றீங்க? போன் எல்லாம் யூஸ் பண்றீங்க போல?" முதல் ரிங் போகும் முன்பே எடுத்தவள் உற்சாகமாக விசாரித்தாள்.

"ஆமா, உன்னைப் பார்த்த சந்தோஷத்தில் என்று வைத்துக் கொள்ளேன். இத்தனை நாள் என்னிடம் பேச யார் இருந்தாங்க? அதனால் அதற்கு அவசியம் இல்லை. இப்ப தேவை வந்து விட்டது. பயன்படுத்த ஆரம்பித்து விட்டேன். கிஷோருக்கு தான் நன்றி சொல்லணும்..."

"அவருக்கு எதுக்கும்மா நன்றி?" சிரிப்போடு கேட்டாள் வாஸந்தி.

"போன் அங்கிள் வாங்கித் தந்ததா அபிஷேக் நேற்று சொன்னாரே? இல்லையா?"

"அம்மா அபிஷேக் சொல்றதை எல்லாம் நீங்க அப்படியே நம்பினால் அவ்வளவுதான். உங்க நன்றி, அபிக்கு தான் போய் சேரணும். இப்போதே சொல்லிடுங்க..." என்று சொல்லிச் சிரித்தாள் வாஸந்தி.

"ஹேய்! நோ... நோ... நான் அப்புறமா பேசறேன்" என்று இங்கே சுஜாதா சொன்னதை காதிலேயே வாங்காமல் போன் கை மாறியது. வாஸந்தியின் மொபைலுக்கு சுஜாதாவின் அழைப்பு வந்த உடனே சந்தோஷமாக அவர்கள் பேசட்டும் என்று சற்று தள்ளி நகர்ந்து இருந்த அபிஷேக், அவள் அழைப்பதை உணர்ந்து திரும்பி வந்தான்.

"அம்மா பேசணுமாம்" என்ற முகவுரையுடன் தன் கையில் திணிக்கப்பட்ட மொபைலை ஆச்சரியமாகப் பார்த்தான். "சொல்லுங்க அத்தை" என்றவனுக்கு தான்



மொபைல் வாங்கிக் கொடுத்த வைபவத்தை வாஸந்தி ஏற்கனவே போட்டு உடைத்த விபரம் தெரியவில்லை.

"போனுக்கு ரொம்ப தேங்க்ஸ். இதோட உபயோகம் இப்பதான் புரிஞ்சது. முன் பின் அறிமுகம் இல்லாத வங்க, தூரத்தில் இருப்பவர்களுடன் எல்லாம் நினைத்த உடனே பேச முடிவது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?"

"என்ன அத்தை எனக்கு தேங்க்ஸ் சொல்லறீங்க? கிஷோர் அங்கிளுக்கு சொல்லுங்க..." தன்னுடைய முந்திய தின பொய்யைத் தொடர்ந்தான்.

சற்று முன்பு வாஸந்தி சொன்னதும், அதற்கு முன்பு கல்யாணி அம்மாவின் பேசும் சேர்ந்து, இவன் மேலே மேலும் அபிமானம் வளர, சந்தோஷமாக, "நீங்க போனை வாங்கிக் கொடுத்துட்டு ஏன் க்ரேடிட்டை கிஷோருக்குக் கொடுக்கறீங்க. மாதவியின் சென்னை வீட்டு நம்பர், திருவண்ணாமலை வீட்டு நம்பர், விவேக்கின் மொபைல் எண் எல்லாம் கூட கிஷோருக்குத் தெரியுமா? இத்தனை நாளா கிஷோர் என்னிடம் சொல்லியதே இல்லியே? நீங்க பொய் சொல்வதில் கில்லாடி என்றால் நான் அதைக் கண்டு பிடிப்பதில் கில்லாடி, ஏழரை மணியாச்சே? குளிச்சுச் சாப்பிட வேண்டாமா? சீக்கிரம் ரெண்டு பேரும் வாங்க. உங்களுக்குக் காலை உணவிற்கு என்ன செய்யட்டும்?" என்ற சுஜாதாவின் குரலில், நிச்சயம் கவலையோ, கோபமோ அல்லது அது மாதிரியான எந்த எதிர்மறை உணர்வுகளும் இல்லை என்பது புரிந்தது.

இனி வெளியே சாப்பிடப் போகத் தேவை இல்லை என்பதை உணர்ந்தவன், "பத்து நிமிஷம் அத்தை..

ரெண்டு பேரும் வந்துடுவோம். உங்களுக்கு என்ன நல்லா வருமோ, அதை செய்யுங்க. எனக்கு சாப்பாட்டுல எந்தத் தள்ளுபடியும் இல்லை'' என்று போனை வைத்தான் அபிஷேக்.

அபிஷேக்கிடம் பேசியதில், ஏற்கனவே இருந்த உற்சாகம் மேலும் கூடியது. புன்னகையோடு போனை வைத்தபோது, இன்னும் படிக்கப் படாமல் இருக்கும் செய்தி இருப்பதைச் சொன்னது. ஆச்சரியத்துடன் அதைத் திறந்தவரின் ஆச்சரியம் மேலும் கூடியது. அந்தத் தகவல் அனுப்பியது தியாகராஜன்.

''நீ போடற டீ தனி டேஸ்ட் தான். அரை கப் தானே கொடுத்தாய். அரை மணி நேரம் கழித்து இன்னொரு கப் கிடைக்குமா?'' என்ற தியாகராஜனின் பாராட்டான தகவல் அவருக்கு முகத்தில் புன்னகையை மலர வைத்த அதே நேரத்தில், முதுகில் சிறகுகளையும் முளைக்க வைத்தது.



# 24

நீண்ட நாட்களுக்குப் பிறகு, கணவனிடம் இருந்து வந்த ஒரு சின்ன பாராட்டு வார்த்தை சுஜாதாவின் மனதை மகிழ்ச்சி மழையில் நனைய வைத்தது. எந்த வயதாக இருந்தால் என்ன? இனம், மதம், மொழி, நாடு



என்ற அனைத்து எல்லைக் கோடுகளையும் தாண்டி மனித மனம் பாராட்டு வார்த்தைக்காக ஏங்கித் தவிக்கிறது என்பதை உணர்ந்தார் சுஜாதா.

ஏற்கனவே மகள், அவளை மணந்து கொள்ளப் போகும் மணவாளன், அவனுடைய தாயார் என்று தன்னிடம் அக்கறையோடு பேச இருக்கும் ஆட்களின் வாட்டம் தன்னைச் சுற்றி விரிந்து கொண்டே போவதில் வந்த ஆனந்தம் கணவனிடம் இருந்து வந்த அந்த பாராட்டு வார்த்தையில் மேலும் பெருகிப் புன்னகை மலரச் செய்தது.

மெசேஜ் வந்து வெகு நேரம் ஆகி இருக்குமோ? தான் முதல் டீ கொடுத்து அரை மணி நேரம் ஆகி இருக்குமா? அடுத்த டீ கொடுக்கும் நேரம் தாண்டி விட்டதோ என்ற பரபரப்பில் தேநீரோடு வெளியே வந்த சுஜாதாவைப் பார்த்த தியாகராஜன் 'செகண்ட் டோஸ் டீ டைம் ஆச்சே என்று நினைத்தேன். உள்ளே போனில் பேசும் சத்தம் கேட்டதால் காத்திருந்தேன். தேங்க்ஸ்'' என்று சொல்லி புன்னகை செய்தபடி டீக்குக் கை நீட்டினர்.

''முதலில் போட்ட மாதிரியே இதுவும் இருக்காத் தெரியலை. குடிச்சுப் பார்த்துட்டு எப்படி இருக்கு என்று சொல்லுங்க'' என்றபடி அருகில் இயல்பாக அமர்ந்த சுஜாதா, இம்முறை தனக்கு தனியாக ஒரு கோப்பை கொண்டு வந்து இருந்தார்.

''நீ டீ குடிச்சாச்சா என்று கேட்க வழி இல்லாமல் இப்படி கண் முன்னால் டீ கப்போடு வந்து விட்டாயே? நான் வேறு எப்படி பேச்சை ஆரம்பிப்பது?'' என்று கேட்ட தியாகராஜனின் குரலில் சின்ன கேலி இருந்தது.

''ஆரம்ப காலத்தில் தனக்கு டீயும் அவருக்கு காபியும் கொடுக்கும்போது, முக்கால் வாசி குடித்த பின்பு கடைசியில் சில துளிகளை இருவரும் அடுத்தவருக்குக் கொடுத்து சுவை பார்க்கும் பழக்கம் இருந்ததை மறந்து விட்டாரா? இப்பவும் கொடுக்க வேண்டியதுதானே? பேச உங்களுக்கு எப்போதும் தடுமாற்றம் தான். இன்னிக்கு என்ன புதுசா இது? எப்பவும் நான்தான் பேச்சை ஆரம்பிக்கணும். வளர்க்கணும். முடிக்கணும்...'' என்று மனதிற்குள் எண்ணியபடி குனிந்த தலை நிமிராமல் டீ அருந்திகொண்டு இருந்த சுஜாதாவின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அவரின் எண்ண ஓட்டத்தை தெளிவாகவே தியாகராஜனிற்குச் சொல்லியது.

''எப்போதும் இருக்கும் பழக்கத்தை இத்தனை ஆண்டுகள் கழித்து மாற்றுவானேன்? இப்பவும் அந்தப் பழக்கம் தொடரட்டும்...'' என்று முக்கால்வாசி குடித்த தன் தேநீர் கோப்பையை அவரிடம் நீட்டினார். அவர் நீட்டிய கோப்பையைப் பார்த்ததும் சுஜாதாவிற்கு ஜில்லென்று இருந்தது.

தன் எண்ணங்களை இத்தனை ஆண்டுகள் கழித்தும் இவரால் இதனைத் துல்லியமாக உணர முடிகிறதா? அப்புறம் ஏன் முன்னாடி, தான் தனியே வந்ததைத் தடை செய்யவில்லை? தான் கிஷோரை திருமணம் செய்ய வந்ததாக எண்ணினேன் என்று அவரே சொன்னாரே? அப்போ இந்த காதல் எங்கே போச்சு? என்று சந்தோஷமும், ஏக்கமும் ஒன்றை ஒன்று மிஞ்ச, தான் எப்படி உணர்கிறோம் என்பதை அவராலேயே நிர்ணயம் செய்ய முடியவில்லை.



அவரின் நீண்ட மௌனமும், தான் நீட்டிய கோப்பையை வாங்காததும், தியாகராஜனை காயப்படுத்த, அவர் கோப்பையை வைத்துவிட்டு ஜன்னலுக்கு நகர்ந்து விட்டார். சற்று முன்பு உற்சாகத்தில் துள்ளிய மனத்தால், இந்த ஏமாற்றத்தை உடனே ஜீரணிக்க முடியவில்லை. அவள் அதை வாங்கி அருந்தாதது கூட பரவாயில்லை. ஆனால் தான் கொடுத்தது எதற்காக என்பதை உணராத மாதிரி அந்த முகத்தில் தோன்றிய குழப்பமும், யோசனையும் அவர் மனதை ரொம்பவே பாதித்தது.

தான் மட்டுமே அன்றில் இருந்து இன்று வரை இவளையே எண்ணிக் கொண்டு இருக்கிறோமோ? இவளுக்கு தன் மேல் அவ்வளவு பற்றுதல் இல்லையோ? உற்சாகத்தைக் காணோமே? கடமை மட்டும் இருந்ததோ? அதற்காகத்தான் தன்னை போனில் அழைத்தாளோ?

தியாகராஜனின் தயக்கத்தையும் மனக்குழப்பத்தையும் உணராத சுஜாதா, 'இந்த முறையும் பேச்சை தானே ஆரம்பிக்கும் வழக்கத்தைத் தொடர வேண்டுமா?' என்று எண்ணியபடி, ஜன்னலுக்கு அருகில் நின்ற அவரை நெருங்கிப் பேச்சை ஆரம்பித்தார்.

''அபிஷேக் அம்மா பேசினாங்க. அவங்க வருவதா சொன்னதை இன்று காப்பாற்ற முடியலை என்று வருத்தப்பட்டாங்க. சீக்கிரமே வந்து பார்க்கிறேன் என்று சொன்னாங்க. ரொம்ப நல்ல மாதிரி தெரிஞ்சாங்க. அபிஷேக் அவங்க அம்மா மாதிரி போல. எதுக்கும் பெரிசா அலட்டிக் கொள்வதில்லை. சிரிச்சு சிரிச்சே காரியம் சாதிக்கிறார்'' என்று சகஜமாகப் பேசிய சுஜாதாவைப் பார்த்த தியாகராஜனுக்குக் குழப்பம் கூடியது.

''உண்மைதான், அபிஷேக்கைப் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் நிறைய இருக்கு. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக் கொண்டு, சிரித்தபடி தனக்கு வேண்டும் என்பதையும் நிறைவேற்றிக் கொண்டு, தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் சந்தோஷப் படுத்தி...'' என்று நடுநிலைமையுடன், உணர்வுகளை வெளிக்காட்டாமல், அவர் சொல்லிக் கொண்டு போகும் போது, ''தான் நினைப்பதை அடைவதற்காக அப்பப்போ சின்னச் சின்ன பொய்களும் சொல்லி...'' என்று சுஜாதா இடையிட, தியாகராஜனுக்கு மீண்டும் சுரீர் என்றது.

இவளின் குரலில் என்ன பாவம் இருக்கிறது? டீ கொண்டு வரும்போது இருந்த உற்சாகம் இப்போ இல்லை. இவளுக்கு அபிஷேக் மேல் அவ்வளவு பிடித்தம் இல்லையோ? முதலில் அபிஷேக்கின் அம்மா பற்றி பேசும்போது உற்சாகமாக தானே ஆரம்பித்தாள்? வினாடிக்குள் நூறு கேள்விகள் அவரை துளைத்தது.

''யாருக்கும் தீங்கு விளைவிக்காத ஆபத்தில்லாத சின்ன பொய்கள் தானே? உண்மையைப் பேசுகிறேன் என்று அடுத்தவர் மனதை நோகடிக்கும் சிலரை விட, சுற்றி இருப்பவர்கள் சந்தோஷமாக இருக்க சின்னச் சின்ன பொய் சொல்லும் அபிஷேக் எவ்வளவோ பரவாயில்லை...'' என்று அபிஷேக்கை நியாயப்படுத்தும் நோக்கத்தில் சொன்னார் தியாகராஜன்.

தான் உண்மையைச் சொல்லி இவருடைய மனதை நோகடித்தேன் என்று குத்திக் காட்டுகிறாரா? தான் அபிஷேக்கை குறையாகச் சொல்லவே இல்லையே? பாராட்டும் வார்த்தைகள் தானே சொன்னேன்? வாடி



சுருங்கிய மனதை தேற்றி, ''சரி காலை உணவுக்கு என்ன செய்யட்டும்? சப்பாத்தி சாப்பிடுவீங்களா?'' என்று கேட்டார் சுஜாதா.

''ப்ச்! சாப்பாட்டில் என்ன இருக்கு? ஏதோ ஒண்ணு...''

''சற்று முன்பு காபி வேண்டாம், டீதான் வேண்டும் என்று சொல்லும்போது இந்த சித்தாந்தம் எங்கே போனதோ?'' சுஜாதாவிற்கு சுறுசுறுவென்று கோபம் ஏறியது.

''இப்ப எதுக்கு இந்தச் சின்ன விஷயத்துக்கு வாக்கு வாதம்? உன் இஷ்டப்படி ஏதாவது செய் என்று சொன்னேன். உனக்கு என்ன செய்யத் தெரியும், தெரியாது என்பது எனக்குத் தெரியாது. வீட்டில் என்ன பொருட்கள் இருக்கு இல்லை என்பதும் தெரியாது. அப்படி இருக்கும்போது என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? எனக்கு என்ன பிடிக்கும் என்று நான் சொல்லித்தான் உனக்குத் தெரிய வேண்டுமா?''

''உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். தெரியாது என்று நான் சொன்னேனா? நீங்க சொன்ன அதே இடைப்பட்ட காலத்தில், நீங்க காபியில் இருந்து டீக்கு மாறிய மாதிரி அதிலும் மாற்றங்கள் இருக்கலாமே?'' வேகமாக சுஜாதா இடையிட தியாகராஜனுக்கு அதற்கு பதில் சொல்லி வாதத்தைத் தொடர மனம் இல்லை.

''உனக்கு சமையல் அறையில் வேலை இருந்தால், நான் குளித்து விட்டு வந்து விடட்டுமா?'' அவரின் பேச்சிலேயே, உன்னுடன் இந்த பேச்சை தொடர்வதில் எனக்கு விருப்பம் இல்லை என்பது புரிய சுஜாதாவின்

மனம் வாடியது. வெறுமனே தலை அசைத்து விட்டு அடுக்களைக்குச் சென்றார். அவர் விரும்பிச் சாப்பிடும் வெண்பொங்கலுக்கு அரிசியும் பாசி பருப்பும் சேர்த்து குக்கர் வைத்து விட்டு, சட்னி சாம்பாருக்கு தயார் செய்யும் பணியில் இருந்த போது வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

சாந்தி வந்து விட்டாளா? ஹாலில் யாரும் இல்லை. கூர்ந்து கவனிக்க, அவர் போனில் பேசுவது புரிந்தது. எதிர்முனையில் பேசுவது பவானி அம்மா என்பது புரிந்தது. அத்தையா? அவர் பேசுகிறாரே? தானும் பேச வேண்டுமோ?

அபிஷேக்கின் அம்மா தன்னிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பேசினாரே? தானாகப் பேசவில்லையா? அவர் சம்பந்தி என்ற கௌரவம் காட்டி இருக்கலாமே? அதை தள்ளினாலும் எவ்வளவு தன்மையாகப் பேசினார்?

அபிஷேக் மட்டும் என்ன? வாஸந்தியின் ஆசைக்காக தன்னை பாண்டிச்சேரியில் சல்லடை போட்டு அலசி தன் முகவரியைக் கண்டு பிடிக்கவில்லையா? அவன் இல்லாவிட்டால், இன்னும் எத்தனை காலம் தன்னுடைய தனிமை சிறைவாசம் நீண்டு இருக்குமோ? அவளையும் நன்றாக வைத்துக் கொள்வான் என்பதும் புரிகிறது. அன்பின் அடிப்படையில் பார்த்தால் எல்லாமே இன்பமாகவே இருக்கும். ஏன் கீதை சொல்லவில்லையா?

நடந்தது எதுவோ அது நன்றாகவே நடந்தது

நடக்கிறது எதுவோ அதுவும் நன்றாகவே நடக்கிறது



நடப்பது எதுவோ அதுவும் நல்லதாகவே நடக்கும்

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

முன் பின் அறிமுகம் இல்லாத கல்யாணி அம்மா தயக்கம் இன்றி தானே வலிய வந்து தன்னிடம் பேசலாம் என்றால் தனக்கு என்ன தடை வந்தது? தியாகராஜன் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்? தன்னிடம் பேசட்டும். பேசாமல் இருக்கட்டும். ஆனால் தான் தன்னுடைய கடமையைச் செய்யாமல் இருக்க வேண்டாம்.

கணவனும் இன்றி, பெரிய சொத்து சுகம் என்று இல்லாமல் தன்னுடைய உழைப்பை நம்பி, ஒரு பிள்ளையை வளர்த்து ஆளாக்கிய பவானி அம்மாவிற்கு தியாகராஜன் மேல் இல்லாத உரிமையா? தன்னைத் திருமணம் செய்து கொண்ட தியாகராஜனின் விருப்பத்திற்காக, தன்னுடைய பல ஆண்டு கனவுகளை ஒதுக்கி வைத்து, தன்னை ஏற்றுக் கொண்ட பவானி அம்மாவின் ஆதங்கம் புரிந்தது.

அவருக்கும் மகனுடைய திருமணம் பற்றிய பல கனவுகள் இருந்து இருக்கலாம். மாதவியின் மாமியாருக்கு ஏதாவது வாக்கு கொடுத்து இருக்கலாம். தனக்கு மசக்கையின் போதும், பிரசவத்தின் போதும், உதவவில்லையா? அவருக்கு கோபத்தில் ஒரு வார்த்தை சொல்ல உரிமை இல்லையா? எழுபது வயதைத் தாண்டிய பழுத்த அனுபவசாலியான அவரிடம் விட்டுக் கொடுத்து தானே முதலில் பேசுவது தான் சரியாக இருக்கும் என்று திருவண்ணாமலை வீட்டு எண்ணை அழுத்தினார் சுஜாதா.

'ஹலோ' என்று போனை எடுத்த பவானி அம்மாவின் குரல் கேட்டதுமே, அவர் கோபமாக இருப்பாரோ? நேரில் வராமல் போனில் பேசுவதை மரியாதையை குறைவாக எடுத்துக் கொள்வாரோ என்று சுஜாதாவிற்கு மனம் படபடத்தது. நீண்ட மௌனத்திலேயே, சற்று முன்பு மகன் பேசிய விதத்தில் இருந்து, யாராக இருக்கக் கூடும் என்று ஊகித்த பவானி அம்மா, 'சு..ஜா..தா நல்லா இருக்கியா?'' என்று கேட்டார்.

''அ..ம்..மா, நான் நல்லா இருக்கேன்மா. நீங்க ந..ல்..லா இருக்கீங்களா?'' என்று அவரின் அந்த ஊக சக்தியைப் பார்த்து பிரமித்த சுஜாதாவிற்கு உணர்ச்சி பெருக்கில் குரல் தழுதழுத்தது.

''ஹேய்! நல்லா தமிழ் பேசுறியே? தியாகு இப்பதான் பேசினான். உன்னிடம் கொடுக்க சொன்னால் அவன் வெளியே கடையில் இருக்கேன் என்று சொன்னான். நம்பர் வாங்கினேன். நானே உனக்குப் பேசணும் என்று நினைத்தேன். அதுக்குள்ளே நீ பண்ணிட்டியே? இன்னும் கோபம் தீரலையா? சத்தம் காணோம்?'' என்று கேள்வி களை அடுக்கினார் பவானி.

வீட்டில் இருந்து கொண்டே ஏன் வெளியில் இருந்து பேசுவதாகச் சொன்னார்? ஒரு வேளை தான் பேச மறுத்து விட்டால் அம்மாவிற்குச் சங்கடமாக இருக்கும் என்று நினைத்து விட்டாரோ? தன் மேல் அவ்வளவு அவநம்பிக்கையா? அம்மா தன்னை அழைத்துப் பேசட் டும் என்று அவரிடம் சொல்லி இருக்கிறாரே? அம்மா வின் மேல் வைத்த நம்பிக்கையும், காட்டிய உரிமையும் அவர் ஏன் தன்னிடம் காட்டவில்லை? மீண்டும் மனம் வாடிச் சுருண்டது.



''உங்க மேலே எனக்கென்னம்மா கோபம்? உங் களுக்கு என் மேலே கோபம் இருக்குமோ என்றுதான்...''

''இனிமேல் உங்க மேலே கோபப்பட்டு என்ன ஆகப் போகுது சொல்லு? காடு வா வாங்குது. வீடு போ போங் குது. வாழ வேண்டிய வயசுல, வாழ்க்கையை தொலைச் சுட்டு நின்ன உங்களைப் பார்த்து எனக்கு இன்னும் மனசே ஆற மாட்டேங்குது. ப்ச்! போனது போகட்டும். இனியாவது சந்தோஷமா இருந்தால் சரிதான். சாந்திக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சு. ரெண்டு வாரத்துல நல்ல முகூர்த்தம் இருக்கு. அதிலேயே கல்யாணம் வச்சுக்கலாம் என்று ஏற்கனவே சொல்லி இருந்தாங்க. நீ வரணும் என்றுதான் அந்த தேதி முடிவாகாமல் இருந்தது. இப்ப உன்னையும் பார்த்தாச்சே? காலையிலேயே அவங்க அப்பா பேசி முடிவு சொல்லிட்டார்...''

''ரெண்டு வாரத்திலையா? கல்யாண மண்டபம் எல்லாம் பார்க்க வேண்டாமா...?'' குரல் பலவீனமாக வெளிவந்தது. தன்னுடைய மகளின் திருமண முடிவுகள் எதுவுமே தனக்காக காத்திருக்கவில்லை. அவள் மேல் தனக்கு அவ்வளவுதான் உரிமை என்று சொல்லாமல் சொல்கிறார்களோ? அபிஷேக்கின் அப்பா கேட்டு இருக்காவிட்டால், தன்னை இந்த அளவு கூட தேடி இருக்க மாட்டார்கள் போல...

''கேள்வி கேட்டுட்டே இருக்காதே. இங்கே நமக்குத் தெரிஞ்சவங்க கல்யாண மண்டபம் இருக்கு. இல்லை என்றாலும், கோவிலில் கல்யாணம் வச்சுட்டு சாயங் காலம் விருந்துக்கு ஏற்பாடு பண்ணிடலாம். ரிசப்ஷன் சென்னையில் மாப்பிள்ளை வீட்டுல பெரிசா பண்ண

னும் என்று சொன்னாங்க. சீக்கிரம் நீ தியாகுவோட கிளம்பி வந்து சேர்'' அதட்டலாக வந்தது பவானி அம்மாவின் குரல்.

''அது வந்தும்மா... நான் அங்கே வந்தால்...'' அவரை எப்படி மறுத்துப் பேசுவது என்ற தயக்கத்தில் பேச்சை முடிக்க முடியவில்லை.

''என்ன இழுத்துட்டே இருக்கிற? வீட்டுக்காரியா வந்து எல்லா பொறுப்பையும் உடனே எடுத்துக்க. நல்ல படியா கல்யாணத்தை முடிச்சுக் கொடு. சொல்லிட்டேன்...''

''நான் கல்யாணத்துக்கு முதல் நாள் வந்து...''

''உனக்கென்ன பைத்தியமா? என்னைப் பார்த்தால் உனக்கு எப்படி இருக்கு? இன்னிக்கு நேத்து இல்லை. பதினஞ்சு வயசுல கரண்டி பிடிச்ச கை. ஐம்பது வருஷமா வீட்டு நிர்வாகம் பார்க்கறேன். ஆம்பளைங்களுக்கு வேலை பார்த்தாலும் பிசினெஸ் பார்த்தாலும், ரிடயர் மெண்ட் என்று ஒண்ணு இருக்கு. ஆனால் கரண்டி பிடிச்ச பொண்ணுக்கு மட்டும் காட்டுல கட்டையா கருகுற வரைக்கும் ரிடயர்மெண்டே கிடையாது. உன் பொண்ணையும் புருஷனையும் நல்லபடியா பார்த்துக்கறேன் என்று சொல்லி எனக்கு முதலில் ஓய்வு கொடு...''

''நீங்க இல்லாமல் நாங்க எப்படிம்மா? நீங்க தான் எங்களுக்கு வழிகாட்டியா இருந்து...''

''இந்த வக்கணை எல்லாம் நல்லா பேசு. சொன்ன பேச்சு மட்டும் கேட்க மாட்டியா? இப்படி செய் அப்படி பார் என்று சொல்றது வேற. நானே மெனக்கெட்டுச் செய்றது வேற இல்லையா? கண்டதையும் யோசிச்சுத் தயங்கிட்டு இருக்காத. பழசை எல்லாம் மறந்துட்டு, இன்னிக்குத்தான் பிறந்த புது மனுஷியா பொண்ணோட கல்யாணம் நல்லபடியா முடியணும் என்று ஒரே எண்ணத்தில் சட்டு புட்டுன்னு கிளம்பி வந்து சேர். அப்புறமா உங்க பஞ்சாயத்து எதுவா இருந்தாலும் தனியா வச்சுக்கோங்க'' என்று ஆற்றாமையில் பவானி பொரும, மேலே மறுத்துப் பேச துணிவின்றி, ''சரிம்மா'' என்ற வார்த்தையுடன் சுஜாதா போனை வைத்தார்.



# 25



பவானி அம்மாவிடம் பேசிவிட்டு போனை வைத்த சுஜாதா மனதளவில் சோர்ந்து போய் அடுப்படி மேடையில் சாய்ந்தபடி சில நிமிடங்கள் நின்றார். தியாகராஜனே, சாந்தியின் திருமண ஏற்பாடுகள் குறித்து என்ன நினைக்கிறாய் என்ற ஒரு வார்த்தை தன்னிடம் பேச முயலாத போது பவானி அம்மா பேசவில்லை என்று குறைபடுவதில் அர்த்தம் இல்லை.

இத்தனை நாள் சாந்திக்கு தன்னை அடையாளம் தெரியவில்லை என்பது மிகப் பெரிய மனக்குறையாக இருந்தது. அந்த குறை, அபிஷேக் மற்றும் அவனுடைய அப்பாவினால் தீர்த்து வைக்கப்பட்டு உள்ளது. இதற்கே

அவர்களுக்கு தான் நன்றிக் கடன் செலுத்த வேண்டும். அவர்களைப் பாதிக்கும் எந்த விஷயமும் இனி தன்னுடைய நினைவிலோ பேச்சிலோ வரக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டார் சுஜாதா.

அபிஷேக்கிற்கு வாஸந்தியை திருமணம் செய்து கொள்ள ஆசை. அதை முறையாக பெற்றோரிடமும் சொல்லி சம்மதம் வாங்கி விட்டான். தன்னால் அந்த திருமணத்திற்கு எந்தத் தடையும் இருக்கக் கூடாது. இரண்டே வரங்கள் தானே? அங்கே போய் இருந்து விட்டால் மற்ற எல்லோருக்கும் மன குறைவின்றி சந்தோஷமாக இருக்கும். திருமணத்தை முடித்து விட்டு வேறு எங்காவது கண்காணாமல் போய் விட்டால் போகிறது.

தன்னைத் தேடி வர அவருக்கு மனசும் அவகாசமும் இருக்காது. அதன் பிறகு அபிஷேக் அப்பாவும் தன்னைக் கேட்க மாட்டார். மீண்டும் தானே வெளியேறி விட்டதால் எல்லா பழியையும் தன் மேல் போட்டு விட்டு அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும். தான் அவர்களின் மகிழ்ச்சிக்குத் தடையாக இருக்க வேண்டாம் என்று ஏதேதோ யோசித்து தன் மனதைப் போட்டுக் குழப்பி அவரைப் பொறுத்தவரையில் தெளிவான முடிவை எடுத்தபோது வாசலில் அபிஷேக், வாஸந்தி இருவரின் பேச்சொலியும் சிரிப்பொலியும் கேட்டது.

''அம்மா, பயங்கரமா பசிக்குது. டிபன் ரெடியா?'' என்று உற்சாகமாகக் கேட்டபடி உள்ளே வந்த வாஸந்தியைப் பார்த்து புன்னகை செய்தார்.

''பதினைந்து நிமிஷம். சட்னி அரைத்து விடுகிறேன். நீ குளிக்க வேண்டாமா? குளிக்காமல் சாப்பிடுவாயா? உங்க பாட்டி ஒன்றும் சொல்ல மாட்டாங்களா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார்.



''ஹய்யோ! பாட்டிகிட்டே ஒண்ணும் நடக்காது. பல் தேய்க்காமல் பால் கிடையாது. குளிக்காமல் டிபன் கிடையாது. வேலை நாள், விடுமுறை நாள் எல்லாத்துக்கும் அதே நடைமுறைதான். கிருத்திகை, பௌர்ணமி என்றால் குளிச்சால் தான் பாலே கிடைக்கும். நீங்க வேறே. அம்மாவிடம் இன்று செல்லம் கொஞ்சலாம் என்று பார்த்தேன்...''

''அதெல்லாம் வேண்டாம் சாந்தி. நல்ல பழக்க வழக்கங்களை நான் ஏன் புதிதாக இன்று வந்து மாற்ற வேண்டும்? குளிச்சுட்டு வா. சாப்பாடு ரெடியா வச்சு இருக்கேன்.''

''அம்மா...'' என்று கொஞ்சலாகச் சிணுங்கிப் பார்த்து, அவரின் தீர்க்கமான பார்வையில், அறைக்குள் போவதைப் பார்வையால் பின் தொடர்ந்த அபிஷேக்கைப் பார்த்த சுஜாதா, லேசாக தொண்டையைக் கனைத்து, அவன் கவனத்தை தன் புறம் ஈர்த்தார்.

''உங்க அம்மா பேசினாங்க. இன்று இங்கே வர முடியவில்லை என்று சொன்னாங்க, நீங்களும் மெசேஜ் அனுப்பி இருந்தீங்க என்று சாந்தி அப்பா சொன்னாங்க...''

''ஆமா அத்தை, அவங்களுக்குக் கொஞ்சம் உடம்பு சரி இல்லை என்று...''

''ம்ம்ம் சொன்னாங்க. பரவாயில்லை மெதுவா வரட்டும். அது பிரச்னை இல்லை. உங்க அப்பா கல்யாண நாள் முடிவு பண்ணி சொல்லிட்டாங்களாம். இப்ப

பாட்டிம்மா பேசினாங்க. கல்யாணத்ததிற்கு இன்னும் ரெண்டு வாரம் தான் இருக்கு. அதனால் வாஸந்தி வீட்டிலேயே இருக்கட்டும் என்று சொன்னாங்க...''

''ஹய்யோ! ஏன் அத்தை? விவேக் ஆபீஸ் தானே? அம்மாவைப் பேசச் சொல்லட்டுமா? இல்லை விவேக்கை பேசச் சொல்லட்டுமா பத்து நாள் கழிச்சு லீவு போட்டுக்கலாமே? இப்போதே ஏன்...'' பதட்டமாகக் கேட்டான் அபிஷேக். கல்யாணம் இன்னும் இரண்டு வாரத்தில் என்ற தகவல் இனிப்பாக இருந்தாலும், அதுவரை வாஸந்தியைப் பார்க்க முடியாது என்ற தகவல் அவ்வளவு உவப்பாக இல்லை.

''உங்க அம்மா பேசினாங்க என்று சொன்னேனே? கவனிக்கவில்லையா? அவர்களிடம் நான் சம்மதம் வாங்கி விட்டேன். விவேக் சாந்திக்குக் கல்யாணத்திற்கு லீவு தர முடியாது என்று சொல்வானா என்ன? அப்படிச் சொன்னால், அவன் வேலையே வேண்டாம் என்று சொல்லி விட்டால் போச்சு...'' என்று சாதாரணமாகச் சொன்னார் சுஜாதா.

'அ..ம்..மா! யாரைக் கேட்டு இதற்குச் சரி சொன் னீங்க?' என்று மனதிற்குள் பல்லைக் கடித்தாலும் வெளி யில் புன்னகை மாறாமல் முகத்தைச் சிரித்தபடி வைத்து இருந்தான் அபிஷேக்.

''நானும் சாந்தி அப்பாவும் அவளையும் அழைச்சு கிட்டு திருவண்ணாமலைக்குக் காலை உணவுக்குப் பிறகு கிளம்பலாம் என்று பார்க்கறேன். நீங்க கூட வரீங் களா? சென்னைக்குக் கிளம்பணுமா?'' என்று சுஜாதா அம்மா அபிஷேக்கிடம் கேட்ட கேள்வி அந்த வினாடி



யில் சரியாகக் குளித்து முடித்து வெளியே வந்த தியாக ராஜனின் காதுகளில் விழுந்த வார்த்தைகளால் அவரால் நம்பவே முடியவில்லை.

சுஜாதாவின் இந்த முடிவிற்கு அம்மா போன் பண்ணி அழைத்ததுதான் காரணமோ? அவர் என்ன சொல்வாரோ என்று அவள் பயந்து இருக்க வேண்டும், ஒரு தர்ம சங்கடமான சூழலில் நேருக்கு நேர் வரக்கூடிய வாக்கு வாதத்தைத் தடுக்க நினைத்து இருக்க வேண்டும். அதனால் தான் தயங்கி இருக்கிறாள். அது புரியாமல் இதுவரை தானும் குழம்பி, அவளையும் குழப்பி இரண்டு நாட்களை வீணடித்து விட்டோமே என்ற ஆதங்கம் தோன்றியது. உற்சாகத்தில் மிதந்தவர், அருகில் வந்து அபிஷேக்கை அணைத்துக் கொண்டார்.

''நீங்க இல்லாமல் இந்த விஷயம் நடந்தே இருக்க முடியாது. இதற்கு உங்களுக்கு நான் எப்படி நன்றிக் கடன் செலுத்தப் போகிறேன் என்றே தெரியவில்லை'' என்று நன்றி தெரிவிக்க அபிஷேக் அவரை தட்டிக் கொடுத் தான்.

''நீங்க ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் மனசுல சுமந்துட்டு இருக்கீங்க. உங்க காதல் ஜெயித்து இருக்கு. நான் என்ன பண்ணினேன்?'' என்று பெருந்தன்மை யாகச் சொன்னான்.

''அப்பா அம்மாவிடம் பேசி நிச்சயம் என்னிக்கு வச்சுக் கலாம்? எப்ப கல்யாண ஏற்பாடுகள் பற்றி பேச வர வச திப்படும் என்று கேட்கலாமா? அங்கேயே திருவண்ணா மலைக்கே வரச் சொல்லி விடலாம். இல்லியா சுஜா?'' என்று மருமகனிடமும் மனைவியிடமும் அபிப்ராயம் கேட்டார் தியாகராஜன்.

அவர் கல்யாணத்தைப் பற்றிப் பேசும்போது சந்தோஷத்தில் முகம் மலர்ந்ததைப் பார்த்து மீண்டும் தவறாகப் புரிந்து கொண்டவர், ''ம்ம்ம், போகலாம். இன்றே கிளம்பலாம். ரெண்டு வாரத்தில் கல்யாணம் என்றால் கல்யாண வேலை நிறைய இருக்குமே?'' என்று சம்மதம் தெரிவித்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் ஆரோவில்லில் இருக்கும் வீட்டில் இருந்து தியாகராஜன், சுஜாதா, வாஸந்தி மூவருக்கும் வாடகை கார் அமர்த்தி வழி அனுப்பி வைத்த அபிஷேக்கிற்கு மனம் நிறைவாக இருந்தது. எதிர்பார்த்ததைவிட சீக்கிரமே வேலை முடிந்து விட்டது.

அம்மாவிடமும், பவானி பாட்டியிடமும் பேசியதில் அவர்கள் இருவருமே, வாஸந்தியை வேலைக்கு அனுப்ப வேண்டாம் என்ற விஷயத்திற்கு சம்மதம் சொன்ன மாதிரி தெரியவில்லை. அப்புறம் ஏன் அத்தை அப்படிச் சொன்னாங்க? வேறு மகளின் மேல் இருக்கும் ஆசை மட்டுமா? திருமணம் ஆகி செல்லும் மகளோடு நேரம் செலவழிக்கலாம் என்ற ஆசை மட்டுமா? அல்லது வேறு காரணம் இருக்குமா? என்ற சந்தேகம் முளை விட்டது. அதே யோசனையில் விவேக்கிற்குப் போன் பண்ணினான்.

''ஹேய்! நினைச்சதை சாதித்து விட்டாய் போல? மாமா பேசினார். சாந்தியும் அத்தையையும் அழைச்சுகிட்டு திருவண்ணாமலை போறேன் என்று சொன்னார். சபாஷ்டா...'' என்று வாழ்த்தினான் விவேக்.

''நீ நிஜமாவே வாழ்த்துச் சொல்றாயா? இல்லை கிண்டல் பண்றியா? ஒண்ணுமே புரியலை...''



''ஏண்டா இப்படி அழுது வடியுற? என்ன ஆச்சு?''

''வேறென்ன பண்ணச் சொல்ற? அத்தை தான் இப்படி என்னைக் கவுத்துட்டாங்க. வாஸந்தியை வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லி கையோட கூட்டிட்டுப் போய்ட்டாங்க...''

''டேய்! பார்த்து ரெண்டு மாசம் இன்னும் முடியலை. காதலை உணர்ந்து ரெண்டு நாள் ஆகலை. இன்னும் ரெண்டு வாரத்துல கல்யாணம், அது வரைக்கும் கூட பொறுக்க முடியாதா? யாரிடம் கதை விடுற? நானே உங்க அப்பாவிடம் சொல்லி கல்யாண ஏற்பாடு பண்ண கொஞ்சம் அவகாசம் வேண்டும். அடுத்த மாசத்துல ஒரு நல்ல முகூர்த்தம் பாருங்க அங்கிள் என்று சொல்லிடுவேன் ஜாக்கிரதை...'' என்று கேலியாக மிரட்டினான்.

''உயிர் காப்பான் தோழன் என்று பழமொழி சொன்னாங்க என்று நம்பி உன்னிடம் போய் என் பிரச்னையைச் சொன்னேன் பாரு. என் புத்தியை...''

''செருப்பால் அடிச்சுக்கப் போறியா? டேய் டேய், ப்ளீஸ், இங்கே வந்து என் கண் முன்னால் அடிச்சுக்கடா. நானும் பார்ப்பேன் இல்லையா?''

''எவன்டா இளிச்சவாயன் மாட்டுவான். அவனை செருப்பால் அடிச்சு வேடிக்கைப் பார்க்கலாம் என்று நினைத்தாயா? அதுக்கு வேறே ஆளைப் பாரு. நான் என் நண்பனை மாற்றுவேனே தவிர செருப்பை மாற்ற மாட்டேன். நீ போனை வை. எனக்கு என் பியான்சியை எப்படிப் பார்க்கணும் என்று ப்ளான் பண்ணிக்கத் தெரியும்'' என்று முறுக்கிக் கொண்டான்.

''சரி சரி, அடங்கு! அம்மாவிடம் சொல்லி காஞ்சிபுரத்திற்கு புடவை எடுக்க அவங்க எல்லோரையும் வரச் சொல்றேன். அங்கே போய் நாம் பார்க்கலாம். ஒரு நாள் தான் என்னால முடியும். மிச்ச நாள் போனில் பேசிக்கோ'' என்று விவேக் சமாதானமாகச் சொல்ல, ''அது பிரெண்ட்ஷிப்புக்கு அழகு'' என்று சிரித்தான் அபிஷேக்.

சொன்னபடியே அடுத்த இரண்டே நாட்களில் தியாகராஜன் வாஸந்தி மற்றும் சுஜாதாவோடு வரவைத்தும் விட்டான். தன்னுடைய பெற்றோர்கள் மற்றும் விவேக், மாதவி இருவரோடும் காஞ்சிபுரம் பயணித்தான் அபிஷேக். கல்யாணக் கனவுகளில் மிதந்ததால், தியாகராஜன் சுஜாதா இருவருக்கும் இடையே நிலவிய இடைவெளி அபிஷேக்கின் கண்ணில் படவில்லை என்றாலும் விவேக்கின் கண்ணில் பட்டது.

மாதவியும் கல்யாணியும் போட்டி போட்டுக் கொண்டு புடவைகளைத் தேர்வு செய்து, அதை வாஸந்தியின் மேல் வைத்து பார்த்து இந்த பார்டர் நல்லா இருக்கா அந்த வண்ணம் பொருத்தமாக இருக்கா? என்று பட்டி மன்றம் நடத்திக் கொண்டு இருந்தனர்.

''அம்மா, கல்யாணத்துக்கு ஒண்ணும், நிச்சயத்துக்கு ஒண்ணும், ரெண்டே புடவை தானே அபிஷேக் எடுக்கச் சொன்னான். நீங்க எடுத்து வச்சு இருக்கும் புடவை ஐம்பதைத் தாண்டும் போல இருக்கே? இதுல எப்படி செலக்ட் பண்ணுவீங்க? இல்லை எல்லாவற்றையும் எடுத்து அபிஷேக்கின் சேமிப்பை எல்லாம் கரைத்து விடுவது என்ற பிளான் பெரிசா ரெடி பண்றீங்களா?'' என்று விவேக் மாதவியை கேலி செய்தான்.



''புடவை கல்யாணப் பெண்ணுக்கு. அவளுக்குப் பிடிச்சு இருக்கா? அவள் கட்டினால் அவளை பார்க்க ரசிக்கப் போகும் உன் பையனுக்குப் பிடிச்சு இருக்கா என்று பார். உனக்குப் பிடிச்ச மெரூன் கலரில் எடுத்து அடுக்காதே. அவளுக்கு அந்தக் கலர் பிடிக்குமோ பிடிக்காதோ?'' என்று சுந்தரேசன் கல்யாணியைக் கேலி செய்தார்.

வாஸந்தியும் அபிஷேக்கும், கண்களால் காதல் கவிதை முழு நேரமும் எழுதினாலும், கிடைத்த இடைவெளியில் கைகளாலும் காதல் கவிதை எழுத முயன்றதில் இந்த பேச்சு வார்த்தைகள் எதுவும் அவர்கள் காதில் விழவே இல்லை.

தியாகராஜனுக்கும் சுஜாதாவிற்கும் இடையே இருந்த இடைவெளியை கடைக்கு வந்த சில நிமிடங்களிலேயே உணர்ந்த விவேக், அதன் பிறகு, நண்பனையும் அம்மாவையும் கேலி செய்வதை நிறுத்திவிட்டு அத்தை, மாமாவின் மேல் முழு கவனத்தையும் திருப்பினான்.

வாஸந்தி புடவை தேர்ந்தெடுத்த பிறகு அம்மாவிடம் அபிப்ராயம் கேட்டபோது, 'அபிஷேக்கிற்கு பிடிச்சு இருக்கா பாரு. உனக்குப் பிடிச்சா போதும்மா, நான் என்ன சொல்றதுக்கு இருக்கு'' என்று நழுவினார்.

''மறுவீடு என்று வைத்துக் கொள்ளலாம்? அபிஷேக்கும் வசுவும் ஒரு வாரம் வெளியூர் எங்கேயாவது தேனிலவு போய் வந்த பின்பு வைத்துக் கொள்ளலாமா? கல்யாணம் முடிந்து ரிசப்ஷனுக்கு முன்னாடி வைத்துக் கொள்ளலாமா?'' என்ற கல்யாணி - சுந்தரேசன் தம்பதியினரின் கேள்விகளுக்கு நேரடியாக பதில் சொல்லாமலேயே சமாளித்தார் சுஜாதா.

''எத்தனை நாளாச்சு அண்ணி, உங்களைப் பார்த்து, எங்க மாமியார் ஏதோ வாய்க்கு வந்தபடி பேசிப் போக, அதை மனசுல வச்சுட்டு, இத்தனை வருஷம் எங்க அண் ணனை தனியா விட்டுட்டீங்களே அண்ணி. இனி மேலாவது நீங்க சந்தோஷமா இருக்கணும்'' என்று மன்னிப்பு கேட்டு மனப்பூர்வமாக வாழ்த்திய மாதவிக்கு, 'அதெல்லாம் பிரம்மன் படைக்கும் போது தலையில் எழுதிய எழுத்து அண்ணி, அதை எல்லாம் மாற்ற முடியாது. யாரையும் குற்றம் சொல்லி பிரயோஜனம் இல்லை'' என்று விட்டேற்றியாக பதில் சொன்னதும் விவேக்கின் காதுகளில் விழுந்து அவன் மனம் யோசனை யில் மூழ்கியது.

யோசனையிலேயே பாட்டிக்கு போன் பண்ணி, பேச்சு கொடுத்தான். ''வீட்டில் இருக்கும் வேலைகளைச் செய் கிறாளே தவிர, தியாகராஜனுடன் ஒன்றாக வெளியே போவதில்லை. எந்த வெளி வேலை என்றாலும் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக அனுப்ப வேண்டி இருக்கிறது. இன்னிக்கு காஞ்சிபுரம் கிளம்பக் கூட அப்படித்தான்'' என்று சலித்த பவானி அம்மாவின் வார்த்தைகளும் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

''என்ன மாமா, வாஸந்தி கல்யாணம் முடிந்த பிறகு நீங்க ஒரு வெகேஷன் போயிட்டு வர வேண்டியது தானே? ஜிம்மையும் விலை பேசியாச்சு போல. சென் னையில் செட்டில் ஆவதற்கு முன்னாடி ஒரு ப்ரேக் எடுத்துக்கோங்க. நீங்களும் அத்தையும் தனியா செலப் ரேட் பண்ணிட்டு வரலாமே?'' என்று கேலியாகச் சொல் லிப் பார்த்தான்.



''சென்னைக்கு வர முடியுமா தெரியலை விவேக். அம்மா திருவண்ணாமலையை விட்டு நகருவாங்களா? பிறந்த இடம், வாழ்ந்த இடம், என்று ஏதாவது சொல் லிட்டே இருப்பாங்க...'' என்று இழுத்தார்.

''அதுக்கும் நீங்க வெகேஷன் போவதற்கும் என்ன சம்பந்தம்? சென்னைக்கு மாறுவதற்கு தானே உங்க பதில் பொருந்தும்...'' விடாமல் துருவினான்.

''அதுக்கு எல்லாம் ஒரு அமைப்பு வேண்டும்பா. எனக்கு அது இல்லை...'' என்று சலித்த குரலில் சொன்ன தியாகராஜனின் உணர்வுகளை அவனால் ஊகிக்க முடிந் தாலும் அதன் காரணத்தை அவனால் ஊகிக்க முடிய வில்லை.

* * *

அபிஷேக் - வாஸந்தியின் மனம் போலத் திருமணம், பெற்றவர்களின் ஆசீர்வாதத்துடன், சுற்றமும் நட்பும் சூழ இருந்து வாழ்த்த, கேலி கிண்டல் சிரிப்புக்கிடையே கோலாகலமாக முடிந்து பரிசளிக்கும் நிகழ்வுகள் துவங்க, அங்கே பேச்சு களை கட்டியது.

மகளுக்கு அன்புப் பரிசாக புத்தகங்களை மட்டும் கொடுக்கும் சுஜாதாவின் திறமை, அதில் 'வாழ்க வளமுடன்' என்ற தலைப்புடன் இருந்த புத்தகங்களை மகளுக்கேத் தெரியாமல் திருடிக் கொண்ட தியாகராஜ னின் சாமர்த்தியம், அதை கண்டு பிடிக்கத் தெரியாத வாஸந்தியின் ஏமாளித்தனம், எல்லாம் கல்யாண வீட்டில் கிஷோர் மற்றும் விவேக்கால் அலசி ஆராயப் பட்டது.

வாஸந்தியின் அண்ணன் யார்? அவனுடைய குழந்தை யார்? மொபைலை சுத்தமாக வைத்து இருப்பது எப்படி? வண்டி சாவியை தொலைக்காமல் பத்திரமாக வைக்கும் வித்தியாசமான இடம் எது? போன்ற அரிய பெரிய கண்டு பிடிப்புகளுக்கான காரண கர்த்தாவாக அந்த மணவிழாவில், வாஸந்தியை அபிஷேக் அறிமுகம் செய்ய, அந்த கண்டுபிடிப்பைப் பாராட்டும் நோக்கத் துடன், வாஸந்திக்கு சாதகமாக விவேக்கும் கல்யாணி அம்மாவும் உடனடியாக, களம் இறங்கினர்.

மொபைலை சுத்தப்படுத்தும் கண்டு பிடிப்பிற்காக 'ஒரு கல் டாக்டர் வைத்த தங்க செயின்' ஒன்று பரிசாக விவேக்காலும், வண்டி சாவியைப் பத்திரமாக வைக்கும் இடம் கண்டு பிடித்ததற்காக வைர வளையல் ஒன்று கல்யாணி அம்மாவாலும், வாஸந்தியின் கண்டு பிடிப் பைப் பாராட்டி என்று பலத்த சந்தோஷக் கூச்சல், மற்றும் கை தட்டல் சத்தத்திற்கு இடையே வழங்கப்பட்டது.

''வஸு! நல்ல வருமானம் தான் போ உனக்கு. இதே மாதிரி உன்னுடைய செயல்கள் மேலும் மேலும் தொட ரட்டும்'' என்று கேலியாக அபிஷேக் வாழ்த்த, கூச்சத் தினால் சிரித்தாலும், விவேக் - மற்றும் கல்யாணி அம்மாவின் அன்பில் நெகிழ்வும் வாஸந்தி மறக்க வில்லை.

தன்னுடைய பெயரில் இருக்கும் திருவண்ணாமலை வீட்டை பேத்திக்கு, தன் காலத்திற்குப் பிறகு எழுதி வைத்த பவானி அம்மாவின் அன்பை எதிர்பார்த்து இராத வாஸந்தியே திக்கு முக்காடிப் போனாள்.

''இந்த வீடு எனக்கு மட்டும் எதுக்கு பாட்டி? அப் பாக்கு எழுதினால் பரவாயில்லை. பேரப் பிள்ளை களுக்கு என்று நீங்க முடிவெடுக்கும் பட்சத்தில், விவேக்கிற்கு பங்கு வேண்டாமா? இப்படி தனியாக என் பேரில் எழுதியது சரியா?'' என்று திகைப்புடன் கேட் டாள்.

''இது எனக்குத் தெரியாதா? தியாகுவிடம் அப்படித் தான் நான் எழுதச் சொன்னேன். தன்னுடைய பாட்டியின் வார்த்தைகளால் இந்தக் குடும்பம் இழந்ததை என்னால் திருப்பித் தர முடியாது. ஆனால் அதற்கு ஈடு கட்டும் விதமாக நான் கூடுதலாக வாஸந்திக்கு எதையாவது கட்டாயம் செய்ய வேண்டும். அட்லீஸ்ட் இந்த சொத் தில் தனக்கு பங்கு வேண்டாம்'' என்று தீர்மானமாகச் சொல்லி இப்படி மாற்றி எழுதச் சொன்னது விவேக் தான். உன்னுடைய விளக்கத்தை அவனிடம் கேட்டுக் கொள்'' என்று பவானி அம்மா தீர்மானமாக முடிக்க பிரமிப்புடன் அனைவரும் விவேக்கைப் பார்த்தனர்.

இரண்டே வாரங்கள் இடைவெளியில் திருமண நாள் நிச்சயிக்கப்பட்டு இருந்ததால், பத்திரிகை வைக்கும் வேலை, கடைகளுக்குச் செல்லும் வேலை, கல்யாண மண்டபத்திலும், அங்கே இங்கே ஓடித் திரிந்து விருந்தினர்களை கவனிப்பது, என்று நெட்டி முறித்த, வேலைகளுக்கிடையேயும், தியாகராஜன், சுஜாதா இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காத நேரத்தில் அடுத் தவரை பார்த்து ரசித்து, மனதில் நிரப்பிக் கொள்வதில் பொழுதைக் கழித்தனர்.

''இவள் ஏன் தன்னுடன் நின்று பேச மாட்டேன் என்கிறாள்? கேள்விகள் கேட்டாலும் அளந்து பதில் சொல்கிறாள். ஆனால் தனக்குப் பிடித்தவைகளை

மறக்காமல் நினைவில் வைத்து சரியான நேரத்தில் செய்கிறாள். என்ன குழப்பம்?'' என்று நிற்க வைத்து விசாரித்தும் விட்டார் தியாகராஜன்.

''கல்யாணம் நல்ல படியா முடியட்டுங்க. அம்மா அப்புறமா பேசிக்கலாம். இப்ப எதையும் பேசிக் குழப்பி மனக்கஷ்டப் படக்கூடாது என்று அம்மா ஏற்கனவே சொல்லி இருக்காங்க. போக வாஸந்தி கிளம்பி விடு வாளே? இத்தனை நாளா அவளோட நான் இருக்கவே இல்லையே? ரெண்டு வாரம் அவளுடன் இருக்கிறேன்'' என்று இரவு படுக்கையும் அங்கேதான். இரண்டு வாரங்கள் தானே? எத்தனையோ வருஷம் பொறுத் தோம். இதைத் தாங்க மாட்டோமா என்று அமைதியாக தியாகராஜன் காத்திருக்க சுஜாதாவின் மனதில் இருந் ததை அவர் அறியவில்லை.



# 26

அபிஷேக் - வாஸந்தி இருவரின் திருமணமும் உற்றாரும் உறவினரும் வாழ்த்த, கோலாகலமாக திருவண்ணாமலையில் முடிந்த பின், அருணாச்ச லேஸ்வரரை மணமக்கள் இருவரும் வழிபட்ட பின்பு, சில மணி நேரத்திலேயே சென்னைக்குச் சென்று விட்டனர்.



சென்னையில் மறுநாள் நடந்த ரிசப்ஷன் முடித்து, கோவாவிற்கு மனைவியுடன் அபிஷேக் தேனிலவிற்குக் கிளம்ப, ''அதென்ன திடீர் என்று தேனிலவிற்கு கோவா செல்கிறாய்? ஒரு ஆறு மாசம் கழித்துப் போனால் எல்லா இடமும் நல்லா சுத்திப் பார்க்கலாம் இல்லையா? இப்ப என்ன அவசரம்?'' என்று ரயில் நிலையத்தில் கேலிச் சிரிப்போடு கேட்ட விவேக்கிற்கு ஒரு ரகசியப் புன்னகையை பதிலாகத் தந்தான் அபிஷேக்.

வாஸந்தியின் திருமணத்திற்கு வந்து ஒரு நெக்லசைப் பரிசாகத் தந்து விட்டுச் சென்ற கிஷோர் சென்னையில் நடைபெற்ற ரிசப்ஷனுக்கு வரவே இல்லை. தன்னுடைய உறவினர் என்று இருந்த ஒரே ஆளும் சென்னைக்கு வரவில்லை என்பதில் சுஜாதாவிற்கு மனம் வாடியது எங்கே போய் விட்டான்? இதை விட வேறென்ன முக்கியமான வேலை வந்து இருக்கும்?

மனம் கவர்ந்தவரை, இரு வீட்டார் சம்மதத்துடனும் ஆசிகளுடனும் கைப்பிடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி யில் முகம் பூவாய் மலர்ந்து விகசிக்க, குதூகலத்துடன், ஒருவர் கையை மற்றவர் விடாமல் பற்றியபடி, நேரம் கிடைத்த போது எல்லாம் உரசியபடி, ரகசியமாகப் பேசிச் சிரித்தபடி, சுற்றிலும் இருப்பவர்களை மறந்து தங்களுக் குள் மூழ்கி இருந்த அபிஷேக் - வாஸந்தியை கண்ணாரக் கண்டு களித்த சந்தோஷத்துடன், பவானிம்மா, தியாக ராஜன், மற்றும் சுஜாதா மூவரும், சென்னையில் இருந்து காரில் திருவண்ணாமலை திரும்பினர்.

நள்ளிரவில் திருவண்ணாமலை வந்து சேர்ந்த மூவ ரும், கடந்த நான்கு நாட்களாக நெட்டி முறித்த வேலை கள், கல்யாண அலைச்சல், பரபரப்பு, பிரயாணம் என்று

உடலும் மனமும் களைத்து இருக்க, தனித் தனி அறையில் முடங்கிக் கொண்டனர்.

சுஜாதா இன்றாவது தன்னுடைய அறைக்கு வருவார். மகள் இல்லாத ஏக்கத்தையாவது தன்னுடன் பகிர்ந்து கொள்வார் என்று ஆவலுடன் எதிர்பார்த்த தியாகராஜன் ஏமாந்தார். இத்தனை நாள் வாஸந்தியுடன் இருப்பதாக அவர் சொன்னது முற்றிலுமாக உண்மை இல்லை என்பது நன்றாகவே புரிந்தது. தன்னைத் தவிர்க்க வேண் டும் என்ற எண்ணம் இல்லாவிட்டால், தங்களுக்குத் தெரியாமல், அவர் யாரிடமும் போன் பேச வேண்டிய அவசியமில்லை. ஆரோவில்லில் இருந்து திருமணத் திற்கு வந்தவர்கள், மணமக்களிடம் அல்லாமல் இவரிடம் பரிசு கவர் கொடுக்க வேண்டியதில்லை. அது பரிசாக இருக்கும் பட்சத்தில், அதை வாஸந்திக்கே கொடுத்து அனுப்பி இருக்கலாம். அல்லது மற்ற பரிசு களுடன் சேர்த்து வைக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் அந்தக் கவர் இரண்டிலும் இல்லை.

பணமாக இருந்தால் கூட தனக்குத் தெரியாமல், தன் னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அதை பத் திரப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? தான் அவ ளுடைய மனநிலைக்கும், மன அமைதிக்கும் முக்கியத் துவம் கொடுத்து இத்தனை நாளாகத் தான் பொறுமை யாக இருந்ததை, தனக்கு அவள் மேல் எந்த உரிமையும் இல்லை, இருக்கக் கூடாது என்று நினைத்து விட்டாளா? எனக்கு இல்லாத உரிமை இவள் மேல் வேறு யாருக்கு இருக்க முடியும்?

கிஷோர் தன்னை மதித்து, தன்னுடன் இயல்பாகப் பேசி, குடும்பத்தினருடன் திருமணம் முடித்துக் கொடுத்துக் கிளம்ப, பெற்ற பெண்ணின் திருமண சடங்குகளுக்கு ஒரு பொம்மை போல கலந்து கொண்ட சுஜாதாவின் மேல் கோபம் வந்தது. அந்த இரவு முழுவதுமே, பழைய போட்டோக்கள், அவருக்காக தான் சேமித்து வைத்த புத்தகங்கள் என்னும் பொக்கிஷங்கள், தானே எழுதிய கவிதைகள், என்று தனி ஒரு குடும் பத்தை அவர் இல்லாமலே அவருடன் தான் நடத்திக் கொண்டு இருக்க, இவள் இப்படி விட்டேற்றியாக இருக் கிறாளே என்ற எண்ணம் தோன்றி, அவரின் பொறுமை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அதன் எல்லை கோட்டை தொடலாமா வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டு இருந்தது.

படுக்கப் போகும் முன்பே மறுநாள் அதிகாலையில் எழுந்து கோவிலுக்குச் செல்வதாக பவானி அம்மாவிடம் சொல்லி விட்டுப் படுத்த சுஜாதாவிற்கு தூக்கமே வரவில்லை. தான் செய்யப் போகும் செயல் சரிதானா? இந்த வீட்டிற்கும் தனக்கும் ஏதாவது ஒட்டுதல் உரிமை என்று ஏதாவது இருக்கா இல்லையா என்று சுய அலசல் நடத்திக் கொண்டு இருந்தார் சுஜாதா.

கடந்த இருபத்தி ஒரு ஆண்டுகளில் தான் சந்தோஷப் படுவது மாதிரியான நிகழ்வுகளை விரல் விட்டு எண்ணி விடலாம். முதல் முறை தியாகராஜனை பார்த்த நிமிடம், தன்னுடைய பெற்றோர் தான் மேலே படிக்க ஆசைப் பட்டதற்கு மறுப்பு சொல்லி கடினமாக ஏதோ சொல்லி விட அந்த நேரத்தில் தனக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லிய அவரின் மேல் அழுத்தமான அபிப்ராயம் விழுந்தது தன் இள வயதின் கோளாறா?

தளர்ந்து இருந்த நேரத்தில், தன்னை இனிமையாகப் பேசி மயக்கி விட்டார் என்று அவரின் மேல் குற்றம் சொல்ல முடியாது. அப்படி ஒன்றும் அவர் நான் உன்னை படிக்க வைக்கிறேன் என்னுடன் வா என்று சொல்ல வில்லை. படிப்பிற்கு வயதே இல்லை. இன்று முடியா விட்டால், எப்போதும் முடியாது என்று நினைக்காதே. தீவிரமான எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், அந்த எண்ணத்தின் சக்தி நம் நோக்கத்தை நிறைவேற்றி விடும் என்று ஊக்கமூட்டும் மொழிகளை தான் பேசினார்.

அவருக்கு தன் மேல் இருந்தது காதல் இல்லையோ? தமிழ்நாட்டில் அதிகம் பார்த்து இராத, வட இந்தியப் பெண்ணின் கலகல சுபாவமும், வெண்ணிறமும் கலந்து வந்த ஈர்ப்போ? கிராமப்புறத்தில் வயசுப் பெண்களுடன் தொட்டுப் பேசிப் பழகும் பழக்கம் இல்லாமல் இருந்த தால், தான் இயல்பாக அவருடன் சிரித்துப் பேசியதும், வந்த ஈர்ப்பை காதல் என்று அவர் புரிந்து கொண் டாரோ என்ற சந்தேகம் அப்போது வராமல் இப்போது வந்தது.

அது காதலாக இருந்து இருந்தால், கிஷோருடன் தன்னை இணைத்துப் பார்க்க தோன்றி இருக்காது. இத்தனை ஆண்டுகள் கழித்துப் பார்த்த பின்பும், இப்படி விலக்கி விட்டேற்றியாய் இருந்து இருக்க முடியாது. அவரின் மன உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து தியாகராஜன் ஒதுங்கி இருந்ததே சுஜாதாவின் மனதில் வேற்றுமை உணர்வை ஏற்படுத்தி, இந்த வீட்டில் தான் அன்னியம் என்று உணர வைத்தது. அதனால் மறுநாள்



காலை நான்கு மணி அளவில் மீண்டும் இரண்டாவது முறையாக அந்த வீட்டில் இருந்து கிளம்ப வைத்தது.

கோவிலுக்குப் போவதாக முன் தின இரவில் பவானி அம்மாவிடம் சுஜாதா சொல்லி இருந்ததைக் கேட்டு இருந்த தியாகராஜன், இரவு முழுவதும் தூங்காமலே யோசனையில் மூழ்கி இருந்தார். வாஸந்தியின் அறை யில் தங்கி இருந்த சுஜாதாவின் காலடி ஓசை கேட்டதுமே விழித்து அவரின் அசைவுகளை கண்காணித்தார். மிக மெல்லிய அசைவுகளும், விளக்கு போடாமலே வேலை நடந்த விதமும் அவருக்கு சந்தேகத்தை கிளப்ப, அவசரமாக வெளியே வந்து வாசலில் காத்திருந்தார். கைப்பையுடன் வெளியே வந்த சுஜாதா, வாசலில் அவர் நிற்பார் என்று எதிர்பார்க்காததால் திகைத்துப் போனார்.

''என்ன சுஜா நான் இங்கே இருப்பேன் என்று எதிர் பார்க்கவில்லையோ? அப்படி ஷாக் ஆகி விட்டாய்?'' என்று நிதானமாக விசாரித்தார்.

''இ..ல்..லை. அப்படி இல்லை நான் கோவிலுக்குப் போய் வருகிறேன்'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு வாசல் படியில் இறங்க முயன்றவரின் கையைப் பற்றி நிறுத்தினார் தியாகராஜன்.

''திரும்பி வருவாய் தானே?'' கூர்மையாக வந்தது அவரின் கேள்வி.

''வராமல் எங்கே போய் விட முடியும்?'' எங்கோ பார்த்த படி இயலாமையில் வந்த வருத்தத்துடன் சொன்னார் சுஜாதா.

''சந்தோஷம். ஆனால் கோவிலுக்கு இவ்வளவு பெரிய கைப்பை எதுக்கு சுஜாதா? பர்ஸ் போதாதா?'' என்று

கேட்டபடி அவரின் பையை வாங்க முயன்றார் தியாக ராஜன்.

''வேண்டாம், வேண்டாம்...'' என்று மறுக்க முயல, கண்ணில் கேள்வியுடன் சற்றே தன் பலத்தைப் பயன் படுத்தி அந்த பையைப் பிடுங்கினார். ''அதில் உள் ளதை எடுக்க வேண்டாம்...'' என்ற சுஜாதாவின் பதட்டம் அங்கே விழலுக்கு இரைத்த நீராக வீணாகிப் போனது.

அவர் ஏற்கனவே பையைப் பிரித்து உள்ளே இருந்த பாஸ்போர்ட், விசா சம்பந்தமான பேப்பர்களையும், கற்றையாக இருந்த ரூபாய் கட்டையும் எடுத்து அவரிடம் காட்டி, ''என்ன இது?'' என்று கேட்டார் தியாகராஜன். தன்னுடைய சந்தேகம் சரியாகப் போனதில் சந்தோஷம் கிடைக்கவில்லை. மாறாக மீண்டும் ஒரு முறை தன்னை விட்டு பிரிய தன் மனைவி துணிந்து விட்டாள் என்ற ஆதங்கம் நெஞ்சை அறுத்தது.

அவருக்கு என்ன பதில் சொல்வது என்று சுஜாதா விற்கு தெரியவில்லை. தன்னுடைய போனில் தான் இந்த வேலை தொடர்பாகப் பேசிய மூன்று அழைப்பு களை அழித்து விட்டோமே? யாரும் அருகில் இல்லை என்பதை ஒன்றுக்கு பலமுறை உறுதி செய்து விட்டு தானே போனில் பேசியது? இவருக்கு எப்படித் தெரிந்தது? போன பின்பு விசாரித்து கண்டு பிடிக்க முடியும் என்பது தெரியும். இப்படி வீட்டு வாசலில் மாட்டிக் கொள்வோம் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

''அது ஒன்றும் உங்கள் பணமில்லை. நான் இந்த வீட்டில் இருந்து உங்க சொத்து எதையும் எடுத்து...



அம்மா...'' என்ற அலறலுடன் கன்னத்தில் கை வைத்த படி அதிர்ந்து பார்த்தார் சுஜாதா. தியாகராஜன் தன்னை அடித்தாரா? அதற்கு என்ன அவசியம் வந்தது? தான் என்ன தப்பு பண்ணினோம்? ஆண் என்ற ஆதிக்கமா? தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற தைரியமா? அவரின் அதீதமான உடல் வலிமையை தன்னிடம் காட்டு கிறாரா? அவர் கோபத்துடன் முறைத்தபடி நிமிர்ந்த போது, ''உள்ளே போ...'' என்று அமைதியாகச் சொன் னார் தியாகராஜன்.

''தேவை இல்லை. நான் கிளம்ப வேண்டும். அபி ஷேக் அப்பா சொன்னதற்காக, உங்க பொண்ணு கல் யாணம் நல்லபடியா நடக்கணும் என்பதற்காக என்னை வேண்டா வெறுப்பா கூட்டி வந்தீங்க. அதுதான் முடிஞ்சு போச்சே? இனிமேல் யாருக்காக எதற்காக, இங்கே இருக்கணும்? என்னைப் பிடிக்காதவங்க வீட்டில் தேவை இல்லாமல் என்னால் இருக்க முடியாது...''

''ஷட் அப்...'' என்ற தியாகராஜனின் அதட்டல் சத்தம் கேட்டு தூங்கிக் கொண்டு இருந்த பவானி அம்மாவே எழுந்து வந்து விட்ட பின்பு வாசலில் நின்று இருந்த சுஜாதா அரண்டதில் என்ன ஆச்சரியம்? திகைத்துப் போய் நின்றவரை, ''உள்ளே போ-ன்னு சொன்னேன்'' என்று மீண்டும் அதட்டலாகவே சொன்னார் தியாக ராஜன்.

''என்னடா இந்த நேரத்துல இவ்வளவு சத்தம்? சுஜா என்ன பிரச்னை? எதுக்கு இவ்வளவு கோபம் அவ ளுக்கு?'' என்று மருமகளிடம் விசாரித்த பவானிக்கு பிரச்னையே புரியவில்லை.

''உங்க மருமகளை நமக்குப் பிடிக்கலையாம். அவள் நமக்கு வேண்டாதவளாம். அதனால் பிரான்சில் இருக்கும் ஒரு இளம் தம்பதியினரின் குழந்தைக்கு பேபி சிட்டிங் செய்ய கிளம்பியாச்சு. நாளைக்குக் காலை சென்னையில் விமானம். அதனால் இன்றே மேடம் கிளம்புறாங்க. வரீங்களா? சென்னையில் போய் வழி அனுப்பி வைத்து விட்டு வருவோமா?'' என்று ஆத்திரத் தோடு தியாகராஜன் சொல்லச் சொல்ல பவானி அம்மாவின் கண்கள் சுஜாதாவைக் கூறு போட்டது.

''எங்க வீட்டுக்கு என் பையனை நம்பி பிறந்த வீடு சொந்தங்களைத் தூக்கி எறிந்து விட்டு வந்த பொண்ணு சந்தோஷமா இருக்கணும் என்று நானும் என் பையனும் மனசார நினைச்சதுக்கு ரொம்ப நல்ல வெகுமதி கொடுத்து விட்டாய் சுஜாதா. உனக்கு நாங்க என்ன குறை வச்சோம் என்று இப்படி ஓடுவதே குறியாக இருக்கிறாய்?''

''நீங்க எனக்குக் குறை வச்சீங்க என்று நான் சொல்லவே இல்லை. இந்த வீட்டை நீங்க இதுவரை நான் இல்லாமலே நல்லா பார்த்து வந்து இருக்கீங்க. இனியும் பார்த்துப்பீங்க. இந்த வீட்டில் நான் அதிகப்படி என்று தோன்றியது. தேவை இல்லாமல், உங்களுக்கு இடைஞ்சலாக...''

''சுஜாதா! என்ன பேச்சு இது? இது உன் வீடு. இங்கே நான் இருப்பதுதான் உனக்குப் பிரச்னை என்றால், இன்றே நான் கிளம்பி விடுகிறேன். பொண்ணு வீட்டுல கொஞ்ச நாள், பேத்தி வீட்டுல கொஞ்ச நாள், இங்கே கொஞ்ச நாள், தலயாத்திரை கொஞ்ச நாள் என்று



கிளம்பி விடுவேன். எனக்காக நீ யோசிக்க வேண்டாம். உன் இஷ்டம் போல இங்கே இருக்கலாம். யாருக்கும் தெரியாமல் அப்படி வெளிநாட்டுக்குப் போய் வேலை செஞ்சு பொழைக்கணும் என்ற விதி உனக்கு ஏன் வந்தது?''

''என் பிழைப்புக்காக என்று இல்லை. உடன் வேலை செய்பவருக்கு ஒரு உதவியாக...'' என்று சுஜாதா விளக்கம் சொல்ல முயன்ற போதே பவானி அம்மா கோபத்தோடு இடையிட்டார்.

''இதை என்னை நம்பச் சொல்கிறாயா? அப்படி நீ உதவி செய்வதாக இருந்தால், நீ தியாகுவை சந்திப்பதற்கு முன்பே அவர்களிடம் வாக்கு கொடுத்து இருந்தால், அதை கட்டாயம் காப்பாற்ற வேண்டும் என்று இப்போது அவனிடம் சொல்லி அனுமதி பெற்று சந்தோஷமாகவே கிளம்பலாமே? யாருக்கும் தெரியாமல், அதிகாலையில் கிளம்ப வேண்டிய அவசியம் என்ன?''

சுஜாதா அமைதி காக்க, ''என்னம்மா நீங்க விட்டால் நீங்களே அவளை வழி அனுப்பி வைப்பீங்க போல. அதெல்லாம் முடியாது. இவள் எங்கும் என் அனுமதி இல்லாமல் செல்ல முடியாது. போக விடமாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொன்னார் தியாகராஜன்.

''கேட்டியா? நீ இல்லாமல் இருக்க முடியாது. எனக்கு நீ வேண்டும் என்ற ஏக்கம்தான் இப்படி கண்டிப்பாக வெளிவருகிறது. ரெண்டு பேரும் மனசுல அன்பை வச்சுக்கிட்டு ஏன் இப்படி கண்ணாமூச்சி ஆடுறீங்க? மனிதர்களில் குற்றம் குறை இல்லாமல் நூறு சதவிகிதம் நல்லவராக யாருமே இருக்க முடியாது. கொஞ்சம்

ஏறத்தாழ இருந்தாலும் அனுசரித்துப் போவதுதான் நல்ல பொண்ணுக்கு அழகு...''

''நிச்சயம் அனுசரிக்கலாம். அது எனக்கும் புரியாமல் இல்லை. ஆனால் ஒருவருக்கு அடுத்தவர் ரொம்ப அத்தியாவசியம் என்ற பட்சத்தில் அதை செய்யலாம். அ..னா..வ..சி..ய..ம் என்றபோது... அ..வ..ர் சந்தோஷமாக இருக்கட்டும் என்று தான்...'' குரல் விரக்தியில், தான் தன் கணவனுக்கு அவசியம் இல்லை என்ற வருத்தத்தில் திக்கித் திணறியது.

''பார்த்தீங்களா, இந்த மாதிரி உளறலை எப்படி...''

''தியாகு, கொஞ்ச நேரம் சும்மா இரு. சுஜாதா உன் எண்ணம் தப்பு. வாய்க்கு வந்தபடி எல்லாம் பேசக் கூடாது. அன்பை அலங்காரமாக அழகழகான வார்த்தைகளில் அவனுக்கு வெளிப்படுத்த தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவனுக்கு நீ வேண்டும். நீ அனாவசியம் என்று அவன் நினைத்து இருந்தால், உன்னைப் பிரிந்து வாழ்ந்த இத்தனை ஆண்டுகளில் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள அவனுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?''

''நானா வேண்டாம் என்றேன்...'' என்று சுஜாதா ஆரம்பிக்கும்போதே, ''உன் அபிப்ராயத்தை யாரும் இங்கே கேட்கவில்லை. கேட்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை'' என்ற தியாகராஜனின் கோபமான அதட்டல் இடையிட்டது.

''தியாகு நான் உன்னை பேசாமல் இருக்கச் சொன்னேன். ரெண்டே நிமிஷம் பொறுங்க. நான் முடித்து விட்டுக் கிளம்பிடறேன். அப்புறமா நீங்க ரெண்டு பேரும் உங்க மனசுக்குத் தோன்றியதை எல்லாம் பேசித் தீர்த்துக்கோங்க'' என்று இருவரும் பொதுவாக ஒரு அதட்டல் போட்டு விட்டு தொடர்ந்தார்.



''கல்யாணத்தை வச்சுக்கிட்டு ரெண்டு பேரும் அதையாவது பேசி சண்டை போட்டு, வருத்தமா நின்னா நல்லா இருக்காதே என்று தான் கல்யாணம் முடிஞ்ச பிறகு பஞ்சாயத்தை வச்சுக்கோங்க என்று சொன்னேன். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி உங்க மனசுல இருப்பதை இப்பவாவது வெளிப்படையா பேசி தீர்த்துப்பீங்க என்று பார்த்தால் பொழுது விடிந்து விடியாமல் பையோடு நிற்கிறாயே? நீ நேற்று கோவிலுக்குப் போறேன் என்று சொன்னபோது இருவரும் போறீங்க என்று நினைத்தேனே தவிர இப்படி ஒரு விஷயத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை...'' என்று ஒரு பெருமூச்சு விட்டு நிறுத்தினார்.

''இப்ப நான் கோவிலுக்குக் கிளம்பறேன். மாலை ஆறு மணிக்குதான் வருவேன். அதுக்குள்ளே நீங்க ரெண்டு பேரும் பேசி ஒரு முடிவு எடுங்க. நாளைக்குக் காலை தானே விமானம். நீ போறது என்று முடிவாகி விட்டால், நானே சென்னைக்கு வந்து உன்னை வழி அனுப்பி வைக்கிறேன். போதுமா? என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். கிரிவலம் வந்து ஈசான லிங்கத்தின் அருகே தியானத்தில் இருப்பேன். கிளம்பறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார் பவானி.

பவானி அம்மா தனது கோபம், ஆற்றாமை, ஏமாற்றம், எல்லாவற்றையும் கலந்து வெளிப்படுத்தி விட்டு, இனி நடப்பவை எல்லாம் ஈசனின் செயல் என்ற முடிவில்

அவனிடம் பொறுப்பை ஒப்படைக்கக் கிளம்பிச் சென்ற பிறகு, 'இப்பவாவது சரியா யோசி. அம்மா சொன்னதைக் கேள். முதலில் உள்ளே போ சுஜாதா' என்று சலிப்போடு கொஞ்சம் ஆதங்கமும் சேர வருத்தமாகச் சொன்னார் தியாகராஜன்.

மறுத்துப் பேச வழி இன்றி, உள்ளே சென்று சோபாவில் அமர, பின் தொடர்ந்து வந்து எதிர் சோபாவில் அமர்ந்தவர், ''நீ என்ன நினைத்து இந்த வீட்டை விட்டு இன்னொரு முறை வெளியேற நினைத்தாயோ எனக்குத் தெரியாது. ஆனால் நீ இந்த வீட்டில் ரொம்பவும் தேவைப்படும் ஒரு முக்கியமான மனுஷி. வீட்டுக்கு என்று சொன்னது செங்கல் சிமிண்டால் ஆன கட்டிடம் இல்லை. இந்த வீட்டில் வசிக்கும் என்னையும் அம்மாவையும் சேர்த்து தான் சொல்கிறேன். இந்த அடிப்படை விஷயத்தில் உனக்கு சந்தேகமே வேண்டாம். இதை மனசில் வைத்து உன்னுடைய குறைகளைச் சொல்லு. அதை நிவர்த்தி செய்ய நான் முயற்சி செய்கிறேன்'' என்று முடித்தார்.

சுஜாதா ஒன்றும் பேசாமல் தலை கவிழ்ந்தவாறே அமர்ந்து இருக்க, ''சுஜா, கல்யாணம் ஆன புதிதில், இப்படி வாய் ஓயாமல் பேசுகிறாளே? இவளுக்கு வாயே வலிக்காதா என்று கூட நினைத்து இருக்கிறேன். ஆனால் இப்ப பேச வேண்டிய நேரத்தில் மௌனம் சாதிப்பது சரி இல்லை. சொல்லு என்ன உன் பிரச்னை?'' என்று எப்படியும் அவளைப் பேச வைத்து விட வேண்டும் என்ற உறுதியுடன் மீண்டும் அழுத்திக் கேட்டார்.

''.......''



''சுஜா, என்னை பொறுமை இழக்க வைத்து விடாதே. ஒரு நிமிஷம். இதோ வரேன்...'' என்று எழுந்து தன் அறைக்குச் சென்றவர், கையில் ஒரு நோட்டு புத்தகத்துடன் வந்தார்.

''இதை ஒரு முறை படிச்சு பார். எனக்கு அன்பை அலங்காரமான வார்த்தைகளால் சொல்லத் தெரியாது என்று அம்மா சொன்னாங்களே. அது சரி அல்ல. எனக்கு சொல்லத் தெரியும் என்பதே அவங்களுக்குத் தெரியவில்லை. இதில் நான் உன் மேல் வைத்த காதல் வார்த்தைகளாய் மாறி கொட்டிக் கிடக்கு. படிச்சுப் பாரு, எனக்கு நீ வேண்டியவளா இல்லையா? நீ இந்த வீட்டிற்கு அனாவசியமா? அத்தியாவசியமா என்று அப்புறம் சொல்லு'' என்று நீட்டினார் தியாகராஜன்.

அவரின் தீவிரமான முக பாவனையிலும், அழுத்தமான பேச்சிலும், மனம் இளக, பக்கங்களைப் புரட்டினவரின் விழிகள் விரிந்தது. தமிழில் ஆர்வம் என்று தெரியும்? ஆனால் கவிதை எழுதும் அளவுக்கு ஆர்வமா? பக்கங்களைப் புரட்ட புரட்ட வந்து கொண்டே இருந்தது.

அனைத்துமே நான்கு முதல் ஆறு வரிகளுக்குள் இருந்த 'தன்னோடு இல்லாத காதலியை தேடும் காதலனின்' பிரிவாற்றாமை கவிதைகள். நூற்றுக் கணக்கில் இருந்தது. அந்த இரண்டு குயர் நோட்டுப் பக்கம் முழுவதுமே கவிதைகள். பக்கங்களைப் புரட்ட புரட்ட, மனம் அவரையும் மீறி குதூகலிக்க ஆரம்பித்தது.

**காற்றோடு கலந்து விட்ட பூக்களின் வாசமும்**
**என்னோடு கலந்து விட்ட உன் அன்பின் நேசமும்**
**ஒரு நாளும் மறையாது.**

நீ அருகில் இருக்கும்போது உன் அன்பு தெரியவில்லை
நீ கனவில் வரும்போது காதல் புரியவில்லை
விலகிச் சென்ற பின்பு தவிக்கின்றேன் உன் நேசத்துக்காக
இனியும் என்னை தண்டிக்காதே
இனியவளே என்னோடு சேர்ந்து விடு.

புதைத்தேன்... எரித்தேன்... கரைத்தேன்...
பயன் ஒன்றும் இல்லை.
என்ன செய்வேன் உன் நினைவுகளை?

இதயத்தில் பூவாய் மலர்ந்தவளே
இரண்டற என்னோடு கலந்தவளே
பரிசாய் தந்த கனி என்னோடு இருக்க,
காதலை தந்த நீ எங்கே சென்றாய்?

லேசாக ஆரம்பித்த சந்தோஷம் கொஞ்சம் கொஞ்சம் கூடி, அந்த நோட்டின் கடைசி பக்கத்தைப் பார்த்தபோது கண்கள் இமைக்க மறந்தது.

இறைவனுக்குத் தெரிந்த என் எதிர்காலம்
எனக்கு முன்பே தெரிந்து இருந்தால்
இறந்த காலத்தை நான் வெறுத்திருப்பேன்.
ஆனால் முடியவில்லை...
என் இறந்த காலம் என்ற விளக்கல்லவா
நிகழ்காலத்தில் நான் தடுமாறாமல்
நடக்க உதவி செய்கிறது.



இந்த பொருளில் ஆன கவிதை கடைசி பக்கத்தில் இருந்தது. ஆனால் சுஜாதாவின் வியப்பு கவிதையின் நயத்துக்கு அல்ல. ஏன் என்றால் இதைவிட அருமையான பல கவிதைகளை அதற்கு முந்தைய பக்கங்களில் பார்த்து இருந்தாரே? இந்த வியப்பிற்குக் காரணம் அந்த கவிதை குஜராத்தி மொழியில் இருந்தது.

# 27



திருவண்ணாமலையில் இருந்த தான் வாழ வந்த வீட்டை விட்டு மட்டும் இல்லாமல் இந்திய நாட்டை விட்டே வெளியேற முடிவெடுத்து இருந்த சுஜாதா, தன்னை எண்ணி உருகி, தன் மேல் வைத்து இருக்கும் காதலைப் போற்றி, குஜராத்தி மொழியில் ஒரு காதல் கவிதையை தியாகராஜன் எழுதி வைத்து இருக்கக் கூடும் என்பதை கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அது அவருக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

அந்த வினாடி வரை தன் மேல் யாருக்கும் விருப்பம் இல்லை. தான் விரும்பும் யாருக்கும் தான் அவசியமாகத் தோன்றவில்லை என்ற எண்ணத்தில், பொங்கிய ஆற்றாமை, பெற்றோரை மதிக்காமல் வீட்டை விட்டு வெளியே வந்ததால், தன் மேலேயே பொங்கிய வெறுப்பு, தான் யாராலும் விரும்பப் படவில்லை என்பதால் வந்த

தாழ்வுணர்சசி, என்று கடந்த இரண்டு வாரங்களாக எதிர்மறை உணர்வுகளில் சிக்கித் தவித்த சுஜாதாவிற்கு அந்த நோட்டுப் புத்தகம் கொடுத்த இனிய அதிர்வு களைத் தாங்க முடியாமல் கண்ணில் நீர் பெருகி வழிந்தது.

அந்த கவிதைகள் நிரம்பிய... இல்லை இல்லை... தியாகராஜனின் மன ஏக்கங்கள் நிரம்பி வழிந்த அவரின் அழியாத காதல் சின்னமான அந்த நோட்டை சுஜாதா வின் பலம் இழந்து நடுங்கிய கைகள் தவறிவிட, சோபாவில் அப்படியே சரிந்து விம்மி அழ ஆரம்பித்தார்.

சில நிமிடங்கள் முன்பு, 'ஏன் இப்படிக் கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாமல் நடந்து கொள்கிறாள்? இவள் வளரவே மாட்டாளா? இவள் மீது தான் வைத்து இருக் கும் அளவில்லாத காதலை எப்படி எப்போது புரிந்து கொள்வாள்? என்று பல கேள்விகளால் அவரை அர்ச் சித்து மனதுக்குள் பொருமி, அவரை கை நீட்டி அறைய வும் துணிந்து விட்ட தியாகராஜனுக்கு, அவரின் அழுகையைத் தாங்க முடியவில்லை.

'கிஷோரின் திருமணத்திற்குப் போகிறேன். திரும்ப வரவில்லை' என்று விவாகரத்து பத்திரம் எழுதி வைத்து விட்டுக் கிளம்பிச் சென்ற அவரின் சிறு பிள்ளைத் தனமான கோபத்தை சகித்து பதினெட்டு ஆண்டுகளாக அவளின் காதல் நினைவுகளை மனதில் சுமந்தவருக்கு, அது பெரிய பாரமாகத் தோன்றவில்லை.

'திருவண்ணாமலைக்கு உன்னோடு வர மாட்டேன். திருமணத்திற்கு முன்தினம் வந்து சடங்குகளில் மட்டும் கலந்து கொள்கிறேன்' என்று ஆரோவில்லில் அலட்சிய



மாக சொன்னதை பெரிது படுத்தாமல், கடந்த இரண்டு வாரங்களாக திருமணத்திற்கு வரும் விருந்தினர்களுக் காக என்று இல்லாமல், அவருடன் மனப்பூர்வமாகவே இணக்கமாகப் பழகியவருக்கு, அது சிரமமாகத் தோன்ற வில்லை.

இன்று கண் விழித்ததில் இருந்து வீட்டை விட்டு வெளியேறத் துடித்த சுஜாதா ஏட்டிக்குப் போட்டியாகக் கேள்விகள் கேட்டு விவாதம் செய்த போதும், அம்மா கோவிலுக்குச் சென்ற பின்பு தான் நிதானமாகக் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், மௌனமாக இருந்து பொழுதைக் கழித்த போதும், பொங்கிய தன் கோபத் தைக் கட்டுப்படுத்துவது தியாகராஜனுக்கு எளிதாகவே இருந்தது.

அவருடன் சுமுகமான ஒரு உறவை தொடர பொறா மையாக ஆண்டுக் கணக்கில் காத்திருந்து, அமைதி காத்த தியாகராஜனுக்கு, தன்னுடைய கவிதைகளை படித்த பிறகு, அல்லது வேறு எந்தக் காரணமாக இருந் தாலும், அதற்காக மனம் உடைந்து சுஜாதா கண்ணீர் பெருக்கிய சூழலை சில வினாடிகள் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை.

தலையில் உள்ளங்கைகளை முட்டுக் கொடுத்தபடி அமர்ந்து மனதிற்குள் பொருமிக் கொண்டு இருந்த தியாகராஜன், சுஜாதாவின் விம்மல் ஒலி கேட்டு நிமிர்ந்த அடுத்த வினாடி, அவர் இருந்த சோபாவிற்கு தாவி வந்து அவரை தன் அணைப்பிற்குள் கொண்டு வந்து இருந்தார்.

சுஜாதாவைத் தூக்கி தன்னோடு சேர்த்து அணைத்து, அவரின் முதுகை வருடி, "ஷ்! சுஜா எதுக்கு இப்ப அழற?

அதுவும் நான் இங்கே இருக்கும்போது எதுக்காக அழணும்? உனக்கு என்ன வேணுமோ சொல்லு. அதை செஞ்சு தரேன்...'' என்று கலங்கிய குரலில் அவரை தேற்ற முயன்றவருக்கே, கண்ணில் ஈரம் கோர்த்தது.

''........''

அவரின் மௌனம் நீண்டு, கண்களில் இருந்து பெருகிய கண்ணீரும் தடை எதுவும் இன்றி சுரக்க அவர் தவித்துப் போனார். இடது கரத்தால் அணைத்து, வலது கரத்தால் சுஜாதாவின் முகவாயைப் பற்றி நிமிர்த்த முயன்றபடி, ''சுஜிம்மா, இங்கே என்னைப் பாரு, பாருன்னு சொல்றேன் இல்லை. எதுவா இருந்தாலும் நீ அழக்கூடாது. உனக்கு என்னுடன் இந்த வீட்டில் இருக்கப் பிடிக்கலையா? நீ திட்டமிட்டபடி பிரான்சுக்குப் போகணுமா? சரி போயிட்டு வா. அதுக்காக அழ வேண்டாம்...'' கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்த குரல் இறுதியில் அழுத்தமான குரலில் சொன்ன கடைசி வாக்கியம் தியாகராஜன் எதிர்பார்த்ததற்கு நேர் எதிரான பலனை ஏற்படுத்தியது.

''நீ ஊருக்குப் போகணும் என்றாலும் பரவாயில்லை போயிட்டு வா'' என்ற தியாகராஜனின் வார்த்தைகள் சுஜாதாவை மேலும் இளக வைத்து கண்ணீர் அடங்குவதற்கு பதிலாக புதிய வேகத்துடன் பெருக்கெடுத்தது.

''சுஜா! எதுவா இருந்தாலும் உன் இஷ்டம் என்று சொன்ன பிறகும் எதற்கு அழுகிறாய்? போ என்றால் உன்னை நிரந்தரமாகப் போகச் சொல்லவில்லை. உன்னை விட்டுப் பிரிந்து வாழ என்னால் முடியாது. உன்னுடைய சந்தோஷத்திற்காக, நீ ஏற்கனவே அவருக்கு



வாக்கு கொடுத்து இருந்தால் அதைக் காப்பாற்ற வேண்டும் என்று நீ தவிப்பதற்காக தான் இதைச் சொல்கிறேன். நிச்சயம் கோபத்திலோ எரிச்சலிலோ இல்லை...'' என்று அமைதியாக மிக மிகக் கனிவான குரலில், அவரின் கண்களைத் துடைத்து விட்டபடி, சொன்ன தியாகராஜனின் முயற்சி வெற்றி பெறவில்லை. துடைக்கத் துடைக்க, கண்ணீர் பெருக, அவர் செய்வதறியாது தவித்தார்.

''சுஜிம்மா, நான் நிஜமாதான் சொல்றேன். என் மேலே நம்பிக்கை இல்லையா? குழந்தை நடந்த பிறகு, ஒரு ஆறு மாசமோ எட்டு மாசமோ கழித்துத் திரும்பி வந்தால் போகிறது. இங்கே நான் பார்த்துக்கறேன். மேலே மேலே அழுதால் நான் என்ன நினைப்பது? எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு. எதுவா இருந்தாலும் சொல்லு. அழுகையை நிறுத்திட்டு ஏதாவது பேசு...''

''நா..ன் உ..ங்..க..ளு..க்..கு என் மேலே விருப்பம் இல்லையோ என்று நினைத்தேனே...'' வார்த்தைகள் திக்கித் திணறியது. சுஜாதாவின் வார்த்தைகள் அவருக்கு அதிர்ச்சியை கொடுத்தது.

''ஏன் அந்த சந்தேகம் உனக்கு வந்தது சுஜா?'' என்று ஆற்றாமையோடு கேட்டார் தியாகராஜன். எங்கே நான் தவறு செய்தேன்? கட்டின மனைவியின் நம்பிக்கைக்கு தான் பாத்திரமாக இருக்கத் தவறி விட்டோமோ என்ற குற்ற உணர்வு அவரைக் குத்திக் குதறியது.

''ஏன் வந்தது என்று என்னைக் கேள்வியா கேட்கறீங்க? உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது இல்ல? கிஷோர் கல்யாணத்திற்கு நீங்க போக வேண்டாம் என்று

சொன்ன பிறகும் நான் உங்கள் பேச்சை மீறிப் போகும் போது நான் வீட்டுக்கு வர மாட்டேன் என்று ஏதோ ஒரு வேகத்தில் சொன்னால், என்னைத் தேட வேண்டு மென்று நினைக்காமல் அப்படியே விட்டுட்டீங்க தானே?''

கோபத்தோடு கேள்வியைக் கேட்க நினைத்தாலும், தான் இத்தனை ஆண்டுகள் தனிமையில் அனுபவித்த வலி அவசியம் இல்லாதது என்பதை உணர்ந்த இந்த நிமிடத்தில் சந்தோஷம் வரவில்லை. மாறாக இழந்த வற்றை எண்ணி ஆத்திரமும் அழுகையும் சேர்ந்து பொங் கியது.

சுஜாதாவின் கோபமான வார்த்தைகளை விட, தன் சட்டையைப் பிடித்து ஆத்திரமாக உலுக்கியதை விட, அடக்க மாட்டாமல் பொங்கிய அவரின் கண்ணீரில் தான் தியாகராஜன் அதிகமான வலியை உணர்ந்தார். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் அளவில்லாமல் அன்பு வைத்து ஒருவரை ஒருவர் நினைத்தபடியே தனித்து வாழ்ந்த அந்த கொடுமையான காலத்தை எண்ணி மனம் புழுங்கினார்.

''அப்படி இல்லை சுஜா. எப்பவும் நீ சந்தோஷமா இருக்கணும் என்று நினைத்தேன். என்னை திருமணம் செய்து கொண்டதற்காக வருந்துகிறாயோ? என்னை விட்டுப் பிரிவதில் தான் சந்தோஷம் இருக்கு என்று நினைக்கிறாயோ என்று எண்ணினேன். அதனால்...''

''அதனால் போனவள் அப்படியே போய் தொலை யட்டும் என்று...'' ஆத்திரமாக சொன்ன சுஜாதாவின் குரல் தியாகராஜனின் முறைப்பிலும், அதட்டலிலும் பாதியில் தேய்ந்து நின்றது.



''அப்படியே ஓங்கி ஒரு அறை விட்டேன்னா தெரியும். காலையில் கொடுத்தது பத்தலையா உனக்கு? லூசா நீ? உன்னைப் போக விட்டு விட்டு நான் பட்ட பாடு எனக்கு மட்டும் தான் தெரியும். என்னைக் கல் யாணம் பண்ணிக் கொண்டோமே என்று நீ வருத்தப் படக் கூடாது என்று தான் ஒவ்வொரு நிமிஷமும் நினைப்பேன். நான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. நீ சந்தோஷமாக இருந்தால் சரி என்று தான் இத்தனை நாள் பைத்தியம் மாதிரி தனியா சுத்திகிட்டு இருந்தேன். காதலியின் சந்தோஷத்திற்காக காதலையே இழக்கத் தயாராக இருந்த ஒரு முட்டாள் என்று வேண்டு மானாலும் திட்டிக்கோ. ஆனால் உன்னைப் பிடிக்கலை என்று தொலைத்து தலை முழுகி விட்டேன் என்று மட்டும் சொல்லாதே சுஜா. என்னால் அதை மட்டும் தாங்கவே முடியாது...'' என்று கோபமாக ஆரம்பித்த வரின் முதல் வாக்கியத்தில் அதிர்ந்து பேச்சை நிறுத்திய சுஜாதாவின் திகைப்பைப் பார்க்க பார்க்க பின்பாதி வாக்கியங்கள் கடுமை இழந்து மென்மையாகி விட்டது.

உண்மையைச் சொன்னால் சுஜாதாவிற்கு தியாக ராஜனின் அந்த கடுமையான பேச்சும், ஆளுமையும் மனசுக்கு இதமாக இருந்தது. இத்தனை நாள் தன் மனம் வருந்தக் கூடாது என்ற காரணத்திற்காகவோ, அல்லது அவரின் இயற்கையான குணமே அப்படி என்பதாலோ, அதிகம் பேசாமல், பார்வையால் பேசி, இடைவெளி விட்டு இணக்கமாக இருந்த தியாகராஜனை விட, உணர்ச்சிப் பிழம்பாக ஜொலித்தவரை பிடித்து இருந்தது.

இத்தனை ஆண்டுகளாக, கணவனை விட்டுப் பிரிந்து தனியே வாழ்பவர் என்பதை சுட்டிக் காட்டும் குத்தல்

அல்லது ஜாடையான பேச்சு வார்த்தைகள் அல்லது அதே காரணத்திற்காகவே தன் மேல் அதிக அன்பு வைத்து இருப்பதால், கிஷோர் குடும்பத்தினர் பேசும் இரக்கமான பேச்சுக்களையே கேட்டு வெறுத்துப் போய் இருந்த சுஜாதாவிற்கு தியாகராஜனின் கோபம் பிடித்து இருந்தது.

தன் கோபத்தை ஒரு அறையின் மூலம் வெளிகாட்டி, வருத்தத்தை கண்ணில் துளிர்க்கும் நீரால் நிரூபித்து, இத்தனை ஆண்டு கால பிரிவாற்றாமையை பக்கம் பக்கமாக தான் எழுதி வைத்த காதல் கவிதைகளில் காட்டி, 'நீ என் உயிர், நீ எனக்கு அவசியம்' என்பதை தன் உச்சியில் பதித்த கன்னத்தின் ஸ்பரிசத்தின் அழுத்தத்திலும் தன் தோள்களைச் சுற்றி அணைத்து இருந்த கைகளின் இறுக்கத்திலும் காட்டும் இந்த தியாகராஜனை ரொம்பப் பிடித்து இருந்தது.

இவன் என்னுடையவன். இவனுக்கு நான் அத்தியாவசியமானவள் என்ற எண்ணம் விளைவித்த பெருமித உணர்வு, கார்கால மேகத்தின் இடையே மின்னல் கீற்று போல கலங்கிய கண்களோடு இருந்த வாடிய முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது.

''மறுபடியும் மறுபடியும் இன்னிக்கு ஏன்தான் இப்படிக் கட்டுப்பாட்டை இழந்து கத்துகிறேன் என்றே புரியவில்லை. ஐ ஆம் ஸாரி சுஜா, நான் தான் கண்டதையும் எண்ணி தப்பா புரிஞ்சுகிட்டு, உன்னைத் தேட வழி இல்லாமல் திணறி... எனக்கு என்ன சமாதானம் எப்படி சொல்றதுன்னே தெரியலை...''

''சாரி சொல்றீங்களா? அந்த சாரியால் யாருக்கு என்ன பிரயோஜனம் சொல்லுங்க. நான் கூட இல்லாத போது இப்படி பக்கம் பக்கமா காதல் கவிதை எழுதி வச்சு இருக்கீங்களே? இதுல நாலு வரியை, நான் இங்கே இருந்த போது என் முகம் பார்த்துச் சொல்லி இருப்பீங்களா? பிறந்த வீட்டு உறவை விட்டுட்டு ஓடி வந்தது நான். உங்களுக்கு எனக்குப் பிடிக்கும் என்று நான் எப்படி நம்புவது?''

''சுஜா! உன்னைப் பிடிக்காமலா உன்னைக் கல்யாணம் பண்ணிகிட்டேன்? ஆனால் பாரு. நம் தலை எழுத்து வாழ்வின் முக்கியமான இளமை காலம் இப்படி பிரிவில் கழிந்து விட்டது.''

''ஸ் அப்பா! கல்யாணம் பண்ணினீங்க. அது மட்டும் போதுமா? அதற்குப் பிறகு, இங்கே இருந்த மூன்று ஆண்டு காலத்தில் உங்க காதலை எத்தனை முறை சொல்லி இருப்பீங்க? உங்களால பொண்டாட்டி மனசுல என்ன இருக்கு என்பதைப் படிக்க முடியாது. சரி ஒழிஞ்சு போகட்டும். உங்க மனசுல இருப்பதைச் சொல்லவும் தெரியலை என்றால் என்னை வேறென்ன பண்ணச் சொல்றீங்க?''

இதுவரை 'தனக்கே தனக்கு மட்டும்' என்று யாரும் இல்லை என்ற ஏக்கத்தில் தவித்து வார்த்தைகள் வாயை விட்டு வெளியே வராமல் திணறியவருக்கு அந்த உணர்வு மறைந்த பின்பு, மனதில் தோன்றும் உணர்வுகளை அப்படியே இடம் பொருள், ஏவல் என்று எதுவும் பார்க்காமல் கொட்டி விடும் அவருடைய வழக்கமான படபடப் பேச்சும், மீண்டு விட்டது.

''என்ன சொல்லச் சொல்ற சுஜா? வெறும் வார்த்தைகளுக்கு என் மனசை, அதில் இருக்கும் வலியை, இத்

தனை பக்க கவிதை எழுதின பின்பும் முழுசாய் வெளிப் படுத்தின திருப்தி எனக்கு வரலை. ஏன்னா வார்த்தை களுக்கு ஒரு எல்லைக் கோடு இருக்கு. அதன் அர்த்தம் அந்தக் கோட்டைத் தாண்டாது. ஆனால் உணர்வுகள் அப்படி இல்லை...''

''பேசாதீங்க! அப்பதான் சொல்லலை. இப்பவும், இத்தனை ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போதும்... ஒரு நாள்... ஒரே ஒரு நாள்... சுஜா... நீதான் என் உயிர். நீ இன்றி நான் இல்லை, அப்படின்னு வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லி இருப்பீங்களா?''

''சொல்லலை, அது தப்பு என்று வச்சுக்கோ...''

''வச்சுக்கோ என்ன வச்சுக்கோ. நீங்க சொல்லாதது நிச்சயம் தப்புதான்...'' என்று அவசரமாக இடையிட்ட சுஜாதா இருபது ஆண்டுகளுக்கு முந்தைய இருபத்தி இரண்டு வயது இளம் பெண்ணாக மாறி இருந்தார்.

தப்போ சரியோ என்று யோசித்துக் குழம்பாமல், நினைத்ததை உடனுக்குடன் பேசும் இந்த சுஜாதா தான் அவரின் மனம் கவர்ந்தவர். அந்த வேகமும், உரிமையும், படபடப் பேச்சும், இப்போதும் அவரை ரசிக்க வைத்து, இதழ்களில் புன்னகையை மலர வைத்தது.

''ச..ரி! த..ப்..பு சாரி...''

சரி தப்பு என்ற இரண்டு வார்த்தைகளும் சேர்ந்து ஒலித்தது, சுஜாதாவின் முகத்தில் புன்னகையை பெரிதாக மலர வைக்க, அதை ஆச்சரியமாக கவனித் தவர், அதன் காரணம் புரிந்து, லேசான அவரின் தலை யில் குட்டி விட்டுப் பேச்சை தொடர்ந்தார்.



''நான் எப்போதுமே மனசில் நினைப்பதை உடனுக் குடன் உடைச்சுப் பேசும் ஆள் இல்லை. ஆனால் உனக் குத்தான் மனசுல நினைச்சு முடிப்பதற்கு முன்பே வார்த் தைகள் வாயில் இருந்து கொட்டி இருக்குமே? நீ இந்த இரண்டு வாரத்தில் என்னைப் பிடிச்சு இருக்கு என்று ஏன் சொல்லவில்லை?'' என்று சிரிப்போடு விசாரித்தார் தியாகராஜன்.

தியாகராஜனின் நியாயமான அந்த கேள்வி சுஜா தாவை சில வினாடிகள் மட்டும் திகைக்க வைத்தாலும், இயல்பான புத்திசாலித்தனம் கை கொடுக்க, ''நீங்க சொல்றது நூறு சதவிகிதம் சரி. என் மனசில் நினைத் தால் உடனே சொல்லி விடுவேன். உண்மைதான். மன சுல் அதை நினைக்கவே இல்லை. அதனால் சொல் லவே இல்ல...'' என்று உடனடியாக பதில் சொன்னார்.

''சரி, என்னைப் பிடிச்சு இருக்கு என்று இந்த ரெண்டு வாரத்தில் நினைக்கலை. அப்ப என்னைப் பார்க்கும் போது எல்லாம் மனசுல வேறென்ன நினைச்ச? எதையும் நீ சொல்லவே இல்லையே? இன்னிக்கு கூட நான் வாட்ச் மேன் மாதிரி வாசலில் காவல் காக்கவில்லை என்றால் டாட்டா காண்பித்து விட்டுப் போய் இருப்பாய் தானே? ஆனால் இந்த முறை அவ்வளவு சுலபமா நாங்க விடுவ தாய் இல்லை...''

''நா..ங்..க.. என்றால் வேற யாரு? அம்மாவைச் சொல் றீங்களா இல்ல...''

''அம்மா இங்கேதானே இருக்காங்க. அவங்களை இல்லை. நீ போகக் கூடிய மற்ற இடங்களிலும் செக் வச்சு இருக்கோம்...''

''மறுபடியும் இ..ரு..க்..கோ..ம்... என்ன விஷயம்? யார் யார் எல்லாம்? சொல்லுங்க...'' என்று கேட்டவரின் முகம் சின்ன குழந்தையின் பாவனையில் இருந்தது.

''நீ பேச்சை மாத்தாதே. அது அப்புறம் சொல்றேன். உன் மனசுல என்னைப் பார்க்கும்போது என்ன நினைச்ச? அதை ஏன் அப்ப சொல்லலை?''

''ஒண்ணுமே நினைக்கலை. அதனால் தான் சொல்லலை...''

''ஹேய்! இது கதை. இதை எப்படி நம்புறது? மறைக்காமல் சொல்லு. என்னை ஆரோவில்லில் முதன் முதலில் பார்க்கும்போது என்ன நினைத்தாய்?'' என்று விசாரித்த தியாகுவின் கரங்கள் அவரைச் சுற்றி மென்மையான அணைப்பில் படர்ந்து இருந்தது.

''என்ன இது விடுங்க...'' என்ற சுஜாதாவின் குரலும் கனிவிற்கு மாற, முகம் சிவந்தது.

''நீ சொல்லு. உடனே விட்டுடறேன்...''

''அதைச் சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே?'' கேலியில் இழைந்தது சுஜாவின் குரல்.

''நீ சொல்லவில்லை என்றால் தான் கோபம் வரும்...''

''நல்லா ஒரு பெ..ரி..ய உருட்டு கட்டையா பார்த்து உங்க நடு மண்டையில் ஓ..ங்..கி ஒரு போடு போட்டு, இங்கே எங்கேடா வந்தா? என்று கேட்கணும் என்று தோணுச்சு...'' என்று சுஜாதா உரிய ஏற்ற இறக்கங்களுடன் சில வார்த்தைகளில் கூடுதல் அழுத்தத்துடன் சொல்லி முடிக்கும் முன்பே தியாகராஜன் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்தார்.



''சிரிக்காதீங்க! நான் ஒண்ணும் ஜோக் சொல்லலை. நிஜமாதான் எனக்கு முந்தின நாள் ராத்திரியும் சரி, நீங்க அங்கே தங்கி இருந்த ராத்திரியும் சரி, அவ்வளவு கோபம் வந்தது தெரியுமா?'' என்று கடுமையாகச் சொல்வது போல நடித்தாலும் நீண்ட நாட்களுக்குப் பிறகு மனக் குழப்பம் எல்லாம் மறைந்து, மனம் விட்டுச் சிரித்த அவரின் முகத்தைப் பார்க்க சுஜாதாவிற்கு தெவிட்டவில்லை. தியாகுவின் புன்னகை அவரின் முகத்திலும் தொற்றிக் கொண்டது.

''அந்தக் கோபத்தை எல்லாம் அன்னிக்கே அங்கேயே நீ காட்டி இருந்தால், உன்னோட அழுத்தமும் உடனே போய் இருக்கும். இந்த இரண்டு வார பாராமுகமும் பரிதவிப்பும் இல்லாமல் போய் இருக்குமே? பரவாயில்லை விடு, இப்பவாவது சொல்ல மனசு வந்ததே. அது வரைக்கும் சந்தோஷம்...'' என்று ஆசையுடன் சொன்னவர், கன்னத்தில் முத்தமிட்டார்.

''ம்ம், உங்களுக்கு சந்தோஷம். எனக்கு பதில் எங்கே? நாங்க யாரு? என்ன எல்லாம் செஞ்சீங்க? என்று சொன்னால் தானே எனக்கு சந்தோஷம். சொல்லுங்க...''

''நாங்க என்பது நான், விவேக், கிஷோர். நான் இங்கே, கிஷோர் சூரத்தில, விவேக் ஆரோவில்லில் கண்காணிக்கிறோம். இங்கே இருந்து நீ எதுவும் எடுத்துப் போக மாட்டாய் என்று எதிர்பார்த்தோம். அதனால் ஆரோவில்லில் கிஷோர் வீட்டுல விவேக் இருக்கான். பேருக்குதான் அங்கே இருப்பிடம். முழு நேர கண்காணிப்பு இங்கே உன் வீட்டுல தான். சூரத்துக்கு நீ போக மாட்டாய் என்று தெரியும். ஆனாலும் பாஸ்போர்ட் இருந்ததனால், நாட்டை விட்டே போகும்போது பெற்றோரைப்

பார்க்கலாம் என்று ஒரு ஆசை வரலாமோ என்று அங்கே கிஷோர் போய் இருக்கான்...''

''கிஷோர்... அங்கே சூரத்தில... மை காட்! இன்னும் வேற என்ன எல்லாம் பண்ணி இருக்கீங்க?''

''இங்கேயே இந்தியாவிற்குள் என்றால் நினைத்த உடனே கிளம்பி விடலாம். ஆனால் வெளிநாடு என்றால் நினைத்த உடனே கிளம்ப முடியாதே? ஆனால் நீ எங்கே போகிறாய்? என்ன செய்யப் போகிறாய் என்பது தெரி யாமல் டிக்கெட் எடுக்க முடியாது. அதனால் எனக்கு பாஸ் போர்ட் மட்டும் எடுத்து வச்சு இருக்கோம்...''

''பாஸ்போர்ட் உங்களுக்கா?'' அந்த இரண்டு வார்த் தைகளை வெளியிடுவதற்கு சுஜாதாவிற்கு மூச்சு திண றிற்று. தான் பிரான்ஸ் போய் இருந்தால், இவரும் தன்னை தேடி பின் தொடர்ந்து வந்து இருப்பார் என்ற எண்ணமே அவரை மூச்சடைக்க வைத்தது. தூரம், பணம் எதுவும் முக்கியமில்லை. நீ எங்கே போனாலும் நானும் அங்கே வருவேன் என்ற இந்தத் தீர்மானம்... கடவுளே இவரை விட்டு தான் பிரிய நினைத்தது இன் றைய நிலையில் சரியா?

அன்று தான் வளராத சிறு பெண் என்றாலும், இன்று நாற்பதைத் தாண்டி நிற்கும் மத்திய வயதல்லவா? கொஞ்சம் நிதானித்து யோசித்து முடிவெடுத்து இருக்க வேண்டாமா? குற்ற உணர்ச்சியில் சற்று முன்பு அடங்கி இருந்த கண்ணீர் மீண்டும் மெல்ல ஊற்றெடுத்தது. கால்கள் தளர, சோபாவில் அமர்ந்த சுஜாதாவை தன் மார்பில் சாய்த்துக் கொண்டார் தியாகராஜன்.

''சுஜா! நீ பீல் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. நீ என் பெண்டாட்டி இல்லையா? உன்னை சந்தோஷமா



வைத்துக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமை இல்லையா?''

''இவ்வளவு அன்பு இருக்கும்போது நீங்க அப்ப ஏன் என்னைத் தேடி வரலை? இதை உங்களை குறை சொல் வதற்காகக் கேட்கவில்லை. தெரிஞ்சுக்க கேட்கிறேன். தப்பா எடுத்துக்காமல் சொல்லுங்க...'' என்று குற்ற உணர்வில் கண்களில் நீர் பெருக காதலோடு கேட்டார் சுஜாதா.

''அதான் ஏற்கனவே சொன்னேனே சுஜா. முதலில் இரண்டு மூன்று நாட்களில் நீ கிஷோர் கல்யாணம் முடிந்த உடனே வந்து விடுவாய் என்று நினைத்து கோபத்திலே இருந்தேன். வரவில்லை என்றதும் தான் கோபம் போய் பயம் வந்தது. உனக்கு ஏதாவது ஆகி விட்டதோ என்ற பயம் வந்தது. அப்புறம் நீ பத்திரமாக இருக்கிறாய் என்பதை நீ அனுப்பிய கடிதமும், விவாக ரத்து பத்திரமும் அழுத்திச் சொன்னது. அப்புறம் சூரத்தில் தேடி நீ இல்லை என்று தவிக்கும்போது... அப்புறமா தான்.. நீ அனுப்பிய லெட்டரில் இருந்த வாசகங்கள் விபரீதமான அர்த்தத்தை எனக்குச் சொன்னது...''

''அந்த லெட்டரை நான் பார்க்கவா?'' என்று கேட்ட சுஜாதாவின் குரலில் சோகம் குறைந்து ஆர்வம் தெரிந் தது.

''பாரேன்... யார் வேண்டாம் என்று சொன்னா? ஆனால் அது இங்கே கொண்டு வந்து கொடுக்கப்பட மாட்டாது...'' என்று கேலியாக இழுத்தவரின் கண்கள் அவரின் இரண்டு வார கால ஆசையைச் சொல்லாமல் சொன்னது.

‘‘அதுக்கென்ன? உங்க ரூமில் போய் நானே பார்த் துக்கறேன்...’’ என்று சோபாவில் இருந்து எழுந்தவர், சொன்ன வார்த்தைகளுக்கு நேர் மாறாக, அவரின் முதுகில் மொத்தமாய் சாய்ந்து, தன் தலையாலே அவரை நகர்த்தி தியாகராஜனின் அறைக்குள்ளே தள்ளிச் சென்றார் சுஜாதா.

அவரின் தோள் வழியாக எட்டி, அவரின் அல மாரியை, அதில் நிறைந்து இருந்த புத்தக வரிசையை, அறையில் ஒரு ஓரத்தில் இருந்த உடல்பயிற்சி செய்யும் சாதனங்களை, என்று அறை முழுவதும் பார்வையை ஓட விட்ட சுஜாதாவிற்கு பழைய நினைவுகள் வந்து திக்கு முக்காடச் செய்தது.

இது அவரின் தாம்பத்திய வாழ்வு ஆரம்பித்த இடம், ஜன்னல் வழி தெரிந்த குல்மோகர் மரம், கீழே விழுந்து இருந்த செவ்வண்ண பூக்கள் என்று கண்ணையும் கருத்தையும் நிறைத்தது. அவரின் கவனம் தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்த தியாகராஜன், அவரை பின்னால் இருந்து அணைத்து, கழுத்தில் முகம் புதைத்தபடி, அவரின் கைகளில் கடிதத்தைக் கொடுத் தார்.

அதை சில வினாடிகளிலேயே படித்து முடித்து திருப்பிக் கொடுத்தவர், ‘‘கடவுளே! அம்மாக்குப் புரிய ணும் என்று தேவைக்கு அதிகமா யோசிச்சு, முட்டாள் தனமா நான் பண்ணின தப்புக்கு ரெண்டு பேரும் பதினெட்டு வருஷமா பிரிஞ்சு இருக்கோம். என்னோட தமிழ் ரொம்ப ரொம்பக் கொடுமையா இருக்கு. உங் களைச் சொல்லி தப்பில்லை. இங்கேயே இருந்து நான் தமிழ் பேசிப் பழகி இந்த லட்சணம். ஆனால் உங்களுக்கு



குஜராத்தி மொழியில் பேச படிக்க உங்களுக்கு சந் தர்ப்பம் கம்மிதானே. அப்படி இருக்கும் போது நீங்க எழுதிய குஜராத்தி கவிதை... ம்ம்ம் சூப்பர்...’’ என்று சிலாகித்து, அவரின் கன்னத்தை வருடினார்.

‘‘என்னோட சந்தோஷத்தை நான் எப்படி சொன் னேன்? ஞாபகம் இருக்கா?’’ என்றவரின் முகம் ஆர்வத் தில் ஒளிர்ந்தது.

‘‘ம்ம்ம், இருக்கு. உங்களுக்கு வந்த அளவு சந்தோஷம் எனக்கு வரலையோ என்னவோ?’’ என்று சொல்லி, சிரித்த சுஜாதாவின் சிவந்த இதழ்களை, பதினெட்டு ஆண்டு இடைவெளிக்குப் பின் காதல்ல மனதில் சுமந்த தியாகராஜனின் இதழ்கள் ஆசையுடன் முத்தமிட்டது. இழந்த இளமைக் காலம் திரும்பி வராது என்றாலும், இருக்கும் காலத்தை சந்தோஷமாகக் கழிக்க எண்ணிய இரண்டு இதயங்களும் இனிமையாகச் சங்கமித்தது.

# 28



பல ஆண்டு காலமாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையே அவர்கள் அறியாமலே ஏற்பட்டு தொடர்ந்து இருந்த மன வேறுபாடு அகன்ற இந்த இனிமையான காலை நேரத்தில், சுஜாதாவிற்கு, தங்களின் நன்மை வேண்டி கிரிவலம் சென்ற மாமியாரின் நினைவும் மறந்து விடவில்லை.

''என்னங்க, அம்மா கிளம்பி நாலு மணி நேரம் ஆச்சே? இந்நேரம் ஈசான லிங்கத்திடம் வந்து இருக்க மாட்டாங்க? நாம் ரெண்டு பேரும் டிபன் எடுத்துப் போய் கொடுத்துட்டு அம்மாவை வீட்டுக்கு அழைச் சுட்டு வந்துடலாமே?'' என்று தியாகராஜனை அழைத் தார்.

''டிபனா? அம்மா வெளியில் எடுத்துட்டுப் போனால் சாப்பிட மாட்டாங்க. அதுவும் கிரிவலம் வரும்போது நிச்சயம் மாட்டாங்க சுஜா. வேண்டாமே...''

''அப்ப பால் எடுத்துட்டுப் போகலாம். காலையில் இருந்து அவங்க ஒண்ணுமே சாப்பிடலையே?'' என்ற சுஜாதாவை மறுத்துப் பேச முடியாமல் ஒப்புதலாக தலையை அசைத்தாலும் அம்மா அதைச் சாப்பிட மாட்டார் என்பது அவருக்கு தெரிந்து இருந்தது.

அங்கே ஈசான லிங்க தியான மண்டபத்தின் மூலை யில் பவானி அம்மா ஈரத்துணி பாதி காய்ந்தும் காயாத நிலையில் தியானத்தில் இருந்தார். அவரின் அருகில் போய் அமைதியாக சுஜாதா அமர, தியாகராஜன் வெளியே காத்திருந்தார். சில நிமிடங்களிலேயே அரவம் உணர்ந்து கண் விழித்தவர் சுஜாதாவைக் கண்டதும் புன்னகை பூத்தார்.

எளிமையான கைத்தறி புடவையில் தளரப் பின்னிய ஒற்றை பின்னலிலும், ஒரு முழ பூவிலும் செயற்கை அலங்காரப் பூச்சு எதுவும் இல்லாத அவரின் மலர்ந்த முகம், அவருக்கு சொல்ல வேண்டிய தகவல்களைக் குறிப்பாகக் காட்டியது.



''சுஜா, இந்நேரத்துல இங்கே எங்கே? சாப்பிட்டாச்சா? தனியா வந்தாயா? தியாகுவும் வந்து இருக்கானா?'' என்று கேட்டவருக்கு, மலர்ந்த புன்னகையோடு ''ஆச் சும்மா...'' என்று சொல்லிவிட்டு ஒற்றை விரலால் வாயிலை சுட்டிக் காட்டினார் சுஜாதா.

தாய் அறியாத சூலா? மகனின் மனமார்ந்த மகிழ்வு, அந்த ஒற்றைப் பார்வையில் புரிபட, மருமகளின் கன்னத்தை மென்மையாக வருடினார். ''ரொ..ம்..ப ச..ந்..தோ..ஷ..ம் சுஜா, நீங்க வீட்டுக்குப் போங்க. நான் ஒரு நடை கோயிலுக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்று எழுந்தார்.

''சரிம்மா, டிபன் எடுத்து வந்து இருக்கேன். சாப் பிட்டுட்டு...''

''இல்லை சுஜா, இது சாப்பிடும் இடமில்லை. கோவி லுக்குப் போயிட்டு வந்து சாப்பிடுறேன்.''

''காலையில் எழுந்ததில் இருந்து வெறும் வயிற் றோடு இருக்கீங்களே? அட்லீஸ்ட் இந்த பாலைக் குடிச்சுடுங்க'' என்று கையில் கொண்டு வந்த பிளாஸ்க் கைத் திறந்தார்.

''வேண்டாம்மா, இன்னும் அரை மணி நேரம். வீட்டுக்கு வந்து சாப்பாடே சாப்பிடுறேன். நீ போ. நான் வரேன்'' என்று மகனையும் மருமகளையும் வழி அனுப்பி விட்டு அருணாச்சலேஸ்வரரை தரிசிக்கச் சென்ற பவானியின் மனம் சந்தோஷத்தில் நிரம்பி வழிந்தது.

வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில், ''அம்மா என்ன நினைப்பாங்க, என்ன செய்வாங்க எதுவுமே எனக்குத்

தெரியவே இல்லை. நீங்க அம்மா சாப்பிட மாட்டாங்க என்று சொன்னீங்க நான் தான் கேட்கலை...'' என்று வருந்திய சுஜாதாவின் கை பற்றி அழுத்தினார்.

''அம்மா அப்படித்தான். இனிமேல் மாற்ற முடியுமா? அவங்க மேலே நீ வச்சு இருக்கிற அன்பிற்கு இது அடையாளம் என்பது அவங்களுக்குத் தெரியும். விடு, மதிய உணவில் உன் கை வரிசையைக் காட்டு. சரி நீ பிரான்சுக்குக் கிளம்பினாயே? அவசியம் போகணுமா? கேன்சல் பண்ணலாமா?''

''இங்கே ஆரோவில்லில் இருந்து புதிதாக மணமாகி அங்கே வேலைக்காக போய் இருக்கா. நான் வரேன் என்று சொல்லிட்டேன். ரொம்ப எதிர்பார்ப்பாங்க. பெற்றோர் இல்லாத பொண்ணு. சமீபத்துல ரெண்டு மாசம் முன்னாடிதான் அவங்க அம்மா இறந்தாங்க...'' என்று இழுத்தவரின் குரலில் போக வேண்டுமே என்ற பரிதவிப்பு இருந்தது.

''ஓ! நான் கூட இங்கே இருந்து போனால் போதும் என்ற வேகத்தில் ஒத்துக் கொண்டாயோ என்று நினைத் தேன்...''

''அதுவும் ஒரு காரணம் தான். ஆனால் அது மட்டுமே காரணம் இல்லை...''

''சரி, பயணத்தை கொஞ்ச நாள் தள்ளிப் போட லாமா? நானும் உடன் வர டிக்கெட் விசா எல்லாம் ஏற்பாடு பண்ணனுமே? அதிகம் இல்லை. ஒரு வாரம் பத்து நாள்...''



''நிஜமா நீங்க என்னோடு வரப் போறீங்களா? அம்மா இங்கே தனியா இருப்பாங்களே? அவங்களை விட்டுட்டு நீங்க என்னுடன் கிளம்பினால் என்ன அர்த்தம்?'' என்று அதிர்ச்சியோடு கேட்டார்.

''உன்னைக் கூட்டி வந்த மறுநாளே அம்மா என்னிடம் சொல்லியாச்சு. என்னைப் பற்றி கவலைப்படாதே தியாகு. தினமும் ஒரு தடவை கோவிலுக்குப் போயிட்டு வந்து ஒரு வேளை சாப்பாட்டுல என் பொழுது ஓடிடும். நீ அவளோட இருப்பதுதான் முக்கியம். ஒருவேளை அவளுக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை என்றால் நீ ஆரோவில்லில் போய் இரு. இங்கே வர போக இருங்க. அதுவே எனக்கு சந்தோஷம் என்று சொல்லிட்டாங்க. அதனால் நீ கவலைப்படாதே...''

''இல்லைங்க. ஆரோவில்லில் இருப்பது வேற. பிரான்ஸ் போறது வேற இல்லையா? அது சரி படாது...'' என்று தீர்மானமாக மறுத்தார் சுஜாதா. ஆனால் மதிய உணவின் போது தியாகராஜன் அம்மாவிடம் சுஜாதா வின் முடிவைச் சொல்ல, பவானியே அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

''இங்கே தனியாக இருப்பது எனக்குச் சிரமம் இல்லை. ஏற்கனவே போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ, கடந்த இருபது ஆண்டு காலத்தில் ரொம்பவே சிரமப்பட்டாச்சு. இனியும் உங்களைப் பிரித்த பாவம் எனக்கு வேண்டாம். அதற்காக உன்னை இங் கேயே இருக்க வைத்து, அங்கே ஒரு சிறு பெண்ணை தவிக்க வைத்த பாவம் எனக்கு வேண்டாம். எனக்குக்

கோபம் இல்லை. நான் சந்தோஷமாதான் சொல்றேன். ஒருவேளை எனக்கு உடம்பு முடியவில்லை என்றால் சென்னைக்கு ஒரு போன் போட்டால், மாதவியோ, சாந்தியோ ஓடோடி வந்து விடுவாங்க. அதனால் என்னைப் பற்றி கவலைப்படாமல், போய்ட்டு வாங்க...''

''நீங்க சென்னைக்கே போய் சாந்தி வீட்டிலோ மாதவி வீட்டிலோ இருக்கலாமே? நாங்க நிம்மதியா போவோமே...'' என்று தியாகராஜன் ஆரம்பிக்க பவானிம்மா மறுத்தார்.

''விருந்தும் மருந்தும் மூணு நாள். சம்பந்தி வீட்டுல போய் தங்க முடியுமா? அதெல்லாம் சரிப்படாது. ஒரு ஆத்திர அவசரத்துக்கு வேண்டுமானால் போய்க்கலாம். இப்ப நான் உங்களை அனுப்புறதுக்குக் காரணமே வேற. முதலில் தனிமையில் நீங்க ரெண்டு பேர் மட்டும் சேர்ந்து இருக்கும்போது, மற்றவர்கள் தலையீடு எதுவும் இல்லாமல் ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கோங்க. அது ரொம்ப முக்கியம். உங்க வாழ்க்கையில எல்லாமே அவசரம் அவசரமா நடந்து விட்டது. அடுத்து சாந்திக்கு வரும் குழந்தையை வளர்க்கும் வேலைக்கு இது முன்னோடியா இருக்கட்டும். போயிட்டு வாங்க'' என்று தீர்மானமாக முடித்து விட்டார் பவானி.

மதிய உணவை பவானி அம்மாவிற்கு, ஒரு புறம் மகனும், மறுபுறம் மருமகளும் அமர்ந்து பரிமாறியபடி மனம் விட்டுப் பேசிக் கொண்டு இருந்த அதே நேரத்தில், அதே மதிய உணவை, அபிஷேக்கிற்கும் - வாஸந்திக்கும், சூரத்தில் சுஜாதாவின் பிறந்த வீட்டில்,



கிஷோரின் தலைமையிலான மூன்று தலைமுறையைச் சேர்ந்த சுமார் இருபது பேர் சுற்றி நின்று, ''இதைச் சாப்பிடுங்க. அதைக் குடிங்க. இன்னும் ஒண்ணு வச்சுக் கோங்க...'' என்று ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி என்ற மூன்று மொழிகளிலும் மாறி மாறி உபசரித்து, அவர்களை விருந்தோம்பலில் திக்கு முக்காட வைத்துக் கொண்டு இருந்தனர்.

''அங்கிள், போதும். காலையில் பத்து மணியில இருந்து மூணு மணி நேரமா சாப்பிட்டுகிட்டே தான் இருக்கோம் அங்கிள். ப்ளீஸ்! இந்த உபசரிப்பிற்கு கொஞ்சம் இடைவெளி விடக்கூடாதா?'' என்று சொன்ன அபிஷேக். வாஸந்தி இருவரையும் பார்த்து புன்னகைத்தார் கிஷோர்.

''அபி, இத்தனை ஆண்டு கழித்து, அவங்க பொண்ணு ஜாடையில இருக்கும் பேத்தியை பார்த்ததும் அவங்களுக்கு ஒண்ணுமே புரியலை. இந்த நாலு நாளா சுஜாதா தனியா இருந்ததைச் சொன்னதும் அவங்க அம்மா தவிச்சுப் போய்ட்டாங்க. மாமா ஏதாவது சொல்வாரோ என்ற பயம். குழம்பிட்டு இருந்தாங்க. உங்க ரெண்டு பேரையும் இங்கே பார்த்ததும், அதுவும் தேனிலவில் இருந்து இவங்களைப் பார்க்க வந்து இருக்கீங்க என்பது தெரிந்ததும் அவங்க உற்சாகம் அளவு மீறிப் போச்சு'' என்று சிரித்தார்.

''யே பஹூத் அச்சி ஹை பேட்டி...'' என்று ஆரம்பித்து பேத்தியின் கன்னத்தை வழித்து, மீண்டும் இரு துண்டு இனிப்பை அவளின் தட்டில் போட்ட பாட்

டியைப் பார்த்து ''நோம்மா... நோ ப்ளீஸ்'' அலறினாள் வாஸந்தி.

''இப்ப வஸுவை அத்தை கொஞ்சுறதைப் பார்த்ததும், முன்னாடியே சுஜாவை இங்கே கூட்டி வந்து இருக்கணும் என்று தோணுது. இங்கே வந்து இருந்தால் ரெண்டு நாள் சண்டை போட்டு இருந்தாலும் சீக்கிரமே எல்லாமே சரி ஆகி இருக்கும். உங்க மாமாவுமே இங்கே பலமுறை வந்து போய் இருக்கிறார். அது இங்கே இருக்கவங் களுக்கும் தெரிஞ்சு இருக்கு...''

''ஓ! நிஜமாவா...'' என்று அபிஷேக் வாஸந்தி இருவருமே வியப்பில் வாயைப் பிளந்தனர்.

''ஆனால், அவங்க சந்தோஷமா இருக்காங்க, சுஜா வீட்டுக்கு வரலை என்ற கோபத்தில், இருந்து இருக் காங்க. இப்ப நான் வந்து சொன்னதும் தான் உண்மை தெரிஞ்சு ரொம்ப வருத்தப்பட்டாங்க. உடனே பார்க்கக் கிளம்பினாங்க. நான் தான் ஒரு வாரத்துல கிளம்பலாம் என்று சொல்லி இருந்தேன்...''

''ஆனா அங்கிள் ஒரு வாரம் கழித்து அம்மாவும் அப்பாவும் பிரான்ஸ் கிளம்பிடுவாங்களே? அப்பா உங்களுக்குச் சொல்லவில்லையா?'' என்று ஆச்சரிய மாகக் கேட்டாள் வாஸந்தி.

''ம்ம்ம் - இன்று காலையில் உங்க அப்பா பேசினாங்க சாந்தி. அதுக்கு அப்புறம் தான் அத்தை மாமாவை மட்டும் அழைத்துப் போகலாம் என்று கிளம்பிக் கொண்டு இருந்தோம். நீங்க வந்துட்டீங்க. முதலில் மாமா கூட வரக் கொஞ்சம் யோசிச்சுட்டு ஈகோ பார்த்



துட்டு இருந்தார். ஆனால் சாந்தியைப் பார்த்ததும் மறு பேச்சு பேசவில்லையே கிளம்பி விட்டார்...'' என்று பெருமையாகச் சொன்ன கிஷோரைப் பார்த்து அபிஷேக் கும் வாஸந்தியும் புன்னகைத்தனர்.

''நாங்களும் இங்கே உடனடியா கிளம்பி வந்ததுக்கு அதே தான் காரணம் அங்கிள். உங்க புண்ணியத்துல வேலை சுலபமா முடிஞ்சுடுச்சு'' என்று சந்தோஷமாகச் சொன்னான் அபிஷேக்.

''இல்லை அபிஷேக், உனக்கு ஒரு முகராசி இருக் குப்பா. தொட்டதெல்லாம் துலங்கும் என்று சொல்வாங் களே. அது மாதிரி ஒரு ராசி உனக்கு. நீ நினைச்ச தெல்லாம் நடக்கும். நீ கேட்டு யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. அதனால் தான், எங்க அத்தை மாமாவும் உடனே சென்னை கிளம்ப சரி சொல்லிட் டாங்க.''

''மாறி மாறி ஐஸ் வைக்காதீங்க. எல்லோரும் நீங்க என்ன பேசறீங்க என்றே தெரியாமல் முழிக்கிறீங்க. நாம் கிளம்பறதுக்கான வேலையைப் பாருங்க'' என்று சமரசம் செய்து வைத்தாள். அடுத்த இருபத்தி நாலு மணி நேரத்தில் அபிஷேக் வாஸந்தி, கிஷோர், சுஜாதாவின் பெற்றோரையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

* * *

பவானி அம்மாவின் இறுதி முடிவுக்குப் பிறகு அவர் கள் மேலே பேச அதிகம் இல்லை. விவேக் மூலம் தனக்கு விசா எடுக்கச் சொல்லி போனில் தகவல் தெரிவிக்க அவன் சந்தோஷமாகச் சிரித்தான்.

''அடடா! மாமா நீங்க கலக்குங்க. நீங்களும் அத்தையும் செகண்ட் ஹனிமூன் போங்க என்று சாந்தி கல்யாணத்தில் சொன்ன போது என்ன சொன்னீங்க? அதெல்லாம் நமக்கு சரி வராதுப்பா. அந்த எழுத்து எல்லாம் நமக்கு இல்லை. நான் சொன்னது பலித்ததா இல்லையா?''

''நீ இருக்க தைரியத்தில்தான் நானும் வரேன் என்று சுஜாவிடம் சொன்னேன். விசா ஏற்பாடு பண்ண முடியுமா?'' என்று கவலையோடு கேட்டார்.

''அதெல்லாம் கவலையே படாதீங்க. உங்களுக்குச் செய்யாமல் வேறே யாருக்கு செய்யப் போகிறேன். பத்து நாள் டைம் கொடுங்க. ஆறு மாசம் டூரிஸ்ட் விசா வாங்கி தரேன். ஈரோப்பியன் டூர். ஜமாயுங்க...'' என்று கேலி செய்து சிரித்தாலும் காரியத்தில் கண்ணாக இருந்தான். சொன்ன ஒரே வாரத்தில் விசா ஏற்பாடு செய்தும் தந்தான்.

பத்து தினங்களுக்குப் பிறகு சென்னை விமான நிலையத்தில் தியாகராஜன் சுஜாதாவுடன் பிரான்ஸ் நாட்டின் தலைநகருக்குப் பிரயாணம் மேற்கொள்ளும் வேளையில் அவர்களை வழி அனுப்ப நிறைந்த மனதுடன் எல்லோரும் குழுமி இருந்தனர்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பார்க்காமல் இருந்து இருந்த பெற்றோரைப் பார்த்த வினாடியில் உணர்ச்சி பெருக்கில் திக்கு முக்காடி போய் சந்தோஷத்தில் கண்ணீர் பெருக்கிய சுஜாதா இந்த அதிசயத்தை



நிகழ்த்திய அபிஷேக்கிற்கு நன்றி சொல்லவும், தனக்கு சொல்லாமல் சூரத் சென்ற கிஷோருடன் சண்டை போடவும் மறக்கவில்லை.

''விவேக், பாட்டியையும், அம்மாவையும் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறாயா? நானும் வஸுவும் பீச் போய்ட்டு மெதுவா வீட்டுக்குப் போறோம்'' என்று கொஞ்சலாக அபிஷேக் கேட்க விவேக் சிரித்தான்.

''ஓ! செய்யலாமே. பாட்டிக்கும் ஆன்ட்டிக்கும் செய்யாமல் வேற யாருக்கு செய்யப் போகிறேன்'' என்று சந்தோஷமாகச் சொன்னான் விவேக். ஆனால் அவனின் முகத்தில் தெரிந்த குறும்பு சிரிப்பு வேறு ஏதோ விஷயம் இருப்பதைச் சொல்லாமல் சொல்ல அபிஷேக் சுதாரித்தான்.

''என்னடா, இதுக்கு பதிலா நான் வேற ஏதாவது செய்யணுமா?''

''ச்சே! ச்சே! நீ என் நண்பன்டா, உன்னிடம் போய் மல்லுக்கு பதில் வேலை செய்யச் சொல்வேனா? நீ எனக்கு வேற ஒரு சகாயம் செய்யணும்'' என்று பீடிகை போட்டான் விவேக்.

''வில்லங்கமா எதுவும் கேட்க மாட்டாயே? எதுக்கும் நீ என்ன என்று சொல்லு. அதுக்கு அப்புறம் நான் சம்மதம் சொல்றேன்'' என்று கவனமாகவே கேட்டான் அபிஷேக்.

''வர பிப்ரவரி மார்ச் மாசம் ஆண்டு இறுதி கணக்கு முடிக்கணும் பாரு. அதனால் அடுத்து வரும் ரெண்டு

மாசம் சாந்தி என்னோட ஆபீசில் ஓவர் டைம் வேலை பார்க்கணும்...''

''அப்பா விவேக். நீ வளமுடன் வாழ்க. ஆளை விடு, ஒரு நாள் ரெண்டு மணி நேரம் அவளோடு தனியா இருக்க ஆசைப் பட்டு ரெண்டு மாசம் என்னை சாயங் காலம் தனியாவே இருக்க விட்டுடுவ போல இருக்கு. தேவை இல்லை. எங்க அம்மாவையும் பாட்டியையும் நானே கொண்டு போய் விட்டுடுவேன். நன்றி வணக்கம்...'' என்று இரு கரம் குவித்தான் அபிஷேக்.

''என்ன அபி, எலெக்ஷன்ல நிக்கப் போறியா? அதுக்கு வோட்டு கேட்டு ப்ராக்டீஸ் பண்றியா?'' என்று மேலும் சத்தமாகச் சிரித்தான் விவேக்.

''ஹேய்! என்ன அபியை ரொம்ப வம்பு பண்ணுற, நீ ரொம்பப் பேசினால், எனக்கு உன் வேலையே வேண் டாம் என்று தூக்கிப் போட்டு விடுவேன் தெரியுமா?'' என்று வாஸந்தி அதற்குள் சிலிர்த்துக் கொண்டு உத விக்கு வந்தாள்.

''அடடா! இது அல்லவோ பதி பக்தி? கணவனை மரியாதை குறைவாக நடத்தினால் வேலையே வேண் டாம் என்று தூக்கி எறியும் அல்ட்ரா மாடர்ன் அருந்ததி...'' என்று கேலி செய்து சிரித்தவன் அபிஷேக்கின் முதுகில் தட்டி சிரித்தான்.

''டேய்! இது எல்லாம் ரொம்ப ஓவர்டா. இந்த பொடிசை பார்ப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பே, நம் பழக்கம் ஆரம்பிச்சுடுச்சு. என்ன வச்சுதாண்டா சாந்தி



உனக்கு பழக்கம். அதை ரெண்டு பேரும் கொஞ்சம் ஞாபகம் வச்சுக்கோங்க. என்ஜாய்...'' என்று வாழ்த்தி விட்டு கல்யாணி, பவானி இருவரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான் விவேக்.

அந்தி மாலை நேரத்தில் அன்று பௌர்ணமி தினம் என்பதால் கடற்கரையில் ஆறு மணி அளவில் முழு நிலவு மெல்ல கடலில் இருந்து உதிக்கும் அழகை மனம் கவர்ந்த மணவாளனின் தோளில் சாய்ந்தபடி ரசித்துக் கொண்டு இருந்த வாஸந்தியின் மனம் கடந்த ஒரு மாதத்தில் நடந்த நிகழ்வுகளை படமாக ஓட்டிப் பார்த்துக் கொண்டு இருந்தது.

''வஸு! என்ன சத்தமே காணோம்?'' என்று தோளில் சாய்ந்து இருந்தவளை உலுக்கிக் கேட்டான்.

''உங்களுக்கு ஞாபகம் இருக்கா? இதே கேள்வியை தான், அன்று ஆரோவில்லில் சூர்யோதயம் பார்க்கப் போகும்போதும் கேட்டீங்க?'' என்று கேட்டவளின் முகம் கணவன் மேல் கொண்ட அளவில்லாத காதலில் பூவாய் மலர்ந்து இருந்தது.

''உன்னோடு நான் இருந்த நேரம், பேசிய பேச்சுக்கள் எதையுமே நான் மறப்பதில்லை வஸு.'' என்று கொஞ்சி னான் அபிஷேக்.

''ம்ம்ம், தெரியும். நான் உங்களிடம் பேச வேண்டும் என்பது கூட அவசியம் இல்லை. நான் மனதில் நினைப் பது கூட உங்களுக்கு உடனுக்குடன் தெரிந்து விடு கிறதே! அதுதான் பெரிய விஷயம். அம்மாவோட

அம்மா அப்பாவை சூரத்தில் இருந்து அழைத்து வந்து அம்மாவின் முன்னால் நிறுத்த வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். அதை நான் உங்களிடம் சொல்லவே இல்லை. ஆனாலும் நீங்களே அதை சாதிச்சீங்களே? எப்படி அபி?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''இது என்ன அபத்தமான கேள்வி வஸு? உன் முகத்தை பார்த்தே, இல்லை இல்லை, உன் கண்ணை மட்டும் பார்த்தே நீ உன் மனசுல என்ன நினைக்கிறாய் என்று என்னால் கண்டு பிடிக்க முடியும். எனக்குத் தெரியாமல் நீ எதுவுமே பண்ண முடியாது. நீ இங்கே இருக்க. போதுமா?'' என்று நெஞ்சை சுட்டிக் காட்டிய வன் கண்ணில் காதல் கர்வம் மின்னியது.

அவனையே காதலோடு பார்த்துக் கொண்டு இருந்த வளின் மனதிற்குள், தன்னுடைய அப்பாவும் அம்மா வும் கூட காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் தானே? அதுவும் இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே. அவர்களுக்குள் இந்தக் கண்களைப் பார்த்து மனதைப் படிக்கும் திறமை ஏன் வரவில்லை என்ற கேள்வி பிறந்தது.

''இப்ப உன் மனசில் என்ன நினைக்கிறாய் என்று சொல்லட்டுமா?'' என்று புன்னகையோடு கேட்டான் அபிஷேக்.

''ம்ம், சொல்லுங்க பார்ப்போம்...''

''ம்ம்ம், நான் என்ன சொன்னாலும் அதை நினைக்க வில்லை என்று சொல்லணும் என்று கடைசியாக



நினைத்தாய். ஆனால் அதுக்கு முன்னால், நான் கேள்வி கேட்பதற்கு முன்னால் இவன் மட்டும் தன் மனசை இப்படி துல்லியமா படிக்கிறானே? இது நம்ம அப்பாக்கு ஏன் தெரியலை என்று நினைத்தாய், எப்படி நம்ம ரெண்டு ஊகமும் சரியா?'' என்று கண் சிமிட்டி யவன் நெற்றி அவளின் நெற்றியில் பதிந்து உற வாடியது.

''ஹய்யோ அபி! இப்படி கலக்குறீங்க?'' என்று கண்கள் விரிய ஆச்சரியமாகக் கேட்டாகள்.

''இதெல்லாம் சப்பை மேட்டர். பேசிக்கா எனக்குக் கொஞ்சம் மைண்ட் ரீடிங் தெரியும் வஸு. ஆனால் உன் மனசு என்னிடம் முழுமையா சாய்ந்து இருக்கு. நான் என்ன செய்தாலும், அது உன்னுடைய நன்மைக்காக தான் இருக்கும் என்று அழுத்தமா நம்புகிறாய். அது நம் இரண்டு பேரின் உறவுக்கும் பலமான அஸ்திவாரமா இருந்து இருக்கு. நாம் மணம் செய்து கொள்வதற்கு முன்பே, ஒன்றுக்கு மேற்பட்ட முறை சந்தித்து இருக் கிறோம். சாதாரணமா சிரித்துப் பேசுவது மட்டும் இல்லை. சோகமான அழுத்தமான சூழலையும் நாம் முன்பே சந்தித்து மீண்டும் விட்டோம். ஆனால் உங்க அம்மா அப்பாவிற்கு அந்த மாதிரி சந்தர்ப்பம் சூழல் அமையலை...''

''உண்மை தான் அபி! பாட்டியும் கொஞ்சம் வெடுக் வெடுக் என்று தான் பேசுவாங்க. எல்லோரும் உங்க அம்மா மாதிரி இருந்து விட்டால், எங்க அம்மா மாதிரி நிலைமை யாருக்கும் வராது...''

''நீ உங்க அம்மா நிலை மட்டும் பார்க்கிறாய். நான் பாட்டியின் நிலையையும் சேர்த்து பார்க்கிறேன். அவங்களும் தனி ஆளா கஷ்டப்பட்டு தானே உங்க அப்பாவை வளர்த்தாங்க. அவங்களுக்கு உங்க அம்மாவைப் பார்த்த உடனே பிடிக்கணும் என்று எதிர் பார்ப்பது சரி இல்லையே? உங்க பாட்டியும் பாவம் தான் வஸு...''

''எல்லோர் பக்க நியாயத்தையும் பார்த்துப் பார்த்து எல்லோருக்கும் நல்லது செய்ய நினைக்கறீங்களே? உங்களுக்கு வேண்டும் என்பதை யாரிடம் கேட்பீங்க?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள். என்னைக் காதலித்து மணம் புரிந்தவன், என் சந்தோஷத்தை முன்னிலை படுத்தி, அதற்காக எதுவும் செய்பவன், என்ற பெருமித உணர்வு அவள் முகத்தில் மிளிர்ந்தது.

''பொதுவா ஆண்டவனிடம் எல்லோரும் சந்தோஷமா இருக்கணும். நானும் சந்தோஷமா இருக்கணும் என்று கேட்பேன். ஆனால் இனிமேல் அந்த கோரிக்கை வைக்கும் இடத்தை மாற்றலாம் என்று பார்க்கிறேன்...'' என்று இழுத்தான்.

''ஆண்டவனுக்கு ஈடா உங்களின் கோரிக்கையை நிறைவேற்றும், உங்களுக்கு சந்தோஷத்தை அள்ளிக் கொடுக்கும் அந்த அபூர்வ மனிதர் யாரோ?''

''மனிதர் இல்லை மனுஷி. நான் கேட்பதும் அவளால் தர முடியாதது இல்லை. கைவசம் எப்போதும் இருப்பது தான். நான் என்ன சொல்ல வரேன் என்று புரியுதா?''



''உங்களுக்கு மட்டும்தான் கண்ணைப் பார்த்து கதை சொல்லத் தெரியுமா? எங்களுக்கு மட்டும் வராதா?'' என்று கேலியாகக் கேட்டாள்.

''புரிஞ்சால் மட்டும் போதுமா? கேட்காமலே கொடுக்கவும் வேண்டாமா?'' என்று தன் இடது கன்னத்தை அவள் புறம் ஆசையாகத் திருப்பிக் காட்டினான் அபிஷேக்.

''அந்த கன்னத்தில் செல்லமாக ஒரு அடி வைத்தவள், ''ஆசை தோசை, அதெல்லாம் இங்கே கிடையாது. சந்த்ரோதயம் தான் முடிஞ்சுடுச்சே? வீட்டுக்குப் போகலாமா? அங்கே போய் தான் எல்லாம்...'' என்று கொஞ்சலாகச் சொன்னாள் வாஸந்தி.

''போச்சுடா கன்னத்தில் கொடுக்கவே வீட்டுக்கு போகணுமா? இது ரொம்ப அநியாயமா இருக்கே? இதை கேட்பார் யாரும் இல்லையா?'' என்று புலம்பலாகக் கேட்ட அபிஷேக்கின் கன்னத்தில் அவளின் இதழ்கள் மின்னல் வேகத்தில் பதிந்து மீண்டது.

''ஹேய் வஸு! சும்மா விளையாட்டுக்குக் கூட கஷ்டப்படக் கூடாது என்று இவ்வளவு வேகமா? நான் எதிர்பார்க்கவே இல்லை. தாங்க்ஸ்'' என்று நெகிழ்வோடு சொன்னான் அபிஷேக்.

''ம்ம், எனக்காக நீங்க என்னென்னவோ செஞ்சீங்க. உங்களுக்காக நான் இதைச் செய்ய மாட்டேனா?'' என்று சொன்னவளை அணைத்தபடி கடற்கரை மணலில் நடந்தான் அபிஷேக்.

நான் என்ற எண்ணம் இருந்தால் அது அகந்தை நான் யார் என்ற எண்ணம் வந்தால் அது தேடல். உனக்காக நான் நான் எனக்காக நீ என்ற எண்ணம் வந்தால் அது அன்பு. அந்த அன்பு பாதையில், ஒருவரின் கண்ணைப் பார்த்தே அடுத்தவரின் மனதை அறிந்து செயல்படும். அவர்களின் காதல் பயணம் கடற்கரை மணலில், பூரண சந்திர ஒளியில் சுகமாக தொடர்ந்தது. என்றென்றும் தொடரும்!